இலக்கணக் கருவூலம்

(2)

தமிழ்த் துறை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

இலக்கணக் கருவூலம்-2

பதிப்பாசிரியர்
டாக்டர் ஆறு. அழகப்பன்
தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

முதற்பதிப்பு: ஏப்ரல் 1987

பதிப்புத்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்-608002

விலை ரூபாய் Rs 12 00

U.S $ 7 00
(Includes air freight)

அச்சு:
ஸ்ரீ இராமகிருஷ்ணா பவர் பிரஸ், சிதம்பரம்.

முன்னுரை

டாக்டர் ஆறு. அழகப்பன்
தமிழ்த்துறைத் தலைவர்

மொழி என்பது மக்களின் கருத்து வெளிப்பாட்டிற்குரிய கருவியாகும், பல்வேறு புலங்களில் அன்றாடம் வெளிப்படும் வெளிப்பாடுகள் காட்டாற்று வெள்ளம் போல் வரையறையின்றிக் காணப்படும். எழுத்து வடிவம் பெறும் மொழிக்கு வரையறை கூறும் நிலையே இலக்கண வரம்பாகும். இலக்கணம் எழுத்து, சொல், யாப்பு, அணி, பாட்டியல் எனப்பல்வகை நிலைகளில் தமிழில் வளர்ந்துள்ளன; எனினும் தமிழ்ச் சான்றோர்கள் எழுத்து, சொல், யாப்பு என்பனவற்றை மட்டுமே போற்றி வந்துள்ளனர். போற்றப்படாத நூல்கள் பலவாகக் காணப்படுகின்றன. அவற்றைப் பாதுகாப்பது பல்கலைக்கழகங்களின் கடமைகளுள் ஒன்றாகும். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அந்நூல்களைப் பட்டியலிட்டு ஆண்டுதோறும் இலக்கணக்கருத்தரங்கம் நடத்தி அந்நூல்களை ஆராய்கின்றது என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

அரிதான இலக்கணநூல்களை ஆய்வுசெய்து அரங்குகளில் ஏற்றுவதோடு, அக்கட்டுரைகளை அச்சிட்டுத் தமிழுக்கு ஆக்கம் தேடும் நிலையை இப்பல்கலைக்கழகம் மேற்கொண்டு உள்ளது. முதலாண்டில் ஆராயப்பெற்ற நூல்களின் எண்ணிக்கை பதினான்கு; அவைகட்டுரை வடிவம் பெற்றதோடு இலக்கணக்கருவூலம்-1 என்னும் பெயரால் நூலாக வெளிவந்துள்ளமை நினைக்கத்தகுவதாகும்.

அதுபோன்றே இவ்வாண்டு பதின்மூன்று நூல்கள் ஆராயப் பட்டுள்ளன. இவற்றுள் காலத்தால் பிற்பட்ட நூல்களும் உள. புகழ் மிக்க நூல்கள் அழிந்து படாமல் காப்பாற்றப்படுவதென்பதுஉலக இயற்கை பார்ப்பாரின்றியும், படிப்பாரின்றியும் நூலகத்துறங்குகின்றவை காலப்போக்கில் அழியும்

வாய்ப்புடையவை. ஒருநூல் வாழவேண்டும் என்பதும் மற்றொருநூல் தேவையிலலை என்பதும் குறிப்பிட்ட தலைமுறையில் வாழ்வோர் நிச்சயிக்கக்கூடியவை அல்ல. ஒரு காலத்தில் செல்வாக்கின்றி இருக்கும் நூல் மற்றொருகாலகட்டத்தில் செல்வாக்குப் பெறுவதை நாம் காண்கிறோம்.

எனவே செல்வாக்குடையன, செல்வாக்கு இல்லன என்பவற்றை நாம் வேறு வேறு கண்ணோட்டத்தில் காணாமல ஒரே கண்ணோட்டத்தில் சமநோக்குடன் காண்பதே தக்கது அவ்வகையில் வேறுபாடின்றி இலக்கணக்கருத்தரங்கில் நூல்கள் ஆராயப் பெற்றுள்ளன என்பதை இலக்கணக்கருவூலம் 1-ல் கண்டது போலவே இலக்கணக்கருவூலம்-2 என்ற நூலிலும் காணலாம். நம் கையில் கிடைத்த எல்லா நூல்களையும் வாழவைத்து, வரும் தலைமுறையினர்க்குக் கொடுத்து விட வேண்டிய கடப்பாடு தமிழர்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உரிய கடப்பாடாகும்.

இத்தகைய பதின்மூன்று கட்டுரைகள் தோன்றுதற்குக்களமாக விளங்கிய இலக்கணக் கருத்தரங்கிற்கு அணி சேர்க்கும் நிலையில் பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். அண்ணாமலைப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் பழமை சான்ற புகழ்பூத்த வரலாற்றினை நினைவு கூர்ந்தார்கள். மகாவித்துவான் டாக்டர் ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் தம் இலக்கணப்புலமை தோன்ற முதன்மை உரையை நிகழ்த்தினார்கள். முதுபெரும் புலவர்களாகிய பெருமக்கள் இருவர்க்கும் துணைவேந்தர் பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு பொன்னாடை போர்த்திப் பெருமைப்படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

கட்டுரைகள் அனைத்தும் ஆய்வுச்சான்றுகள் கொண்டு திகழ்வன. கருத்தரங்கக்கால அளவு கருதிச்சுருக்கி அமைக்கப் பெற்றிருப்பினும் நீள நினைத்தற்குரியவை. பல்லாண்டுகள் ஆசிரியர்களாக இருந்து பாடம் கூறும்போதும், பயிலும் போதும் ஏற்பட்ட சிந்தனைக் கருவூலங்களாக உள்ள

கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன என்பது பெரிதும் கருதத்தக்கதாகும். அவ்வகையில் கட்டுரையாளர்கள் பெரிதும் நன்றிக்குரியவர்கள்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக வளர்ச்சியிலும், தமிழ், தமிழிசை வளர்ச்சியிலும் கண்ணும் கருத்துமாக இருந்து வந்த அமரர் முத்தையவேள் அவர்கள் என்றும் நினைத்தற்குரியவர்கள். அவர்களை அடியொற்றித்தம் வாழ்நாளைக் கல்விப் பணிகளிலும், தெய்வீகப்பணிகளிலும் இணைத்துக் கொண்டு உள்ள இணைவேந்தர் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி அவர்கட்கும் என் நன்றி என்றும் உரியதாகும்.

இலக்கணக்கருத்தரங்கம் நடைபெறவும், கட்டுரைகள் அச்சாகவும் உறுதுணையாக இருந்த துணைவேந்தர் டாக்டர் சை. வே. சிட்டிபாபு அவர்களுக்கும் என் நன்றியைப் புலப் படுத்திக் கொள்கிறேன். ஆண்டுதோறும் இலக்கணக்கருத் தரங்கு தொடர்ந்து நடைபெற நிதியுதவி செய்யும் இப்பல் கலைக்கழகத்திற்கு என்றும் நன்றியுடையேன்.

இவ்விலக்கணக் கருத்தரங்கிற்கு அமைப்பாளராக இருந்து திறம்படச் செயலாற்றிய, மறைந்த சோம. இளவரசு அவர்கள் இவ்வேளையில் நினைவுகூரத்தக்கவர். ஆய்வாளர் களிடம் இலக்கணக் கட்டுரைகளைத் தொகுத்து இக்கருவூலம் உருவாக உறுதுணையாக இருந்த இணைப்பேராசிரியர் டாக்டர். சாமி ஐயா அவர்களும் தமிழ்த்துறை நூல் வெளி யீட்டுப் பொறுப்பாளராகவும் செயற்பட்டுவரும் இணைப் பேராசிரியர் டாக்டர் வெ. பழனியப்பன் அவர்களும பாராட்டிற் குரியவர்கள். தமிழ் கூறும் நல்லுலகம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தொடர்ந்து தரும் கருவூலங்களைப் பயன் கொள்ளும் என்பதில் ஐயமில்லை.

அண்ணாமலைநகர். ஆறு. அழகப்பன்

18—4—87 தமிழ்த்துறைத்தலைவர்

உள்ளுறை

கட்டுரையாளர்கள்

ஆராயப்பெற்ற நூல்கள்

1. அகத்தியம் — 1
டாக்டர் ப. தங்கராசு

2. அறுவகை இலக்கணம் — 23
தெ. முருகசாமி

3. பன்னிருபாட்டியல் — 41
மருதூர் ச. அரங்கராசன்

4. குவலயானந்தம் — 61
டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்

5. சிதம்பரப்பாட்டியல் — 77
டாக்டர் மு. சிவச்சந்திரன்

6. தொன்னூல் விளக்கம் — சில சிந்தனைகள் — 87
டாக்டர் சூ. இன்னாசி

7. மாறனகப்பொருள் — 97
டாக்டர் வெ. பழநியப்பன்

8. தொல்காப்பியம் - சொல்லதிகாரம் — 111
டாக்டர் ம்மா. இசரயேல்

9. தொல்காப்பிய எழுத்ததிகார அமைப்புத் தருக்க முறை 124

டாக்டர் க. பாலசுப்பிரமணியன்

10. தொல்காப்பியம் பொருளதிகாரம் 143

டாக்டர் துரை. பட்டாபிரமான்

கே. சீனிவாசசர்மா

11. நன்னூல் எழுத்ததிகாரம் - இருநூற்பாக்கள் 158

டாக்டர் தி. நடராசன்

12. நன்னூல் - சொல்லதிகாரம் 171

டாக்டர் இராம. சுந்தரம்

13. தமிழ்நெறி விளக்கம் பொருளியல் 184

டாக்டர் ஆறு. அழகப்பன்

கட்டுரையாளர்கள்

1. டாக்டர் ப. தங்கராசு

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் விரிவுரையாளரான இவர் பல்கலைக் கழகத்தின் பழைய மாணவர். 1914 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த ஏலாக்குறிச்சி என்னும் ஊரில் பிறந்தவர். "தமிழ் இலக்கியங்களில் அகத்தியர்" என்னுந் தலைப்பில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். இலக்கணம், இலக்கியம், திறனாய்வு முதலிய துறைகளில் பத்துக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

2. தெ. முருகசாமி

காரைக்குடி இராமசுவாமி தமிழ்க்கல்லூரி முதல்வராகப் பணியாற்றி வருகிறார். மயிலம் சி.பா.சு. தமிழ்க்கல்லூரியில் புலவர் பட்டமும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி.ஓ.எல் பட்டமும் பெற்றவர். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ பட்டத்துடன் தமிழ் உயர்கல்வியும் பயின்று பட்டம் பெற்றவர். குமரகுருபரன், செந்தமிழ்ச் செல்வி போன்ற திங்கள் நாளிதழ்களில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். திறனாய்வுக் கட்டுரைகள் பல எழுதி வருகிறார். இனிய இலக்கியச் சொற்பொழிவாளர்.

3. மருதூர் ச. அரங்கராசன்

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மருதூர் என்ற ஊரில் 1953 ஆம் ஆண்டு பிறந்தவர். ஊர்ப் பெயர்களைத் தங்கள் பெயர்களோடு இணைத்துக் கொண்ட கோவூர் கிழார், ஆலூர்கிழார் போன்ற பழம்பெரும் புலவர்களைப் போல அரங்கராசனும் தம் ஊர்ப்பெயரை இணைத்துக்கொண்டு உள்ளார். பொருள்கோள், இலக்கண வரலாறு, பாட்டியனூல்

இலக்கண ஆய்வு நூல்களை எழுதியுள்ளார் 'ஓர் அழுகை ஆதரவு தேடுகிறது' என்ற இவரது கவிதை நூல் குறிப்பிடத் தக்கது. கருத்தரங்கம், கவியரங்கம், பட்டிமன்றம் போன்ற பல துறைகளில் தம் புலமையை வெளிப்படுத்தி வருகிறார்

4. டாக்டர் ச.வே. சுப்பிரமணியம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகளுக்குப் பதிப்பாசிரியரும் இவரே. இவர் தமிழில் விடுகதைகள் என்ற தலைப்பில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர். இலக்கணம் இலக்கியம் இரண்டிலும் புலமையாளார் என்பதை இவருடைய நூல்கள் வெளிப்படுத்துகின்றன. கம்பன் இலக்கிய உத்திகள், திராவிட மொழி இலக்கியங்கள், தமிழ் இலக்கிய வகையும் வடிவும், சிலம்பும் சிந்தாமணியும், வீரசோழியம், தொன்னூல்விளக்கம், தமிழ் இலக்கியத்தில் ஆறு, குவலயானந்தம், பிரபந்த தீபிகை இளங்கோவும் கம்பனும், கம்பனும் உலகியல் அறிவும் என்ற பல நூல்கள் எழுதியுள்ளார்.

5. டாக்டர் மு. சிவச்சந்திரன்

திருச்சிராப்பள்ளி மாவட்டம் அருங்கால் என்னும் கிராமத்தில் 1950ல் பிறந்தவர். பள்ளியிறுதித் தேர்வு வெற்றி பெற்ற பின்னர் 1966 முதல் 1970 வரை திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் நான்காண்டுகள் முறையாகப் பயின்று வித்துவான் பட்டம் பெற்றார். பின்னர் 1970 முதல் 1976 வரை நாகப்பட்டினம் கனகசபைப் பிள்ளை தமிழ்க்கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். 1976 முதல் தொடர்ந்து தருமையாதீனப் பல்கலைக்கல்லூரியில் துணைப்பேராசிரியாகப் பணி புரிந்து வருகின்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.எட் பட்டம் அஞ்சல் வழிக்கல்வித்துறை மூலம் பெற்றார். 'சமய மொழி வளர்ச்சியில் காசி மடத்தின் பங்கு'' என்னும் தலைப்பில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். ஞானசம்பந்தம, செந்தமிழ்ச் செல்வி போன்ற இதழ்களில் கட்டுரைகள் எழுதி வருகிறார்.

6. டாக்டர் சூ. இன்னாசி

1934-இல் பிறந்த இவர் புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் என்னும் ஊரினர். பாளையங்கோட்டை தூய சவேரியர் கல்லூரியில், தமிழ் முதுகலை ஆய்வுத்துறைத் தலைவரும் பேராசிரியருமாக விளங்கியவர். தற்பொழுது சென்னைப் பல்கலைக்கழகத்தில் கிறித்துவத் தமிழ் இலக்கியத் துறையின் தலைவராகவும், பேராசிரியராகவும் பணியாற்றி வருகிறார். இலக்கணம், இலக்கியம், அகராதி போன்ற பல்துறைகளில் பங்கேற்றும், ஆய்விதழ்களில் கட்டுரைகள் வழங்கியும் தமிழ் ஆய்வு வளர்ச்சிக்குத் துணை நின்று வருகிறார். கவிதை, நாடகம், சிறுகதை முதலிய படைப்பிலக்கிய ஆற்றல் சான்ற இவ்வாசிரியர்க்குப் பரிசும், பாராட்டும் கிடைத்துள்ளது.

7. டாக்டர் வெ. பழநியப்பன்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை இணைப் பேராசிரியர். அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர். 1960—64 ஆம் ஆண்டுகளில் 'தமிழ் நாடு' நாளிதழில் துணையாசிரியராகப் பணியாற்றியவர். புகழேந்தியின் நளவெண்பாவினை ஆய்ந்து எம். லிட் பட்டமும் 'தமிழ் இலக்கண இலக்கிய நூல்களில் பாட வேறுபாடுகள்' (சங்க இலக்கியம் சிறப்பாய்வு) என்னுந் தலைப்பில் 'டாக்டர்' பட்டம் பெற்றவர். "தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம்" என்னும் பெயரில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள இரு தொகுதிகளின் பொறுப்பாளர். 'நம்பியகப் பொருள்' பாடநுண்பதிப்பின் பதிப்பாசிரியர்.

டாக்டர் மோ. இசரயேல்

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் மொழியியல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றுகின்ற டாக்டர் மோ. இசரயேல் 1932-ஆம் ஆண்டு குமரி மாவட்டத்தில் பிறந்தவர்.

இவர் கேரளா பல்கலைக்கழகத்தில் வித்துவான் தேர்விலும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ., முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்று, டாக்டர் மு.வ. அவர்கள் வழிநின்று தொல் காப்பியத்தில் ஆய்வு செய்து அவரின் கீழ் முதன்முதல் பிஎச்.டி பட்டம் பெற்றவர் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் மொழி யியல் அறிஞர் டாக்டர் பரோ அவர்கள் வழிகாட்டுதலில் திராவிட மொழியியல் ஆய்வு செய்துள்ளார்.

தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை பணி யாற்றும் வாய்ப்பைப் பெற்றவர். இவருக்கு ஆங்கிலம், மலையாளம், இந்தி, செர்மன், கூயி, கூவி ஆகிய மொழிகளில் நல்ல அறிவு உண்டு. இவர் தமிழ் இலக்கணம், இலக்கியம், மொழியியல் ஆகியவற்றில் ஈடுபட்டு ஆய்வு செய்து ஐந்து நூல்களையும் ஏறத்தாழ நூற்றிஐம்பது ஆய்வுக் கட்டுரைகளை யும் வெளியிட்டுள்ளார். இவர் அயல்நாடுகளுக்குச் சென்று பயிற்சி பெறும் அல்லது கருத்தரங்குகளில் பங்கு பெறும வாய்ப்பைக் பெற்றவர். இருபதுக்கும் மேற்பட்ட மாணவர் கள் இவர் வழிநின்று பிஎச்.டி., பட்டம் பெற்றுள்ளனர்.

9. டாக்டர் க. பாலசுப்பிரமணியன்

அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் உயர் ஆய்வு மையத்தில் இணைப்பேராசிரியர். 1939 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29 ஆம் நாள் பிறந்தவர். தமிழ் வித்துவான் பட்டத்துடன் மொழியியலில் முதுகலை, டாக்டர் பட்டங்கள் பெற்றவர். 'தொல்காப்பியத்தின் இலக்கண அமைதி' இவருடைய டாக்டர் பட்ட ஆய்வு நூல். தொல்காப்பியச் சொல்லடைவு தயாரித்துள்ளார். ஒரு நூலும் 45 ஆய்வுக் கட்டுரைகளும் எழுதியுளளார். தொல்காப்பியத்தை வட மொழிப் பாணினீயத்துடன் ஒப்பிட்டுத் தொல்காப்பியத்தின் தனித்தன்மையை நிறுவியுள்ளார். தற்போது பிற திராவிட மொழி இலக்கண நூல்களைத் தமிழ் இலக்கண நூல்களுடன் ஒப்பிடும் பல்கலைக் கழக நிதிக் குழுவின் ஆய்வுத் திட்டத்தில், அகாரதியியல் போன்ற மொழியியல் திட்டத்

துறைகளில் சிறப்புப் பயிற்சி பெற்றவர். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இரண்டாண்டுகள் இணைப் பேராசிரியராக இருந்திருக்கிறார்.

10. டாக்டர் துரை. பட்டாபிராமன்

கவிஞர் இராஜராஜன் எனும் புனைபெயரில் கவியரங்கேறும் அண்ணாமலைப் பல்கலைக் கழக அஞ்சல் வழிக் கல்வித்துறை விரிவுரையாளர். பிறந்த ஊர் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பனந்தாள். வித்துவான், பி. ஓ. எல், எம். ஏ; எம்ஃபில்; பி. இடி; பி. எச்டி; முதலான தகுதிகளை முறையாகப் பெற்றுயர்ந்த இவர், டாக்டர். ஆறு. அழகப்பனிடம் முதன்முதல் 'டாக்டர்' பட்டம் வாங்கியவர். தெய்வ மணங் கமழும் பக்திப் பாடல்களை விரைவில் வெளியிட உள்ளார். திறனாய்வு நோக்கில், 'புறத்திணை இலக்கணங்களின் திணைதுறை' எனும் நூலை புதுக்கவிதை நோக்கில் 'கனவுப் பல்லக்கு' எனும் நூலை வெளியிட்டுள்ளார். இவரது டாக்டர் பட்ட ஆய்வேடு 'கல்வெட்டியலில்' அமைந்தது.

ஸ்ரீனிவாச சர்மா

அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் 1950—53 மூன்றாண்டுகள் ஆராய்ச்சி மாணவராக இருந்தார். 1957—58ல் கும்பகோணம் அரசினர் கலைக்கல்லூரியில் வடமொழி ஆசிரியராகவும், சென்னை மாநில வடமொழிக் கல்லூரியில் வடமொழித்துறை பேராசிரியராகப் பணியாற்றினார். 1959—64 வரை அண்ணாமலைப் பல்கலைக் கழக சமஸ்கிருதத் துறையில் பல்கலைக்கழக மான்யக் குழுவின் அறக்கட்டளையின் சார்பில் ஏட்டுச்சுவடி சேகரித்து ஆராய்ச்சி செய்தார். 1964—86ல் சமஸ்கிருதத்துறைப் பேராசிரியராக இருந்து வருகிறார். வடமொழியில் 'சிரோமணி' பட்டம் பெற்றவர். 'சாகித்ய பூசனம்', 'சாகித்ய வல்லவ' என்ற பட்டங்களைப் பெற்றவர். தமிழ், வடமொழி ஆங்கிலம் என்ற மும்மொழிகளிலும் 54 கட்டுரைகள் எழுதியுள்ளார்.

டாக்டர் தி. நடராசன்

வைத்யநாதபுரத்தில் பிறந்தவர். வயது 41; டாக்டர் பட்டம் பெற்றவர். தமிழ் நூல்கள் பன்னிரண்டும், ஆங்கில நூல் ஒன்றும், கட்டுரைகள் அறுபதுக்கு மேலும் எழுதியுள்ளார். தற்பொழுது மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி வருகிறார். தமிழ் இலக்கணம், மொழியியல் நாட்டுப் புறவியல் மூன்று துறைகளிலும் ஆய்வு நெறியாளராக இருந்து வருகிறார். ஓலைச் சுவடிகளில் எழுதப் பட்டிருக்கும் கதைப்பாடல்கள் பலவற்றைப் பெயர்த்து எழுதி வருவது இவரது சிறப்புத் தகுதியாகும்.

டாக்டர். ஆறு. அழகப்பன்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர். இந்திய மொழிப்புல முதன்மையர். அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர். இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பர்மா முதலிய அயல் நாடுகளுக்குச் சென்று தமிழ் பரப்பிய தூதுவர். 'தமிழ் நாடகங்களின் தோற்றமும் வளர்ச்சியும்' பற்றி ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெற்றவர். நாட்டுப் புறவியல் ஆயவாளர்களில் இவர் குறிப்பிடத் தக்கவர். இவரது நாடகங்களில் 'எள்ளல் நாடகம்' தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசு பெற்ற நூல். இவரது 'திருமலை நாயகர்' நாடகம் குறிப்பிடத் தகுந்தது. தமிழ்த்தாய்க்குத் திருவுருவம் கண்டவர்களில் இருவரும் ஒருவர். ஓயாத சிந்தனையாளர். இளைஞர்களை நெறிப்படுத்தி ஆக்கவேலைகளில் வழிப்படுத்துவதில் வல்லவர். சிறந்த மேடைப் பேச்சாளர். இவரின் நாடகக் கலைத் தொண்டிற்காக அரசு 'கலைமாமணி' பட்டம் கொடுத்து சிறப்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆராயப்பெற்ற நூல்கள்

1. அகத்தியம்

ஆசிரியர்	:	அகத்தியர்
காலம்	:	முதற் சங்க காலம்
பொருள்	:	இயல், இசை, நாடகம்.

குறிப்பு :- முதற்சங்கப் புலவராக விளங்கிய அகத்தியரையே இந்நூலின் ஆசிரியராகக் கொள்வர். முச்சங்கத்தாருக்கும் இது இலக்கண நூல். அகத்தியம் முதல் நூல், தொல்காப்பியம் வழி நூல் என்பர். பன்னீராயிரம் சூத்திரங்களைக் கொண்டது. இன்று இந்நூல் இறந்துபட்டது, தொல்காப்பிய உரை ஆசிரியர்கள் அகத்திய நூற்பாக்களை பல இடங்களில் சான்று காட்டியிருக்கின்றனர்.

2. அறுவகை இலக்கணம்

ஆசிரியர்	:	வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள்
காலம்	:	19–ஆம் நூற்றாண்டு
சமயம	:	சைவம்
பொருள்	:	எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, புலமையிலக்கணம்

குறிப்பு :- சுவாமிகள் தமிழ்மேல் கொண்ட பற்றால் 'தமிழலங்காரம்', தமிழ் வெறுத்தபத்து போன்றநூல்களும் செய்துள்ளர் ஐந்திலக்கணங்களோடு 'புலமையிலக்கணம்' என்ற ஒன்றையும் சேர்த்துக் கூறுவதால் அறுவகை இலக்கணம் எனும் பெயரைப்பெற்றது. நடைமுறை வாழ்வியலுக்கும் இலக்கணம் கூறுகிறது.

3. பன்னிருபாட்டியல்

ஆசிரியர்	:	
காலம்	:	கி. பி. 10-ஆம் நூற்றாண்டு
பொருள்	:	எழுத்தியல், சொல்லியல், இனவியல்.

குறிப்பு :- பாட்டியல் பற்றியெழும் எந்த முறையான வரலாறும் பன்னிரு பாட்டியலில் இருந்தே தொடங்குகிறது. ஆசிரியரைப் பற்றி மூன்று விதமானகருத்துக்கள் நிலவுகின்றன அவை,

1. ஆசிரியர் ஒருவரே
2. பன்னிருவர் இணைந்தியற்றியது
3. பன்னிரண்டு பாட்டியல் நூல்களில் இருந்து ஒருவர் தொகுத்தது.

முதன்மொழிக்கு ஆகும் பன்னிரண்டு பொருத்தங்களைக் கூறுவதால் இந்நூல் பன்னிரு பாட்டியல் என்னும் பெயர்ப் பெற்றது.

4. குவலயானந்தம்

ஆசிரியர்	:	மாணிக்கவாசகர்
காலம்	:	10-ஆம் நூற்றாண்டு 19-ஆம் நூற்றாண்டு.
பொருள்	:	உறுப்பியல், அணியியல், சித்திரவியல்.

குறிப்பு :- குவலயானந்தம் எனும் பெயரில் தமிழில் இரு நூல்கள் உள்ளன. அணி இலக்கணம் பேசுவது. 167 கட்டளைக் கலித்துறைகளால் அமைவது. ஒவ்வொரு அணியும் விளக்கப்பட்டபின், பெரும்பாலும் சான்று பெறுகின்றன. இலக்கியம் கருத்து, பொருள் முதலியனவும் விளக்கம் பெறுகின்றன.

5. சிதம்பரப்பாட்டியல்

ஆசிரியர்	:	பரஞ்சோதி
காலம்	:	16-ஆம் நூற்றாண்டு
பொருள்	:	உறுப்பியல், செய்யுளியல், அழிபியல், பொருத்தவியல், மரயபில்.

குறிப்பு :- சிதம்பரத்தில் இவர் வசித்துவந்தாராதலின் இவர் எழுதிய நூல் சிதம்பரப் பாட்டியல் என்னும் பெயர் பெற்றுள்ளது. முதல்மூன்று இயல்களுக்குச் சிறந்த உரை உள்ளது.

6. தொன்னூல் விளக்கம்

ஆசிரியர்	:	வீரமாமுனிவர்
காலம்	:	19 ஆம் நூற்றாண்டு
சமயம்	:	கிருத்துவம்.
பொருள்	:	ஐந்திலக்கணம்

குறிப்பு :- ஐந்திலக்கணங்களும் கூறும் தமிழ் இலக்கண நூல் தொன்னூல் விளக்கம். நூலுக்கான உரை விளக்கமும் ஆசிரியராலே தரப்பட்டுள்ளது. வேதகிரி முதலியார் இலக்கண இலக்கிய மேற்கோள்களை சேர்த்துள்ளார். இந்நூல் தமிழ் மரபை ஒட்டி எழுதப்பட்டிருக்கிறது.

7. மாறனகப்பொருள்

ஆசிரியர்	:	திருக்குருகைப் பெருமாள் கவிராயர்
காலம்	:	கி. பி 16 ஆம் நூற்றாண்டு
சமயம்	:	தென்கலை வைணவர்.
பொருள்	:	களவியல், வரைவியல், கற்பியல்

குறிப்பு :- மாறனலங்காரம்' திருப்பதிகம் திருக்குருகாமான் மியம், நம்பெருமாள் மும்மணிக் கோவை மாறன் பாப்பா வினம், மாறன்கிளவிமணிமாலை என்ற பிறநூல்களையும் எழுதியுள்ளார். மாறனகப் பொருள் 106 நூற்பாக்களால் இயன்றுள்ளது.

8. தொல்காப்பியம்

ஆசிரியர் ; தொல்காப்பியர்

காலம் : இடைச் சங்க காலம்

பொருள் : கிளவியாக்கம்,வேற்றுமையியல் வேற்றுமை மாங்கியல் விளிமரபு பெயரியல் வினையியல், இடையியல் உரியியல், எச்சவியல்.

உரையாசிரியர் : இளம்பூரணர், சேனாவரையர் நச்சினார்க்கினியர், தெய்வச் சிலையார், கல்லாடனார்.

குறிப்பு: 463 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. தமிழ்மொழியின் சொல் உறுப்புக்கள், சொற்கள், தொகைகள், தொடர்கள், ஆகியவற்றின் விளக்கம் தந்து நிற்கின்றது

11. நன்னூல்

ஆசிரியர் : பவணந்தி

காலம் : 13-ஆம் ஆற்லாண்டு

சமயம் : சமணம்.

பொருள் : எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப்புணரியல், மெய்யீற், றுப்புணரியல், உருபுபுணரியல்.

குறிப்பு :- பதவியல் நன்னூரால் ஆக்கப்பட்டதொன்று. இது தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் காணப்படாதது. காலப் போக்கில் தமிழ்மொழியின் வளர்ச்சியில் ஏற்பட்ட செய்தியைக் கூறுகிறது.

13. தமிழ்நெறி விளக்கம் பொருளியல்

காலம் : 11 ஆம் நூற்றாண்டு

குறிப்பு :- இந்நூல் 25 நூற்பாக்களையும், 172 எடுத்துக் காட்டுகளையும் உடையது. இந்நூலைப் பதிப்பித்தவர் உ. வே. சா. ஆவார்கள். எழுத்து, சொல், பொருள், யாப்பு ஆகிய நான்கு இலக்கணங்களையும் கொண்டு விளங்கி இருக்கலாம். தொல்காப்பியத்தில் கூறப்படாத 'நற்றாயின் கூற்று' காணப் படுகிறது.

1. அகத்தியம்

ப. தங்கராசு

அகத்தியர் என்னும் பெயருடையோர் தமிழ் நாட்டில் பலர் பல காலங்களில் வாழ்ந்துள்ளனர். அவர்களுள் எவ்வகத்தியர் 'அகத்தியம்' என்னும் நூலை இயற்றினார் எனத் தெளிவாகக் கூறமுடியவில்லை. எனினும் இறையனாரகப்பொருளுரை, அகத்தியர் தலைச்சங்கத் தலைமைப்புலவர்; தலைச்சங்கத்தார்க்கு அவர்தம் அகத்தியமே முதன்மையான நூல்; இடை கடைச் சங்கத்தார்க்கு அகத்தியத்தோடு தொல்காப்பியமும் நூலாக விருந்தது எனக் குறிப்பிடுகிறது[1]. எனவே இறையனாரகப் பொருளுரைக் கூற்றை அடிப்படையாகக்கொண்டு பார்த்தால் முதற்சங்கப் புலவராக விளங்கிய அகத்தியரே அகத்தியம் என்னும் தொன்மையான தமிழிலக்கண நூலைச் செய்தவர் எனக்கொள்ளலாம். மேலும் முதல், இடை, கடையென்னும் முச் சங்கத்தார்க்கும் இது இலக்கண நூலாக விளங்கியது எனவும் இவ்வுரைக்குறிப்பினால் அறியலாம்.

இலக்கண உரையாசிரியர்களும் அகத்தியமே முதனூல்; தொல்காப்பியம் அதன் வழிநூல்; தொல்காப்பியருக்கு ஆசிரியர் அகத்தியர் என்பதனைத் தத்தம் உரையினுள்[2] குறிப்பிட்டிருப்பதும் இக் கருத்தினை உறுதிப்படுத்துகிறது. அகத்தியம் இயல், இசை, நாடகம் என்னும் மூன்றனுககும் உரிய முத்தமிழ் இலக்கணம் எனவும் இவர்கள் சுட்டியுள்ளனர்[3]. அகத்தியம் பன்னீராயிரம் சூத்திரங்களைக்கொண்ட நூல் எனவும் கூறுவர்.[4] இவற்றால் அகத்தியம் மிகப்பெரிய இலக்கணநூலாகப் பண்டைக்காலத்து விளங்கியது எனக் கொள்ள இடமுண்டு. இதனாலேயே இதற்குப் பேரகத்தியம் எனப்பெயரிட்டு வழங்கினர் எனலாம். அகத்தியர் தம் பெயரால் தமிழ்மொழிக்குப் பன்னீராயிரம் சூத்திரங்களைக்

கொண்ட இலக்கண நூலைச் செய்தாரெனவும் அந்நூல் இயல் இசை நாடகமாய முத்தமிழுக்கும் உரிய இலக்கணம் எனவும் அது போகத்தியம், சிற்றகத்தியம் என இரு பகுதியாகப் பெயர்பெற்று விளங்கியது எனவும் அத்தகைய அரிய பெருநூல் இறந்து பட்டது நம் தமிழ்மக்கள் செய்த தவக்குறையே எனவும் கூறுவார் கூற்றும் இங்கு நினைக்கத்தக்கது.[5] தொல்காப்பியம் மக்களிடையே செல்வாக்குப்பெறத்தொடங்கியவுடன் அகத்தியம் மிகப்பரந்துபட்ட நூலாதலின் கற்பார் அருகி, காலப்போக்கில் வழக்கற்றுப்போயிருக்கலாம். எஞ்சிய நூற்பாக்கள் சிலவற்றையே உரையாசிரியர்கள் தம் உரையினுள் மேற்கோளாகக் காட்டியுள்ளனர் எனக் கருதமுடிகிறது.

உரையாசிரியர்களின் அகத்திய மேற்கோள்

தொல்காப்பியம், நன்னூல், இலக்கணவிளக்கம், பிரயோக விவேகம், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி ஆகிய இலக்கண இலக்கிய நூல்களின் உரைகளில் அகத்திய நூற்பாக்கள் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளன.

உரையாசிரியர்கள்	அகத்திய நூற்பாக்கள் மேற்கோள் காட்டப் பெற்ற நூல்கள்	நூற்பாக்களின் எண்ணிக்கை
இளம்பூரணர்	தொல். செய். நூ. 426	5
	,, ,, ,, 435	
சேனாவரையர்	தொல்.சொல்.வேற்.நூ. 74	2
	,, ,, வினை.நூ. 204	
தெய்வச்சிலையார்	தொல். சொல். வேற்.நூ. 4	2
	,, ,, எச். நூ. 4	

மயிலைநாதர்	நன்னூல், நூ. 130, 258, 259, 272 290, 294, 296, 299, 322, 326, 332, 339 354, 377, 381, 394	17
சங்கரநமச்சிவாயர்	நன்னூல், நூ. 265, 291, 295, 297 300, 323, 340, 342	8
வைத்தியநாததேசிகர்	இலக்கணவிளக்கம், நூ. 160, 193, 197, 200, 203,	5
	மயிலைநாதர் நன்னூல் 320, 326-ல் மேற்கோள் காட்டிய இரு நூற் பாக்களையும் இலக்கணவிளக்க ஆசிரியர் தம் நூலினுள் 230, 232-வது சூத்திரமாகச் செய்துள்ளார்.	2
சுப்பிரமணியதீக்கிதர்	பிரயோகவிவேகம், தந்சிறப்புப் புப்பாயிரம்.	1
அடியார்க்கு நல்லார்	சிலப். அரங்கேற்று காதை ப. 80 ,, ,, ப. 81 ,, அந்திமாலை ப. 134	3
நச்சினார்க்கினியர்	சீவகசிந்தாமணி, காந்தருவதத்தை. செய்யுள் 672.	1
		46

இப்பட்டியலில் உள்ளவாறு உரையாசிரியர்கள் காட்டும் அகத்திய நூற்பாக்கள் 46. இவற்றுள் ஒருவர் எடுத்தாண்ட நூற்பாவையே பிறரும் எடுத்தாண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனைக் கீழ்க்காணும் பட்டியலில் காணலாம்.

இலக்கணம்

உரையாசிரியர்	நூல்	நூற்பாக்கள்								
மயிலைநாதர்	நன்னூல், நூ.	332	326	290	322	258	294	296	299	339
சங்கர நமச்சிவாயர்	நன்னூல், நூ.			291	323	265	295	297	300	340
சேனாவரையர்	தொல். வினை. நூ.	204		வேற். 74						
தெய்வச்சிலையார்	தொல்காப்பியம்				வேற் 4					
வைத்தியநாத தேசிகர்	இலக்கணம்-விளக்கம்		232	193	230	160	197	200	203	
சுப்பிரமணிய தீக்கிதர்	பிரயோக விவேகம்			தற்சிறப்-புப்-பாயிரம்						

இலக்கியம்

அடியார்க்கு நல்லார், சிலப். அரங். ப. **80**-ல் மேற்கோள் காட்டிய நூற்பாவையே நச்சினார்க்கினியர், சீவக. காந்தருவதத்தை, செய்யுள் **672**-ல் எடுத்துக்காட்டியுள்ளார்.

இவற்றையெல்லாம் ஒருசேரவைத்து நோக்கின் உரையாசிரியர்கள் வாயிலாக நமக்குக் கிடைக்கும் அகத்தியநூற்பாக்கள் 26. இவற்றுள் இளம்பூரணர் எடுத்தாளும் நூற்பாக்களின் நடையும் கருத்தும் தொல்காப்பியநூற்பாக்களோடு ஒத்துக்காணப்படுதலால் இவற்றைமட்டும் பண்டைய அகத்திய நூற்பாக்களாகக் கருதலாம். ஏனையோர் எடுத்துக்காட்டிய நூற்பாக்கள் இறையனாரகப்பொருளுரையால் பெறப்படும் முதற்சங்கப்புலவரான அகத்தியரால் எழுதப்பெற்ற அகத்திய நூற்பாக்களா என்பது ஆய்வுக்குரியது. எனினும் உரையாசிரியர்களால் மேற்கோளாகக் காட்டப்பெற்ற அகத்திய நூற்பாக்கள் யாவும் இளம்பூரணர் காலத்திற்கு முற்பட்டவை எனக் கொள்ளலாம்.

''தொல்காப்பியத்தின் முதலுரைகாரராகிய இளம்பூரணர் அகத்தியத்திலிருந்து சிலசூத்திரங்களை எடுத்தாண்டுள்ளனர். பின்னர் மயிலைநாதர் முதலியோரும் சில சூத்திரங்களை எடுத்தாண்டுள்ளனர். பழைய உரையாசிரியர் காட்டாத சூத்திரம் ஒன்றனை மலையாள விலக்கண நூலாகிய லீலா திலகத்தின் ஆசிரியர், அகத்தியச் சூத்திரம் என்று எடுத்துக் காட்டி உரைசெய்திருக்கின்றார். இவற்றால் அறுநூறாண்டுகட்கு முன்னர்வரை அகத்தியத்தின் சில சூத்திரங்களாதல் வழங்கியிருத்தல்வேண்டும் என்பது உறுதிப்படும். அக்காலத்தின் பின்னரே அந்நூல் முற்றும் இறந்தொழிந்ததாகும்''[6] என்பார் கூற்றும் இங்கு நினைக்கத்தக்கது.

பேரகத்தியத் திரட்டு

ச. பவாநந்தம் பிள்ளை 'பேரகத்தியத் திரட்டு' என்னும் தமது நூலில் 'பேரகத்தியம்' என்னுந்தலைப்பின்கண் நூற்றறுபத்துநான்கு நூற்பாக்களைத் தொகுத்தளித்துள்ளார். இந்நூற்பாக்களுக்குத் தாமே உரையும் எழுதியுள்ளார். இந்நூலின் பிற்பகுதியில் 'உரைநூல்களிற் கண்ட பேரகத்திய மேற்கோள் சூத்திரங்களாகப்' பத்தொன்பதனை எடுத்துக் காட்டியுள்ளார். இந்நூலில் தொகுத்தளித்திருக்கும் அகத்திய

நூற்பாக்கள் குறித்து இவர் குறிப்பிட்டிருக்கும் கருத்துக்கள் இங்கு நினைக்கத்தக்கன.

"அகத்தியச் சூத்திரங்களெனச் சிதைந்து ஆங்காங்குச் சில வழங்குவனவாயின. அவற்றுள் சில சூத்திரங்களை வித்வான் களத்தூர்-வேதகிரி முதலியார் சுமார் அறுபது யாண்டுகளுக்கு முன்னர் வெளியிட்டனர். சில தொல்காப்பியம் நன்னூல் முதலிய இலக்கண உரைகளினும் காணப்படுகின்றன. வேதகிரி முதலியார் தம்மிடத்து மூவாயிரம் சூத்திரங்கள் கிடைத்துள்ளனவென்று சொல்லி நூற்றுபத்தைந்து சூத்திரங்களே வெளியிட்டனர். மற்றைச் சூத்திரங்களும் கிடைக்கு மென்று பலகாலும் பல்வேறிடங்களினும் முயன்றும் கிடைத்தில. பின்னும் பதினாறு சூத்திரங்கள் கிடைத்தன. அவற்றையுங் கொண்டு தொகுத்து வெளியிடலாயினேன். கிடைத்தமட்டில் இது அகத்தியனார் செய்த தென்பதற்கு மேற்கண்ட வேதகிரி முதலியார் கூற்றேயன்றி வேறு ஆதரவு கிடைத்திலது. அகத்தியம் என்னும் நூல் ஒன்று நிலவுகின்றது என்று எண்ணியிருப்பார்க்கு மனவமைதியுண்டாமாறு அதனை வெளியிடத்துணிந்தேன்".

இவர்தம் கூற்றால் பேரகத்தியத்திரட்டிலுள்ள அகத்திய நூற்பாக்கள் பிற்காலப் புலவரால் எழுதப்பெற்றது என்பது தெளிவாகிறது.

காலம்

தொல்காப்பியம், நன்னூல் முதலான இலக்கணநூல்களில் உரையாசிரியர்களால் மேற்கோளாக எடுத்தாளப்பெற்ற அகத்திய நூற்பாக்களுள் ஒன்றேனும் பேரகத்தியத்தில் காணப் படவில்லை. மேலும் பேரகத்தியம் தொல்காப்பியம், நன்னூல் என்னும் இவ்விருநூல்களின் நூற்பாக்களைப் பெரிதும் தழுவியும், பிரயோகவிவேகம், இலக்கணக்கொத்து, வெண்பாப் பாட்டியல் முதலான பிற்காலஇலக்கண நூல்களின் சிலநெறிகளைப் பின்பற்றியும் அமைந்துள்ளது. எனவே பிரயோக

விவேகம், இலக்கணக்கொத்து, வெண்பாப்பாட்டியல் ஆகிய நூல்களுக்குப் பின்னர்ப் பேரகத்தியம் எழுதப்பெற்றிருக்கலாம் எனக்கொள்ளல் நேரிது. பேரகத்திய நூற்பாக்களுள் பல முத்துவீரியத்தில் எடுத்தாளப்பெற்றிருப்பதால் பேரகத்தியத்திற்கு முத்துவீரியம் பிற்பட்டதென்பது நன்கு தெளிவாகிறது. பேரகத்திய நூற்பாக்கள் குறித்து மட்டுமே இங்கு ஆராயப் படுகிறது.

பேரகத்தியம்

நூல் அமைப்பு

பாயிரம்

> "இலக்கண மெட்டமை யிறைவற் றொழுதெழுத்
> திலக்கணக் காண்ட மியம்புவல் யானே"

என்பது பேரகத்தியத்தற்சிறப்புப்பாயிரம். எழுத்திலக்கணத்தை மட்டும் எடுத்துக்கூறுவதே இந்நூலின் நோக்கம் என்பதனை இதனால் அறியலாம்.

எழுத்திலக்கணக் காண்டம்

இது எழுத்துப்படலம், எழுத்துற்பத்திப்படலம், எழுத்து வரன்முறைப்படலம், பன்மொழியாக்கப்படலம், வடமொழிப் படலம் என்னும் ஐந்து பிரிவுகளை உடையது. எழுத்துப்படலம் அறுபது சூத்திரங்களும் (1-60), எழுத்துற்பத்திப்படலம் இருபது சூத்திரங்களும் (61-80), எழுத்துவரன்முறைப்படலம் நாற்பத் தெட்டுச் சூத்திரங்களும் (81-128), பன்மொழிப்படலம் பன்னிரண்டு சூத்திரங்களும் (129-140), வடமொழிப்படலம் இருபத்துநான்கு (141-164) சூத்திரங்களுமாக 164 சூத்திரங் களைக் கொண்டுள்ளது. 'எழுத்திலக்கணக்காண்டம் இயம்

'புலவ்யானே' எனத்தற்சிறப்புப்பாயிரம் பேசுவதால் பேரகத்தியத்தை எழுதியவரிடத்து எழுத்திலக்கணத்தை மட்டுமே சிறப்பாகச் சொல்ல வேண்டும் என்ற நோக்கம் மேலோங்கியிருந்தது என்பதனை அறியலாம்.

காண்டம் - படலம் - பெயரமைப்பு

தமிழ் இலக்கண நூல்களுள் பெரும்பாலானவற்றின் நூலின் பெரும்பிரிவுக்கு அதிகாரம் என்னும் பெயர்தான் வழங்கப்பெற்றுள்ளது. தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், முத்துவீரியம், சுவாமிநாதம் முதலான நூல்களில் இதனைக் காணலாம். பேரகத்தியத்திற்கு மட்டும் 'காண்டம்' எனப் பெயரிட்டிருப்பது புதுமையாகவுள்ளது. எனினும் நூலின் சிறு பிரிவுக்குப் படலம் என்னும் பெயரினைப் பேரகத்தியத்திற்கு வழங்கியிருப்பது வீரசோழியம், பிரயோக விவேகம் என்னும் நூல்களைத்தழுவி அமைந்தது எனலாம்.

நூல்கூறும் பொருள்

எழுத்துப்படலத்தில் எழுத்தின்வடிவம், எழுத்தின் மறுபெயர்கள், எழுத்தின்வகைகள், முதலெழுத்து, முதலெழுத்தின் மறுபெயர்கள், உயிரெழுத்து, உயிரெழுத்தின் வேறுபெயர்கள், குற்றெழுத்து, நெட்டெழுத்து, சுட்டெழுத்து, வினாவெழுத்து, மெய்யெழுத்தின் வேறுபெயர்கள், சார்பெழுத்தின் வகைகள் புள்ளிபெறும் எழுத்துக்கள் முதலானவையும் இவை இவை தமிழுக்கே உரிய எழுத்துக்கள், இவை இவை வடமொழிக்கே உரியவை என்பனவும் விளக்கப்படுகின்றன. மேலும் ஒழிபு என்னும் பகுதியில் குறில் ஆண்பால். நெடில் பெண்பால் என்றும், ஆய்தமும் மெய்யெழுத்துக்களும் அலியென்றும், ஒகரமல்லாத குற்றெழுத்துக்கள் நான்கும் கசதநபமவ ஆகிய ஏழு உயிர்மெய் எழுத்துக்களும் அமிர்தவெழுத்துக்கள் என்றும், உயிரளபெடை, ஒற்றளபெடை, மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் ஆகிய இவை நஞ்சு எழுத்துக்கள் என்றும் உணர்த்தப்படுகின்றன.

எழுத்துற்பத்திப்படலத்தில் தொல்காப்பியப்பிறப்பியலில் பேசப்பெற்ற எழுத்துக்களது பிறப்புப்பற்றிய கருத்துக்களே கூறப்பெற்றுள்ளன.

எழுத்து வரன்முறைப்படலத்தில் மொழிக்கு முதலில்வரும் உயிரெழுத்துக்கள். உயிர்மெய்யெழுத்துக்கள் இவை என்பதும் மொழிக்கு இறுதியில் வரும் உயிரெழுத்துக்கள் மெய்யெழுத்துக்கள் இவை என்பதும் கூறப்படுகின்றன. மேலும் வேற்று நிலைமெய்ம்மயக்கங்கள், போலி எழுத்துக்கள், மாத்திரைக்கு அளவு, மாத்திரையின் வேறுபெயர்கள், மாத்திரைக்குச் சிற்றளவு, எழுத்துக்களுக்கு மாத்திரை, எழுத்துச்சாரியை ஆகியனவும் விளக்கப்படுகின்றன. சுருங்கக்கூறினால் தொல்காப்பியத்தின் நூன்மரபிலும் மொழிமரபிலும் விளக்கப் பெற்ற கருத்துக்கள் இப்படலத்தில் தொகுத்துக்காட்டப்பட்டுள்ளன எனக் கூறலாம்.

ஓரெழுத்தொரு மொழியாகும் எழுத்துக்கள் இவை என்பதனையும். பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகியவற்றின் இலக்கணங்களையும், மொழியானது தனிமொழி, இணைமொழி, துணைமொழி, பொதுமொழி, கணமொழி, தணமொழி, கலப்புறுமொழி என ஏழுவகைப்படும் என்பதனையும், மொழியானது ஓரெழுத்து முதலாக ஒன்பதெழுத்து ஈராக வரும் என்பதனையும் பன்மொழியாக்கப் படலம் விளக்கிநிற்கின்றது.

இறுதியாக உள்ள வடமொழிப்படலம் வடசொல்லானது சநுக்கிரகம், சங்கதம், அவப்பிரஞ்சநம், பாகதம் என நான்கு வகைப்படும் என்பதனையும், தற்பவம், தற்சமம், தேசியம் ஆகியவற்றின் இலக்கணங்களையும், தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி என்னும் வடமொழியின் மூன்றுவகைச் சந்திகளின் இலக்கணங்களையும் வடமொழியின் எதிர்மறை இலக்கணத்தையும் உணர்த்துகிறது.

பேரகத்தியமும் பிற இலக்கண நூல்களும்

எல்லாத்தமிழ் இலக்கண நூல்களிலும் சில கருத்துக்கள் (உயிர்–12, மெய்-18, உயிர்மெய்பாகுபாடு, எழுத்துக்களின் பிறப்பு, மாத்திரை பெரிதும் ஒற்றுமையாகப் பேசப்பெற்றுள்ளமையைக் காணலாம். அதனாலேயே எல்லா இலக்கண நூல்களும் ஒன்றையொன்று தழுவியதாகக் கொள்ளமுடியாது. பொதுவாக ஒரு இலக்கண நூல் தனக்கு முன்னெழுந்த இலக்கண நூல்களின் நெறிகளை எங்கெங்கெல்லாம் தழுவிச்செல்ல முடியுமோ அங்கெங்கெல்லாம் தழுவிச்செல்வதை மரபாகக் காணலாம். அந்த வகையில் பேரகத்தியம், தொல்காப்பியம் நன்னூல் ஆகிய இருநூல்களையும் பெரிதும் தழுவியுள்ளது எனக் கருதலாம். மேலும் நேமிநாதம், பிரயோகவிவேகம், வெண்பாப்பாட்டியல், இலக்கணக்கொத்து ஆகியவற்றின் சில நெறிகளையும் உடன்பட்டு இந்நூல் குறிப்பிட்டிருப்பது எண்ணத்தக்கது. பிற்காலத்துத்தோன்றிய முத்துவீரியத்திற்குப் பேரகத்தியம் பெரிதும் துணைபுரிந்துள்ளது என்பதும் நினைக்கத்தக்கது.

பேரகத்தியமும் தொல்காப்பியமும்

நாற்பதுக்கு மேற்பட்ட தொல்காப்பிய நூற்பாக்கள் (சிற்சில மாறுதல்களுடன்) பேரகத்தியத்தில் எடுத்தாளப்பெற்றுள்ளன. அதாவது தொல்காப்பியத்தில் கூறப்பெற்ற கருத்துக்கள் மீண்டும் பேரகத்தியத்தில் பேசப்பட்டுள்ளன என்பது நினைவில் கொள்ளத்தக்கது. தொல்காப்பியம் பேரகத்தியம் இவ்விருநூல்களின் நூற்பாக்களையும் ஒப்பிட்டுக்காணுங்கால் இவ்வுண்மை நன்கு தெளிவாகிறது. மொழி நடையிலும் கருத்திலும் இரண்டனுக்கும் பெரிதும் வேறுபாடில்லை. எடுத்துக்காட்டிற்காக இருநூல்களுக்கும் உள்ள ஒப்புமைப் பகுதிகள் சில இங்குத் தரப்பட்டுள்ளன.

பேரகத்தியம்	தொல்காப்பியம்
அ இ உம் மூன்றுஞ் சுட்டிற் சுட்டே. 16	அ இஉ அம் மூன்றுஞ் சுட்டு. 31
வல்லெழுத் தாவன கசட தபற. 30	வல்லெழுத் தென்ப கசட தபற.19
மெல்லெழுத் தாவன ஙஞண நமன 32.	மெல்லெழுத் தென்ப ஙஞண நமன. 20
இடையெழுத் தாவன யரல வழள. 34	இடையெழுத் தென்ப யரல வழள. 21
எகர வொகரமெய் யெய் தும் புள்ளியே. 53	மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் 15 எகர ஒகரத் தியற்கையும் அற்றே. 16
அவற்றுள் அ ஆ இரண்டு மங்காந்தியலும். 63	அவற்றுள் அ ஆ ஆயிரண்டங் காந்தியலும். 85
ககார ஙகார முதனா முதலணம், 66	ககார ஙகாரம் முதல்நா அண்ணம். 89
சகார ஞகார மிடைநா விடை யணம் 67	சகார ஞகாரம் இடைநா அண்ணம் 90
டகார ணகார நுனிநா நுனியணம் 68.	டகார ணகாரம் நுனிநா அண்ணம். 91
இரண்டிதழ் பொருந்தப் பகாரமகா ரம்வரும். 70.	இதழியைந்து பிறக்கும் பகார மகாரம். 97
ரகார ழகாரங் குற்றொற் றாகா. 103.	அவற்றுள் ரகார ழகாரங் குற்றொற் றாகா. 49

இகரம் யகரமெய் யிறுதி விரவும். 113.	இகர யகரம் இறுதி விரவும். 58
கண்ணிமை கைந்நொடி யளவே மாத்திரை. 115.	கண்ணிமை நொடி என அவ்வே மாத்திரை. நூன். 7;1
குற்றெழுத் தைந்து மொழி நிறைந் தியலா 131.	குற்றெழுத் தைந்தும் மொழி நிறை பிலவே. 44

பேரகத்தியம் தொல்காப்பியத்தினின்றும் பல நூற்பாக்களை எடுத்தாண்டிருப்பதனை மேற்காட்டப்பெற்ற ஒப்புமைப் பகுதிகள் சில கொண்டு தெளியலாம்.

பேரகத்தியமும் நேமிநாதமும்

பேரகத்தியம் தொல்காப்பிய நூற்பாக்கள் பலவற்றை அப்படியே எடுத்தாண்டிருப்பது குறித்து மேலே கூறப்பெற்றது நேமிநாதத்தின் சில நெறிகளையும் பேரகத்தியம் பின் பற்றியுள்ளது என்பது இங்கு அறியத்தககது.

முதலெழுத்து

முதலெழுத்து உயிர், மெய், ஆய்தம் என்னும் மூன்று வகைப்படும் என்றும் 31 என்ற எண்ணிக்கையுடையது என்றும் நேமிநாதம் உணர்த்துகிறது.[8] நேமிநாத உரையில் காட்டப் பெற்ற மேற்கோள் சூத்திரம் ஒன்றிலும் இக்கருத்து உள்ளது.[9] இக்கருத்தினைப் பேரகத்தியம் ''முதலுயிர் மெய்யாய்த முப்பானொன்றே''(பேர.7) என்னும் நூற்பாவினால் உடன்படுதலைக் காணலாம். தொல்காப்பியர், ''எழுத்தெனப் படுவ அகரமுதல் னகர இறுவாய் முப்பஃதென்ப'' எனச் சுட்டுவதனால் முதலெழுத்து முப்பது என்பது இவர்தம் கருத்தாக அறிகிறோம், இக்கருத்தினை நேமிநாதம் தவிர ஏனைய இலக்கணிகள் அனைவரும் பின் பற்றியுள்ளனர். முதலெழுத்து முப்பத்தொன்று எனச்சுட்டிய முதல்நூல் நேமிநாதமே. அதனைப் பின்பற்றுவது பேரகத்தியம் மட்டுமே.

ஐகார ஔகாரக் குறுக்கங்கள்

ஐகார ஔகாரக்குறுக்கங்களுக்கு மாத்திரை கூறும் முறையில் பேரகத்தியம் நேமிநாதத்தினின்றும் மாறுபட்டுள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியர் மொழி மரபில் "ஓரளபாகும் இடனுமாருண்டே தேருங்காலை மொழி வயினான" (மொழிமரபு. 57) என்னும் நூற்பாவில் ஐகார ஔகாரக்குறுக்கங்கள் ஒரு மாத்திரை அளவு பெற்று நிற்கும் எனச்சுட்டியுள்ளார். ஆனால் நேமிநாதம் இக் குறுக்கங்களுக்கு ஒன்றரை மாத்திரை எனக்குறிப்பிட்டுள்ளது.[10] வீரசோழியமும் இக்கருத்தினை உடையதே. எனவே பேரகத்தியம் ஐகார ஔகாரக்குறுக்கங்களுக்கு மாத்திரை கூறும் முறையில் நேமி நாத நெறியைப் பின்பற்றாமல் தொல்காப்பியம் நன்னூல் முறையைப் பின்பற்றி இக் குறுக்கங்களுக்கு ஒரு மாத்திரையே அளவு (பேர. 122) எனச் சுட்டியுள்ளது.

பேரகத்தியமும் நன்னூலும்

பேரகத்தியம் நன்னூல் இவ்விரு நூல்களுக்கிடையே உள்ள நூற்பாக்களை ஒப்பிட்டுக்காணுங்கால் பேரகத்தியம் நன்னூலைப் பெரிதும் தழுவியுள்ளது புலனாகும்.

ஆய்தவெழுத்து - மெய்யெழுத்து

ஆய்தவெழுத்து, மெய்யெழுத்து இவற்றைப் பொறுத்த மட்டும் பேரகத்தியம் நன்னூல் கூறும் பகுப்பினின்றும் மாறுபட்டுள்ளது, ஆய்தவெழுத்தை நன்னூலார் சார்பெழுத்தாகக் கொள்ள (நன். 60), பேரகத்தியம் முதலெழுத்தின் பகுப்பில் வைத்துச் சுட்டியுள்ளது (பேர. 7). எல்லாத் தமிழ் இலக்கண நூல்களும் மெய்யெழுத்தைப் பொறுத்த மட்டும்பதினெட்டு என்னும் வரையறையை ஏற்றுக்கொண்டுள்ளன. பேரகத்தியம் மட்டும் ஆய்தவெழுத்தை மெய்யெழுத்தின் பாகுபாட்டில் வைத்து, மெய்யெழுத்துப் பத்தொன்பது (பேர. 26) எனக்

கூறியிருப்பது புதுமையாக உள்ளது. இவ்வகையில் நேமிநாதத்திலிருந்தும் பேரகத்தியம் வேறுபடுகின்றது. நேமிநாதம் ஆய்தத்தையும் முதலெழுத்தாகச் சுட்டுகின்றதேயன்றி மெய். யெழுத்துடன் இணைத்துப் பேசவில்லை. பேரகத்தியமோ ஆய்தத்தை மெய்யெழுத்தென்றே வரையறுக்கின்றது. ஆய்தம் உயிரெழுத்துப் போலவும் மெய்யெழுத்துப் போலவும் இயக்கம் பெறுவதால் அதனை அலியெழுத்தென்பர். (நன். நூற். 60, வி. உரை) ஆனால் பேரகத்தியம் ஆய்தத்தை மெய் யெழுத்தென்று தெளிவாகச் சுட்டியபின் அலியெழுத்து (பேர. 52) என்று கூறுதல் பொருத்தமுடைத்தாகத் தெரியவில்லை. வெண்பாப்பாட்டியலில் ஆய்தமும் மெய்யும் பேடு (வெண்பா. 6) எனக்குறிக்கப்படுதலால் அது கொண்டு இவ்வாறு கூறினார் போலும்.

பேரகத்தியமும் பிரயோக விவேகமும்

பேரகத்தியம் பிரயோகவிவேக நூலாரின் கருத்துக்கள் சிலவற்றைப் பின்பற்றியுள்ளது என்பதற்குச் சில சான்று களைக் காட்டலாம்.

குறில், நெடில், ஆய்தம்

''குறிலுங் குறுமையு மிரச்சுவமுங் குறிற்பெயர்''
பேர. 13.

''நெடிலு நெடுமையுந் தீர்க்கமு நெடிற்பெயர்''
" 14.

''அளபும் புலுதமும் அளபெ டைப்பெயர்''
" 43

இந்நூற்பாக்களில் குறில், நெடில், ஆய்தம் என்பனவற்றிற்கு முறையே இரச்சுவம், தீர்க்கம், புலுதம் என்னும் வடசொல் இலக்கணக் குறியீடுகளைப்பேரகத்தியம் பயன்படுத்தியிருப்பது பிரயோக விவேகநூலாரைத் தழுவியேயாகும்.[12]

உயிரெழுத்து

உயிரெழுத்தின் வேறுபெயர்களாக "அச்சாவி சுரம்பூத மாமுயி ரின்பெயர்" எனப் பேரகத்தியம் (நூ. 10) சுட்டியுள்ளது. "ஆவி எழுத்து அச்சொடு சுரம் ஆகும்" [13] என்னும் பிரயோக விவேக நூற்பாவின் சாயல் அப்படியே மேற்குறித்த பேரகத்திய நூற்பாவில் இருப்பதனைக் காணலாம்.

மெய்யெழுத்து

மெய்யெழுத்தை 'அல்' எனவும் 'வியஞ்சனம்' எனவும் பிரயோக விவேகம் குறிப்பிடுகிறது.[14] இவற்றுடன் பேரகத்தியம் மேலும் சிலசொற்களைக் கூட்டி மெய்யெழுத்தின் பெயர்களாக "உடலுடம் பொற்றல் லூமைவியஞ் சனமெய்" (பேர. 27) எனக் குறிப்பிட்டுள்ளது.

பேரகத்தியமும் வெண்பாப் பாட்டியலும்

பேரகத்தியத்தில் வெண்பாப்பாட்டியலின் நெறிகளையும் காணமுடிகிறது.

> "குறிலாண் பாலு நெடில் பெண்பாலுமாம்" பேர. 51
> "ஆய்தமு மெய்யு மலியெனப் படுமே". " 52

என்னும் பேரகத்தியச் சூத்திரங்களில், "எண்ணுங் குறிலாணியைந்த நெடிலெல்லாம் பெண்ணாகு மொற்றாய்தம் பேடாகும்" என்னும்[15] வெண்பாப்பாட்டியலின் சாயல் படிந்திருப்பதைக் காணலாம்

பேரகத்தியமும் இலக்கணக்கொத்தும்

அளபெடை

அளபெடையை இயற்கை அளபெடை, செயற்கை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை,

நெடில் அளபெடை, குறிலளபெடை, ஒற்றளபெடை, உயிரெழுத்துப்பேறளபெடை என எண்வகையாகப் பாகுபடுத்திக் கூறியுள்ளது பேரகத்தியம் (பேர. 44). இப்பாகுபாடு தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் காணப்படாததொன்றாகும், எனினும் இலக்கணக் கொத்து நூலார்,

"இயற்கை யளபெடை செயற்கை யளபடை
எழுத்துப்பே றளபெடை இசைநூ லளபெடை
ஒற்றுப்பே றளபெடை ஒரோவழிக் கூடின்
ஐந்தென மொழிப அளபெடை; அவைதாம்
குற்றெழுத் தளபெடை நெட்டெழுத் தளபெடை
ஒற்றெழுத் தளபெடை என ஒரு மூன்றாய்
மொழிமுதல் இடைகடை மூன்றிலும் வருமே" [16]

எனச் சுட்டியுள்ளதால் இதனைத் தழுவியே அளபெடையின் வகைகளைப் பேரகத்தியம் குறிப்பிட்டுள்ளது எனலாம்.

பேரகத்தியமும் முத்துவீரியமும்

முத்துவீரியம் கி. பி. 19-ஆம் நூற்றாண்டு நூல் என்பர்.[17] எனவே முத்துவீரியம் பேரகத்தியத்திற்குப் பிற்பட்டதென்பது தெளிவு. முத்துவீரியம் தனக்கு முன்னெழுந்த பல இலக்கணங்களின் நூற்பாக்களை எடுத்துப் பின்பற்றியுள்ளது. முத்துவீரியச் சொல்லதிகார நூற்பாக்கள் பெரும்பாலன தொல்காப்பியச் சொல்லதிகார நூற்பாக்களே ஆகும் என்பர்.[18] எழுத்திலக்கணத்தைப் பொறுத்த மட்டும் பேரகத்தியத்தின் எழுத்திலக்கணக் காண்டமே முத்துவீரியத்தின் எழுத்ததிகாரமாக உருப்பெற்றுள்ளது எனலாம். இவ்விரு நூல்களுக்குமுள்ள நூற்பாக்களை ஒப்பீட்டாராய்கின்றபொழுது இவ்வுண்மை புலனாகின்றது. இதனால் முத்துவீரியம் பேரகத்தியத்திற்குப் பெரிதும் கடன்பட்டுள்ளது எனக்கூறலாம்.

பேரகத்தியத்திலுள்ள எழுத்துப்படலம், எழுத்துற்பத்திப் படலம், எழுத்து வரன் முறைப்படலம் என்னும் மூன்றிலும்

கூறப்பெற்ற செய்திகளை முத்துவீரியம் எழுத்தியலிலும், பேர கத்தியத்திலுள்ள பன்மொழியாக்கப் படலம், வடமொழிப் படலம் ஆகியவற்றில் உணர்த்தப்பெற்ற செய்திகளை முத்து வீரியம் மொழியியலிலும் வைத்து விளக்கியுள்ளது. எனவே முத்துவீரியம் எழுத்திலக்கணத்தைப் பொறுத்தமட்டிலும் (புணரியல் நீங்கலாக,) பேரகத்தியத்தை முதனூலாகக்கொண்டு உள்ளது எனக் கருதலாம். மேலும் முத்துவீரியச் சிறப்புப் பாயிரம்,

"அகத்திய நூல்வழி
முத்துவீ ரியமெனத் தற்பெயர் நிறீஇ
வகுத்தன னுறந்தை யகத்தெழுந் தருளிய
முத்து வீரமா முனிவனென் பவனே"

எனப்பேசுவதால் முத்துவீரியம் அகத்தியத்தை முதனூலாகக் கொண்டது உறுதிப்படுகிறது. 'அகத்திய நூல்வழி' எனப்பா யிரத்தில் சுட்டப்பட்டிருப்பது பிற்காலப் பேரகத்தியமே என் பது நினைவிலே கொள்ளத்தக்கது. பேரகத்தியத்திரட்டிலுள்ள 164 நூற்பாக்களுள் 42 நூற்பாக்கள் அப்படியே முத்துவீரியத் தில் இடம்பெற்றுள்ளன.

மேலும் பேரகத்தியத்திரட்டிலுள்ள 149-159 வரையுள்ள பேரகத்திய நூற்பாக்கள் அப்படியே முத்துவீரியத்திலும் எவ்விதமாற்றமுமின்றி 149-159 வரையுள்ள முத்துவீரிய நூற் பாக்களாகக் காட்சியளிக்கின்றன.

பேரகத்தியத்தின் புதுமை

பேரகத்தியம் பிற இலக்கணநூல்களைப்பெரிதும் பின் பற்றியதாயினும் தனக்கெனச் சில புதுமைகளையும் கொண் டுள்ளது.

இலக்கணக்குறியீட்டுச்சொற்களுக்கு - மறுபெயர்

எழுத்து, முதலெழுத்து, வல்லினம், மெல்லினம், இடை யினம், சார்பெழுத்து, அளபெடை, புணர்ச்சி, மாத்திரை ஆகியனவற்றிற்குத் தனித்தனியே இரண்டனுக்கு மேற்பட்ட

வேறுபெயர்களைப் பேரகத்தியம் உணர்த்தியுள்ளதை இங்குக் காணலாம்

1. இரேகை வரிபொறி யிலேயக் கரப்பெயர். பேர. 4
2. அடிதலை தாளாதி யாமுத லின்பெயர் ,, 8
3. அச்சாவி சுரம்பூத மாமுயி ரின்பெயர் ,, 10
4. குறிலுங் குறுமையு மிரச்சுவமுங் குறிற்பெயர் ,, 13
5. நெடிலு நெடுமையுந் தீர்க்கமு நெடிற்பெயர் ,, 15
6. சுட்டல் குறித்தல் காட்டல்சுட் டின்பெயர் ,, 17
7. அஃகேனந் தனிநிலை முப்புள்ளி யாய்தம் ,, 24
8. உடலுடம் பொற்றல் லூமைவியஞ் சனமெய் ,, 27
9 வலிவன்மை வன்கணம் பரிசம்வல் லினப்பெயர் ,, 31
10. மெலிமென்மை மென்கண மெல்லினப் பெயரே ,, 33
11. இடையிடைமை யிடைக்கண மிடையினப் பெயரே ,, 35
12. புல்லல் சார்தல் புணர்தல்சார் பின்பெயர் ,, 39
13. அளவும் புலுதமும் அளபெ டைப்பெயர் ,, 43
14. மயக்கம் புணர்ச்சி சங்கமஞ் சையோகங் கூடல் கலத்தல் புல்லலொரு பொருட் சொலே ,, 89
15. வரைமித மளவு மட்டுமாத் திரைப்பெயர் ,, 116

மேற்காட்டப்பெற்ற பேரகத்திய நூற்பாக்கள் நிகண்டு ஆசிரியர்கள் அமைத்துள்ளவாறு காணக்கிடப்பது குறிப்பிடத் தக்கது. இலக்கண நூல்களுள் பேரகத்தியத்தில் மட்டுமே காணப்படும் புதிய முறை இது எனலாம். பேரகத்தியத்திற்குப் பின்னால் எழுந்த முத்துவீரியமும் இம்முறையைப் பின்பற்றி யுள்ளது என்பதும் அறியத்தக்கது.

மாத்திரை

மாத்திரைக்கு வேறுபெயர்களாக வரை, மிதம், அளவு மட்டு என்னும் சொற்களைப் பேரகத்தியம் சுட்டியுள்ளது. (நூ. 116) இது பிற இலக்கண நூல்களுள் காணப்படாத தொன்றாகும்.

ஆய்தவெழுத்து

ஆய்தவெழுத்தின் வேறுபெயர்களாக அஃகேனம், தனிநிலை, முப்புள்ளி என்பனவற்றைச் சுட்டியிருப்பதும் (பேர. 24), ஆய்தம் தனிமையாயும் மெய்யெழுத்தின் தன்மையையுடைய தாயும் விளங்கும் எனக்கூறியிருப்பதும் (பேர. 23), ஆய்தம் மெய்யெழுத்துப்போல உயிரேறப்பெறாது என உணர்த்தியிருப் பதும் (பேர. 25) ஆய்தத்தை முதலெழுத்து (பேர. 7) மெய் யெழுத்து (பேர 26) என்னும் இரண்டன் பகுப்பில் வைத்துப் பேசப்பட்டிருப்பதும் இந்நூலில் நாம் காணும் புதிய முறை எனலாம்.

வடமொழி—வடமொழிச்சந்தி

சொற்களைச் சங்கதம், பாகதம், சநுக்கிரகம், அவப்பிரஞ்ச நம் எனப்பாகுபாடு செய்திருப்பது (பேர.141), சந்தியைத் தீர்க்க சந்தி, குணசந்தி, விருத்திசந்தி என மூவகைப்படுத்திக் கூறியிருப்பது (பேர.149) போன்றவையெல்லாம் இந்நூலில் நாம் காணும் புதிய செய்திகள்.

ஆய்வு முடிவுகள்:

இறையனாரகப் பொருளுரையால் அறியப்பெறும் அகத்திரால் இயற்றப்பெற்ற அகத்தியமே தொன்மையான இலக்கண நூல் எனக்கருதலாம்.

தொல்காப்பியச் செல்வாக்கால் அகத்தியம் வழக்கிழந்து போயிருக்கலாம்.

உரையாசிரியர்களால் மேற் கோளாக எடுத்தாளப்பெற்ற அகத்திய நூற்பாக்கள் இளம்பூரணர் காலத்துக்கு முற்பட்டவை எனக் கொள்ளலாம்.

உரையாசிரியர்களால் எடுத்துக்காட்டிய அகத்திய நூற்பாக்களுள் இளம்பூரணர் சுட்டிய நூற்பாக்கள் மட்டும் பண்டைய அகத்திய நூற்பாக்கள் எனக் கருத இடமுண்டு ஏனையோர் காட்டியுள்ள நூற்பாக்கள் இறையனாரகப் பொருளுரையால் அறியப்பெறும் அகத்திய நூற்பாக்களா என்பது ஆய்வுக்குரியது.

பேரகத்தியத்திரட்டிலுள்ள அகத்திய நூற்பாக்கள் பிரயோக விவேகம், வெண்பாப்பாட்டியல் முதலான இலக்கண நூல்களுக்குப் பின்னர் எழுதப்பெற்றவை எனக்கொள்ளலாம்.

பேரகத்தியம் தொல்காப்பியம், நன்னூல் ஆகிய நூல்களைப் பெரிதும் பின்பற்றியிருப்பினும் நேமிநாதம், பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து, வெண்பாப் பாட்டியல் முதலான நூல்களின் நெறிகளையும் தழுவியுள்ளது குறிப்பிடத் தக்கது.

எழுத்திலக்கணத்தைப் பொறுத்தமட்டிலும் முத்துவீரியத்திற்குப் பேரகத்தியமே முதனூல் எனக்கருத இடமுண்டு.

பேரகத்தியம் பிற இலக்கண நூல்களைப் பெரிதும் தழுவி எழுதப்பெற்றதாயினும் இலக்கணக்குறியீட்டுச் சொற்களுக்கு மறு பெயர் கூறியிருப்பது, ஆய்த எழுத்தைப்பற்றி விரிவாக விளக்கி நூற்பாக்கள் செய்திருப்பது, வடமொழி, வடமொழிச்சந்தி ஆகியவற்றைப் பற்றி விளக்கியிருப்பது போன்றவற்றில் இந்நூல் பிற இலக்கண நூல்களினின்றும் வேறுபட்டு ஒரு தனித்தன்மையையும் கொண்டுள்ளது எனலாம்.

அடிக்குறிப்புக்கள்

1 இறையனாரகப் பொருளுரை, பக் 5,6

2 தொல். பொருள். மர. நூ. 649 பேராசிரியர் உரை
தொல். பொருள். செய். நூ. 172 நச்சினார்க்கினியர் உரை
சிவஞானமுனிவர், தொல்காப்பியச்சூத்திரவிருத்தி, ப.7

3 தொல். பொருள். உவம. நூ. 312 பேராசிரியர் உரை
தொல். பொருள். செய். நூ. 172 நச்சினார்க்கினியர் உரை

4 ச. பவாநந்தம்பிள்ளை, 'முகவுரை' பேரகத்தியத்திரட்டு ப. 11

5 மேலது ப. 11,13

6 உ. வே. வேங்கட ராஜுலு ரெட்டியார், 'முன்னுரை', தொல்காப்பியம் எழுத்ததிகார ஆராய்ச்சி,

7 ச. பவாநந்தம்பிள்ளை, 'முன்னுரை', பேரகத்தியத் திரட்டு, பக். 13-14

8 நேமிநாதம், எழுத்ததிகாரம், நூ. 1

9 " நூ. 1 உரைமேற் கோள்

10 " நூ. 5.

11 வீரசோழியம், எழுத்ததிகாரம், நூ. 3

12 பிரயோகவிவேகம், காரிகை, 5

13 ” காரிகை. 4

14 மேலது

15 வெண்பாப் பாட்டியல், நூ. 6

16 இலக்கணக் கொத்து, நூ.90

17 கு. சுந்தரமுர்த்தி, ‘ஆராய்ச்சி முன்னுரை’ முத்து வீரியம், ப. 19

18 புலவர் சோம. இளவரசு, இலக்கண வரலாறு, ப. 213

2. அறுவகை இலக்கணம்

தெ. முருகசாமி

முன்னுரை

உலகில் உள்ள உயர்தனிச் செம்மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்று. தொன்று தொட்ட இலக்கண இலக்கியச் செறிவாலும் அவ்வப்போது தோன்றும் தமிழ்ச்சான்றோர்களின் படைப்பாலும் அது என்றும் மாறாத கன்னிமைத்தன்மையுடன் வளங்கொழிக்கும் உலகத் தமிழாக மலர்ந்து மணம் பரப்பி வருகிறது. இவ்வரிசையில் 19 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் ஓர் அரிய இலக்கண நூல் எழுதித் தமிழ்மொழிக்கு அணி சேர்த்தார். அதுவே, 'அறுவகை இலக்கணம்' என்பதாம்.

தண்டபாணி சுவாமிகள் வரலாறு

வண்ணச் சரபம் என வாய் மணக்க யாவராலும் போற்றியுணரப்படும் தண்டபாணி சுவாமிகள் தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டித் திருநாட்டில் சிறந்து விளங்கும் திருநெல்வேலியில் சைவவேளாளர் குலத்தில் செந்தில் நாயகம் பிள்ளைக்கும் பேச்சி முத்தம்மைக்கும் அருமைப் புதல்வராய்1839ஆம் ஆண்டு அவதரித்தார். முருகன் அடிமை என்ற வகையில் முருகன் அருள் பெற்றவர். தமிழ்க் கடவுளாம் முருகன் மீது பல்வேறு திருப்புகழ்களைப் பாடிய சுவாமிகள் தமிழ்மொழி மீது கொண்ட அளப்பரிய பற்றால், 'தமிழலலங்காரம்', 'தமிழ் வெறுத்த பத்து' போன்ற நூல்களைப் பாடினார். இவ்வகையில் எழுதிய ஓர் அரிய தமிழிலக்கணமே அறுவகை இலக்கணம் என்ற நூலாம். திருநெல்வேலியிலுள்ள திருவுருமாலை என்னும் கோயிலில் பாடிய இந்நூல் தமிழிலக்கிய வரலாற்றில் காலந்

தோறும் மலர்ந்துவரும் புதிய மரபுகளைத் தந்து சுவாமிகளின் நிலைத்த புகழுக்கு உரைகல்லாகவும் திகழ்கிறது.

நூற்பெயரும் புதுமையும்

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்று பலரும் பகுத்தறியும் ஐந்திலக்கணங்களோடு 'புலமையிலக்கணம்' என்ற ஒன்றையும் சேர்த்துக் கூறுவதால் இந்நூல் "அறுவகை இலக்கணம்" எனக் காரணப் பெயர் பெற்றது. மொழிக்கு இலக்கணம் கூறுவதையே குறிக்கோளாகக் கொள்ளாமல் நடைமுறை வாழ்வியலுக்கும் இலக்கணம் வகுத்துச் செல்லும் புதுவகைப் போக்கால் இவ்விலக்கண நூல் முதல் நூலாம் தன்மையும், புது நூலாம் இயல்பும் உடையதாகத் திகழ்கிறது. இதற்கு இருவர் சிறப்புப் பாயிரம் பாடிப் புகழ்ந்துள்ளனர்.

நூல் தோன்றக் காரணம்

அறுவகை இலக்கண நூல் தோன்றுதற்குரிய காரணத்தைப் பொதுப்பாயிரப் பாடலொன்று கூறுகிறது.

> "புன்றலைச் சமணரைப் புலைத்தொழிற் புத்தரை
> வென்றகம் குளிர்சீர் விரும்பும் பகையும்
> உறுவதால் திகழ்துணிவு ஒன்றால்
> அறுவகை யிலக்கணம் அறையலுற் றனமே".
>
> பொதுப். 5

என்பது சுவாமிகள் திருவாக்கு. சமணர்களும், பௌத்தர்களும் தமிழ்மொழிக்குப் பல தொண்டாற்றியுள்ளனர். இச் செயல் தமிழ் மொழியின் நலங்கருதிய வகையில் சிறப்பாயினும் சமய வகையில் ஏதோ ஓர் உட்பகை இருந்து சுவாமிகளின் உள்ளத்தை உறுத்தியதால் தமிழ்நலமும் சைவசமய நலமும் தோய்ந்த வகையில் நூலொன்று பாட வேண்டும் என்ற உட்கிடக்கையில் இந்நூல் பாடப் பெற்றதாகத் தெரிகிறது.

> "புடவி மேற்கொளும் அறுவகையிலக்கணப் புதுநூல்
> படா அராவுறழ் சமணரைப் புகழ்ந்துளார் பகையே".

எனப் பொதுப் பாயிரத்தில் (3) நூலின் தன்மை கூறுங்கால் பாம்பு போன்ற சமணரைச்சார்ந்த பவணந்தி போன்றோரைப் புகழ்வோர்க்கு இந்நூல் பகையானது எனக் கூறுவதால் சுவாமிகளுக்கிருந்த உள்ளக் கிடக்கையின் குறிப்பு ஓரளவு வெளிப்படுகிறது.

நூலின் அமைப்பு

அறுமுகக் கடவுளின் திருவருளால் ஆக்கப் பெற்ற இந்நூல் முருகனின் ஆறெழுத்தைப் போல ஆறுபெரும் பிரிவைக் கொண்டுள்ளது. இப்பிரிவுகள் யாவும் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்பதாகக் கூறப்படாமல் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், புலமையிலக்கணம் எனப் பெயரிட்டு அழைக்கப்படுகின்றன. ஒவ்வோர் பிரிவும் தனித்தனி நூல்போல் காப்புச் செய்யுளுடன் தொடங்குகிறது. உட்பிரிவுகள் யாவும் இயல்பு என்றும் நிலை என்றும் பெயர் பெறுகின்றன. நூல் முழுமையும் அமைந்த நூற்பாத் தொகை, எழுநூற்றெண்பத்தாறு. ஓரிலக்கணம் முடிந்து அடுத்தொன்று தொடங்கும் போதும் இயல்புக்கு இயல்பும் இன்னது கூறி இன்னது தொடங்குகிறது எனக் கூறுவதாக நூலின் அமைப்பு அமைந்துள்ளது.

நூலின் தனித்தன்மை

இலக்கண நூல்கள் எவற்றினும் காணாத புதுமையை இந்நூலில் காணலாம். ஓரிலக்கண நூல் படிப்பது போன்ற உணர்வே தோன்றாதவாறு சமய உணர்வுடன் இலக்கியச் சுவை தோய்ந்ததாகப் பாடப்பெற்றுள்ளதே இந்நூலுக்கான புதுமையாகும். பெரும்பாலும் உரை எழுதித் தெளிவிப்பதற்குரிய இடமில்லாதவாறு நூற்பாக்கள் மிக எளிமையாகவும் அவைகளைக் கூறும்போதே உதாரணங்களுடனும் கூறியிருப்பது நூலின் தனித்தன்மையைச் சுட்டுவதாகும்.

''ஏகாரம் ஒருவர்க் குணர்த்தும் குறியாய்
உறுதி காட்டும் கருவி யாகிப்
பெயருடன் இருவிதத் தணைந்து, விளியாம்
அங்குபோ காதே என்சொல் மெய்யே
ஏகுகா குருவே எனும்நான் குதாரணம்."

—எழுத்து. 108

இப்படித் தனித்தன்மையும் புதுமையும் பெற்றுப் பொலிவுறும் அறுவகை இலக்கண நூலின் பகுப்புக்களைத் தனித்தனியே காண்போம்.

அ. எழுத்திலக்கண எளிமை

முதலில் கூறும் எழுத்திலக்கணம் உரு ஓசையியல்பு, நிலையியல்பு, புணர்ச்சியியல்பு என மூன்று இயல்களைக் கொண்டது. உயிர், ஆய்தம், ஒற்று, உயிர்மெய் என யாவரும் உணரும் நான்கு எழுத்துக்கள் பற்றிக் கூறி அவற்றிற்கு மேலும் அலகெழுத்து, கூட்டெழுத்து எனப் புதிதாக இரண்டையும் சேர்த்து எழுத்து அறு வகைப்படும் என்பதாக எழுத்திலக்கணம் தொடங்குகிறது. 'அறுவகை எழுத்தும், அன்றிக் குறிப்பென்று அவைசில உளவே' (எழுத்து. 2) எனச் சுவாமிகள் குறிப்பெழுத்தையும் 'அவைசில உள' என்பதால் நூலினுள் கூறும் புரை (பிழை) யெழுத்தையும் சேர்த்துப் பல்வேறு எழுத்துக்களை விளக்கியுள்ளார்.

எழுதப்படுவதாலும் உந்தி முதலாக ஓசை எழுப்பப்படுவதாலும் 'எழுத்து' எனக் காரணக்குறி பெற்றதாக 'எழுத்தெனல் வடிவுடன் ஓசையை உடைத்து' (எழுத்து. 5) என்று உருஓசையின் நூற்பா விளங்குகிறது. தமிழிலக்கணங்களில் விரிவாகப் பேசப்படாத எழுத்துக்களின் வரிவடிவம் பற்றியும் தமிழ் எண்களின் வரிவடிவம் பற்றியும் இந்நூல் புதிதாகக் கூறுகிறது. மேலும் எழுத்துக்களை எழுதும் முறை, ஒலியுறுப்புக்களின் இயக்கத்தால் எழும் ஒலிப்பு முறை, ஓசை அளவு முதலிய அனைத்தும் ஒருசேரக் கூறப்பட்டுள்ளன.

"மேலுறச் சுழித்த வாக்கில் வலத்தீர்த்(து)
அவ்வரை நடுஒரு காலிற் கீழ்வரை
அமைத்தல் எகரம் அதன்ஈறு பற்றி
இடத்தில் நீட்டில் ஏகார மாகும்
இவ்விரு பொறிகளும் நாநுனி கீழ்ப்பல்
உள்அரு(கு) ஒன்றக் கடிதுவாய் திறந்து
குறுகியும் பெருகியும் தொனிக்கும் அன்றே."

—எழுத்து. 10

"சகரத்(து) ஈற்று வரையினைக் குறுக்கிக்
கீழுற இழுக்கில் தகரம் ஆகும்
....
மேற்பல் உட்புறத்(து) அடியின்நா ஒன்ற
ஒலிப்பன வாம்என்று உரைத்திடத் தகுமே."

—எழுத்து. 24

என உயிர், மெய்வருக்க எழுத்துக்களைப் பற்றிக் கூறுதல் காணலாம்.

பழங்காலக் கணக்கதிகாரம் போல இம்மி என்ற சிற்றளவிலிருந்து முந்திரி, ஆழாக்கு, நாழி, கலம் என முகத்தல் அளவைக்கும் ஒன்று முதல் ஆயிரம் ஈறாகத் தமிழ் எண்ணிற்கும் வரி வடிவம் இன்னது எனத் தமிழ் நெடுங்கணக்கின் வடிவம் பற்றிக் கூறுவது அலகெழுத்தாகும். தற்காலச் சுருக்கெழுத்தின் அடையாளங்களைப் போன்றது கூட்டெழுத்து.

"ஐகா ரத்தின்முற் பகுதிமட் டெழுதி
ஈறு தொட்டு வல்த்தோர் கிடைவரை
இழுக்கில்நெல் என்றும் சகரத் தீற்றொரு
லிகரம் கூட்டிற் சங்கிலி என்றும்."

—எழுத்து. 42

இவ்வாறு பெயர், வினைச் சொற்களுக்கும் அளவைப் பெயர்களுக்கும் கூட்டெழுத்து அடையாளங்கள் காட்டப்பட்டுள்ளன.

எழுத்துக்களின் மாத்திரை பற்றியும் பிறப்புப் பற்றியும் நிலையியல்பு உணர்த்துகிறது. நெட்டெழுத்தில் ஐ, ஔ

இரண்டும் சேர்க்கப்படாமல் அவை 'குறில் நெடில் நடுவாம்' என்ப் புதிய பெயர் பெறுகின்றன. 'அய், அவ்' என எழுதும் போது குறில் மெய்யிணைந்த ஒன்றரையாகவும், 'ஐ' எனும் போது இரண்டாகவும் ஒலியளவு உள்ளதால் 'குறில் நெடில் நடு' என்று பெயர் பெற்றதாகக் கருதலாம். பெரும்பாலும் எழுத்துக்களின் பிறப்பை அவற்றின் ஒலிப்பு முறையிலேயே ஆசிரியர் கூறி விடுகிறார். வல்லின மெல்லின இடையின எழுத்துக்கள் உயிர்மெய்யாக அவற்றின் வருக்கத்தோடு காட்டப்பட்டுள்ளன. உதாரணமாக, க் ச் ட் த் ப் ற் என்பதாக இல்லாமல் க கா...... ச சா...... த தா...... எனக் கூறப் பட்டுள்ளது. ஆய்த எழுத்தை இடையினத்தோடு கூறுவதும் அது மிடற்றில் பிறக்கும் என்பதும் இந்நூல் தரும் புதிய செய்தியாகும். இம் மூன்றினமும் ஆண்பால் பெண்பால் அலிப் பால்எனமுறையேவகுத்துரைக்கப் படுகின்றன.எழுத்துக்களைத் தெய்வங்களோடு பொருத்துவதும் இந்நூலின் புதுமையாகும்.

எழுத்துப்புணர்ச்சியும் மெய்ம்மயக்கமும் உதாரணங் களுடன் விளக்கப் பட்டுள்ளன. புணர்ச்சி இலக்கணத் தொடர்ச்சியில் சார்பெழுத்து என்ற குறியீடு இல்லாமல் குற்றியலிகர, உகரச் செய்திகள் பேசப்படுகின்றன. குற்றிய லுகரமாவது வல்லினத்தின் மீது ஏறிய உகரம் என எளிமை யாகக் கூறாமல் உயிர் ஏற இடங் கொடுப்பதோடு அவ்விடத் தினின்றும் மறைந்து நிற்பதான உகரமே குற்றியலுகரம் எனச் சுற்றி வளைத்துக் கூறப்பட்டுள்ளது. உயிரளபெடையை ஒப்புக்கொள்ளும் சுவாமிகள் ஒற்றளபெடையை விரும்ப வில்லை எனக் கூறுகிறார். இவ்வாறு பல்வேறு வகையில் எழுத்துக்கள் பற்றியும், அவற்றின் தன்மைகள் பற்றியும் எழுத் திலக்கணம் விரிவாகப் பேசுகின்றது.

ஆ. சொல்லிலக்கணத் தன்மை

பொது, பிரிவு, சார்பு, திரிபு என நான்கு இயல்களாகச் சொல்லிலக்கணம் பிரிக்கப்பட்டுள்ளது. தொடக்கத்தில் 'சொல் லெனல் எழுத்துத் தனித்தும், சிற்சில புணர்ந்தும் வருவன' (சொல். 2) எனச் சொல்லின் இலக்கணம் பொதுவாகச் சுட்டி யுரைக்கப்படுகிறது. முத்தமிழுக்குரிய சொற்கள் பற்றியும்,

பொருட்செறிவும், எளிமையும் உடைய நூல்களில் பயிலும் சொற்கள் பற்றியும் பொதுவியல் எடுத்து விளக்குகிறது. திருக்குறளின் சொற்கள் பளிங்கு போன்றவை. திருமுருகாற்றுப்படையின் சொற்கள் கருத்த நிறமானவை. இப்படி ஐந்நிறங்களும் சொற்களுக்குத் தீட்டப்படுகின்றன.

பெயர்ச்சொல் ஆண், பெண், பன்மை, அலி என நான்கு வகைப்படும். ஆண், பெண், பன்மைப்பெயர்கள் உயர்திணை. அலிப்பாற் பெயர் மட்டும் அஃறிணை. ஒருதிணைப்பெயர் மற்றொரு திணைப் பெயராகத் தெரியும்போது சொல்லை ஈறு பற்றி மட்டும் துணியாது பொருள்பற்றித் துணிந்தறிய வேண்டும் என்பது இந்நூலாசிரியர் துணிபு. அடுத்து வினைச் சொல் பற்றிக் கூறுங்கால் தன்வினை, பிறவினை, பொது வினைச் சொற்கள் பற்றிப் பேசப்படுகின்றன. விகுதியொடு புணராமல் நின்ற, போன, செய்த, ஆகின்ற என்ற சொற்கள் இறந்தகால நிகழ்கால வினைமுற்றுக்களாம். அன், ஆன் அள், ஆள் என்ற விகுதிகளோடு கின்ற, கிற என்பனவும் சேர்க்கப் பட்டுள்ளது புதுமையாக உள்ளது. எச்ச வினையில் பெயரெச்சம் பற்றிக் கூறவில்லை.

பின்னர் மங்கலச்சொல், அசைச்சொல், சாரியைச் சொல் என்பன பற்றிச் சார்பியல் பகுதி விளக்குகிறது. ஒருசொல் பல பொருளைத் தருவதால் அது திரிபுச்சொல் எனப் பல்வேறு திரிபுச்சொற்கள் பற்றித் திரியியல்பு கூறுகிறது. மரூஉச்சொல், ஆகு பெயர், அன்மொழித்தொகை முதலிய யாவும் பொருள் மாற்றம் தருவதால் அவை அனைத்தும் திரிபுச் சொற்களாகும். பல்வகைச் சொற்கள் என்னும் தலைப்பில் ஏவற்சொல், இனிப்பு, புளிப்பு என்ற தன்மைச்சொல், ஓம், ஆம் எனக் கூறும் உடன்படுதலாகிய ஒப்புச்சொல் போன்ற பல்வேறு வகைப்பட்ட சொற்களை விளக்குதலோடு சொல்லிலக்கணம் முடிகிறது.

இ. பொருளிலக்கணப் பொருண்மை

பழைய பொருளிலக்கணச் செய்திகள் பெரும்பாலும் பேசப்படாமல் புதிய வகையில் அகம், புறம், அகப்புறம் என்ற மூன்று பிரிவில் பொருளிலக்கணம் பேசப்படுகிறது.

"பூவில் மணமெனப் புனிதத் தமிழினுக்கு
ஆவி யாகும் அகப்பொரு ளியல்பே."

-பொருள். 4

என அகப்பொருளின் சிறப்பை விளக்கும் ஆசிரியர், துறையியல்பு என்ற பகுதியில் மட்டும் பழைய சில அகப்பொருள் துறைகளைக் கூறுகிறார். நாடக வழக்காக உலகியல் வழக்காகப் புலவர்களால் பாடுதற்கமைந்த அகத்திணை யொழுகலாறாகிய புலனெறி வழக்கம் கலியும் பரிபாடலுமாகிய இரு வகைப்பாவான் பாடப்பெறும் என்று கூறும் தொல்காப்பியர் கருத்திற்கியையச் சுவாமிகளும்,

"கட்டளைக் கலித்துறை கடலுறழ் சந்தம்
என்னுமிவ் விரண்டால் இயம்பிடல் மிகையே."

-பொருள். 52

என்று கூறுகிறார்.

உறுப்பியல்பு, குறிப்பியல்பு, பழமையியல்பு என்ற மூன்றியல்களும் பெண்களின் இயல்புகளைப் பேசுவதாக அமைகின்றன. பெண்ணென்றால் பேயும் இரங்கும். கற்புடைய மகளிர்க்கெதிரில் முனிவரும் தெய்வமும் செல்லார் என்பன போன்ற பொதுமைக் கருத்துக்களும் பேசப்படுகின்றன. புறப்பொருட் பகுதியில் புறத்திணைச் செய்திகள் கூறப்படவில்லை. மாறாக அகத்திணையில் கூற வேண்டிய முதல், கரு எனும் இரண்டைப் பற்றியும் நால்வகை வருணத்தாரின் இயல்பு, விலங்கு பறவைகளின் நிலைகள் பற்றியும் புறப்பொருட்பகுதி விளக்குகிறது.

"துணிவொடு செட்டும் தொலையாக் கணக்கும்
வட்டியும் திட்டமும் மாழை மணிதுகில்
ஆதியும் வணிகருக் கான பொருளே."

-பொருள். 72

வணிகர்களைப் பற்றிக் கூறும் இந்நூற்பா, பெரும்பாலும் செட்டிநாட்டு நகரத்தார்க்கே பொருந்துவதாக உள்ளது. நீண்டகாலமாகப் பழைய கணக்குகளைப் பத்திரப்படுத்தி வைக்கும் பழக்கமும் திட்டப்படுத்தி வாழும் வாழ்வியல்

முறையும் செட்டிநாட்டார்க்கே உரிய தொன்றுதொட்ட பண்பாகும்.

யானை பன்னீராண்டில் ஒரு குட்டி ஈனும். புலி தன் குட்டியையே கொல்லும். மானிற்கு ஆண்டுதோறும் கொம்பு வீழ்ந்து மற்றொன்று கிளைக்கும். நாய்க்குட்டி போல் குரைக்கும் பாம்பினமும் உண்டு. இப்படிக் கூறும் உயிரினச் செய்திகளோடு உணவுப் பொருள்கள் உயிரைக்காப்பதால் அவை உயிர்க் கருவி என்றும், புலவர்க்கு வண்ணம் வெண்பா முதலியன பிழைப்பைத் தருதலால் அவை புலமைக் கருவி என்றும், நிலவுலகிற்கு அப்பாலுள்ளவை புறம் என்றும், வீடு பெற விரும்புவார்க்கு உடம்பு புறம் என்றும் படிப்படியாக விளக்குவதோடு புறப்பொருட் பகுதி முடிகிறது.

அடுத்துக் கூறும் அகப்புறப் பொருள் நிலைப் பகுதியானது இந்நூலிற்கு உயிர்ப்பான பகுதியாக உள்ளது. சமய உணர்வில் யாவரும் அடைய வேண்டிய பயனை இப்பகுதி சுட்டி உரைக்கின்றது.

> ''புறத்துள வைவகைப் பூதம் அவிர்தலின்
> அவற்றையும் பொதுஎன் றறைவது முறையே."
>
> -பொருள். 112

எனப் புற உலகில் காணும் ஐம்பூத இயக்கங்களை ஒவ்வொருவரும் தத்தம் உடலகத்தே கண்டு தெளிதே அகப்புறப் பொருள் நிலையாம். அகம் என்பது மனம்; புறம் என்பது புற உலகு. இவ்விரண்டன்நிலைகளைத்தனித்தனியேஉணர்வதும்உணர்ந்து அதிலேயே பற்றற்றிருப்பதுமாகிய பொதுநிலை வேண்டும் எனச்சுவாமிகள் வற்புறுத்துகிறார். அகமும் புறமும் தனித் தனிக் கண்கள். ஆனால் இப்பொதுநிலைப் பண்பெண்பது நெற்றிக் கண்ணானது. இப்பொதுநிலை உணர்வார்க்கு உலவாப் பெருநலம் கிட்டும் எனக்கூறுவதோடு பொருளிலக்கணம் நிறைவுறுகிறது.

> ''உலவாப் பெருநலம் உள்ளொடு புறம்பும்
> உணர்வார்க் கென்பவர் உலகினிற் சிலரே.''
>
> -பொருள். 120

ஈ. யாப்பிலக்கண இனிமை

பா, பாவினம் பற்றிய பாவியல் அமைப்பை வரலாற்று முறையில் விளக்குவது யாப்பிலக்கணப் பகுதியாகும். இது ஏழு பிரிவுகளை உடையது. நல்ல பல நூல்களைப் பயிலும் பயிற்சியும் ஆழ்ந்த புலமையாளரின் தொடர்பும் யாப்பிலக்கணம் கற்பார்க்கு முதலில் வேண்டற்பாலன. பாவகையில் 'சூத்திரப்பா' என ஒருவகைப் பாவிற்கு இலக்கணம் வகுக்கப் பட்டுள்ளது புதுமையாக உள்ளது.

> அரும்பொருள் விரிப்பதற் கானசூத் திரப்பா
> நிழல்பூ ஈற்றுள நான்கசைச் சொற்கள்
> இணைந்தும் ஒவ்வோ ரிடத்தே நலஞ்சீர்
> ஈற்றுள ஐந்தசைச் சொற்கள் வந்தும்
> ஓரடியாகும்; —யாப்பு. 3

பாவிற்குச் சந்தமும் எதுகை மோனைகளும் மிக இன்றியமையாதன. 'தமிழ்க்கவி அனைத்திலும் தலையென்று உள்ள வண்ணம்'(யாப்பு. 86)எனவண்ணங்களின்சிறப்பைச் சுவாமிகள் தமக்கே உரிய வகையில் கூறுகிறார். நாடகத் தமிழ் இசைத் தமிழிற்கான எழுத்துக்களின் பெருக்கம் பற்றி விரிவாகக் கூறுவதால் இவ்விலக்கணப் பகுதி முத்தமிழ்ப்பாவிய இலக்கியமாகக் கருத இடந்தருகிறது.

சொல்லிலக்கணப் பகுதியில் யாப்பிற்குரிய அசைச்சொல், தளை பற்றிய செய்திகள் பேசப்பட்டு விட்டதால் எஞ்சிய எதுகை மோனைச் செய்திகள் சுருக்கமாகவே யாப்பிலக்கணத்தில் கூறப்பட்டுள்ளன.

> "மோனை யில்லா முத்தமிழ்ப் பாட்டு
> நாண மில்லா நங்கையொப் பாமே".
> -யாப்பு, 96

என்றும், மோனை தவறினால்,

> "தவறிய மோனைத் தமிழ்க்கவி கலவிக்
> கிசைந்தபின் ஊடும் ஏந்திழைக் கொப்பே".
> -யாப்பு, 97

என்றும் மோனையின் இன்றியமையாமை இலக்கியம்போல் சுவைபடச் சுட்டப்படுகிறது. 'எதுகையில்லெனில் சொல்லிய கவிகளும் சீரழி வுறும்' என்பது எதுகையின் சிறப்பாகும்.

யாப்பிலக்கணத்தால் அமையும் ஆசுகவி, மதுரகவிபோன்ற நற்கவியியல்புகள், 96 வகைப்பனுவல்கள் ஆகியன பற்றி ஆசிரியர் விரிவாகப் பேசுகிறார். அவ்வக் காலத்தின் இலக்கியத் தேவையை நிறைவு செய்யும் லகிரி, நொண்டி முதலிய புத்திலக் கியங்களின் வரவைச் சுவாமிகள் பாராட்டுகின்றார்கள். இங்ஙனம் பல்வேறு வகையில் நூலியற்றும் ஆசிரியர்க்கு வேண்டிய கடமைகளையும், உரிமைகளையும் பற்றி யாப்பிலக் கணத்தின் இறுதிப்பகுதி விளக்குகிறது.

உ. **அணியிலக்கண அருமை**

''அணிநிலை யளப்பரி தாயினும் உவமை
உடைமை கற்பனை நிகழ்ச்சி ஆக்கமென்று
ஐவகை வாய்பா டறைகுதும்.......

—அணி. 2.

என்பதாக அணியிலக்கணம் தொடங்குகிறது. சுவாமிகளின் நோக்கின்படி இவ்விலக்கணப்பகுதி புதிய மரபுகளை விளக்கு கிறது. உவமையியலில் 'இயல் உமை இசைதிரு நாடகம் நாமகள்' என முத்தமிழுக்கும் (அணி. 43) கடவுளர்க்கும் உவமை கூறப்படுகிறது. நீதி, வீரம், கொடை முதலிய பண்பு களை உடைய மனிதர்களுக்கு இவரிவரை உவமை கூற வேண்டும் என்றும், பெண்களின் உறுப்புகட்கு இவையிவை உவமையாம் என்றும் விரிவாகப் பேசப்படுகின்றன. கடவுளர்க் குரிய உடைமைப் பொருள்கள் இவையிவை என்றும், நால்வகை வருணத்தாரின் உடைமைகள் இவையிவை என்றும் பாவின் உடைமைகளாகிய நெறிகளும் மாண்புகளும் இன்னவைஎன்றும் எடுத்துரைத்து விளங்குவது உடைமையியலாகும்.

உவமையின் சார்பாக வரும் கற்பனைபற்றிக் கூறும்போது கூறுவார் உள்ளக்கருத்தின் அளவினது எனச் சுவாமிகள் கற் பனையின் ஏற்றத்தை மிகுத்துரைக்கிறார்கள். பொருத்த

முடைய செயல்களை உவமை வகையான் கற்பனை செய்வது சிறந்தது என்பது, கற்பனையியலின் மையக் கருத்தாகும்.

மறுவுறா மதியம் ஆறு போலும்
முகமுறு குகவேள் என்கையும் ஒருவகைக்
கற்பனை ....

—அணி. 78

இஃது இல்பொருள் உவமை வகையான் வந்த கற்பனை. மறு இல்லாத மதியம் இல்லை. எனினும் முருகனது முகம் நோக்க மதியத்திற்கு மறுயில்லாமையாயிற்றென்பதோ ஈண்டுள்ள கற்பனைச் செய்தியாகும்.

மொழிக்கு இலக்கணம் வகுப்பதிலும் நடைமுறை வாழ்வியலுக்கு மிகுதியாக இலக்கணம் வகுத்துரைக்கும் சுவாமிகள் காலங்கள் பற்றியும் யார் யார்க்கு எவையெவை ஆக்கந்தரும் என்பது பற்றியும் முறையே நிகழ்ச்சியியல், ஆக்கவியல் பகுதிகளில் விரிவாக எடுத்துரைக்கின்றார். நண்பகலாவது 'அதன தன் நிழல்தன் அடியிலாம் பொழுது' (அணி. 87) என்றும் வணிகர்கள் வியர்வை காரணமாக அரையாடை உடுத்திருக்கும் காலம் என்றும் சுட்டுவது இயல்பாக உள்ளது. குழந்தைகள் பள்ளிக்கூடம் விட்டு வரும் நேரம் மாலை எனப் புதிதாகக் கூறுகிறார் சுவாமிகள்.

''வாவிக் காக்கம் வனசமும் குவளையும்
கோவிற் காக்கம் குலவு கோபுரம்
நாவிற் காக்கம் நன்மொழி யுரைத்தல்
பூவிற் காக்கம் பொலிநறை வண்டு...''

—அணி. 108

எனப் பல்வேறு ஆக்கம் பற்றிக் கூறும் இந்நூற்பா 'பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை .... நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே' என்ற அப்பர் சுவாமிகள் பாடலை நினைவூட்டுகின்றது.

௬. புலமையிலக்கணப் புதுமை

ஆறாவதாகிய புலமையிலக்கணம் இலக்கண நூல்களில் காணாத புதுப்புனைவாகத் தண்டபாணி சுவாமிகளால் படைக்கப்பட்ட ஒன்றாகும்.

''அறியுந் தன்மையைப் புலமை யாமெனப்
பற்பல பெரியோர் பகர்ந்தனர்........."
-புலமை. 2

எனப் புலமைக்குத் தோற்றுவாய் செய்யப்படுகிறது.

''வாக்குச் சுவையுடன் அருட்டிற மன்னும்
புலமைத் தேற்றம்........."
-புலமை. 34

எனப் புலமை அருளோடு அமைவதைச் சுவாமிகள் வற்புறுத்து கிறார்.

புலவர் புராணம் பாடிய தண்டபாணி சுவாமிகள் புலமை யடைவது யாங்ஙனம், புலமையாளர் எவர், அவர்தம் பண்பு கள் எவை என்பதாக விரித்துரைக்கும் இப்புலமை யிலக்கணப் பகுதியில் தெய்வத்தினும் தமிழை மேலாகக் கருதிய சுவாமி களின் புலமைநலம் இந்நூலுக்கு அகச் சான்றாக விளங்கு கின்றது. புலமை பெற விரும்புவோர் புலமையாளர் ஒருவர்க்கு ஆட்பட வேண்டும். சோம்பல், துயில், மோகம் முதலிய தீய குணங்கள் இருத்தல் கூடா. ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தான் அவ்வாறு ஒழுதகா புலமையாளர் தவறுடையவர். சிந்தையில் தெளிவு ஏற்படா முன்னம் புலமையடைந்ததாகக் கூறுவது தவறு. நூலில் காணும் பல்வேறு நன்மைகளைக் காணாது குற்றமே காண்டல் புலமைக்கு இழுக்கு. பகை உணர்வால் பிறர் புலமையைப் பாராட்டாமை குற்றம். இப்படிப்பட்டோரைத் தெய்வம் கேட்கும் என உலகியல் பாங்கில் சுவாமிகள் எச்சரிக்கை செய்கிறார்.

''மற்றோர் புலவன் வாய்த்தமிழ் மனத்திற்
கினித்தும் அவனெதிர் இகழும் பொல்லான்
கொடுமையைத் தெய்வம் குறிக்கு மன்றே.''
-புலமை. 65

வீறுடைய புலமையாளர்கள் பொருள் கருதிச் சிலரிடம் போவதைச் சுவாமிகள் கண்டிக்கிறார்கள்.

''அருள்வலிப் புலவ ராமென விளங்கியும்
பொருளுடைச் சிலர்பாற் போவ திழிவே''.
-புலமை. 28

தாம் கற்ற நூல்களைப் பொருள்கருதி விற்கத் துணிவோர்க்கு இப்புலமை இலக்கணம் நல்ல கசையடி ஒன்றைத் தருகிறது.

''புகலரும் பனுவற் பொற்பணங் கருதி
விற்கத் துணிவது மேம்பா டன்றே.''
-புலமை. 49

'கொள்ளற்க சொல்லேர் உழவர் பகை' என்ற வள்ளுவர் வாக்கைப் போல் இந்நூலும்,

''நூற்பகை கொள்ளினும் நுண்ணிய புலமைச்
சீரியர் தம்பகை சிறிதுமா காதே.''
-புலமை. 9

எனப் புலமையாளரிடத்துக் கொள்ள வேண்டிய நட்பை மறை முகமாகச் சுட்டுகிறது. கல்லார் மகிழ்வுறக் கவித்திறம் காட்டு வதை விட வல்லார் மகிழ்வுறத் தம் வல்லமை காட்டுவது மிகச் சிறந்த புலமையாகும். அந்நாட் புலவர்க்குள்ள பெருமை களெல்லாம் இந்நாட் புலவர்க்கும் உண்டு என்ற நம்பிக்கை யில் படிப் புதியாகப் புலமை பெறத் தூண்டுகிறது இப்புலமை யிலக்கணப் பகுதி எனலாம்.

தமிழ் 'தெய்வத்தமிழ்தான்' என்பதைப் புலமை இலக் கணத்தின் மரபியல் பகுதியும், அருள்நிலைப் பகுதியும் உறுதிப் படுத்துகின்றன. கடவுளர்க்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பும் நாயன்மார் ஆழ்வாராதிகளின் அருட்பாவும் அவர்களின்

அருளிச் செயலால் நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் பற்றி விரிவாகப் பேசப்படுகின்றன. இவ்வாறாகத் தெய்வத் திருவருளால் பெரும் புலமை பெற்ற புலவர்களின் புலமை பற்றிக் கூறும் இப் புலமை யிலக்கணம் ஒருதனி நூலாம் தன்மையில் வரலாற்றுக் கருவூலமாகத் திகழ்கிறது எனில் அதில் அட்டியில்லை.

தமிழும் தண்டபாணி சுவாமிகளும்

தமிழலங்காரம், தமிழ்வெறுத்த பத்து எனத் தமிழ் பற்றி நூல்கள் செய்த தண்டபாணி சுவாமிகள் தெய்வத்தினும் தமிழையே தெய்வமாகக் கருதிய உண்மை, இவ்வறுவகை இலக்கண நூலால் தெரிகிறது.

> ''தமிழ்ச்சுவை யறியாத் தெய்வம் உளதெனில்
> அஃதுணர லகையில் தாழ்வெனல் அறமே"
>
> -புலமை 30

ஈண்டுத் தமிழ்ச் சுவையறியாத தெய்வத்தைப் பேயாகக் கருதிக் கூறுவதென்பது தெய்வத்தின் மிக்கது தமிழ்ச் சுவை என்ற துணிபாலன்றோ!

தமிழை 'மறுவறுதமிழ்' என்று நூலிறுதியில் கூறுகிறார். புணர் மொழியுள் ழகரப் புணர்ச்சிக்கு உதாரண்ம் கூறும் போது 'தமிழுணர்வு' (எழுத்து. 140) எனக் காட்டப்படுகிறது. புலமை படைத்தவர்கள் தமிழ்மொழிக்கும், நெறிக்கும், இனத் திற்கும் தொண்டாற்ற வேண்டுமெனப் புலமையிலக்கணம் வற்புறுத்துகிறது.

> ''தமிழ்க்குந் தனக்குஞ் சார்தரு நெறிக்குந்
> தன்னினத் தினர்க்குந் தவறுறா வணணம்
> முயல்வோன் புலமை முதன்மைத் தாமே".
>
> -புலமை. 105.

இவ்வாறாகத் தெய்வத் தமிழ் மீதிருந்த அளப்பரிய பற்றை நம்மால் முழுதுமாக உணரமுடிகிறது.

தமிழ்மொழி மீதிருந்த ஆராக் காதல் தமிழ்ப் புலவரிடத்தும், சுவாமிகளுக்குப் புனல்வழிப் புணைபோல் இழுத்துச் சென்றது என்பதில் வியப்பில்லை. அகத்தியன், வள்ளுவன், இடைக்காடன், சேந்தன், காங்கேயன் போன்ற இலக்கண இலக்கிய நிகண்டாசிரியர்களைத் தம் நூலில் ஆங்காங்கே சுட்டிச் செல்வதோடு தெய்வ அருள்பெற்ற பலரையும் பெயரிட்டுரைக்கும் சுவாமிகளின் தமிழுள்ளம் போற்றுதற்குரியதாகும்.

திருவள்ளுவரிடத்தில் சுவாமிகளுக்கு அதிக ஈடுபாடிருந்ததாகத் தெரிகிறது.

1. 'சீரிய புலமைத் திருவள்ளுவன்'-பொருள். 3

2. 'கொல்லா விரதக் குருவாம் குறள்போல்'-சொல்.8.

3. ....'உலகத் தனைத்தெழுத் தினுக்கும்
அகர முதலென் றறைந்ததெம் மறையே,
-எழுத்து,65

4. ——————— 'வள்ளுவன் புலமை
தமிழுடைப் பலர்க்குத் தாயெனத் தகுமே,
-புலமை.83

என்று பலவாறாகக்கூறுவதால் வள்ளுவரைத் தம் புலமையின் வழிகாட்டியாகக் கொண்டு வாழ்ந்ததாகக் கூறலாம்.

புதுச்சொல் புனைவு

அறுவகைஇலக்கண நூல் மிகஎளிமையானது எல்லோர்க்கும் விளங்கும் செஞ்சொற்களால் ஆனது. எனினும் நூல் செய்வோர் புழக்கத்தில் இல்லாத அருகிய சொற்களை ஆங்காங்கே பெய்து காட்டுவது இயல்பு என்ற வகையில் இந்நூலிலும் சில புதிய சொற்களைக் காணமுடிகிறது. பூரம்.- கலைமகள் ஊர்தி (பொதுப்.4) முதுகலை-மொழி (எழுத்து.1) குணிக்க- கணக்கிட (எழுத்து.4) ஒகரம்-மயில் (சொல்.2) இலைத்துறல்—அருகி

வழங்குதல் (சொல்.18) விது-சந்திரன் (அணி.20) ஆகு-பெருச்சாளி(அணி.46) இங்ஙனம் அருகிய வழக்குச் சொற்களைக் கையாளுவதன்மூலம் இந்நூலின் பழைமை பாராட்டலை உணர முடிகிறது.

அறுவகை இலக்கணந்தரும் புதிய செய்திகள்

பல்வேறு நிலைகளில் புதிய புதிய செய்திகளைக் கூறும் இந்நூலில் மொழி இலக்கண அமைப்பில் மரபாகக் கூறி வரும் செய்திகளைச் சுவாமிகள் எவ்வாறு மொழிகிறார்கள் எனக் காண்பதே இப்பகுதியின் நோக்கமாகும். பழைய இலக்கணத்தில் கூறும் ஆய்தம் தலை, நெஞ்சு இடமாக அங்காத்தல் முயற்சியில் பிறக்கும் என்ற செய்தி ஈண்டு மிடற்றில் (எழுத்து.14) பிறப்பதாகக் கூறப்படுகிறது. உயிர்மெய் நெடிலுக்குச் சாரியை புணர்த்துக் கூறும் நிலை காணப்படுகிறது. (கூகரம், நீகாரம் எழுத்து.19). அஃது இஃது என்ற சுட்டு, அலிப்பால் சுட்டு எனப்படுகிறது. இடுகுறிப் பெயரும் யாதோ ஒரு காரணம் பற்றி இடப்படுவதோர் பெயராதலின் நுட்பமாக உணரின் அஃதும் காரணப் பெயரே என்பது இந்நூல் துணிபு. கிற, கின்ற என்பன வினைமுற்று விகுதிளாகச் சேர்க்கப்பட்டுள்ளன. புறப்பொருளில் ஐவகை நிலங்கட்கு முதல், கருப் பொருள்களைக் கூறுவதும் நெய்தலுக்குரிய தெய்வமாக வருணனைக் கூறுவதோடு 'கொற்றி' எனக் கொற்றவையைச் சேர்ப்பதும் புதுமையான செய்தியாகும். மேலும் அகப்பொருட் பகுதியிலோ பிறவற்றிலோ உரிப்பொருள் கூறப்படவில்லை. வினையெச்சம் கூறுபவர் பெயரெச்சம் கூறாததும் உயிரளபெடையைக் கூறுபவர் ஒற்றளபெடையைக் கூறாததும் ஆகிய பல மொழியிலக்கணத் தொடர்பான செய்திகள் வியப்பாகவும் புதுமையாகவும் உள்ளன.

முடிவுரை

''அருமைசால் புலவோ ரனைவரும் வியப்ப
வுவமையில் பெரியோ ருளநனி யுவப்ப
நுவலிய தமிழ்ப்புது நூல்——————"

என அறுவகை இலக்கண நூலுக்குச் சிறப்புப் பாடிய தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் கருத்திற்கொப்ப இந்நூலைப் பற்றி ஒருவாறுஅறிந்தோம். வாழ்வோடு மொழி இணைந்தது என்றும் வாழ்வின் ஒவ்வொரு கூறும் இலக்கண வரையறைக்குட்பட்டால் வாழ்வு சிறக்கும் என்றும் அவ் வாழ்வே உலவாப் பெருநலத்தை யடையச் செய்யும் தெய்வீக அருள் நிலையானது என்றும் தண்டபாணி சுவாமிகள் கூறாமற் கூறும் மானுட வாழ்வின் இலக்கணங்களை உணர்ந்து உய்வோமாக!

3. பன்னிரு பாட்டியல்

மருதூர் ச. அரங்கராசன்

1. முன்னுரை

இயற்றமிழ் இலக்கணத்தின் பாட்டியற்பிரிவின்கண் கி. பி 10ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே எண்ணற்ற நூல்கள் எழுந்தனவாக - எழுந்து விழுந்தனவாக அறிய முடிகிறது. எனினும் இன்று முழுமையாய்க் கிடைக்கின்ற பாட்டியல் நூல்களுள் வைத்துக் காலத்தான் முந்தியதாக அறியப்படுவது கி. பி. 10ஆம் நூற்றாண்டளவில் தோன்றிய பன்னிரு பாட்டிய லேயாம். பாட்டியல் பற்றியெழும் எந்த முறையான வரலாறும் 'பன்னிரு பாட்டியலில்' இருந்தே தொடங்கப்பட வேண்டிய தாய் உள்ளது. பாட்டியலாய்வில் அத்துணை இன்றியமை யாமை பெற்றுத் திகழும் அந்நூல் குறித்துக் காண்பான் எழுந்ததே இக்கட்டுரை.

2. ஆசிரியர்

'பன்னிரு பாட்டியல்' பற்றிய ஆய்வின் நுழைவாயிலிலேயே சிக்கலாக அமைவது அந்நூலின் ஆசிரியர் பற்றியதொன்றாம். இது குறித்து வழங்கும் மூன்று இன்றியமையாக் கருத்துக்கள் வருமாறு:

1. இந்நூலினை இயற்றிய ஆசிரியர் ஒருவரே[1]
2. பன்னிருவர் இணைந்தியற்றியதே இந்நூல்.[2]
3. பன்னிரண்டு பாட்டியனூல்களினின்றும் ஒருவர் தொகுத்ததே இந்நூல்[3]

2.1. ஒருவரா?

பன்னிரு பாட்டியலை இயற்றிய ஆசிரியர் ஒருவரே என்னும் முதற்கருத்து ஏற்புடைத்தாகத் தோன்றவில்லை. கரணியங்கள் வருமாறு:

2.1.1 ஒத்த கருத்துடை நூற்பாக்கள்

ஒவ்வொரு செய்தியினை விளக்கவும் பல நூற்பாக்கள் நூலின்கண் தரப்படுகின்றன. அதாவது, ஒத்த கருத்துடைய நூற்பாக்கள் பல நூன்முழுதும் விரவிக் கிடக்கக் காண் கின்றோம்.

"வெள்ளையும் அகவலும் விருத்தமும் கலியும்
வஞ்சியும் எஞ்சா மங்கலம் பொருந்தும்" –(169)

"வெள்ளை அகவல் விருத்தம் கலியே
வஞ்சி என்றிவை மங்கலப் பாவே" –(170)

என்றும் பிறவாறும் ஒரே கருத்தினை அறிவிக்க ஒன்றுக்கு மேற்பட்ட நூற்பாக்கள் வருதல் காண்க. ஆசிரியர் ஒருவரே இந்நூலினை இயற்றியிருப்பின், ஒரே கருத்தினுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட நூற்பாக்களை அமைத்திருக்கத் தேவையில்லை. அன்றியும், அது 'கூறியது கூறல்' எனும் குற்றமுமாம்.

2.1.2 மேற்கோணூற்பாக்களா?

ஒரு செய்தியினை வெளிப்படுத்த ஒரு நூற்பாவை மட்டுமே ஆசிரியர் எழுதினார் என்றும், அந்நூற்பாவோடு தொடர் புடைய பல நூற்பாக்களைப் பிற பாட்டியனூல்களி னின்றும் எடுத்துத் தொகுத்து மேற்கோணூற்பாக்களாக அவரே தந்தார் என்றும் கருதுவர் திரு கா. ர. கோவிந்தராச முதலியார் அவர்கள்.[4]

ஒத்த கருத்துடைய நூற்பாக்களை உரையாசிரியர்கள் காட்டுவார்களேயன்றி, நூலாசிரியரே எடுத்துத் தொகுத்து மேற்கோள்களாகக் காட்டுதல் என்பது மரபன்று; இஃதவர் பணியுமன்று. எனவே, திரு முதலியார் அவர்களின் மேற்கருத்து வலுவுடையதாகத் தோன்றவில்லை.

2.1.3 முரணுடை நூற்பாக்கள்

முரணுடைக் கருத்துகளைத் தாங்கி நிற்கும் நூற்பாக்களும் நூலுள் ஆங்காங்கே இடம்பெறக் காண்கிறோம். காட்டாக,

"அகவலும் கலிப்பாவும் பரிபாடலும்
பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீறா
மிகுத்துடன் தொகுப்பன மேற்கணக்கு"-(344)

"ஐம்பது முதலா ஐநூ றீறா
ஐவகைப் பாவும் பொருணெறி மரபில்
தொகுக்கப் படுவது மேற்கணக்கு" -(345)

என்னும் நூற்பாக்களை நோக்குக. அகவல், கலிப்பா, பரிபாடல் ஆகிய மூன்றான் மட்டுமே மேற்கணக்கு அமையப் பெறும் என்று முதனூற்பா கூற, ஐவகைப் பாவானும் அமையப் பெறும் என்று அடுத்த நூற்பா கூறுகிறது.

ஆசிரியர் ஒருவரே இந்நூலை இயற்றியிருப்பின் முரணுடைய கருத்துகளைத் தாங்கிய இதுபோன்ற பல நூற்பாக்கள் நூலுள் இடம் பெற்றிருக்குமா என்பது வினாவிற்குரித்து.

2.1.4 பிறன்கோட் கூறலா?

தன் மதம் கூறிய ஆசிரியர், 'பிறன்கோட் கூறல்' எனும் உத்தியான் தன்னோடு கருத்தால் மாறு கொண்டார்தம் நூற்பாக்களையும் காட்டினாரால் எனின், அற்றன்று. என்னை? அவ்வாறு கூறும்போது, பிறர் நூற்பாக்களை அப்படியே மேற்கோள்களாக எடுத்துக்காட்டுதல் நூலாசிரியர்க்கு மரபன்றாகலான் என்க. எனவே பன்னிரு பாட்டியலை இயற்றிய ஆசிரியர் ஒருவரே என்னும் கருத்து வலுவிழக்கக்காண்கிறோம்.

2.2 பலரா?

அகத்தியரின் மாணாக்கர் பன்னிரண்டு பேர் சேர்ந்தெழுதிய பன்னிருபடலம் போலப் பன்னிரண்டு பேர் சேர்ந்தெழுதியதே இப்பன்னிரு பாட்டியல் என்பது இன்னொரு கருத்து.

ஆளுக்கொரு படலமாகப் பன்னிருவர் இணைந்தியற்றியதாகச் சொல்லப் படுகிற 'பன்னிரு படலம்' போல, இங்கும் பன்னிருவர் இணைந்து இயற்றியிருப்பின், ஆளுக்கொரு பகுதியாக எடுத்துக்கொண்டு, நூற்பாக்கள் புனைந்திருப்பரேயன்றி ஒவ்வொருவரும் நூல் முழுதையும் தனித்தனியே செய்திருக்க மாட்டார்கள். இணைந்தியற்றுதல் என்பதன் பொருளும் அஃதன்று.

நூற்கண் காணப்படுகின்ற ஆசிரியர்களின் பெயர்களால் நூன்முழுக்க-தொடக்கம் முதல் இறுதிவரை நூற்பாக்கள் காணப்படுகின்றன வாகலான் ஒவ்வொருவராலும் இயற்றப்பட்ட தனித்தனி பாட்டியனூல்கள் இருந்திருக்கின்றன என்கிற முடிபே எஞ்சுகிறது. எனவே, பன்னிருவர் இணைந்து ஒரே நேரத்தில் இந்நூலை இயற்றியிருப்பர் என்று எண்ணக்கூட வில்லை.

2.3 தொகுப்பா?

முதலிரு கருத்துகளும் முறையாக மறுக்கப்படவே, மூன்றாவதாகவும் இறுதியாகவும் சொல்லப்பட்ட - 'பன்னிரண்டு பாட்டியனூல்களின் தொகுப்பே பன்னிரு பாட்டியல்' என்ற கருத்து ஏற்புடைத்தாகத் தோன்றுகின்றது. இக்கருத்தினரே திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களும்.[5]

2.3.1. தொகுப்பின் தேவை

சங்க மருவிய காலத்தை அடுத்தும், பக்தி இயக்க காலத்தை ஒட்டியும் எண்ணற்ற இலக்கிய வகைகள் புலவர்கள் தம் கற்பனைத் திறனால் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வந்தன. அவற்றின் எண்ணிக்கைப் பெருக்கத்தைப் பார்த்த அறிஞர்

பெருமக்கள் பலர் அவ்விலக்கிய வகைகளை வகைதொகைப் படுத்தவும், அவற்றுக்கு இலக்கணம் கூறவும் முற்பட்டனர். இவ்வகையில் முகிழ்த்ததுவே 'பாட்டியல்' எனும் இலக்கணப் பிரிவு. இப்பிரிவில் கி. பி. 8 ஆம் நூற்றாண்டு தொடங்கி எண்ணிலவாய் நூல்கள் தோன்றின.

> ''குறுமுனி ஆதி கலைஞர் கண்ட
> பாட்டியலானவை எல்லாந் தொகுத்து''—[6]

என்ற நவநீதப் பாட்டியல் சிறப்புப் பாயிரம்,

> "பாட்டியல் செய்தோர் பலராகலான்"—[7]

என்ற இலக்கண விளக்கப் பாட்டியலுரை ஆகியவற்றானும் பண்டு பாட்டியனூல்கள் பலவாகப் பல்கியிருந்தமை பெறப் படும். இவ்வாறு பெருகிய எல்லாப் பாட்டியனூல்களையும் ஒவ்வொருவரும் படித்தல் என்பது வீண் காலக்கரைவை உண்டு பண்ணக் கூடியதொன்றாம். எனவே, யாரோ ஓர் அறிஞர் தம் காலத்துச் சிறப்புற்றிருந்த பன்னிரண்டு பாட்டியனூல்களி னின்றும் தொடர்புடைய நூற்பாக்களைத் திரட்டித் தொகுத் துப் 'பன்னிரு பாட்டியல்' என்று பெயரிட்டார் எனலாம்.

2.3.2 இறந்தவற்றுளிலிருந்து பிறந்தவை

பன்னிரு பாட்டியற்கண் குறிக்கப்படுகின்ற ஆசிரியர்களால் செய்யப்பட்ட பாட்டியனூல்கள் யாது கரணியத்தாலோ இறந்துபோக, ஓரறிஞர் தமக்குக் கிடைத்த நூற்பாக்களை மட்டும் தொகுத்துப் 'பன்னிரு பாட்டியல்' என்றோரு நூலாக் கினர் என்று கருதுவர் திரு மு. அருணாசலம் அவர்கள்.[8] ஆக, பலவாகப் பெருகியிருந்த பாட்டியனூல்கள் இறந்தமையாலோ வழக்கு ஒழிந்தமையாலோ மிக்க விரிவுடையனவாய் இருந்த மையாலோ இத்தொகுப்புக்குத் தேவை நேர்ந்தது எனலாம்.

2.3.3 மேலுமொரு சான்று

இந்நூலில் காட்டப்படாதனவாகிய சில நூற்பாக்கள், இந்நூலில் சுட்டப்பட்ட ஆசிரியர்களுள் ஒருவரின் பெயரா

லேயே இலக்கண விளக்கப் பாட்டியலுரையில் உரை மேற்கோள்களாகக் குறிக்கப்படுகின்றன. ‘நேரசை’, ‘வருண கணமே’, ‘நிலையே’ என்னும் தொடக்கத்தனவாய நூற்பாக்கள் இந்திர காளியர் பெயரால் இலக்கண விளக்கப் பாட்டியலுரையில் காணக்கிடக்கின்றன.[9] எனவே, பல பாட்டியனூல்களின் தொகுப்பே ‘பன்னிரு பாட்டியல்’ என்பதும், அத்தொப்பில் எஞ்சிய நூற்பாக்களில் சில பிற நூலுரைகளிலும் மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ளன என்பதும் அறியக் கிடக்கின்றன.

2.3.4 பெயரே உணர்த்தும்

‘பன்னிரு பாட்டியல்’ என்னும் பெயர் பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய்ப் பன்னிரண்டு பாட்டியனூல்களாலான ஒரு தொகுப்பினை உணர்த்தி நின்றது. இவ்வாறே பெயர்ப் பொருத்தம் காண்பர் திரு கி. இராமநுஜையங்கார் அவர்களும்.[10]

2.3.5 பதின்மூவர் பெயர்கள்

கழகப் பதிப்பின் படியும், மதுரைத் தமிழ்ச்சங்க முதற் பதிப்பின்படியும் நூலின்கண் பதின்மூன்று புலவர்களின் பெயரால் நூற்பாக்கள் காணப்படுகின்றன. அப்புலவர்களின் பெயர்கள் வருமாறு:

1. பொய்கையார்
2. பரணர்
3. இந்திரகாளியார்
4. அவிநயனார்
5. அகத்தியர்
6. கல்லாடனார்
7. கபிலர்
8. சேந்தம்பூதனார்
9. கோவூர்கிழார்
10. மாபூதனார்
11. சீத்தலையார்
12. பல்காயனார்
13. பெருங்குன்றூர் கிழார்

திரு கி. வா. ஜகந்நாதன் அவர்கள் காட்டும் பதின்மூவர் பெயர்கள் அடங்கிய பட்டியலில் ‘பொய்கையார், பல்காயனார்’ பெயர்கள் காணப்படவில்லை. அவர்கள் இடத்தைக் ‘கையனாரும் பல்காப்பியனாரும் நிரம்புகின்றனர்.[11] திரு

கி. வா. ஜகந்நாதன் அவர்கட்குச் சான்றாய் நின்றது எந் நூலோ அறிந்திலேம். அகத்தியர் பாட்டியலிலிருந்து நூற்பாக் களைச் செய்தவர்கள் பன்னிருவரே எனக் காட்டுவர் திரு வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்.[12] மேற்குறித்த பதின்மூவருடன் 'செயிற்றியனார், நற்றத்தனார்' ஆகிய இரு வரைச் சேர்த்துப் பதினைவராகக் குறிப்பர் திரு மு. அருணா சலம் அவர்கள்.[13] மதுரைத் தமிழ்ச்சங்க வழிவந்த பன்னிரு பாட்டியலின் இரண்டாம் பதிப்பில் பதினைவர் பெயர்களால் நூற்பாக்கள் காணப்படுகின்றமையே இதற்கடிப்படை எனலாம்.

2.3.6 இடைச் செருகலா ?

'பன்னிரு பாட்டியல்' பன்னிரண்டு பாட்டியனூல்களின் தொகுப்பாயின், பன்னிருவர்க்கும் மேற்பட்ட புலவர்களின் பெயரால் நூற்பாக்கள் காணப்படுவதற்குக் கரணியமென்னை என்னும் வினாவெழுதல் இயல்பே. நூல் ஆக்கப்பட்ட காலத்தில் பன்னிரண்டு பாட்டியனூல்களினின்றே நூற்பாக்கள் எடுத்துத் தொகுப்பட்டிருக்கும் என்றும், பின்னர்ப் பிற்காலத் தெழுந்த பாட்டியனூல்களினின்றும் சில நூற்பாககள் இடைச் செருகலாக இணைந்திருக்கக்கூடும் என்றும் எண்ணலாம். நூலைத் தொகுத்த தொகுப்பாசிரியர் தம் பங்கிற்குத் தாமே எழுதிச் சேர்த்த நூற்பாக்களும் இருக்கக்கூடும் என்று கருதுகிறார் திரு. மு. அருணாசலம் அவர்கள்.[14]

2.3.7 குறள் யாப்பு

நூன் முழுதும் நூற்பாவில் அமைந்திருக்க, கல்லாடர் பெயரால் காணப்படும் பதினொரு நூற்பாக்கள் மட்டும் குறள் வெண்பாவால் அமைந்திருத்தல் நோக்குக. வெண் பாவால் பாட்டியல் இயற்றும் வழக்கம் உண்டான காலத்திலோ (வெண்பாப் பாட்டியல் அல்லது வச்சணந்தி மாலை) அல்லது அதற்குச் சற்றுக் காலத்தால் பின்னரோ இக்குறள் வெண் பாவாலாய பாட்டியனூல் தோன்றியிருக்கக்கூடும். அதில் சில நூற்பாக்கள் பன்னிரு பாட்டியலில் இடைச்செருகலாக

இணைந்திருக்கவும் கூடும். அல்லது, பன்னிரு பாட்டியல் வழிவழியாக வழங்கி வருங்காலை, பயிலும் ஒவ்வொருவரும் தத்தம் காலத்து நிலவிய பாட்டியனூல்களின் நூற்பாக் களையும் கருத்துக்களையும் இணைத்து எழுதி வைத்துக் கொண்டனர் என்று கருதவும் இடமுளது. நூலின் இடையே உரைநடையால் வரும் விளக்கமும் நூற்பாவெண் பெறுதல் காண்க (191). எனவே, பன்னிரண்டு பாட்டியனூல்களின்றும் தொகுத்தமைக்கப்பட்ட நூலே'பன்னிரு பாட்டியல்' என்று கருத மிகுதியும் இடமுள்ளது.

2.4 காலம்

2.4.1 சங்க காலத்தவரா?

பன்னிரு பாட்டியலில் தொகுக்கப்பட்ட நூற்பாக்களை யாத்தவர்களாகக் காணப்படும் புலவர்களின் பெயர்களை நோக்குகையில் அவர்கள் சங்க காலத்தவரோ என்ற மயக்கம் ஏற்படுதல் இயல்பே. "சங்கத்துச் சான்றோர் இயற்றிய பன்னிரு பாட்டியல்" என்ற தலைப்புடனே நூலைப் பதிப்பித் தோரும் உளர். [15] இந்நூலில் காணப்படும் பெயர்கள் யாவும் சங்கத்துச் சான்றோர்களையே குறிக்கின்றன என்று நிறுவ முற் படுவர் திரு கா. ர. கோவிந்தராச முதலியார் அவர்களும். [16] பன்னிரு பாட்டியலில் காணப்படுகின்ற ஆசிரியர்களுள் ஒரு சிலரைச் சங்க காலத்துக்கு முற்பட்டவர்களாகவும், ஏனை யோர்களைப் பிற்பட்டவர்களாகவும் கருதுவர் அறிஞர் மு. அருணாசலம் அவர்கள். [17]

2.4.2 சங்க காலத்தவர் அல்லர்

பன்னிரு பாட்டியலில் காணப்படும் புலவர்கள் சங்க காலத்தவர்கள் அல்லர் என்பதற்குப் பல சான்றுகளைக் காட்ட முடியும். இப்பாட்டியனூலில் இவர்கள் பெயரால் காணக் கிடக்கின்ற பல விதிகள் இவர்களுடைய சங்கப் பாடல்களில் மீறப்பட்டுள்ளமையைக் காண்கிறோம்.

2.4.2.1 விதி மீறல்

மேற்கூற்றுக்குச் சான்றாகக் கோவூர்கிழார் பெயரால் காணப்படும் "பன்னிருபாட்டியல்" விதியையும், அதனை மீறி அமைந்த அவருடைய சங்கப் பாடல்களையும் இவண் காணலாம்.

> "ஓரசைச் சீரும் நாலசைச் சீரும்
> ஈரசைச் சீருள் நேரிறு சீரும்
> மங்கலம் புணரினும் மங்குதல் செய்யும்" (131)

என்பது கோவூர்கிழார் பெயரால் பன்னிரு பாட்டியலில் காணப்படும் நூற்பாவாகும். நேரில் முடியக்கூடிய ஈரசைச்சீர் (நேர் நேர், நிரைநேர்-தேமா, புளிமா) மங்கலச் சொல்லாகவே அமையினும் மொழிமுதல் வருதற்கூடாது: வரின் பாட்டுடைத் தலைவற்கு ஏதம்தரும் என்பது இந்நூற்பாவாற் பெறப்படுகின்றது. ஆயின்,

> "நீயே புறவின் அல்லல் அன்றியும்"(புறநானூறு. 46)
> "தேஎந் தீந்தொடைச் சீறியாழ்ப் பாண"
> (புறநானூறு. 70)
> "பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்"
> (புறநானூறு. 308)

என்று கோவூர்கிழார் பாடல்களே மாச்சீர் கொண்டு தொடங்கக் காண்கிறோம்.

2.4.2.2 பாவினங்கள்

தொல்காப்பியத்தில் பாவினங்கள் கூறப்படவில்லை. சங்கச் சான்றோர்களின் பாடல்களில் ஒன்றாவது பாவினங்களுள் ஒன்றால் அமைந்ததா என்றால் அதுவும் இல்லை. ஆயின், பன்னிரு பாட்டியலில் சங்கப் புலவர்களின் பெயரால் அமைந்த நூற்பாக்களோ பாவினங்களைச் சுட்டியும், பாவினங்களாலான இலக்கிய வகைகளைச் சுட்டியும் அமைகின்றன.

"ஆசிரியத் துறை அதனது விருத்தம்
கலியின் விருத்தம் அவற்றின் நான்கடி ......" (310)

என்று தொடங்குவதும், பதிகத்தின் இலக்கணம் கூறுவதும், கோவூர் கிழாரின் பெயரால் காணப்படுவதுமாய நூற்பா நோக்குக. இவ்வாறே பிறாண்டும் வருதல் காண்க, ஆகவே, பன்னிருபாட்டியற் சான்றோர்கள் 'சங்கப் புலவர்கள்' அல்லர் என்று உறுதியாய்த் தெரியலாம்.

2.4.2.3. நடையமைப்பு

சங்கப் புலவர்களின் இலக்கிய நடை, தூய் தமிழ்நடை அப்புலவர்களின் பெயரால் காணப்படுவதுவாய நூற்பா நடையினின்றும் வேறுபட்டுள்ளமையும் மேற்கருத்தை உறுதி செயும். மொழிக்கலப்பு அதிகம் இல்லாத செந்தமிழால் சங்க இலக்கியம் படைத்த புலவர்கள், மொழிக் கலப்புடைய பாட்டியனூற்பாக்களை இயற்றியிருப்பர் என்றேற்க மனம் இடந்தரவில்லை.

2.4.2.4. வடநூன்மரபு

பன்னிரு பாட்டியலில் காணப்படும் பல மரபுகள் வட மொழியினைத் தழுவியதாம். ஒவ்வோர் இறைவனும் சில எழுத்துகளைப் படைத்தான் என்று !சொல்வதும், ஒவ்வொரு சாதியினுக்கு உரிய எழுத்துகள் என்று சிலவற்றைப் பிரித்துக் காட்டுவதும், நால்வகைப் பாக்களை நால்வகைச் சாதிகளோடு தொடர்புறுத்திச் சொல்வதும், எழுத்துகளை ஆண், பெண், அலி என்று பிரித்துக் காட்டுவதும் தமிழ்மொழிக்குரியமரபோ நெறியோ ஆகாது. சங்க காலத்தில் பிறமொழி மரபு இத் துணைப் பெருமளவில் தமிழில் புகுந்திலது. இது கொண்டும் பன்னிரு பாட்டியலில் காணப்படும் சான்றோர்களின் பெயர்கள் சங்கப் புலவர்களைக் குறிப்பனவாகா என்று துணியலாம்.

2.4.2.5 அமைதி

சங்க காலப் புலவர்களின் பெயர்களைத்தாங்கிய பிற்காலப் புலவர்கள் பாட்டியனூல்களை எழுதியிருத்தல் கூடும். அல்லது

பிற்காலப் புலவர்கள் தங்கணூல்கள் சிறப்புப்பெற வேண்டு மென்பதற்காக, அவற்றைப் புகழ்பெற்ற சங்கப்புலவர்களின் பெயரால் உலவ விட்டிருக்க வேண்டும்.

2.4.3 மெய்க்கீர்த்தி இலக்கணம்

இந்நூலின் இரு நூற்பாக்களால் மெய்க்கீர்த்தி பற்றி அறியப்படும்செய்திகள் இராசராசனுடைய மெய்க்கீர்த்தியோடு பொருந்தியுள்ளமையால், இந்நூல் அவனது காலமாகிய கி.பி, 10ஆம் நூற்றாண்டின் இறுதியிலோ, அல்லது அதனைய அடுத்தோதான் தோன்றியிருக்க வேண்டும் என்று கருதலாம்.

3. நூல்

3.1 நூற்பெயர்

முதன்மொழிக்காகும் பன்னிரண்டு பொருத்தங்ளைக் கூறுவதால் இந்நூல் பன்னிரு பாட்டியல் என்னும் பெயர் பெற்றது' என்று கருதுவர் பாட்டியலாய்வாளர் டாக்டர் அரங்க. நலங்கிள்ளி.[18] இக்கருத்தின் பொருந்தாமை இவண் சுடடப்படும்.

3. 1. 1. பன்னிரு பொருத்தமா?

நூலின் தொடக்கத்தில் எழுத்தியலில் கூறப்பட்டுள்ள எழுத்துகளின் பிறப்புணர்த்தும் பகுதியையும், சொல்லியலின் இறுதியில் கூறப்பட்டுள்ள 'பெயர்' எனும் பகுதியையும் பொருத்தங்களுள் கொண்டு கூறியதில் சிறிதும் பொருத்த மில்லை. எந்த எந்த எழுத்துகளை எந்த எந்த இறைவன் படைத்தான் என்பதைப் 'பிறப்பு' எனும் பகுதி உணர்த்து கிறது. அதற்கும் முதன் மொழிக்கும் இடையே எவ்விதத் தொடர்பையும் பன்னிரு பாட்டியல் சுட்டவில்லை என்பது இவண் குறித்தற்குரித்து. 'பெயர்'எனும் பகுதியில், குலப்பெயர் முதலாக உள்ள எண்வகைப் பெயர்களுள் சிறப்புப்பெயர், இயற்பெயர் ஆகிய இரண்டே 'பொருத்தம்' காண்கையில் கொள்ளப் பட வேண்டுவனவாம் என்று சுட்டப்பட்டுள்ளது.

எனவே, 'பொருத்தம் காணும் போது கருத்திறுத்த வேண்டி வேண்டியதொரு குறிப்பு என்ற இதனைச் சொல்லலாமே அன்றி, இதனையே ஒரு பொருத்தமாக ஏற்றுச் சாற்றும் கூற்று போற்றற்குரியதன்று. சொல்லப்பட்ட பன்னிரண்டு செய்திகளில் பிறப்பு, பெயர் எனும் இரண்டும் போக, எஞ்சிய பத்துப் பொருத்தங்களே பன்னிரு பாட்டியலால் உணர்த்தப் பட்டனவாம்.

3.1.2. முதன்மொழிக்காம் பொருத்தங்களா?

பன்னிரு பாட்டியலில் சுட்டப்பட்டுள்ள பொருத்தங்கள் அனைத்தையும் 'முதன்மொழிக்காம் பொருத்தங்கள்' என்று டாக்டர் அரங்க. நலங்கிள்ளி சுட்டினார்.[19] பெயர், பிறப்பு இரண்டுந்தவிர்ந்த ஏனைய பத்துமே பொருத்தம் என்று மேற் சுட்டினோம். இப்பத்தனையும் ஒட்டு மொத்தமாக முதன் மொழிக்காம் பொருத்தங்கள் என்று சொல்லிவிட முடியாது. இவற்றுள், 'கன்னல் பொருத்தம்' என்பது'எந்த நேரத்தில் பாட்டுடைத் தலைவன் மேல் பிரபந்தம் பாடத் தொடங்க வேண்டும்' என்பதைச் சுட்டுவது. பாட்டுடைத் தலைவனுக்குப் பொருந்தும் நல்ல நேரத்தைச் சுட்டுவதுதான் 'கன்னலே' அன்றி, அதற்கும் முதன்மொழிக்கும் ஆந்தொடர்பு ஏதுமில்லை என்க. ஆகலான் முதன்மொழிக்காம் பன்னிரு பொருத்தங் களைக் கூறுதலான் 'பன்னிரு பாட்டியல்' என்றாயிற்று என்பது ஏற்கக் கூடியதாயில்லை. 'பொருத்தங்கள்' பற்றிப் பெற்ற பெயராயின்' பன்னிரு பொருத்தம்' என்றாதல் ஒக்கு மேயன்றி, 'பன்னிரு பாட்டியல்' என்றாதல் ஒவ்வாதென்க.

3.1.3. பன்னிரு செய்திகளால் பெயரா?

இனி, எழுத்தியல், சொல்லியல் எனும் ஈரியல்களில் கூறப் படும் செய்திகள் பன்னிரண்டாகலான் பன்னிரு பாட்டியல் எனப் பெயரெய்திற்று என்றலும் ஒன்று.[20] எழுத்தியல், சொல் லியல், இனவியல் என்னும் மூன்றியல்களால்இயலும் ஒரு நூல், முதலிரண்டு இயல்களால் பெயர் பெற்றது என்பது ஏற்கக் கூடியதாய் இல்லை. களவியல் என்றாற்போல் தலைமையும்

பன்மையும் பற்றிப் பெயர் நிகழ்ந்தது என்பதும் ஏற்கக் கூடியதாயில்லை. என்னை? இங்குத் தலைமையும் பன்மையும் மூன்றாவதியலாம் இனவியற்கண்ணே சேறலான். (எழுத்தியல் 96 நூற்பாக்கள்; சொல்லியல் 58 நூற்பாக்கள்; இனவியல் 204 நூற்பாக்கள்).

எனவே, முன்பே உணர்த்தப்பட்டது போல, 'பன்னிரு பாட்டியல்' என்பது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய்ப் பன்னிரண்டு பாட்டியனூல்களானாய ஒரு தொகுப்பையே குறிக்கும் என்பது தெளிவு. நூற்பெயர் கரணியமும் அஃதே என்க.

3.2 நூலமைப்பும் பொருளும்

இந்நூல் எழுத்தியல், சொல்லியல், இனவியல் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டு நடக்கிறது.

3.2.1 எழுத்தியல்

முதற்சீரின்கண் அமைத்தற்குரிய எழுத்தாலாம் பொருத்தங்களை மிகுதியும் கூறுதலே பற்றிப் பெற்ற பெயர். இங்கு 'எழுத்து' என்பது ஆகுபெயராய் எழுத்தாலாம் பொருத்தங்களை உணர்த்தி நின்றது. இதன்கண் எழுத்துக்களில் பிறப்பும், வருணம், கதி, உண்டி, பால், தானம், கன்னல், புள் நாள் எனும் எட்டுப் பொருத்தங்களும் உணர்த்தப்படுகின்றன. இவற்றுள் கன்னல் மற்றும் புள் பொருத்தங்கள் பன்னிரு பாட்டியலாலும் பிங்கல நிகண்டாலும் மட்டுமே குறிக்கப்படுகின்றன.[21] 'கன்னல்' பற்றிய குறிப்பு முன்பே தரப்பட்டுள்ளது.

3.2.2 சொல்லியல்

முதற்சீரின்கண் அமைத்தற்குரிய சொல்லினது பொருத்தங்களை மிகுதியும் பேசுதலான் இவ்வியல் இப்பெயர்த்து. 'சொல்' என்பது ஆகுபெயராய்ச் சொல்லானாம் பொருத்தங்களை உணர்த்தி நின்றது. கணம், மங்கலம், பெயர் என்று

இவ்வியலால் உணர்த்தப்படும் மூன்றனுள் 'பெயர்' என்பது 'முதன் மொழிக்காம் பொருத்தமன்று' என்பது முன்பே சுட்டப்பட்டது,

3.2.3 இனவியல்

'இனம்' என்பது 'வகை' எனும் பொருளது. இலக்கியத்தில் பல்வேறு வகைகளை எடுத்தியம்புவதால் இவ்வியல் இப் பெயர்த்து. 'இனவியல்' என்பது இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகையாம். 'இனங்களை (இலக்கிய இனங்களை) உணர்த்தும் இயல்' என்று விரித்துப் பொருள் கொள்ள வேண்டும். இவ்வியல் இரு பிரிவுகளை உள்ளடக்கியது அவை இவை:-

1. பாப் பொருத்தம்
2. பா இனம்

3.2.3.1 பாப் பொருத்தம்

'பாப்பொருத்தம்' எனுந்தலைப்பில் ஒவ்வொரு பாவிற்கு முரிய சாதி' கடவுள், நாள், ஓரை, பூ, வண்ணம், நிலம் ஆயன சுட்டப்படுகின்றன இவற்றானேரும் பயன் ஏதும் சுட்டப்படவில்லை.

3.2 3.2 பாவினம்

இத்தலைப்பின்கீழ், இலக்கிய வகைகட்கான இலக்கணங்கள் சொல்லப் பட்டுள்ளன. இங்கு இலக்கணம் பெறும் இலக்கிய வகைகளின் எண்ணிக்கையை 61 என்று காட்டுவர் திரு கா. ர. கோவிந்தராச முதலியார் அவர்கள்.[22] 62 என்று சுட்டுவர் டாக்டர் ந. வீ. செயராமன் அவர்கள்.[23] 64 என்று அறைகுவர் டாக்டர் அரங்க. நலங்கிள்ளி அவர்கள்.[24] 65 என்று மொழி குவர் திரு மு. சண்முகம் பிள்ளை அவர்கள்.[25] 66 என்று குறிப்பர் திரு சோம. இளவரசு மற்றும் திரு கி. இராமனுஜை யங்கார் ஆகியோர்.[26] 74 என்று ஓரிடத்தும் 91 என்று வேறிடத் தும் எண்ணிக் காட்டுவர் திரு மு. அருணாசலம் அவர்கள்.[27]

இவ்வெண்ணிக்கை விகற்பமெல்லாம் ஓரிலக்கியத்தின் உட்ன் வகைகட்குத் தனியெண் கொடுத்து நிற்பதுவும், கொடுக்கா திருப்பதுவும் பற்றி அமைவனவாம்.

3.3. சிறப்புச் செய்திகள்

* முன்பே குறித்தபடி, கன்னல், புட் பொருத்தங்களும் பெயர் பற்றிய செய்திகளும் பாட்டியனூல்களுள் இந்நூற் கண்ணே தான் காணப்படுகின்றன.

*மங்கலம், எழுத்து, சொல் என்று தனித்தனியே பிற பாட்டியனூல்களால் வேண்டப்பட்ட மூன்று பொருத்தங்களை ஒன்றாக இணைத்து 'மங்கலம்' என்ற பெயரிலேயே இந்நூல் சுட்டுகிறது.

*இல்லறவெள்ளை, இன்னிசைத் தொகை, ஐம்படை விருத்தம், ஒருபோகு, கடாநிலை, கணக்கு - மேல் / கீழ், செந்தமிழ் மாலை, செருக்கள வழி, தேவபாணி, பிறைநிலை, பாட்டு (பத்து), மறக்களவஞ்சி, யாண்டு நிலை, வேந்தன் குடை மங்கலம் என்னும் இலக்கிய வகைகள் இந்தப் பன்னிரு பாட்டி யலால் மட்டுமே கூறப்படுவனவாம்,

*பெண்பாற்குரிய பருவங்களாக ஏழு குறிக்கப்பட்டவாறு போல, ஆண்பாற்கும் பாலன், மீளி, மறவோன், திறலோன், காளை, விடலை, முதுமகன் என்னும் ஏழு பருவங்களைக் கூறியது இந்நூலே.

*பிள்ளைத்தமிழ் பற்றிக் கூறும்போது, ஆண்பாற்குச் சுட்டத் தகுந்த உவமைகள், பெண்பாற்குச் சுட்டத் தகுந்த உவமைகள் என்று தனித்தனியே சிலவற்றைத் தொகுத்துத் தருகிற நிலையினை இந்நூலிற் காண்கிறோம். இந்த அடிப் படையே 'உவமான சங்கிரகம்' போன்ற நூல்வகைகளைத் தோற்றிற் றெனலாம்.

*சங்க இலக்கியங்களைக் கருத்தில் கொண்டு, பத்துப்பாட்டு, மேல் கணக்கு, கீழ்க்கணக்கு என்ற பெயர்களில் இலக்கிய

வகைகளைச் சுட்டி, இலக்கணம் கூறிச் செல்லுதலும் இந் நூற்கண்ணே தான் காணப்படுகின்றது.

*கடவுளர் தலைவராய் வருங்காலை பெண்களும் மட லேறலாம் என்று மரபு மீறி விதியமைத்த நிலையையும் இந் நூற்கண்ணே காணலாம். இது திருமங்கையாழ்வாரின் மடற் பிரபந்தம் பார்த்தமைத்த விதியாகலாம். இவ்வாறாகப் பல புதிய செய்திகளும், பிற பாட்டியனூல்களாற் சுட்டப்படாத செய்திகளும் இந்நூற்கண் காணக்கிடக்கின்றன.

4. உரை

இன்று முழுமையாய்க் கிடைக்கின்ற பாட்டியனூல்களுள் வைத்துப் பழமையானதும், பன்னெடுங்காலமாக வழக்கில் இருந்து வருவதுமாய இப்பன்னிரு பாட்டியற்குப் பழைய உரை ஏதும் இல்லாததற்கான கரணியம் விளங்கவில்லை. உரை எழுந் திலதா? அன்றி எழுந்து விழுந்ததுவா என்பதும் அறியக் கூடவில்லை. இந்நூற்கு இப்பொழுது வழங்கிவரும் உரை, சென்னைப் பச்சையப்பன் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றிய திரு. கா. ர. கோவிந்தராச முதலியார் அவர்களால் வரையப்பெற்று, 1943 ஆம் ஆண்டு வெளிப்படுத்தப்பட்டவொன்றாம்.

5. பதிப்பு

5.1. தமிழ்ச் சங்கப் பதிப்பு

ரா. இராகவையங்கார் (ப-ர்), **சங்கத்துச் சான்றோர் இயற்றிய பன்னிரு பாட்டியல்**, தமிழ்ச் சங்க முத்திராசாலை, மதுரை, முதற்பதிப்பு, 1904.

ஏட்டுச் சுவடிகளில் கண்ட சில பாட வேறுபாடுகள் புதி தாகச் சுட்டப்பட்டு, அந்நூலின் இரண்டாம் பதிப்பு 1951இல் வெளியிடப்பட்டது; பதிப்பாசிரியர் திரு கி. இராமாநுஜையங்கார் அவர்களாவர்.

5.2 கழகப் பதிப்பு

கா. ர. கோவிந்தராச முதலியார் (உ-ர்), **பன்னிரு பாட்டியல் மேற்கோட் சூத்திரங்களுடனும்,** திருநெல் வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை-1, முதற்பதிப்பு, ஜூலை 1943

இந்நூலின் மறுபதிப்புகள் நவம்பர் 1949, மார்ச் 1963, மார்ச் 1970, அக்டோபர் 1978 ஆகிய ஆண்டுகளில் வந்துள்ளன.

6. முடிவுரை

இக்கட்டுரையின்கண் தெளிவுறுத்தப்பட்ட கருத்துகள் வருமாறு:

1. பன்னிரண்டு பாட்டியனூல்களின்றும் தொகுத்து அமைக்கப்பட்டதொரு நூலே பன்னிரு பாட்டியல் ஆகும் என்பது சுட்டப்பட்டது.

2. பன்னிரு பாட்டிய னூற்பாக்களை யாத்த புலவர்கள் சங்கப் புலவர்களின் பெயர்களைத் தாங்கிய பிற்காலப் புலவர் ஆவர் என்பது உணர்த்தப்பட்டது.

3. பன்னிரு பாட்டியல் உணர்த்துவதாக இதுகாறும் கருதப்பட்ட பதினொரு பொருத்தங்களுள் 'பெயர்' என்பது பொருத்தமே அன்று என்பதும், 'கன்னல்' என்பது முதன் மொழிக்காம் பொருத்தமன்று என்பதும் சொல்லப்பட்டன.

4. இப்பன்னிரு பாட்டியலால் மட்டுமே கூறப்படுகின்ற இலக்கிய வகைகள் கண்டெடுத்துக் காட்டப்பட்டன.

5. நூற்கண் காணப்படும் சிறப்புச் செய்திகளும், நூற் கமைந்த உரையும், நூல் பெற்ற பதிப்புகளும் கட்டுரையின் இறுதியில் குறிக்கப்பட்டன.

7. பின்குறிப்புகள்

1. டாக்டர் ந. வீ. செயராமன், **பாட்டியல் திறனாய்வு**, ப. 61,

2. கா. ர. கோவிந்தராச முதலியார் (உ-ர்), 'மேற்கோள்', 'முன்னுரை', **பன்னிரு பாட்டியல்**, ப. 4.

3. ரா. இராகவையங்கார் (ப-ர்), 'திரு கி. இராமாநுஜையங்காரின் முன்னுரை', **பன்னிரு பாட்டியல்**, ப. 1.

4. கா. ர. கோவிந்தராச முதலியார் (உ-ர்) op. cit. U. 3

5. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், **சமணத் தமிழிலக்கிய வரலாறு**, ப. 150.

6. எஸ். கலியாணசுந்தரையர், எஸ். ஜி. கணபதி ஐயர் (ப-ர்கள்.), **நவநீதப் பாட்டியல்**, ப. 3

7. தி. வே. கோபாலையர் (ப-ர்), **இலக்கண விளக்கம்-பொருளதிகாரம்-பாட்டியல்**, நூ. 42 இன் உரை, ப. 148.

8. மு. அருணாசலம், **தமிழிலக்கிய வரலாறு-பத்தாம் நூற்றாண்டு**, ப-ள். 223-224.

9. தி. வே. கோபாலையர் (ப-ர்). op. cit., நூ. 40 இன் உரை, ப. 139.

10. குறிப்பு 3 காண்க.

11. கி. வர். ஜகந்நாதன், **தமிழ்க் காப்பியங்கள்**, ப 56.

12. வே. வேங்கடராஜுலு ரெட்டியார், **பரணர்**, ப. 65.

13. மு. அருணாசலம், op. cit., ப. 235.

14. Ibid, ப. 224.

15. ரா. இராகவையங்கார் (ப-ர்), **சங்கத்துச் சான்றோர் இயற்றிய பன்னிரு பாட்டியல்**, மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை, முதற்பதிப்பு, 1904,

16. கா. ர. கோவிந்தராச முதலியார் (உ-ர்) op. cit., ப-ள். 310, 311

17. மு. அருணாசலம், **தமிழ் இலக்கிய வரலாறு - ஒன்பதாம் நூற்றாண்டு-முதற்பாகம்**, ப-ள். 310, 311.

18. டாக்டர் அரங்க. நலங்கிள்ளி, டாக்டர் (பிஎச். டி.) பட்டப் பேற்றுக்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப் பெற்ற ஆய்வேடு (அச்சிடப்பெறவில்லை), ப. 53.

19. Idem.

20. குறிப்பு 4 காண்க.

21. பிங்கல முனிவர், **பிங்கலந்தை என்னும் பிங்கல நிகண்டு**, கழகப் பதிப்பு, நூ. 1354-1356, ப. 195.

22. கா. ர. கோவிந்தராச முதலியார் (உ-ர்),op. cit., ப 43

23. ந. வீ. செயராமன், op. cit., ப. 65.

24. டாக்டர் அரங்க. நலங்கிள்ளி, op. cit., ப. 58.

25. மு. சண்முகம் பிள்ளை, **சிற்றிலக்கிய வளர்ச்சி**, ப. 13

26. ரா. ராகவையங்கார் (ப-ர்), op. cit, திரு கி. இராமனுஜையங்காரின் 'முன்னுரை', ப. 2.
சோம. இளவரசு, இலக்கண வரலாறு, ப. 159.

27. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு - பத்தாம் நூற்றாண்டு, ப. 213 ------ (ப-ர்), 'முன்னுரை', பிரபந்த மரபியல், ப. 24

கட்டுரையின் ஊடே பிறைக்கட்டினுள் தரப்பட்டுள்ள எண்கள் பன்னிருபாட்டியலின் நூற்பா வெண்கள் ஆகும். அவை மதுரைத் தமிழ்சசங்க முதற்பதிப்பிலுள்ளபடி (1094) தரப் பட்டுள்ளன.

4. குவலயானந்தம்

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்

சொல்-பொருள்

குவலயானந்தம் எனும் பெயர், குவலயம் + ஆனந்தம் எனப் பிரிக்கத்தக்கது. குவலயம் எனும் சொல், பூமி எனப் பொருள்படுவதுடன், மலர் வகைப் பெயராகவும் அமைகின்றது. இது நெய்தல், கருங்குவளை, செங்குவளை மலர்களைக் குறித்து வருவதனைத் தமிழகராதி காட்டும்.[1] எனவே குவலயம் எனும் சொல் குவள்யம்–குவளையம் எனும் ஒலி நிலையையும் உட்கொண்டது போலும் என எண்ணலாம். வடமொழியகராதி, குவல(ள)யம் என்பதனை, நீல மலருடையதும் இரவில் மலர்வதுமான நீர்ப்பூவாகக் காட்டுகின்றது.[2] தமிழில் குவலயம் மலர்ப்பெயராக வருவது காலத்தால் முற்பட்டது என்பதை அது இடம் பெறும் திவாகரம் (கி.பி.9 நூ.), சூடாமணி (1520) நிகண்டுகள் பற்றி அறியலாம்; பூமி எனும் பொருள் கந்த

---

1. **குவலயம்**[1] Ku-valaya. M,N.Ku-valaya. The earth, World; பூமி;' குவலய மிசைக் குப்புற்று' (கந்தபு. காரக. 51) **குவலயம்**[2] Kuvalayam, N. Kuvalaya. cf குவளை[1]. 1. White Indian water lily. See நெய்தல் (திவா.), 2. Blue nelumbo. See கருங்குவளை; குவலயத்திரு மலர் (சூடா). 3. Purple Indian water-lily. see செங்குவளை. (W) -Tamil Lexicon, University of Madras, 1962, Vol II, p. 1028.

2. 1. Kuvalaya, am, n. the water lily (especially the blue variety, the flower of which opens at night) M Bh: -A Sanskrit English Dictionary, Monier Williams, Oxford University Press, Oxford, Re. 1974, p. 296.

புராணக் காலத்ததாகத் தெரிகிறது(14. நூ). ஆனந்தம் எனும் சொல்லின் பல பொருண்மைகளுள் பேரின்பம் என்பது திருவாசகம் (9 நூ) முதல் பயில்கின்றது.[1]

இவ் வகையில், குவலயானந்தம் எனும் பெயரின் பொருள் நிலை, சிந்தித்தற்குரியது. இரவு மலரும் குவளை மலருக்கு மகிழ்வு, இன்பம் தருவது என்ற பாங்கில் சந்திரன் கருதப்படலாம். இந் நிலையில் சந்திராலோகம் எனும் (பிறிதொரு அணி இலக்கண நூல்) பெயர் நிலையும், அதன், சந்திரனின் பார்வை அல்லது ஒளி (சந்திர + ஆலோகம்[2]) எனும் பொருட்டன்மையும் இணைத்துச் சுட்டத்தக்கன.

நூல் மூலம்

குவலயானந்தம் எனும் பெயரில் இரு நூல்கள் தமிழில் அமைகின்றன. இவை அணியிலக்கண வகையைச் சார்ந்தன என்பது பொது எண்ணம். மூல நூலாக வன்றிச் சார்பு நூலாகவும், பெயர்ப்பு நிலையின்வாகவும் அமைதல் தெரிகின்றது.

அப்பைய தீக்ஷிதரால் பதினேழாம் நூற்றாண்டில் வடமொழியில் இயற்றப்பெற்றது குவலயானந்தம்; இது, மூல நூலாகவன்றி, வடமொழியில் ஜெயதேவன் ஆக்கிய சந்திராலோகத்தை அடியொற்றியதாக அமைகின்றது.[3] பன்னிரண்

---

1. Tamil Lexicon, University of Madras, 19 6, Vol I, p. 262
2. *A-loka* as, m. looking, seeing, beholding, sight, aspect vision, ... light, lustre, splendour; glimmer-A Sanskrit English Dictionary, op. cit, p. 154.
3. Though comparatively early in date, Jayadea's *candraloka* is no more than a convenient manual of figures wth happy illustrations, on which (c. 1600) Appayya Diksita the polymath based his *Kuvalayananda* –A history of Sanskrit Literature, A. Berriedale Keith, OUP, Delhi, 1973, p. 396.

டாம் நூற்றாண்டுக்குரிய இச் சந்திராலோகம், அணிகள் பற்றிய சிறந்ததொரு கையேடாகிச் சான்றுகளும் வழங்கு கின்றது.[1] எனவே, இவற்றை ஒட்டியே தமிழ் நூல்கள் அமைந் துள்ளன எனல் போதரும்.

தமிழ் நூல்கள்:

தமிழின் நூல்கள், முறையே குவலயானந்தம் எனவும் குவலயாநந்தம் எனவும் சிறிது வேறுபாடே பெயரில் கொள் கின்றன. இவற்றுள், முன் நூல், மிகவும் அண்மையிலேயே (1979) சுவடியிலிருந்து அச்சில் வெளிவந்துள்ளது[2]; உ. வே. சாமிநாதையர் நூலகச் சுவடி இப்பதிப்புக்கு அடிப்படையாகும். பின் நூல், 1895-இல் முதலில் பதிப்பிக்கப் பெற்றது எனத் தெரிகிறது.[3] வேறுபடுத்திக் காட்டும் முகமாக, இவை முறையே குவலயானந்தம்-1, குவலயாநந்தம்-2 என அமைத்துக் காட்டப்படுகின்றன.

ஆசிரியர் - காலம்

குவலயானந்தம் - 1 எனும் நூலின் ஆசிரியர் மாணிக்க வாசகர் எனும் பெயரினர். பாண்டியன் வேண்ட உரைத்தார் எனவும், வாதவூரன் என்பது ஆசிரியரின் பிறிதொரு பெயர் எனவும் வரும் குறிப்புகள், இதன் காலத்தை அறிய வாய்ப் பளிப்பதற்கு மாறாகக் குழப்பமே நல்குகின்றன. அன்றியும்

---

1. The twelth century also witnessed the production of the following notable works: — *Candraloka* — The Candra loka by Jayadeva is a convenient manual of figures of speech with good illustrations.
   -Sanskrit Poetics, Gowrinath Sastri, *in* The Cultura Heritage of India, (ed) Suniti Kumar Chatterji, The Ramakrishna Mission Institute of Culture, Calcutta, Re, 1978, Vol V, p. 301
2. குவலயானந்தம் சந்திராலோகம், (பதி) ச. வே. சுப்பிர மணியன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1979.
3. பார்க்க: மேற்படி நூல், பக். 121

இச்செய்திகள் தரும் பாயிரம், முன்கருதியதற்கு வேறான நூல் மூலத்தையும் காட்டுகின்றது.

> குவலயானந்தம் எனும் நூலினைச்
> செய்தனன் சகலகலையும்
> சேர்ந்துவளர்**மாணிக்கவாசகன்** எனும் ஞான
> தேசிக சிவயோகியே (பாயிரம், 4)

> மண்டலம் சொல் **வரகுண பாண்டியன்** முன்ஞான
> மாமறையோர் அலங்கரர வடசொல் ஆகக்
> கொண்டியலால் உரைப்பதனால் கூடல் வாழும்
> கொற்றவன் மீனத்துவசக் குரிசில் நன்பாய்த்
> தண்டமிழால் விளக்கும் என **வாதவூரன்**
> சாற்றினான் வடமொழியால் திரித்து உலாவும்
> எண்டிசைஎண் மீமாங்கிசை எனும் நூலின்
> இயல்பு அனைத்தும் குவலயானந்தம் என்றே
> (பாயிரம். 5)

பாயிரத்தின் உரை நடைப் பகுதியும் இக் கருத்தினை விளக்கியது.[1] இதனால் இத் தமிழ்க் குவலயானந்தத்தின் (1)மூல்நூல் அகத்தியர் இயற்றிய சிவ்வியாகரணம் எனும் (தமிழ்) நூல் என்பதும்,அந்நூல் வடமொழி அலங்கார நூலான மீமாங்கிசையைப் பின்பற்றியது என்பதும் விளங்கும். அகத்தியரின் சிவவியாகரணம் பற்றி எக் குறிப்பும் அறியப்படவில்லை. ஆனால் வடமொழியில், 10- ஆம் நூற்றாண்டில் ராஜசேகரா என்பவர், கவிஞருக்குரிய கையேடாகக் **காவ்ய மீமாம்ச** என்பதனை

---

1. வடமொழி, அலங்கார நூலாகிய **மீமாங்கிசையின்** பொருள் உணர்ந்து, **அகத்திய முனிவர்** யாத்த சிவ்வியாகரணம் எனும் நூலை முதல் நூலாகக் கொண்டு மாணிக்க வாசக சுவாமிகளால் குவலயானந்தம் என்ற பெயருடன் இலக்கணத்திற்கு இலக்கியமும் உரையுடன் இயற்றப்பட்டது-. மேற்படி பக், 66

இயற்றினார் என்பது தெரிகிறது.[1] பாயிரம் சுட்டுவது இந் நூலாயின், இதன் காலம் பத்தாம் நூற்றாண்டிற்குப் பிற் பட்டதே என்பது கூறாமல் விளங்கும். எனினும் சரியான காலம் அறுதியிட்டுக் கூறவியலவில்லை. ஆயின், இந்நூலின் காலம் மிகவும் பிற்பட்டதேயாகவும் பத்தொன்பதாம் நூற்றாண்டன வினதே ஆகவும் கருதப்படுவதுண்டு.[2]

குவலயாநந்தம்-2 எனும் நூலின் மொழிபெயர்ப்பாளர், காலம் பற்றிய தெளிந்த குறிப்புகள் அச்சு நூலின் முதற்பக்கத் லேயே கொடுக்கப்பட்டுள்ளன. 1889-இல், சங்கர நாராயண சாஸ்திரிகள் குவலயாநந்த மொழிபெயர்ப்பை ஆக்கினார். இவர் எட்டையபுர அரசர் எட்டப்ப மஹாராஜாவின் சமஸ் தான சபை வடமொழிப் பண்டிதர் ஆவர். இதே அவையின் தமிழ்ப்புலவர் (வித்துவான்) முகவூர் மீனாட்சி சுந்தரக் கவிரா யர், வடமொழிச் சான்று ஸ்லோகங்களைத் தமிழ்ச் செய்யு ளாக்கி இணைக்க உதவினார். இவ்வரசனின் மகன் காலத்தில் நூல் அச்சேறியது.

நூலமைப்பு

குவலயானந்தம் 1, நூற்பா யாப்பாலானது. பாயிரப் பகுதியின் ஐந்து பாடல் மட்டும் தாழிசை, விருத்தம், ஆசிரியம் எனும் யாப்பு நிலைகாட்டுகின்றன. இதன் பொருண்மை, முப் பிரிவுகளில் அமைகின்றது. உறுப்பியல், அணியியல், சித்திர வியல் எனும் இப்பகுப்புகள் முறையே 150, 120, 29 நூற்

1. Pajasekhara; author of a number of celebrated works lived in the first quarter of the tenth century A.D; His **Kavya mimamsa** is a hand-book for poets.
The Cultural heritage of India, Op. cit. P. 299
2. இவர் (அப்பைய தீட்சிதர்) காலம் கி.பி. 1520–1593. இந் நூலினை மாணிக்கவாசகர் என்பவர் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இவர் 19ஆம் நூற்றாண்டினர்.
—இலக்கண வரலாறு, புலவர் சோம. இளவரசு, தொல் காப்பியர் நூலகம், சிதம்பரம், 1963, பக். 225

பாக்களாலாயின. இந்நூல் முற்றுப்பெற்றதாகத் தெரியவில்லை. மூன்றாவதான சித்திர இயல், கடவுள் வணக்கத்தைத் தொடர்ந்து இயல் பொருளைத் தொகுத்துரைப்பது[1] இயலில் முழுமையாக விரித்து அமைக்கப்படாமையும் 'முற்று' முதலிய முடிவுக்குறிப்புப் பெறாமையும் இவ் எண்ணத்தைத் தரும்.

குவலயாநந்தம்-2, 167 கட்டளைக் கலித்துறைகளால் அமைகின்றது. ஒவ்வொரு அணியும் விளக்கப்பட்டபின், பெரும்பாலும் சான்று பெறுகின்றன. இறுதி ஐந்து அணிகள் விளக்கமின்றி, சான்றுப்பாடல்வழி யுணர்த்தப் பெறுகின்றன. அன்றியும், 100 அணிகளையே நூலாசிரியர் (பெயர்ப்பாளர்) தர, அத்துடன் இருபது அணிகளை உரையாசிரியரே இணைத்தமைப்பதும் இவ் அமைப்பு நிலைக்குக் காரணமெனலாம்.

நுவல்பொருள்

குவலயானந்தம் 1 வெறும் அணியிலக்கணம் கூறாது, பிற சில மொழி அடிப்படைகளை முதலில் கூறியபின்பே அணி விளக்கத்திற்குச் செல்கின்றது. **முதலாவதான உறுப்பியலில்,** அலங்காரங்களுக்கு உறுப்பாவது சொல் எனும் கருத்தால் 'சொல்லிலக்கணம்' கூறப் படுகின்றது. பிற இரு இயலினும் இப்பகுதியே (150) மிகுதியான நூற்பாப்பெறல் எண்ணத்

---

1. நால்வகைப்புலமை நால்வகைக் கவிதை
எண்கணப் பொருத்தம் சங்கை விகற்பம்
ஐயிரு குற்றம் **அகடனகடனம்**
எழுவகை மதமே எண் நான்கு உத்தி
பாடம் கருத்துப் பல புணர் அணிவிதம்
இன்னவை பிறவும் சித்திர இயலே (3.2)

இப்பட்டியுலின், **அகடனகடனம்** என்பதே, இவ் இயலின் 29 ஆம்பாடலில் விளக்கம் பெறுகின்றது. தொடரும் எழுவகை மதம் முதலியன பற்றிய செய்திகளும் மொழிபெயர்ப்பில் அமைந்து, சுவடியில் இழக்கப்பட்டிருக்கலாம்.

தக்கது. முதல்நூற்பா இயல் பொருளைத் தொகுத்துச் சுட்ட, தொடர்ந்து வருவன அதனை விரிக்கின்றன.

சொல்லிலக்கணம் மட்டுமன்றி, நிகண்டு போலச் சில சொற்பட்டியலும் இதன்கண் காணப்படுகின்றன. பெண்பால் பற்றிக் கூற வரும்போது, '—மின், கொடி, கொம்பு, கோதை, ஆயிழை, காரிகை, —தெரிவை, அபிலை, வல்லி, மானினி' தொழி, செவிலி, தையல்' (31) என்பன போன்று வருவன இதற்குச் சான்றுபகரும்.

இலக்கியம், கருத்து, பொருள் முதலியனவும் இங்கு விளக்கம் பெறுகின்றன.

---

1. உயர்திணை அஃறிணை பெயர்ச்சொல் வினைச்சொல்
பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் வகை
ஆண்பால் .பெண்பால் பலர்பால் வேற்றுமை
இறப்பு எதிர்வு நிகழ்வு எனும் காலம் முன்று
தன்மை முன்னிலை படர்க்கை மூவிடம்
கோட்பொருள் புனைபொருள் இடுகுறி காரணம்
இடுகுறிப் பொதுவும் இடுகுறிச் சிறப்பும்
காரணப் பொதுவும காரணச் சிறப்பும்
பகுபதம் பகாப்பதம் விகாரத்து ஒற்றுமை
ஆறு வழக்கியல் இயற்சொல் திரிசொல்
திசைச்சொல் வடசொல் முன்மொழி பின்மொழி
மறுமொழி இணைமொழி காரணச் செலவு
காரியச் செலவு காரண காரியம்
உவமேயப்பொருள் உவமானப் பொருள்
உதாரணச் செலவு விசேடணம் விசேடியம்
கருத்தன் கரும முடிவுசொல் சொற்பயன்
பொருள் பொதுச் சிறப்பு உளக்குணம் மெய்க்குணம்
ஐவகைப் புணர்வு யோகம் வியோகம்
ஆதாரப் பொருள் ஆதேயப் பொருள்
உயர்ச்சி தாழ்ச்சி சமம் என அறைதல்
அறுவகை அலங்காரத்து உறுப்பு என் என
அறியப் பெறல் என அறைந்தனர் புலவர் (1.1)

"இலக்கணம் கருத்து இலக்கியம் அதில்நெறி" (111)
"பொருள்என வல்லோர் புகல்வது கருத்து" (112)
"கருத்து எனப் பெறுவதைத் தொகைவகை விரியால்
சொல்லிய பயனைத் தோற்றுவது பொருளே" (113)

அன்றியும், **யாப்பு** என்பதனையும் விளக்கும் முயற்சி காணப்படுவது சுட்டற்குரியது. யாப்புக்கு-செய்யுளுக்கு உயிராக அமைவன பொருளும், அணியும் எனும் எண்ணம் இதனை நோக்க எழுகின்றது.

"யாப்புப் பொது சிறப்பு என இருபாலே" (137)
"பொருள் அலங்காரம் எனும் இருபாலும்
யாப்புப் பொதுஎன அறைந்தனர் புலவர்" (138)

"அலங்கா ரத்தின் அலங்காரத் தொனி
அங்கம் குறிப்பு யாப்புச் சிறப்பே" (139)

இவற்றை நோக்க, **அணி** பற்றி மொழிய முற்படினும் கவிஞர், அதனை மட்டும் எண்ணுபவராக அன்றி ஐந்திலக்கண அல்லது நாலிலக்கண உணர்வுடனேயே நுவல் பொருளை அணுகுகிறார் என்பது புலப்படும்.

இரண்டாவதான அணியியல், கடவுள் வாழ்த்துடன் தொடங்கி, 'புலமை என்பது அணியை உணர்தல்' எனக் கூறி, உவமை முதல் சாமிதை ஈறாக, 87 அணிகளை விளக்குகின்றது. முன் இயல் போல, தொகுத்துச் சுட்டலின்றியே உவமை முதலியன விளக்கம் பெறுகின்றன. அன்றியும் தண்டி முதலியவற்றில் காணப்படும் சொல்லணி, பொருளணி எனும் பகுப்பு நிலையும் காணப்படவில்லை. ஆயின், உவமை முதலிய பொருளணிகளையே இவ்வியலில் கூறியிருப்பது வெளிப்படை.

மூன்றாவதான, சித்திர இயல் தண்டி முதலியன சொல்லணி வகையில் உட்படுத்தும் சித்திரக் கவிதையை உள்ளடக்கியது. ஆயின், யாப்பு இலக்கண ஒழிபுகள் தருகின்ற கவி, கமகன், வாதி, வாக்கி ஆகிய நாற்புலமையோரையும் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் ஆகிய நாற்கவிவகைகளையும், கணப்

பொருத்தம், கவிக்குற்றம், எழுவகை மதம், முப்பத்திரண்டு உத்திவகை முதலிய பாட்டியல், மரபியல், பாயிரவியல் செய்திகளையும் தரவிழைகின்றது. ஏற்கெனவே சுட்டிய வண்ணம், இயல் முற்றுப் பெறாமையால் இச்செய்திகளில் சிலவே அமைகின்றன. எனினும் சித்திரவியல் என்றமையால், இதன்கண் 16 சித்திரக்கவிகள் விளக்கம் பெறுகின்றன.

குவலயானந்தம்-2 நுவல் பொருளில் வேறுபாடு காட்டுகின்றது. அணியைப் பற்றி மட்டுமே பேசுகின்றது. தமிழில் வழங்கும் **சந்திராலோகத்துடன்** பொருள் நிலையால் மிகவும் அண்மிச் செல்கின்றது. வடமொழியில் ஜெயதேவன் இயற்றியதாக முன்சுட்டிய சந்திராலோகப் பெயர்ப்பாக, 19-ஆம் நூற்றாண்டில் முத்துசாமி ஐயங்கார் இச் சந்திராலோகத்தைத் தந்தார்.[1] எனவே இந்நூல் (குவலயாநந்தம்-2) மூலத்தையும் முதல் நூலையும் ஒட்டியமைந்தமை வெளிப்படும். குவலயானந்தம்-1-இன் பாயிரப்படி, அது வேறு மூலத்தைக் கொண்டதால் இரண்டிற்குமிடையே அமையும் பொருண்மை வேறுபாட்டிற்கு அமைதி காணலாம்.

இதன் ஒவ்வொரு கட்டளைக் கலித்துறையும் ஒவ்வொரு அணியின் விளக்கமாகி அமைதல் பெரும்பான்மையாகும். சான்றுப் பகுதிகள், இலக்கியம் உதாரணம் என இணைவு பெற்று அவ்வப்பாடலிலேயே வருதல் தனித்தன்மை: அவைத் தலைவனான மன்னன் எட்டப்பன் பெரும்பான்மைப்பாடலில் முன்னிலைப்படுத்தப்படுவதும் உண்டு. எனவே மன்னன் புகழும் துணை நோக்கெனலாம்.

---

1. சந்திராலோகம் மூலம், முத்துசாமி ஐயங்கார்*, மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை, 1909.
   * இவர், மு. இராகவையங்காரின் தந்தை எனும் குறிப்பைப் புலவர் சோம, இளவரசு (முன்சுட்டிய நூல். பக். 223) வழங்குவார்.

“இருபொருளுக்குத் தகும் ஒப்புமை வெளியீட்டு இலங்க
வருவது **உவமை** அணியாம்; ‘புகழ்உயர் வானதியில்
மருவினது ஓதிமம் போல்’ என்னில் **இலக்கியம்** வந்தது. சீர்த்
திருவளர் எட்டபுரம் வாழ் குமரெட்ட சீதரனே!” (2)

பிற அணி இலக்கண நூல்கள் எதுவும் கூறாத **61** அணி களை இந்நூல் கூறுகிறது.[1] மேலும், சந்திராலோகத்தை அண்மி வந்தபோதும், இவற்றில், அந் நூலிலிருந்தும் வேறு படுவது குறிப்பிடத் தக்கது.

அணியிலக்கண வரலாற்றில்

குவலயானந்த நூல்கள் தமிழ் அணியிலக்கண வரலாற்றில் வருமிடமும், பெறுமிடமும் எண்ணத்தக்கன. தொல்காப்பிய உவமவியலுக்குப் பின் வந்த தனி அணியிலக்கண நூல்களும் ஐந்திலக்கண நூல்களில் அணியதிகாரங்களும் அணி பற்றிய கோட்பாட்டை வழங்கின.

உவமை, அணியாக வளர்ந்து, முப்பத்தைந்து அணியென வகுக்கப்பட்ட நிலை முதலில் வீரசோழியத்துக்கு (11நூ) உரியது. இவ் வளர்ச்சிக்கு முந்திய படிநிலையைத் திவாகரமும் (9நூ) (பக்.307) யாப்பருங்கல விருத்தியுரையும் (10நூ) (பக். 550) காட்டுகின்றன; இவற்றில் முறையே இருபத்தெட்டு, இரு பத்தேழு அணிகளே அமைகின்றன.

வீரசோழியத்திற்குப் பின், தண்டியலங்காரம் (12 நூ) அதே முப்பத்தைந்து அணிகளையே தந்து, ஒருசிலவற்றில் சிறிது பெயர் வேறுபாடு தந்தது. தொடர்ந்து வந்த மாறனலங் காரம் (16நூ), முன்நூல் மரபுகளைப் பின்பற்றியதுடன் நின்று விடாது இருபத்தெட்டுப் புதிய அணிகளை இணைத்து 63 அணி கள் தந்தது.

---

1. பார்க்க: குவலயானந்தம் சந்திராலோகம், முன் சுட்டி யது, பக். 185-187 (அட்டவணை).

முன் நூல்களைப் பெரும்பாலும், நூலின் பல பகுதிகளில் அடியொற்றி யமையும் இலக்கண விளக்கம் (17நூ), சாமி நாதம் (19நூ) என்பன வீரசோழியக் கருத்தை முழுமையாகப் பின்பற்ற வில்லை. தொன்னூல் விளக்கம் (18நூ) தீவகம், இலேசம், நிரனிறை, ஆர்வ மொழி, பரியாயம் போன்ற பல அணிகளை விட்டு, எட்டுப்புது அணிகளை இணைத்து விடுகின் றது. 19 ஆம் நூற்றாண்டில் எழுந்த முத்து வீரியம், வீரசோழி யக் கருத்துக்கள் சிலவற்றை நீக்கி, மாறனலங்கார அணிகள் சிலவற்றை இணைத்து, வேறுபடுகின்றது; மேலும்22 புது அணிகளை இணைக்கும் முயற்சியும் இதில் அமைகின்றது.

இச் சூழலில், இப் 19–ஆம் நூற்றாண்டில் தான் சந்திரா லோகமும், குவலயானந்த நூல்களும் தோன்றியிருக்கக் கூடும். புதிய புதிய அணிகளின் சேர்க்கையால், ஏற்கெனவே பல நூல் களிலுமாக, அதுவரை 93(63+8+22) அணிகளமைந்த நிலை, இவற்றால் வேறொரு கோணத்தில் வளர்ந்தது. இவ்வாறு முன் வழங்கிய தொண்ணூற்று மூன்றில் அனைத்தையும் இவை ஏற்கவில்லை–தரவில்லை. சிலவற்றைத் தந்து, பல புத்திணைவு களையும் வகைவகையாக அமைத்ததால், அணிப்பட்டியல் 202 (93+48+61) வகைகளுடையதாயிற்று.[1] தமிழில் இதுவரை, எழுந்த பத்துக்குக் குறையாத அணி நூல்களில் இக் குவலயானந் தங்கள் இறுதியில் அமையினும், தகுதியில் தனிநிலை கொண்டன.

மொழிபெயர்ப்பு அல்லது தழுவலாக அணியிலக்கணம் இயன்றது குவலயானந்தக் காலப்புதுமை யன்று. வீரசோழி யம், பல பகுதியிலும் வடமொழி–சமஸ்கிருதச் சார்பு காட்டு கின்றது;[2] தண்டியலங்காரம், சமஸ்கிருதத்தில் தண்டி யியற் றிய காவ்யாதர்சச் சார்புடையது என்பதும்பொது எண்ணம்.

---

1. மேற்படி, பக். 172–191-இல் அமைந்த அட்டவணை காண்க.
2. See. Foreign models in Tamil Grammar, T. P. Meenakshisundaram, D. L. A. Trivandrum, 1974.

இம் மரபு குவலயானந்தம் வரை தொடர்கின்றது. பிற மொழிச் சார்பு காட்டினும், பெயர்ப்பாக-தழுவலாக அமை யினும், இவை கூறும் அணிகள் தமிழ் மரபுக்கு மாறானவை என்றோ, தமிழிலக்கிய வளப் பெருக்கில் இல்லாதவை என்றோ கூறவியலாது. அணிகளின் விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ் இலக்கியங்களை நோக்க அவற்றின் இடப் பேறு விளங்கும்.

புதுமையும் தனித்தன்மையும்

புதுமை புனைந்து, யாப்பிலக்கண வரலாற்றில் இணைவு பெற்றவை குவலயானந்த நூல்கள் என்பது அவற்றின் வேறு பட்ட அணிப்பட்டியல்களால் விளங்கும். குவலயானந்தம் 1, முன் நூல்கள் சுட்டாத 48 அணிகளையும், குவலயாநந்தம் 2, புதிய 61 அணிகளையும் தருதல் இக்கருத்தின் அடிப்படை யாகும். மேலும் உறுப்பியல், சித்திரவியல் செய்திகளால், குவலயானந்தம் 1, தனித்தன்மை கொள்வதும் வெளிப்படை.

அணிகளுக்குப் பெயர் வழங்கல், பல அணிகளை ஒன்றாகச் சுருக்குதல், சிலவற்றிற்குப் பல வகைகள் காட்டி விரித்தல், பழைய அணிகளை விடுதல், புதிய விளக்கங்களை இணைத்தல், வகைகள் சேர்த்தல் என்பன போன்ற நிலைகளால் குவலயா னந்த நூல்கள் புதுமையும் தனித்தன்மையும் கொள்கின்றன.

குவலயானந்தம்-1, பெரும்பாலும் அணிகளுக்கு வட மொழிப் பெயர்களையே சூட்டியுள்ளது. நிதர்சனம், துல்லிய யோக்தை, வியதிரேகம், பரிகாரம், பரிகாராங்குரம்..[1] போன்றன சான்று. உவம உருபுகள் சிலவற்றை உவமையின் வசனம் எனத் தருகிறது. இவ்வாறு சில விளக்க வேறுபாடு களைத் தீபகம், விபாவனை முதலியவற்றில் காணலாம். வஞ்சப்புகழ்ச்சியை நிந்தையில் துதி துதியினில் நிந்தை என

---

1. இவை முறையே, காட்சி, ஒப்புமைக்குழு, வேற்றுமை, கருத்துடை யடை கொளி எனும் தமிழ்ப் பெயருடையணி களாம். பார்க்க: குவலயானந்தம் சந்திராலோகம், முன் சுட்டியது. பக். 166

இரண்டாக்கியுள்ளது. தகுதியின்மை, துன்பம் ஆகிய இரு அணிகளை விடம் எனும் ஒரே வகைக்குள் அடக்கியது. தொல்காப்பியமும் மாறனலங்காரமும் தரும் உள்ளுறையையே இது மறைத்துக்காட்டல் அணியாக்குகின்றது எனலாம். இதன் கற்பிசைப் புனைவு, இல்பொருளுவமை எனும் மரபுவகையை நினைவூட்டுகின்றது. கடல், மலை, வான்வெளி ஆகியன உவமானமாக வரும் சூழலைத் தனித்தனியே- நிறைவுப் புனைதல், குறைவுப் புனைதல், வளர்ச்சிப் புனைதல் என மூன்று புதிய அணிகளால் தருவது தனித்தன்மையுடையது. எழிற்பொருள் உவமை எனும் வகையும் புதுமை பயப்பது. கற்பனையையும், சாமிதை எனும் பெயரில் அணியாக்கியுள்ளார். வியோகக் கருத்து, புற்புதம், இறந்தது விலக்கல், வியாசத்துதி, காரியம் கொள்ளல், விசேடக்கரு, ஏதுத்துதி, தன்னியல் தருமத்துதி, அதிசய பேதகம் முதலிய இதன் புதிய அணிகள், சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன.

குவலயாநந்தம்-2, முன் நூல்கள் கூறிய அணிகளைக் கூறுமிடத்தும் விளக்க வேறுபாடு கொள்வதைத் தற்குறிப்பேற்றம், உயர்வு நவிற்சி போன்றனவற்றில் காணலாம். பிற நூல்களால் முதன்மைப் படுத்தப்பட்ட தன்மையணி, இதனால் ஓரளவு இறுதிலேயே (152) தரப்படுகின்றது. தீவக அணியின் ஒழிபாக இது, மாலை விளக்கை அமைக்கின்றது. பிற நூல்கள் விரிவாகத் தந்த சிலேடை, விலக்குப் போன்றன இதனால் சுருக்கமாகவும், மாறாக, அவநுதி விரிவாகவும் அமைக்கப்படுகின்றன. முன் நூல்கள் உவமையின் விரியாக மொழிந்தவற்றைத் தனியணி வகையாக்குதல், புகழ் பொருள் உவமை (இதரேதரம்), பொது நீங்குவமையணி என்பவற்றில் காணப்படுகின்றது. நிகழ்வின் நவிற்சி எனும் புதிய அணிவகை, இலக்கிய உத்தியாகி நிகழ்ந்ததைக் கூறும் (Flash back) அல்லது வருவதை உணர்த்தும் பாங்கினை உள்ளடக்குகின்றது. இரத்தினமாலை, யுத்தி, மடங்குதல் நவிற்சி, கரவு வெளிப்படுப்பு, உய்த்துணர்வு போன்ற புதிய அணிவகைகள் சிறப்பாகச் சுட்டத்தக்கன.

தொகையுரை

திராவிட மொழிகளை, இலக்கியங்களை, இலக்கியக் கோட்பாடுகளை வடமொழி பாதித்த ஒரு கால கட்டத்தில், அல்லது இரு மொழிக் குடும்பங்களும் உறவில் கலந்த காலப்பகுதியில், பல கருத்துகளில், கொள்கைகளில் இணைவும் ஒப்புமையும் காணப்படுகின்றன. குவலயானந்த நூல்கள் இத்தகு ஒரு சூழலின் வெளிப்பாடாகும் எனலாம். தமிழில் மட்டுமின்றி, தெலுங்கு, கன்னட மொழிகளிலும் குவலயானந்தம் சந்திராலோகம் பெயர்ப்புகள்[1] இடம்பெற்றிருப்பது, இவ் உறவின் நெருக்கத்தை, செல்வாக்கின் அழுத்தத்தைப் புலப்படுத்துகின்றது போலும்.

சில அணி விளக்கத்தில் மரபை ஒட்டி யமைவதுடன், பல புதிய அணிகளையும் தருவதால் இக் குவலயானந்த நூல்கள் தமிழ் அணியிலக்கண வரலாற்றில் தனித்த சிந்தனைக் குரியனவாகின்றன. பெயரில் ஒப்புமை கொள்ளினும், இருவேறு மூலங்களின் வழியாக, சார்பாகி அமைவதால் இவை தம்முள் பல்நிலையில் வேறுபடுகின்றன. இயல்பகுப்பில், செய்திதரலில் வேறுபடுவதுடன், அணிப்பட்டியலிலும் கூட மாறு

---

1 (கன்னடத்தில்)... சந்திராலோகத்தை ஒட்டியெழுதிய, அப்பிரதிம வீர சரிதமும், ஜாயேந்திரன் எழுதிய குவலயானந்தமும் தனி நூல்களாய் உள்ளன (பக். 15); (தெலுங்கில்)...ராமய கவி என்பவர் குவலயானந்தத்தைக் குவலயானந்தப் பிரகாசம் என்னும் பெயரால் எழுதியுள்ளார். சந்த்ராலோகத்தின் மொழி பெயர்ப்பும் உள்ளது (பக். 64).
-தென்மொழிகள் வே. வேங்கடராஜுலு செட்டியார் எஸ். வாஸன் கம்பெனி, மதராஸ், 1960.

படுகின்றன. இப் பாங்கால், இரட்டை நூல்களானபோதும், கூறியது கூறும் இரட்டி (duplicate) ஆகாது தனித்தன்மை கொள்கின்றன.

நூற்றொகை:

1. இலக்கண வரலாறு, சோம இளவரசு, தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம், 1963

2. குவலயானந்தம் சந்திராலோகம், (பதி) ச. வே சுப்பிரமணியம், தமிழ்ப்பதிப்பகம், சென்னை, 1979.

3. சேந்தன் திவாகரம், கழகம், 1958.

4. தென்மொழிகள். வே. வேங்கடராஜுலு ரெட்டியார்,. எஸ்.வாஸன் கம்பெனி, மதராஸ், 1960

5. யாப்பருங்கலம்(பதி) இரா. இளங்குமரன், கழகம், சென்னை-1976

6. Bhoja's Singara prakasa. V. Raghavan, Punarvasu Madras, 1978.

7. The Cultural heritage of India,(ed) Sunitkumar Chatterji The Ramakrisha Mission Institute of Culture, Calcutta. Vo V,2nd, 1978.

8. Foreign Models in Tamil Grammar, T.P. Meenakshi. sundaram, DIA, Trivandrum, 1974.

9. A Glossary of Indian Figures of Speech, Edwin Gerow Mouton, Paris, 1971.

10. A History of Sanskrit Literature, A. Berriddale keith, Oxford University press, Delhi, 1973

11. An Introduction to the histrory of Tamil Literature, M. Arunachalam, Gandhi vidyalayan, Tiruchitrambalam, 1974

12. Tamil Lexicon, University of Madras, Madras, Vol I. 1936; Vol.2,1962.

13. A Sanskrit English Dictionary, Monier Williams, Oxford University Press, Oxford, Re. 1974.

5. சிதம்பரப்பாட்டியல்

டாக்டர் மு. சிவச்சந்திரன்

முன்னுரை

தமிழ்மொழி, இயல், இசை, நாடகம் என்னும் முப்பிரிவு களை உடையது. இம்மூன்றிற்கும் அகத்தியர் இலக்கணம் செய்தார் என்றுநூல்கள் கூறுகின்றண. அவ்விலக்கணம் இன்று கிடைக்கப்பெறவில்லை. இன்று இருக்கும் பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியம் இயல் இலக்கணம் மட்டுமே விளக்குகிறது. இயலானது, எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியத்திற் குப்பிறகு பதினோராம் நூற்றாண்டில் எழுந்த வீரசோழியத்தில் இவ் ஐந்து பிரிவுகளும் தனித்தனியே விளக்கப்பட்டுள்ளன. இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், நேமிநாதம் என்னும் நூல்களும் இவ் ஐந்து பிரிவுகளையும் விளக்கிக் கூறுகின்றன.

தொல்காப்பியத்தில் உள்ள செய்யுளியல் யாப்பிலக்கணத் தைக் கூறுகிறது. யாப்பிலக்கணம் பின்னர்த் தனித்து வளரத் தொடங்கியது. யாப்பியலின் வளர்ச்சியில் காலப்போக்கில் பாட்டியல் என்னும் உட்பிரிவு கிளைத்து எழத்தொடங்கியது. பாட்டியல் எழுந்த பின்னர் யாப்பிலக்கண நூல்களின் வளர்ச்சியும் கூட ஓரளவு குன்றியது எனலாம். யாப்பியல், தனிநிலைச் செய்யுள் இலக்கணம் கூறுவதென்றும் பாட்டியல், தொடர்நிலைச் செய்யுள் இலக்கணம் கூறுவதென்றும் கொள்ள லாம். யர்ப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை ஆகிய நூல்கள் தனிநிலைச்செய்யுள் இலக்கணம் கூறுவன. பன்னிருபாட்டியல்

முதலான நூல்கள் தொடர்நிலைச் செய்யுள் இலக்கணம் கூறுவன. இத்தகைய பாட்டியல் நூல்களில் ஒன்றான சிதம்பரப் பாட்டியல் என்னும் நூல் குறித்த கருத்துக்களை விளக்குமுக மாக இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது.

1. பாட்டியல் நூல்கள்
2. சிதம்பரப்பாட்டியலின் நூலாசிரியர் வரலாறு
3. நூல் அமைப்பு
4. நூல் நுவலும்பொருள்
5. நூலின் தனிநிலை

என்னும் ஐந்து தலைப்புக்களில் இக்கட்டுரை, கருத்து விளக்கம் தருகிறது.

1. பாட்டியல் நூல்கள்

பாட்டியல் நூல்களில் காலத்தால் முற்பட்டது பன்னிரு பாட்டியல் ஆகும். இதன் காலம் பத்தாம் நூற்றாண்டு என்று மு. அருணாசலம் உறுதி செய்துள்ளார்[1]. இப்பன்னிருபாட்டி யலைத் தொடர்ந்து பாட்டியல் கருத்துக்களை விளக்க எழுந்த நூல்களாக வெண்பாப் பாட்டியல், நவநீதப்பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், பிரபந்த மரபியல், இலக்கணவிளக்கப் பாட்டியல், தொன்னூல் விளக்கம், பிரபந்த தீபிகை, முத்து வீரியப்பாட்டியல், சம்பந்தப்பாட்டியல் என்பனவற்றைக் கொள்ளலாம்.

பன்னிரு பாட்டியல்

பாட்டியல் நூல்களில் விரிவாக அமைந்தது இந்நூலே யாகும். இந்நூலினை ஆக்கிய ஆசிரியர் பற்றிய செய்திகள் அறிதற்கியலவில்லை. எனினும் தனக்கு முன்னர் வாழ்ந்த பாட்டியல் நூலாசிரியர்களையும் அவர் தம் மொழிகளையும்

பொன்னே போல் போற்றும் பண்பினர் என்பதை ஆங்காங்குப் பதின்மூன்று பாட்டியல் ஆசிரியர்களின் நூற்பாக்களை மேற்கோள் சுட்டியுள்ளமையால் அறியலாம்.[2]

வெண்பாப்பாட்டியல்

இது வெண்பாயாப்பில் அமைந்தது. குணவீரபண்டிதரால் இயற்றப்பட்டது. இதன்காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டு[3]. இது பாட்டியல் நூல்களில் பெருவழக்கில் உள்ளது. இதில் 102 நூற்பாக்கள் உள்ளன.

நவநீதப்பாட்டியல்

நவநீதர் என்பவரால் கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைக்கப்பட்டநூல் இது. பதினான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்டது.[4] 102 காரிகைகள் கொண்டது. இந்நூலுக்குப் பழைய உரை ஒன்றுள்ளது.

சிதம்பரப் பாட்டியல்

இது பதினாறாம் நூற்றாண்டில் தோன்றியது. இதன் பிற விபரங்களைப் பின்னர்க் கட்டுரையில் தனித்தனித் தலைப்புக்களில் காணலாம்.

பிரபந்த மரபியல்

சிதம்பரப்பாட்டியலுக்குப் பின்னர்த் தோன்றியநூல். இது, பிரபந்தங்கள் தொண்ணூற்று ஆறு என்னும் வரையறையைக் குறிப்பிட்டுள்ளது. ஏறத்தாழத் தொண்ணூறுபிரபந்தங்களின் இலக்கணம் இந்நூலின்கண் விரித்துரைக்கப்பட்டுள்ளது.[5]

இலக்கண விளக்கப்பாட்டியல்:

பாட்டியல் நூல்களில் மிகத்தெளிவாகவும் சிறப்பாகவும் அமைந்தது இந்நூல் ஆகும். இந்நூலின் ஆசிரியர் திருவாரூர்

வைத்தியனாத தேசிகர் ஆவர். அவர் எழுதிய உரை ஒன்று இந்நூலுக்கு உள்ளது. 181 நூறபாக்களையுடையது. இதன் காலம் 17ஆம் நூற்றாண்டு ஆகும்.[6]

தொன்னூல் விளக்கம்

18ஆம் நூற்றாண்டினராகிய வீரமாமுனிவர் இயற்றிய யாப்பதிகாரத்துப்பாட்டியல் பற்றிய பகுதியிலும் சதுர்அகராதியிலும் 96 வகை பிரபந்தங்கள் விளக்கிக் கூறப்பட்டுள்ளன.[7]

பிரபந்த தீபிகை

வேம்பத்தூர் சங்க வித்துவான்களில் ஒருவராகிய பெரிய சாமா அய்யர் அவர்கள் புதல்வர் பாப்பு அய்யர் என்ற முத்து வேங்கடசுப்பு அய்யர் என்பார் ஆசிரியவிருத்தப்பாவில் இயற்றிய நூல் இது. இருபத்தாறு விருத்தங்கள்கொண்டது[8].

முத்துவீரியப்பாட்டியல்

சென்ற நூற்றாண்டில் இயற்றப்பட்ட முத்துவீரியம் என்ற ஐந்திலக்கண நூலில் யாப்பதிகாரத்தின் ஒழிபியல் பகுதியில் தொன்னூல் விளக்கத்தில் உரைநடையாக வரையப்பட்ட பிரபந்த இலக்கணங்கள் யாவும் நூற்பா வடிவில் அமைக்கப்பட்டுள்ளன..

சம்பந்தப்பாட்டியல்

வெண்பாப்பாட்டியல் எழுந்த காலத்தில் சம்பந்தப் பாட்டியலும் தோற்றம் கொண்டது. இந்நூலை இயற்றிய ஆசிரியர் சம்பந்த முனிவர் என்று பாட்டியல் கொத்து முகவுரை குறித்துள்ளது. எனினும் இந்நூலின் ஆசிரியர் சம்பந்த முனிவருக்கு மாணவராதல் வேண்டும் என்று டாக்டர் ந. வீ. செயராமன் குறித்துள்ளார்.[9] இந்நூல் பத்துச் செய்யுட்களைக் கொண்டுள்ளது.

2. சிதம்பரப்பாட்டியல் ஆசிரியர் வரலாறு

சிதம்பரப் பாட்டியலை யாக்கிய ஆசிரியர் பரஞ்சோதி ஆவர். தமிழில் சமய இலக்கிய மரபில் பரஞ்சோதி என்ற

பெயர் பல முறை பயிலுகின்ற பெயர் ஆகும். 63 நாயன்மார்களுள் ஒருவராகிய சிறுத்தொண்டர் பரஞ்சோதி என்ற இயற்பெயர் உடையவர். இவர்காலம் ஏழாம் நூற்றாண்டு. மெய்கண்டாருக்கு ஞானஉபதேசம் செய்த யோகியார் பரஞ்சோதி என்ற பெயர் உடையவர். இவர்காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டு. திருவிளையாடற்புராணத்தைப் பாடியவர் பரஞ்சோதி முனிவர். இவர்காலம் 18ஆம் நூற்றாண்டின் தொடக்கம். இவர்களின் வேறாகப் பாட்டியல்இலக்கணம் செய்த புலவர் இப்பரஞ்சோதி ஆவர். சிதம்பர புராணம் பாடிய புராணத்திருமலை நாதர் என்பாரின் மகன் இவர். தம் தந்தையாருக்கு ஞானகுருவாய் விளங்கிய ஞானப்பிரகாசருடைய மாணாக்கராய் அப்பதவிக்கு வந்த தத்துவ ஞானப்பிரகாசா என்பாரிடம் மாணாக்கராய் இவர் விளங்கிவந்தார். அவருடைய கட்டளையின் படியே இவர் சிதம்பரப்பாட்டியலைச் செய்தார். இதனை,

"மெய்கண்டான் கச்சிப் புகழ்புனை தத்துவப்ரகாசமாய் வந்து பாமன்ன உரை என்ன அவனருளால் அவன் தன் பதம் பரவிச்சிதம்பரப் பாட்டிய லெனப் பேர் வகுத்தான்" என்னும் சிதம்பரப் பாட்டியல் பாயிரத்தால் அறிந்து கொள்ளலாம். இக்குறிப்புக்கள் அன்றி இவரைக்குறித்த பிற வரலாறுகள் விளங்கவில்லை. இவர் செய்த வேறு நூல்கள் தெரியவில்லை[10].

3 நூல் அமைப்பு:

சிதம்பரத்தில் இவர் வசித்து வந்தவராதலின் இவர் எழுதிய நூல் சிதம்பரப்பாட்டியல் என்னும் பெயர் பெற்று உள்ளது இந்நூலாசிரியர், சிதம்பரத்தில் நடனமாடும் நடராஜப் பெருமானைச் சிந்தையில் வைத்துப் பொதியமலை குறு முனிவன் கூறிய பாட்டியலைச் சுருக்கமாகக் கூறுகின்றேன் என்று உறுப்பியல் முதல் பாடலில் கூறுகின்றார்.

"பூமேவு திசைமுகனும் செங்கணெடு மாலும்
புத்தேளிர் கணங்களுமா தவத்தோரும் போற்றத்
தேமேவு குழலுமையாள் கண்டுவப்ப மன்றில்
திருநடம்செய் பேரொளியைச் சிந்தைதனில் வைத்துக்
காமேவு கனியென்னக் கொழுஞ் செழுந்தே னென்னக்
கடலமுத மென்னமிளிர் கனித்துவர் வாய்மாதே
பாமேவு தமிழ்ப்பொதியக் குறுமுனிவன் கூறும்
பாட்டியலைச் சுருக்கமதாய்ப் பகர்ந்திடுவன் யானே"

என்பது அப்பாடலாகும்.

நூலின் பாயிரப்பகுதியில் நான்கு வெண்பாக்களும் ஒரு வெண்சீர் விருத்தமும் பிறபகுதிகளில் 47 எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தமும் கொண்டது. நூல் முழுமையும் அந்தாதித்தொடை அமைந்தது. உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல், பொருத்தவியல், மரபியல் என்னும் ஐந்து இயல்களைக் கொண்டது. முதல் மூன்று இயல்களும் தனிநிலைச் செய்யுள் இலக்கணத்தையும் பின்னிரண்டு இயல்களும் தொடர்நிலைச் செய்யுள் இலக்கணத்தையும் கூறுகின்றன.

இந்நூலின் முதல் மூன்று இயல்களுக்குச்சிறந்த உரை ஒன்றுள்ளது. பின்னிரு இயல்களுக்கும் உரை இல்லை. நூலாசிரியரே இவ்வுரையைச் செய்தார் எனக் கருத இடம் உண்டு. உரையில் தொல்காப்பியம், நன்னூல் என்னும் நூல்களைக்குறிப்பிடுதலோடு இறந்து போன நூல்களின் ஆசிரியர்களான அகத்தியனார், அவிநயனார், மாபுராணமுடையார் நற்றத்தனார் போன்றோரையும் இவர் குறிப்பிடுகிறார். அவர்கள் செய்த நூல்கள் 12ஆம் நூற்றாண்டிற்கு முன்னதாகவே மறைந்து போயின. பரஞ்சோதியாருக்குப் பின்னர் 16ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் நூலைத்தெரிந்து குறிப்பிடுபவர் எவரும் இலர். ஆதலால் இவர்களைக்குறிப்பிடும் இவ்வுரையைப் பரஞ்சோதியாரே செய்திருக்க வேண்டும் என்று துணியலாம்.[11]

4. நுவலும் பொருள்

உறுப்பியல்

இந்நூல் ஐந்து இயல்களாகப்பிரிக்கப்பட்டுள்ளது என்பது முன்னரே சிந்திக்கப்பெற்றது. உறுப்பியலில்குறில், நெடில், மெய், உயிர்மெய், உயிர், ஆய்தம், குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், வல்லினம், மெல்லினம், இடையினம், உயிரளபெடை, ஒற்றளபெடை என்னும் பதினைந்தும் அசைக்கு உறுப்பாக விளங்கும் எழுத்துக்கள் என்பதையும் மற்றும் அசை, சீர், அடி, தொடை என்பனவற்றையும் யாப்பருங்கலக்காரிகையை அடியொற்றி ஆசிரியர் விளக்கியுள்ளார்.

செய்யுளியலில் வெண்பா, அகவல், கலி, வஞ்சி என்னும் வரிசையில் நால்வகைப்பாக்களின் இலக்கணங்களும் அவற்றின் வகைகளும் இனங்களும் காரிகையில் கண்டாங்கு உரைக்கப் பட்டுள்ளன. கலிவெண்பா என்னும் பாவகை, கலிப்பா வகையின் ஒன்றாகச்சுட்டப்படுதற்கு மாறாகஇந்நூலாசிரியர் வெண் பாவின் வகையுள் ஒன்றாகச்சுட்டியுள்ளார்.

ஒழிபியல்

ஒழிபியலில் தளையும் சீரும் கெட வந்தவிடத்துக் குற்றியலிகரமும், குற்றியலுகரமும் ஒன்றாகக் கொள்ளப்படும் என்பது முதலான யாப்பியல் ஒழிபுச்செய்திகள் உரைக்கப் பட்டுள்ளன.

பொருத்தவியல்

மா, மணி, தேர், புகழ், அமுதம், எழுத்து, கங்கை, மதி, பருதி, களிறு, பரி, உலகம், சீர், நாள், பூ, மலை, கார், திரு, கடல், நீர், பழனம், பார், சொல், பொன், திகிரி இவை

போன்ற சொற்கள் மங்கல மொழிகளாகும். இவை முதன் மொழியாக அமைந்து சீரில் இடம் பெறத்தக்கவை. வகையுளி சேர்தல், பொருளதின்மை, நலமிலதாய் வைத்தல், பல பொருளால் தோன்றல், சொல் ஈறு திரிதல் போன்றனவாய் முதன் மொழி அமைதல் ஆனந்தம் (குற்றம்) ஆகும். அங்ஙனமே செய்யுளில் அமைய வேண்டிய பிறவகைப் பொருத்தங்களும் இவ்வியற்கண் விளக்கப்பட்டுள்ளன.

மரபியல்

பிள்ளைக்கவி, கலம்பகம், பன்மணிமாலை, அந்தாதி, அகப்பொருட்கோவை, இரட்டைமணிமாலை, இணைமணி மாலை, மும்மணிக்கோவை, ஒலியந்தாதி, இருபா இருபது, பயோதரப்பத்து, நயனப்பத்து, தசாங்கப்பத்து, சின்னப்பூ விருத்தம், ஊசல், வருக்கமாலை, மும்மணிமாலை, அலங்கார பஞ்சகம், அட்டமங்கலம், நவமணிமாலை, ஒருபா ஒருபஃது, பல்சந்தமாலை, ஆற்றுப்படை, பாதாதிகேசம், கேசாதிபாதம், அங்கமாலை, மங்கலவெள்ளை, மெய்க்கீர்த்தி, புகழ்ச்சிமாலை, நாமமாலை, கைக்கிளை, குழமகன், உலா, வளமடல், உலாமடல், நான்மணிமாலை, தூது, பேராண்மாலை, வாகைமாலை, அனுராகமாலை, தானைமாலை, தாரகைமாலை, தசப்பிராதுற்பவம், நாழிகை வெண்பா, செருக்களவஞ்சி, வரலாற்று வஞ்சி, பரணிப்பாட்டு, பெருங்காப்பியம், காப்பியம், புராணம் ஆகிய வகைகளின் இலக்கணங்கள் மரபியலில் விளக்கப்படுகின்றன.

தனிநிலை

பாட்டியல் நூல்களில் ஆசிரியர்தாம் வாழ்ந்த ஊரையும் இணைத்து நூற்பெயர் அமைத்த சிறப்பு இந்நூலுக்கு உண்டு. இந்நூலில் யாப்பியல் செய்திகளாகிய உறுப்பு, செய்யுள், ஒழிபு என்பன முதற்கண் விளக்கப்படுகின்றன. யாப்பியலைத் தாய் எனில் பாட்டியலைச் சேய் எனலாம் என்பார் டாக்டர் ந. வீ. செயராமன்.[12] அவ்வகையில் தாய் பற்றிய கருத்துக்களை (யாப்பியல் கருத்துக்களை) முதற்கண் விளக்கிப் பின்னர் சேய் பற்றிய கருத்துக்களை (பாட்டியல் கருத்துக்களாகிய

பொருத்தவியல், மரபியல் கருத்துக்களை) இந்நூல் விளக்கு கின்றது. இவ்வமைப்பு, பிற நூல்களிடத்து இல்லை.

முடிவுரை

தமிழ் இலக்கணம் முப்பகுப்பாக முதற்கண் இருந்தது. அவற்றுள் ஒன்றாய இயல், ஐம்பிரிவாகப் பிரிந்து வளர்ந்தது. அவ்ஐந்து பிரிவுகளுள் ஒன்றாகிய யாப்பு காலப்போக்கில் பாட்டியல் என்னும் கிளையைத் தோற்றுவித்தது. அப் பாட்டி யல் நூல்கள் பலவாக வளர்ந்து உள்ளன. அவற்றுள் ஒன்றாகிய சிதம்பரப்பாட்டியல் யாப்பியல் கருத்துக்களையும், பாட்டியல் செய்திகளையும் தன்னகத்துள் கொண்டு விளங்கி நிற்கிறது.

சான்றெண் விளக்கம்

1. அருணசலம். மு. - தமிழ்இலக்கியவரலாறு - 10 ஆம் நூற்றாண்டு பக். – 209 - 235
2. செயராமன். ந. வி.- பாட்டியல் திறனாய்வு - மணிவாசகர் நூலகம் - 1977 - பக் - 57
3. இலக்கண விளக்கம் - பொருளதிகாரம் - பாட்டியல் – சரசுவதி மகால் வெளியீடு - 1947 – பக் - 2
4. , , , ,
5. , , , .
6. செயராமன். ந வீ. பாட்டியல் திறனாய்வு மணிவாசகர் நூலகம் - 1977 - பக் - 92.
7. இலக்கண விளக்கம் - பொருளதிகாரம் - பாட்டியல் - சரசுவதி மகால் வெளியீடு - 1974 – பக். - 3.
8. ,, ,,

9. செயராமன், ந. வீ. பாட்டியல்திறனாய்வு - மணிவாசகர் நூலகம் - 1977 - பக் 79.

10. அருணுசலம். மு. தமிழ் இலக்கிய வரலாறு, பதினாறாம் நூற்றாண்டு பாகம் 2 - பக் - 139.

11. அருணாசலம். மு. – தமிழ் இலக்கிய வரலாறு - பதினாறாம் நூற்றாண்டு - ப்ாகம் — 2 பக் - 142.

12. செயராமன், ந.வி. பாட்டியல் திறனாய்வு, மணிவாசகர் நூலகம் – 1977 - பக் - 9.

6. தொன்னூல் விளக்கம் - சில சிந்தனைகள்

டாக்டர். சூ. இன்னாசி

ஐந்திலக்கணம் கூறும் தமிழ் இலக்கண நூல் தொன்னூல் விளக்கம். அயல் நாட்டாராகிய பெசுகி என்னும் பெயரிய வீரமாமுனிவரால் செந்தமிழில் எழுதப்பட்ட சிறப்பிற்குரியது. வீரமாமுனிவரின் நான்கு இலக்கண நூல்களுள் முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துப் பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி யாக்கப்பட்டது. தொன்னூல் விளக்க நூற்பொருள், நுவலுந்திறன் முதலிய கூறுகள் பற்றி முன்னரே சில கட்டுரைகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் 'தொன்னூல் விளக்கம் ஓர் நுண் மதிப்பீடு'[1], 'தொன்னூல் விளக்கத் திறனாய்வு'[2] என்பவை குறிப்பிடத்தக்கன. தொன்னூல் விளக்கத்தின் உரைத்திறம் பற்றியும் 'வீரமாமுனிவர் ஓர் உரையாசிரியர்'[3] என்னும் கட்டுரை வெளிவந்துள்ளது. எனவே கூறியது கூறலைத் தவிர்ப்பான் வேண்டி, தொன்னூல் விளக்கம் பற்றிய சில செய்திகள், சிந்தனைகளைத் தூண்டுதலே இக்கட்டுரையின் நோக்கமாகக் கொள்ளப்பட்டது.

வீரமாமுனிவர் செந்தமிழ், கொடுந்தமிழ் ஆகியவற்றுக்குத் தனித்தனியே இலக்கண நூல்கள் எழுதினார். இறுதியாக இலக்கணத் திறவுகோல் என்னும் பொருள்படத் தொன்னூல் விளக்கத்தைச் சுருக்கி எழுதினார். இவை மூன்றும், மேனாட்டாரை மனத்திருத்தி அவர்கட்குத் தமிழ் இலக்கணத்தைத் தெரிவிக்க இலத்தீனில் எழுதப்பட்டவை. தொன்னூல் விளக்கமோ தமிழறிந்தோர் தமிழிலக்கணப் பரப்பைச் சுருக்கியுணர எழுதப்பட்டது. நூலுக்கான உரை விளக்கமும் ஆசிரியராலேயே தரப்பட்டுள்ளது.

இலக்கண உரைகளை ஆராய முற்பட்டோர் தொன்னூல் விளக்க உரைத்திறத்தை நிலைநாட்ட முற்படாதது வியப்பிற் குரியது.[4] அதற்குரிய காரணங்களாக இரண்டனைக் கூறலாம். நூல் கிடைப்பது அரிதாக உள்ளது முதற் காரணமாகலாம். இந்நூற்றாண்டில் உரையுடன் கூடிய தொன்னூல் விளக்கப் பதிப்பு எதுவும் இதுகாறும் வெளிவந்திலது. நூற்பாக்களுக் கான உரை விளக்கங்கள் வீரமாமுனிவரால் எழுதப்பட்டவை தாமா என்னும் ஐயப்பாடு இரண்டாம் காரணமாகலாம்.

இந்நூற்றாண்டில் வெளிவரவில்லையெனினும் கடந்த நூற்றாண்டில் மூன்று பதிப்புக்கள் வெளிவந்துள்ளன. முதற் பதிப்பு கி. பி. 1838-இல் புதுவையில் அச்சிடப்பட்டுள்ளது. இதன் பதிப்பாசிரியர் வேதகிரி முதலியார். நெல்லித்தோப்பு மரியே சவேரியாப்பிள்ளை பொருளுதவி செய்ய அதிசெய நாதப் பிள்ளையால் நிறைவேற்றப்பட்டது சுப்பராயவையர், சின்னத்தம்பி முதலியார், வீராசாமி முதலியார் போன்றோர் சிறப்புப்பாயிரம் பாடிச் சிறப்பித்துள்ளனர்.

கி. பி. 1864இல் அமிர்தநாதர் நாகையில் பதிப்பித்துள்ள ஒரு பதிப்புப் பற்றிக் குறிப்புக் காணப்படுகிறதன்றிக் கட்டுரை யாளர் பார்வைக்குக் கிட்டவில்லை.[5]

மூன்றாம் பதிப்பு கி. பி. 1891-இல் ஜி. காலின்மெக்கென்ஸி யால் அச்சில் கொண்டு வரப்பட்டுள்ளது. உ. ஸ்ரீநிவாச ராகவாசாரியரால் பார்வையிடப்பட்டது. யாகப்பிள்ளையால் சென்னை செயிண்ட் ஜோசப் அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு தலைப்பின் கீழும் அதற்கிணையாகக் கருதப்படு கின்ற ஆங்கிலச் சொல் தரப்படுகிறது. இவ்வாங்கிலச் சொற் கள் பதிப்பாளருடையனவன்றி வீரமாமுனிவருடையனவல்ல. ஏனெனில் முதற் பதிப்பிலோ கையெழுத்துப்படிகளிலோ ஆங்கில இணைச் சொல் எதுவும் காணப்பட்டிலது.

இம்மூன்றாம் பதிப்பைப் புகைப்பட (Photastate copy) அச்செடுத்துச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் கி. பி. 1984-இல் வெளியிட்டுள்ளனர்.

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் 1978-இல் ஒரு பதிப்பை வெளியிட்டுள்ளார். அதன்கண். அமைந்துள்ள தொன்னூல் விளக்கத் திறனாய்வுக் கட்டுரை நூல் நுவல் பொருளைக் கட்டுரைத்துக் கூறித் திறனாய்வு செய்துள்ளது. ஆயினும் அதில் வீரமாமுனிவர் எழுதிய உரை இடம்பெறாமல் பதிப்பாசிரியர் விளக்கம் மட்டும் இடம் பெறுவது மனநிறைவு தரவில்லை.

இவருக்கு முன்னர் உரையாய்வில் ஈடுபட்டோர் வீரமாமுனிவர் உரைத்திறம் குறித்துக்கூறாததற்கு உரை அவருடையதன்று என்னும் கருத்தும் காரணமாகலாம். 1978-ஆம் ஆண்டுத் தொன்னூல் விளக்கப் பதிப்பாசிரியருக்கு அத்தகைய எண்ணம் சிறிதுமில்லை. உரை வீரமாமுனிவருடையதே எனச் சான்று காட்டித் தம் கட்டுரையில் நிறுவி உரையின் சிறப்புக்களையும் கூறுகிறார். குறைந்த செலவில் அனைவரும் மூலத்தையேனும் படிக்க வேண்டும் என்னும் நல்லெண்ணமே அதற்குக் காரணமெனக் காட்டுதல் அமைதி தருகிறது.

உரை வீரமாமுனிவருடையதுதானா என்னும் ஐயம் எழுதற்கு வேதகிரி முதலியார் பதிப்பே தூண்டுதல் தந்திருத்தல் வேண்டும். அப்பதிப்பின் தலைப்புப் பக்கத்தில், "வேதகிரி முதலியாரால் பழுதறவாராய்ந்து, நன்னூல் - நேமிநாதம் - இலக்கண விளக்கம் - அகப்பொருள் - புறப்பொருள் -யாப்பருங்கலம் - காரிகை - தண்டியலங்காரம் - தொல்காப்பியம் - பாட்டியல் - செய்யுளியல் - வீரசோழியம் - இவை முதலிய இலக்கணச் சூத்திரங்களே மேற்கோளாகவும், குறள் - நாலடி - சங்கச் செய்யுள் - ஔவை வாக்கியம் இவை முதலிய இலக்கியச் செய்யுளே உதாரணமாகவுஞ் சேர்த்து - அச்சிற் பதிப்பிக்கப் பட்டது" என்னும் குறிப்புக் காணப்படுகிறது. இக்குறிப்பினைக் கொண்டு இலக்கண இலக்கிய மேற்கொள்களை வேதகிரி முதலியார் சேர்த்துள்ளார் எனத் தெரிகிறது. அதுகொண்டே உரையினையும் அவரே வரைந்திருப்பாரோ என்னும் எண்ணம் தோன்றக்கூடும். இக்குறிப்பில் காணப்படும் தொடர்களான 'இலக்கணச் சூத்திரங்களே', 'இலக்கியச் செய்யுளே' என்பனவற்றில் அமைந்துள்ள ஏகாரங்கள் இவை தவிரப் பிறவெல்

லாம் வேதகிரி முதலியாருடையவை அல்ல என்பதனைப் புலப் படுத்தும். தொன்னூல் விளக்க உரையில் மேற்குறித்த இலக் கண இலக்கியங்களன்றியும் அகத்தியம், அமுத சாகரம், இலக் கணத் திரட்டு, பேரகத்தியம், பொருத்தவியல், மயேச்சுரர் யாப்பு போன்ற இலக்கணங்களின் நூற்பாக்கள் காட்டப் படுகின்றன. காக்கைபாடினியார், கையனார், நத்தத்தனார் பல்காயனார் போன்றோர் கருத்துக்கள் சுட்டப்படுகின்றன. திவாகரம், ஆசிரிய நிகண்டு போன்ற நிகண்டுகள் ஆளப்படு கின்றன. இருமொழி மாலை, கம்பராமாயணம், காசி காண்டம், சிந்தாமணி, சிலப்பதிகாரம், திரிகடுகம், நைடதம், பாரதம் போன்ற நூல்கள் சுட்டப்படுகின்றன. உபதேச காண்டம், நியாய சூடாமணி, புதிய நுட்பம் போன்ற நூல்கள் இடம் பெறுகின்றன. இவை வேதகிரி முதலியாரால் காட்டப் பட்டவை அல்ல என்பதனைக் குறிப்பில் உள்ள ஏகாரங்கள் தெளிவாக்கும். இவை வீரமாமுனிவரால் தம் உரையில் காட் டப்பட்டவையே. சுப்பராயவையரது சிறப்புப் பாயிரத்தில் வரும் ''தன்னா லியற்றிய தக்கதொன்னூற்குரை முன்னா ளியைய மொழிந்தனர்" என்னும் குறிப்பும் வீரமாமுனிவரே உரை எழுதினார் என்பதனை உறுதிப்படுத்தும். பின்னால் படியெடுத்தவர்களால் ஏற்பட்ட பிழைகளை நீக்கியும், முன்னர் வீரமாமுனிவரால் காட்டப்பட்டிருக்கும் மேற்கோள்களோடு மேலும் பொருந்துவனவற்றைச் சேர்த்தும் வேதகிரி முதலியார் அச்சில் பதிப்பித்ததாகக் கொள்ள வேண்டும். சிற்சில நூற்பாக் கட்கான உரைகளின் இறுதியில் மேற்கோள் என முடியும் பகுதிகள் மட்டும் வேதகிரி முதலியாரால் சேர்க்கப்பட்டன வாகத் தோன்றுகின்றன.[6]

தொன்னூல் விளக்கத்தின் சிறப்பினைப் புலவர் பெரு மக்கள் நன்கு உணர்ந்து போற்றியுள்ளனர். திருக்குறளின் சிறப்புணர்ந்து புலவர்கள் பாடியுள்ள திருவள்ளுவமாலை போல வீரமாமுனிவர் பெருமையினையும் திறனையும் உணர்ந்து புலவர்கள் பாடியுள்ள பாக்கள் தொன்னூல் விளக்கப்புகழ்ச்சி மாலை, சதுரகராதி வெற்றி மாலை என இரு மாலைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவை வேதகிரி முதலியார் பதிப்பின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

தொன்னூல் விளக்கப் புகழ்ச்சி மாலை முப்பத்தெட்டு வெண்பாக்களையுடையது முதல்வெண்பா இப்பாமாலையைப் பாடியோர் சீரியர் பலர் எனச் செப்புகிறது. இறைவன் திருவடிகளைத் தலைமேற்சூடி அவற்றை ஓர் மாலையாய்த் தொகுத்ததாகக் குறிப்பிடுகிறது. மேல் தலைப்பாக, 'வீரமாமுனிவர் மீதிலும் முன்னூற்றுளக்கிய தொன்னூல் விளக்க மீதிலும் புகழ்ச்சி மாலை' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப அடுத்து வரும் முப்பத்தேழு பாக்களும் அவரையும் அவர்தம் படைப்புக்களையும் புகழ்ந்தேத்துகின்றன.

தலைப்பில் குறிப்பிட்டிருப்பதுபோன்று வீரமாமுனிவர் சிறப்புக்களை அவரது தொன்னூல் விளக்கத்தின் வழியாக மட்டும் விளக்குவதாகத் தோன்றவில்லை. சதுரகராதி, தேம்பாவணி வழியாகவும் போற்றுவதாகக் காணப்படுகிறது. தொன்னூல் விளக்கம், சதுரகராதி, தேம்பாவணி ஆகிய மூன்றனையும் குறித்து முந்நூல் எனச் சில பாக்களில் சுட்டுவதும், மூன்று என்னும் சிறப்புக்குரிய பொருட்கள் பலவும் அவற்றுள் பொதிந்திருப்பதாகக் காட்டுவதும்[8] அவர்தம் படைப்புக்களுள் இவை மூன்றனையும் மிகவும் சிறந்தனவாகப் போற்றிக் கருதினர் என உணர்த்தும். எனினும் மாலையுள் அமைந்துள்ள பாக்களுள் பெரும்பாலன தொன்னூல் விளக்கப் புகழ் சாற்றுவனவே.

தமிழ்ப் புலவோருட் சிறந்தோர் திருவள்ளுவர், வீரமாமுனிவர் தவிர வேறு யாருளர்? என வினவுவதும்,[9] முப்பாலுக்கு இணையாக இவர்தம் முந்நூல்களையும் ஒப்பிடுவதும்[10] புலவோர் வீரமாமுனிவர் மீது கொண்டிருந்த மதிப்பினைப் புலப்படுத்தும்.

தொன்னூல் விளக்கத்திற்குத் 'தெருட்குரு' என்னும் சிறப்புப் பெயரொன்று உண்டு என்று தொன்னூல் விளக்கச் சிறப்புப் பாயிரப் பாடல் ஒன்று சுட்டும். அப்பெயருக்கான காரணம் ஒரு பாவில் சுட்டப்படுகிறது.[11] 'தொன்னூல் விளக்கச் சுடர்' எனவும் சில பாடல்களில் பாராட்டப்படுகிறது.[12] தவமகனாக ஒரு பா உருவகிக்கத்தாரமாக இன்னொரு

பா உருவகிக்கிறது.[13] 'அறிவூற்று' என ஒரு செய்யுள் காட்டத் 'திறவுகோல்' என ஒரு செய்யுள் உருக்கொடுக்கிறது.[14] இவ்வாறே இலக்கணக் கப்பலாகவும் இலக்கணச்சருக்கரை ஆலையாகவும் உருவகிக்கும் பாக்கள் உள.[15] இறுதியில் உள்ள மூன்று பாக்கள் நெய்யாக உருவகித்து அதன் பயனை விளக்கு வதும், கனியாக உருவகித்து அதன் சுவையைக் காட்டுவதும் ஆரமாக உருவகித்து அதன் அழகைச்சுட்டுவதுமாக உள்ளன.[16]

இரு பாடல்கள்[17] தொன்னூல் விளக்கத்தில் அமைந்துள்ள நூற்பாக்களின் எண்ணிக்கை வரையறையைத் தெரிவிக்கின்றன பல் சமயம் சார்ந்த புலவோர் பாடியிருப்பதாகத் தெரிகிறது. அவருள் கிறித்தவப் புலவோரும் உண்டு என்பதனை 'ஆதிநூல்' 'சத்திய வேதப் பொருள்' போன்ற தொடர்களாலும்' அவை தரும் கருத்துக்களாலும் உணர முடிகிறது.[18]

சுருங்கக் கூறின் பல்புலவோர், பல்வகை நோக்கில், பயன் கண்டு, பிறநாட்டுத் தமிழ்ப் புலவர் என்னும் பெருமதிப்புக் கொண்டு நயம்பட உருவகித்து, பலபடப் புகழ்ந்து பாடிய பாக்களின் தொகுப்பே புகழ்ச்சிமாலை என்பது தெளிவு.

வீரமாமுனிவரின் பிறஇலக்கண நூல்களுக்கும் தொன்னூல் விளக்கத்திற்கும் அடிப்படைப் போக்கில் சில வேறுபாடுகளைக் காண முடிகிறது. தொன்னூல் விளக்கம் தமிழ் மரபினை யொட்டி எழுந்தது. பழைய இலக்கணக்கோட்பாடுகளைச் சுருக்கிக் கூறும். அதேபோழ்தில் பழையன கழிதலும் புதியன புகுதலும் ஆங்காங்கே காணப்படும். பிற இலக்கணங்கள் அவர் காலத்து மொழி பயில் வழக்குகளை மனத்திருத்திப் பழைய மரபினின்று மாறுவனவற்றைச் சுட்டிக்காட்டிக் கூறும். அம் மாறுபாடுகள் தொன்னூல் விளக்கத்தில் சுட்டிக்காட்டப் பட்டில. சான்றுக்காக ஒவ்வோர் இலக்கண நூலினின்றும் ஒவ்வொரு குறிப்பினை எடுத்துக் காட்டலாம்

தம் தொன்னூல் விளக்கத்தில் முன்னைய இலக்கண நெறிகட்கு எற்ப ''நீட்டல் சுழித்தல் குறில்மெய்க் கிருபுள்ளி'' என இலக்கணம் வகுத்து, அதற்கேற்ப உரையும் எழுதினார்.

ஆனால் தம் கொடுந்தமிழ் இலக்கணத்தில் தான் புதுவதாகக் கண்டு தந்த எழுத்துச் சீர்திருத்தம் பற்றி, ''எகரவொகரக் குறில் நெடில்களை வேறுபடுத்திக் காட்டப் புதிய முறையைக் கண்டுபிடித்திருக்கிறேன் என்பதைத் தாழ்மையுடன் கூறிக் கொள்கிறேன்'' எனக் கூறித் தற்காலத்தில் வழங்கும் குறில் வடிவ, நெடில்வடிவக் கொம்புக் குறியீடுகளைச் சுட்டுகிறார். மேலும் ''பலர் அதனை ஏற்றுக் கொண்டு பின்பற்றுகிறார்கள்''[19] எனவும் கூறுகிறார். அவர் செய்த இக்குறில் நெடில் சீர்திருத்த வடிவங்களையே தம் சதுரகராதியில் பயன்படுத்தியுள்ளதாக அதன் முன்னுரையிலும் குறிப்பிடுகிறார்.

குற்றியலிகரம் பற்றிய கொள்கையில் வீரமாமுனிவர் முன்னோர் நெறிகளை யொட்டியே,

''யம்முத லிய்யா மிருகுற ளுக்கெடி
லஃகு மற்றா மசைச்சொன் மியாவே''[20]

எனத் தொன்னூல் விளக்கத்தில் நூற்பா யாத்து, ''குற்றியலிகரமாமாறுணர்த்துதும். நிலைமொழிக் குற்றியலுகரத்தில் முன்னே வருமொழி முதற்கண்யகரம் புணர்ந்து கெடுமிகரமும் முன்னிலையசைச் சொல்லாகிய மியா வெனுமொழியில் வந்த இகரமும் குற்றியலிகரமாகும்'' என உரையும் தந்தார். தம் கொடுந்தமிழ் இலக்கணத்தில் குற்றியலிகரம் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. செந்தமிழ் இலக்கணத்திலும்திறவுகோலிலும் முன்னைக் குற்றியலிகரக் கொள்கையினின்று சற்று மாறுபடுகிறார்.

அசைச்சொல் 'மியா'வில் மகர மீதூர்ந்த குற்றியலிகரம் பற்றி வேறுபாடு கொண்டிலர். தனி மொழிக் குற்றியலிகரம் அவ்வசைச் சொல்லில் மட்டுமின்றி யகர முதன் மொழிகளாகிய தனி மொழிகளிடத்தும் தோன்றுமெனக் கருதுகிறார். தம் செந்தமிழ் இலக்கணத்தில், ''யானை, யாமம் போன்ற யகர முதல் மொழிச் சொற்கள் முற்சேர்க்கையாக இகரத்தைப் பெறுவது நயமுடையனவாகக் கருதப்பட்டு இயானை இயாவம் என எழுதப்படுகின்றன''[21] எனக் குறிப்பிட்டு இவ்விகரம் குற்றியலிகரம் எனக் கூறுகிறார். மேலும்

செய்யுளில் ஓசை நிறைக்கத் தேவையாயின், அதனை மெய் யாகக் கணக்கிடலாமெனவும், அசையாகக் கணக்கிடலாகா தெனவும் காட்டி, 'குழலினிதி யாழினிதென்பர், என்னுங் குறட்பாத் தொடரில் 'யாழ்' என்னுஞ் சொல்லே 'இயாழ்' என ஆளப்பட்டுள்ளதாகக் காட்டுகிறார். இவ் விடத்துப் புணர்மொழியாகக் கொள்ள வேண்டுமெனினும் குற்றியலுகர வீற்றுகரம் திரிந்து இகரமாகிறது என நன்னூல் போலக் கொள்ளாமல், தொல்காப்பியம் கூறுதல் போல நிலை மொழிக் குற்றியலுகரவீறு கெட இகரம் தோன்றியதெனவே கொண்டதாகத் தெரிகிறது.

இயானை, இயாமம் போன்ற தனிமொழி யகர முதன் மொழிச் சொற்களில் யகரமிசை தோன்றிய இகரம், மொழி முதற் குற்றியலிகரம் என வீரமாமுனிவர் சுட்டாவிடினும் அவர் கருத்து அஃதே என்பதற்கு அவரது திறவுகோலிலும் இதனைச் சுட்டியிருப்பது தெளிவாக்குகிறது.

அதில் ''யகர முதலாகத் தொடங்கும் சொற்கள் தொடக் கத்தில் இகரத்தைப் பெறுவனவாகக் கருதப்படுகின்றன. எடுத்துக்காட்டாக யாழ், யதி, யமன், யூகம் ஆகிய சொற்கள் முறையே இயாழ், இயதி, இயமன், இயூகம் என ஆகின்றன, ஆனால் குற்றியலுகர ஈறுகளை அடுத்து வரும்பொழுது இவ்விகரம் 'உகரத்தை ஒலிக்காது செய்து விடுகிறது''[22] எனக் கூறுகிறார்.

தொன்னூல் விளக்கம் ஈரெச்சம் என்னும் தலைப்பில் பெயரெசசம் வினையெச்சங்களை விளக்கி வாய்பாடுகள் தரு கிறது. பெயரெச்ச வாய்பாடுகளாகச் செய்த, செய்கின்ற, செய்யும் என்பனவற்றைச் சுட்டி எடுத்துக்காட்டுகளாகப் பட்ட பகை, படுகின்ற பகை, படும் பகை ஆகியவை தரப்படுகின்றன. மேலும் உம்மீறு திரிதலும், உந்தாதலும் உண்டெனக் கூறிச் செய்யும் தொழில் > செய்யு தொழில்; செய்யும் ∧ செய்யுந்து என எடுத்துக்காட்டுகள் தருகிறார். 'இலக்கணத் திறவு கோலிலோ தொன்னூல் விளக்கத்துள் குறிப்பிடாத வேறொரு வடிவத்தையும் காட்டுகிறார். வந்த, கேட்ட, பெற்ற ஆகிய வடி

வங்களோடு வந்தன, கேட்டன, பெற்றன ஆகியவற்றையும் சுட்டி, 'இறந்தகாலப்பெயரெச்சத்தில் மட்டும் னகரச் சாரியை பெற்றும் வரும். முன்னரே னகரச்சாரியை இருப்பின் அவ்வாறு வாராது' என விளக்கம் தருகிறார்.[23] இலக்கியங்களில் செய்யுள் நோக்கில் அரிதாகப் பயன் படுவதறிந்து அவற்றை வெளிப் படுத்தியுள்ளார். இவற்றினின்று தொன்னூல் விளக்கத்தில் மரபிலக்கணங்களைப் பெரும்பாலும் போற்றுவதும் மரபிலக் கணச் செய்திகளில் புதுவதாகத் தமக்குத் தோன்றுவதை மேனாட்டாருக்காக எழுதிய இலக்கணங்களில் கூற முற்படு வதும் வீரமாமுனிவரது இயல்பாகத் தோன்றுகிறது.

தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும் தன்னைக் குறித்துக் கூறாத தன்மை தொன்னூல் விளக்கத்தில் காணப் படுகிறது. எங்கும் தம்மாற்றலைப் புகழ்ந்து கூற முற்பட்டிலர். தன்னடக்கம், தமிழ் மரபு எனப் போற்றியமை காரணமாக லாம். மேனாட்டாருக்கு எழுதிய பிற இலக்கணங்களில் தம் ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார். கொடுந்தமிழ் இலக்கணத் தில் எழுத்துச் சீர்திருத்தம் தம்மால் ஏற்படுத்தப்பட்டதை உணர்த்துகிறார். செந்தமிழ் இலக்கணத்தில் தம் யாப்புத் திறம் குறித்து, "12,016 பாடல்களுடைய இராமாயணத்தில் கம்பன் 87 வண்ணங்களை அறிமுகப்படுத்தியிருக்க 3615 பாடல் களைக் கொண்ட தேம்பாவணியில் எளிதாக 90 வண்ணங் களைக் காட்டியிருக்கிறேன். வேண்டுமாயின் ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு வண்ணங் காட்ட இயலும்"[24] எனக் கூறுகிறார்.

குறிப்பெண் விளக்கம்

1. அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறைக் கருத்தரங்கு, – 1974
2. சுப்பிரமணியன், ச. வே., தொன்னூல் விளக்கம் – 1978.
3. இன்னாசி, சூ., இலக்கணச் சிந்தனைகள் - 1984-பக். 21.
4. ,, ,, பக். 22

5. சுப்பிரமணியன், ச.வே., பக். 25
6. தொன்னூல் விளக்கம், நூற்பா 14, 20 போன்றன.
7. தொன்னூல் விளக்கப் புகழ்ச்சிமாலை, வெண்பா 3, 4, 6.
8. ,, ,, 8.
9. ,, ,, 10.
10. ,, ,, 6.
11. ,, ,, 15.
12. ,, ,, 14, 16.
13. ,, ,, 20.
14. ,, ,, 21.
15. ,, ,, 26, 27.
16. ,, ,, 35, 36, 37.
17. ,, ,, 28, 29.
18. ,, ,, 1, 19.
19. கொடுந்தமிழ் இலக்கணம், விதி, 3.
20. தொன்னூல் விளக்கம், நூற்பா, 14.
21. செந்தமிழ் இலக்கணம், விதி 2, V.
22. திறவுகோல், விதி, 8.
23. ,, ,, 52.
24. செந்தமிழ் இலக்கணம், பக். 124.

7. மாறனகப்பொருள்

டாக்டர் வெ. பழநியப்பன்

தமிழ் மொழியில் காலந்தோறும் பல்வேறு வகையான இலக்கியங்கள் பெருகி வளர்ந்து வந்துள்ளன. இவற்றின் போக்கினையொட்டி மொழியினை ஒழுங்குபடுத்தக் கருதிய பேரறிவாளர்கள் தமிழ்மொழி மரபிற்கேற்பச் சில விதிகளை வகுத்தனர். இதனைக் கருதியே 'இலக்கியத்தினின்றும் எடுபடும் இலக்கணம்' என்பர் ஆன்றோர்.

இலக்கியப் பெருக்கத்திற்கேற்பத் தமிழில் காலந்தோறும் கிளைத்த இலக்கண நூல்களும் பலவாகும். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழுக்கும் இலக்கணங்கண்டமொழி, தமிழ் மொழி. 'அகத்தியம்' முத்தமிழுக்கும் இலக்கண நூல் என்ற தொரு கருத்துண்டு. அகத்தியரைப் பற்றியும், அகத்தியத்தைப் பற்றியும் இறையனார் களவியலுரையில் குறிப்பு உண்டே யன்றி இன்று வரை இந்நூல் கிடைத்திலது.

தமிழில் 'அகத்தியம்' போல முத்தமிழுக்குமுரிய இலக்கண நூல்கள் தோன்றியதோடன்றி இயல், இசை, நாடகம் என்ற பிரிவு ஒவ்வொன்றிற்கும் தனித்தனி அமைந்த இலக்கண நூல்களும் பலவாகத் தோன்றின. எனினும் இயற்றமிழ் இலக்கணமே இன்று இலக்கணம் என்னும் பொருளுக்குத் தனியுரிமையுடையதாக விளங்குகின்றது.

தொல்காப்பியம்

தமிழ்மொழி வரலாற்றில் இன்று கிடைத்துள்ள நூல்களுள் காலத் தொன்மையும் முதன்மைச் சிறப்புமுடையது தொல் காப்பியமே. இயற்றமிழ் இலக்கண நூலாகிய இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்ற முப்பகுப்பினதாயினும் இதனை ஐந் திலக்கண நூல் என்றுரைப்பாருமுளர்.

ஐந்திலக்கண நூல்கள்

'இறையனார் அகப்பொருள்' தோன்றிய காலத்து எழுத்து, சொல், பொருள் என்ற பகுப்புச் சற்று விரிவடைந்தது. பொருளினின்றும் யாப்புத் தனியாகப் பிரிந்து யாப்பிலக்கணம் பற்றியும், அணியிலக்கணம் பற்றியும் தனித்தனி இலக்கண நூல்கள் பல தோன்றின. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணப் பகுதியுங் கொண்ட இலக்கண நூல்களும் தோன்றின. இவ்வகையில் கி. பி 11-ஆம் நூற்றாண்டில் தோன்றியது வீரசோழியம். இது வடமொழி இலக்கண அமைப்பைப் பெரிதும் தழுவியது. இதனையடுத்துக் கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் எழுந்தது 'தமிழ்நெறி விளக்கம்'. இந்நூலுள் இன்று 25 நூற்பாக்களே கிடைத்துள்ளன. இவையனைத்தும் அகப்பொருள் பற்றியனவே. இந்நூல் ஐந்திலக்கணமும் அமைந்த முழுநூலாக விளங்கியிருக்க வேண்டும் என்பது நூலினைப் பதிப்பித்த டாக்டர். உ.வே. சாமிநாதையர் கருத்து. அதன் பின்னர் எழுந்த இலக்கண நூல் பவணந்தி முனிவரின் 'நன்னூல்'. இஃது எழுத்து, சொல் என்ற ஈரிலக்கணம் உணர்த்துவதெனினும் தொல்காப்பியம் போல மூவதிகாரங்கள் கொண்டதாய் ஐந்திலக்கணமும் உணர்த்தியிருத்தல் வேண்டும் என்பர். 'அரும்பொருளைந்தையும் யாவரும் உணர' என்ற நன்னூல் சிறப்புப்பாயிரப் பகுதியும் மயிலைநாதர், சங்கரநமச்சிவாயர், சிவஞான முனிவர் முதலிய உரையாசிரியர்களின் குறிப்புக்களும் இக்கருத்துக்குச் சான்றுகளாகும். இதன் பின்னர் கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் வைத்தியநாததேசிகர் எழுதிய 'இலக்கண விளக்கம்', 18-ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் எழுதிய 'தொன்னூல் விளக்கம்', 19-ஆம் நூற்றாண்டில் முத்துவீர உபாத்தியாயர் எழுதிய 'முத்துவீரியம்', அதே நூற்றாண்டில் சாமிகவிராசர் எழுதிய 'சாமிநாதம்' முதலிய ஐந்திலக்கண நூல்கள் தோன்றின. இவர்களுக்குப் பின்னர் தண்டபாணிசாமிகள் இந்த ஐவகை இலக்கணத்தோடு 'புலமை இலக்கணம்' என்ற ஒன்றினைக் கூட்டி 'அறுவகை இலக்கணம்' என்ற பெயரில் ஒரு நூல் செய்துள்ளார்.

அகப்பொருள் இலக்கண நூல்கள்

யாப்பு, அணி இலக்கண நூல்கள் தமிழில் தனித்தனியாகத் தோன்றியது போல அகப்பொருள், புறப்பொருள் பற்றிய தனித்தனி இலக்கண நூல்களும் தமிழில் தோன்றின. தொல்காப்பியப் புறத்திணையியலுக்குப் பின் புறப்பொருள் பற்றிய தனி இலக்கண நூலாகப் பன்னிருபடலம் தோன்றியது. அதன் வழிநூலாகக் கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் 'புறப்பொருள் வெண்பாமாலை' இயற்றப்பெற்றது. அதன்பின் புறப்பொருள் கூறும் தனி இலக்கண நூல் தோன்றவில்லை. பின்னர்த் தோன்றிய நூல்களுள் 'வீரசோழியம்', இலக்கண விளக்கம்' என்பன ஓரளவு புறப்பொருள் பற்றிக் கூறுகின்றன.

அகப்பொருள் இலக்கண வரிசையில் கடைச்சங்க காலத்தில் தோன்றியதாகக் கருதப்பெறுவது 'இறையனார் அகப்பொருள்'. கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் தோன்றியது 'அகப்பொருள் விளக்கம்'. அதனையடுத்து எழுந்தது 'களவியற்காரிகை'. 16-ஆம் நூற்றாண்டில் தோன்றியது 'மாறனகப்பொருள்'. இவை அகப்பொருள் பற்றிய தனி இலக்கண நூல்களாகும். தொல்காப்பியம் வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் சாமிநாதம் என்பன ஐந்திலக்கணத்தின் பகுதியாக அகப்பொருள் இலக்கணம் கூறுவன. இவையன்றித் திருக்கோவையார், பழனிக்கோவை என்ற நூல்களில் அமைந்த நூற்பாக்களும் அகப்பொருள் இலக்கணம் கூறுவனவாகும்.

மாறனகப் பொருள்—ஆசிரியர்

'மாறனகப் பொருள்' என்னும் இலக்கண நூலின் ஆசிரியர் திருச்குருகைப் பெருமாள் கவிராயர் என்பவராவர். இவர்தம் இயற்பெயர் சடையன். இச்செய்தி 'சாற்றும் திருக்குருகைப் பெருமாள் நம் சடைக்குட்டியே'[1] என்னும் செய்யுள் பகுதியால் விளங்குகிறது. திருக்குருகைப் பெருமாள், சடகோபன் என்பன நம்மாழ்வாரின் திருப்பெயர்கள். இவற்றுள் சடகோபன் என்னும் பெயர் சடையன் எனத் திரிந்து வழங்கியது எனக்கொள்ளலாம். திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பது இவர்தம்

குலப் பெயராகும். இவர்கள் மரபினர் ஆழ்வார் திருநகரியில் குருகைப் பெருமாள் சன்னதியின் ஆஸ்தானக் கவிஞர்களாக விளங்கினார்கள். இவர்தம் தந்தையார் பெயரும் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பதால் இவரைச் சடையன் திருக் குருகைப் பெருமாள் கவிராயர் என அழைத்தனர். இவர் வேளார்; வைணவர். ஆழ்வார் திருநகரி எம் பெருமான் சன்னிதி ஜீயர் பரம்பரையில் வந்த திருப்பதி ஸ்ரீநிவாச ஜீயரை ஞானகுருவாகக் கொண்டவர். இவர்தம் தந்தையாரிடத் திலேயே கல்விகற்றுத் தாமும் ஆசிரியராக இருந்துள்ளார். இவர் பல நூல்களைத் தேடிச் சேர்த்துக் கல்விக்களஞ்சியம் ஒன்று ஏற்படுத்தினார் என்பது பெருமைக்குரியதாகும்.

சமயம்

இவர் மணவாள மாமுனிவர் முதலிய தென்கலை ஆசிரியர் களை வணங்கியிருப்பதாலும், இவர்தம் ஞான ஆசிரியர் திருப்பதி ஸ்ரீநிவாச ஜீயர் தென்கலை வகுப்பினராதலாலும் இவர் தென்கலை வைணவராவர்.

காலம்

மாறனகப்பொருள் திருப்பதி ஸ்ரீநிவாச ஜீயர் முன்பு அரங்கேற்றப் பெற்றது; அரங்கேற்றப்பெற்ற காலம் கொல் லம் 727 ஆம் ஆண்டாகும். அஃதாவது கி.பி. 1552. எனவே இந் நூலாசிரியர் காலம் கி.பி. 16 ஆம் நூற்றாண்டாகும்.

இயற்றிய பிற நூல்கள்

இவர் 'மாறனகப்பொருள்' என்ற இலக்கண நூலுடன் 'மாறனலங்காரம்', 'திருப்பதிக் கோவை', திருக்குருகாமான் மியம்' 'நம்பெருமாள் மும்மணிக்கோவை', 'மாறன் பாப்பா வினம்', 'மாறன் கிளவி மணி மாலை' என்ற நூல்களையும் இயற்றியுள்ளார்.

இந்நூல்களுள் 'திருப்பதிக் கோவை' என்ற நூல் 'மாறனகப் பொருள்' இலக்கண நூலுக்கு மேற்கோளாய் அமைந்த இலக்கிய நூலாகும். இந்நூலில் 527 கட்டளைக் கலித்துறை

கள் உள்ளன. ஆனால் மாறனகப் பொருளில் 455 கிளவித் தொகைப் பிரிவுகளே கூறப் பெற்றுள்ளன. ஒரு விரிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட செய்யுட்கள் உள்ளதனால் இவ்வேறுபாடு காணப் பெறுகின்றது.

மாறனகப் பொருள்—நூல் அமைப்பு

அகப்பொருள் இலக்கணத்தை விரித்துக் கூறுகின்ற இந் நூல், களவியல், வரைவியல், கற்பியல் என்னும் மூன்று இயல் களில், முறையே 62, 34, 10 நூற்பாக்களைக் கொண்டு மொத்தத்தில் 106 நூற்பாக்களால் இயன்றுள்ளது.

இந்நூல் ஐந்து இயல்களையும் 363 நூற்பாக்களையும் கொண்டதாக இருந்திருக்கும் என்பதை, பின்வரும் வெண் பாக்களைச் சான்று காட்டி 'இலக்கண வரலாறு' என்னும் தமது நூலில் அறிஞர் சோம. இளவரசு நிறுவியுள்ளார்.

> "மன்னும் அகத்திணையே மாண்பார் களவியலே
> துன்னு வரைவியலே தூத்தொடியே—பின்னமறக்
> கூறல் தகுகற்பே கோதீர் ஒழிபியலே
> மாறன் அகப்பொருளின் வைப்பு"

> "ஐந்திணைசேர் மாறன் அகப்பொருளில் சேரும்இயல்
> ஐந்தாம் நூற்பாஎண் அடைவாகப்—பைந்தொடியே
> முந் நூற்(று)அறுபத்து மூன்றாம் முதலிறுதி
> உந்துவட வோர் கடனே யோர்"

இவ்வெண்பாக்கள் இயல் 5, நூற்பாக்கள் 363 என எடுத் துரைப்பினும் இப்போது பதிப்பித்து வெளிவந்துள்ள மாறன கப்பொருளில் களவியல், வரைவியல் கற்பியல் என்னும் 3 இயல் களும் 106 நூற்பாக்களுமே உள்ளன.

நம்பியகப்பொருள் - மாறனகப்பொருள் ஒப்பீடு

அகப்பொருள் இலக்கண நூல்களாகிய நம்பியகப் பொரு ளையும் மாறனகப் பொருளையும் ஒப்பிட்டுக் காண்பதற்கு

முன்னர்த் தமிழ் அகப்பொருள் இலக்கண நூல்களின் அமைப் பினையும் போக்கினையும் அறிதல் நேரிது

தொல்காப்பியப் பொருளதிகாரம், அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்ற நான்கு இயல்களில் அகப்பொருள் இலக்கணத்தை விரித்துக் கூறுகின்றது. 'இறை யனார் அகப்பொருள்' களவியல், கற்பியல் என ஈரியல்க ளாகப் பிரித்துக் களவியலை 33 நூற்பாக்களிலும், கற்பியலை 27 நூற்பாக்களிலும் சுருங்கக் கூறும்.' இறையனார் அகப் பொருள்' நூலின் உரையாசிரியர் அகப்பொருளைக் கற்பனை வளமிக்க நாடகமாக்கி, நாடகமாந்தர்களை உருவாக்கி ஒன்றன் பின் ஒன்றாகப் பல நிகழ்ச்சிகளைக்கதைப்போக்கில் அமைத்துக் காட்டுகின்றார். இவ்வுரையே பிற்காலத்தில் கோவை நூல்கள் பல தோன்ற வித்திட்டது என்பது மிகையன்று.

அடுத்துத் தோன்றிய அகப்பொருள் இலக்கண நூல் 'தமிழ் நெறி விளக்கம்'. இந்நூல் நம்பியகப் பொருளுக்கு முன்னர்த் தோன்றியது. இன்று கிடைக்கும் இந்நூலில் அகப்பொருள் பற்றிய 25 நூற்பாக்களே உள்ளன. இந்நூல் பிற அகப் பொருள் இலக்கண நூல்களிலிருந்து வேறுபடுகிறது. இந்நூல் களவுக்கு முன் அகத்திணையைக் கூறவில்லை களவின் பகுதி யாகப் பெரும்பான்மையோரால் அமைக்கப்படும் 'அறத்தொடு நிலை', 'உடன்போக்கு' என்னும் இரண்டையும் கற்பினுள் அமைக்கின்றது.

கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் இறுதி அல்லது 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்பெறும் நாற்கவிராச நம்பி தொல்காப்பியத்துள் விரித்துக் கூறிய இலக்கணத்தைச் சுருக்கியும், இறையனார் கூறியதனை விரித்தும், தொல்காப்பிய உரையாசிரியர்கள் மேற்கோள்களாகக் காட்டிய செய்யுட் களைத் தழுவியும் இறையனார் களவியலுரையில் வரும் பாண்டிக்கோவை, திருக்கோவை முதலிய கோவை நூல்களின் நாடக அமைப்பினை உட்கொண்டும் 252 நூற்பாக்களில் 'அகப் பொருள் விளக்கம்' என்னும் நம்பியகப் பொருளை இயற்றி

யுள்ளார். முன்னோர் மொழிந்ததனைச் சுருக்கியும் விரித்தும் கூறுவது என்பதனை மட்டும் கொள்ளாமல் முன்னோர் வழி நின்று அகப்பொருள் இலக்கண மரபுகளைத் தழுவி அவற்றை ஓர் ஒழுங்குமுறைப் படுத்தித் தந்திருப்பது தனிச் சிறப்பாகும். தொல்காப்பியர் கூற்று அடிப்படையில் அகப்பொருள் இலக் கணங் கூற நம்பியார் அக்கூற்றுக்களைத் துறைப்படுத்திக் கதை நிகழ்ச்சி போலக் கோவை செய்து கிளவித்தொகை, வகை, விரியென முத்திறப்படுத்தி வகுத்துரைத்துள்ளது இந்நூலின் புதுவமைப்பாகும். இவர் களவுக்கும் கற்புக்குமிடையே 'வரை வியல்' என ஓரியலை அமைத்துக் கொண்டது வரைவின் இன்றியமையாமையைக் காட்டுவதாகும்.

நம்பியகப் பொருளைத் தொடர்ந்து ஏறத்தாழ 3 அல்லது 4 நூற்றாண்டுகள் கடந்து கி. பி. 16 – ஆம் நூற்றாண்டில் திருக்குருகைப்பெருமாள் கவிராயர் என்பவரால் இயற்றப் பெற்றது 'மாறனகப்பொருள்'. இந்நூல் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களில் உணர்த்தப் பெற்ற அகப்பொருள் இலக்கணங்களை முறைப்படுத்தித் தொகுத்தும், வகுத்தும், விரித்தும் உரைக்கும் நூலாகும். எனினும் இந்நூல் சொல், சொற்றொடர், கருத்துத் தழுவல் என்ற நிலையில் பெரும் பான்மையும் நம்பியகப் பொருளையே பெரிதும் தழுவியுள்ளது என்பது வெள்ளிடைமலை. 'சமணர் இயற்றிய நம்பியகப் பொருளைக் கண்டு இலக்கியம் ஆராயக்கூடாது என எண்ணிய இவர், நூல் செய்யும்போது நம்பியகப் பொருளினின்றும் மீள இயலவில்லை' என்பர்[3]. நம்பியகப்பொருள் தொகுத்து, வகுத்து விரித்துரைப்பதில் மிகுந்த ஒழுங்கும் செல்வாக்கும் பெற்றிருந்த தாலேயே மறந்தும் புறந்தொழா மாந்தர்கள் என்று மதிக்கத் தக்க உறுதியான வைணவசமயப் பற்றுடைய திருக்குருகைப் பெருமாள் கவிராயராலும் பின்பற்றப் பெற்றது.

இனி இந்நூலின் அமைப்பினையும் இயல்பினையும் நம்பியகப் பொருளுடன் ஒப்பிட்டுக் காணலாம்.

அட்டவணை-1: நூலமைப்பு

அகப்பொருள் இலக்கண நூற்கள்	அகத்திணை இயல் நூற்பாக்கள்	களவியல் நூற்பாக்கள்	வரைவியல் நூற்பாக்கள்	கற்பியல் நூற்பாக்கள்	ஒழிபியல் நூற்பாக்கள்	மொத்த நூற்பாக்கள்
1 நம்பியகப் பொருள்	116	54	29	10	43	252
2 மாறனகப் பொருள்	—	62	34	10	—	106

நம்பியகப் பொருள் நூலமைப்பில் களவியல், வரைவியல், கற்பியல் என்ற 3 இயல்களில் 93 நூற்பாக்களைக் கொண்டு உள்ளது. மாறனகப்பொருள் இம் மூன்று இயல்களில் 106 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. பின்னைய நூலில் களவியலில்; 8 நூற்பாக்களும், வரைவியலில் 5 நூற்பாக்களுமாக 13 நூற்பாக்கள் கூடுதலாக உள்ளன. கற்பியலைப் பொறுத்தவரை இரண்டு நூற்களும் 10 நூற்பாக்களையே அமைத்துள்ளன.

களவியலில் மிகையாகவுள்ள 8 நூற்பாக்களில் 5 நூற்பாக்கள் (2,3,4,5,11) முன்னோர் மொழிந்தவற்றை விளக்கியுரைப்பன. ஏனைய மூன்று நூற்பாக்களும் கிளவித்தொகை, வகை, விரி என்ற நிலையில் விரியின் எண்ணிக்கையினை எடுத்துரைப்பன.

களவு காந்தருவத்தோடு ஒப்புமையுடையது என முன்னோர் நெறியில் மாறனகப்பொருளார் களவியலைத் தொடங்குகின்றார். மன்றல் எட்டனுள் காந்தருவம் ஒன்று(2) பின்னைய மூன்றும் கைக்கிளைக்குரியன (3) முன்னைய நான்கும் பெருந்திணைக்குரியன (4) காந்தருவம் ஐந்நிலம்

பெறும் (5) இந்நிலையில் இந்நான்கு நூற்பாக்களும் முன் கருத்தை விளக்க எழுந்த கூடுதல் நூற்பாக்களாகும். இங்கு மாறனகப் பொருளார் தொல்காப்பியத்தைத் தழுவிச் செல்வதைக் காணலாம்.

நம்பியாரைப் போலவே கைக்கிளையின் வகையைக் கூறும் போது காண்டல், சந்தயம், தெளிதல், கருத்துறல் என்று நான்கு வகையாகக் கூறியவர், நான்கையும் விளக்கியபின் 11 ஆம் நூற்பாவில் இக் கைக்கிளை உள்ளப் புணர்ச்சியில் அடங்கும் என்று குறிப்பிட்டு, மெய்யுறு புணர்ச்சியில்லை என்று தெளிவுபடுத்துகின்றார். அகப்பொருள் இலக்கணத்தில் உள்ளப்புணர்ச்சியும் மெய்யுறுபுணர்ச்சியும் கள்ளப்புணர்ச்சியுள் காதலர்க்குண்டு என்று நம்பியகப் பொருளும், அதற்கும் முன்னர் அவிநயமும் இலக்கணம் செய்தன. இக்கருத்து மாறனகப் பொருளுக்கு உடன்பாடன்று. ஆதலின் கைக்கிளை இலக்கணம் கூறி முடிக்குமிடத்து 'இணை விழைச்சு இன்றால்' என்று முடிவுரைக்கின்றார். எனவே இந்நூற்பாவில் மாறனகப் பொருளார் முன்னோர் கருத்தை மறுத்துரைக்கின்றார்.

தலைவியைத் தமர் கொடுப்ப மணந்து கொள்வதே வரைவு என மாறனகப் பொருளார் வரைவியலைத் தொடங்கு கிறார். பின்னர், கொண்டுதலைக் கழிந்துழிக் கொடுப்போ ரின்றியும் கரணம் உண்டு (14); ஆண்டு வரைந்து கொள்ளாது மீண்டுவந்து வரைதலுண்டு (15); கரணம் காராளர்க் காங் காலமு முள (16); பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் கரணம் விதிக்கப் பெற்றது (17) என நான்கு கூடுதல் நூற்பாக் களில் வரைவினை விளக்குகிறார். இங்கும் இவர் தொல்காப் பியக் கருத்துக்களையே தழுவிக் கொள்வதனைக் காண முடிகிறது.

போது, புனல், களிறு என்ற ஏதுக்களால் பாங்கி அறத்தொடு நிற்பாள் என நம்பியாரைத்தழுவி, பாங்கி அறத்தொடு நிற்றலைக் கூறும் மாறனகப் பொருளார்,

''அயலவர் மணமுரசாயிடை விலக்கலுங்
கயல்விழிப் பாங்கி கடனென மொழிப''

(74) என மேலும் ஒரு கூடுதல் நூற்பாக் கூறுகின்றார். நொதுமலர் வரைவுழி தோழி அறத்தொடு நிற்றல் (குறுந் 379) சங்க இலக்கியத்தால் அறியப் பெறுகின்றது. நம்பியகப்பொருள் உரையாசிரியரும் இதனை எடுத்துக்காட்டுகின்றார். (திணை மாலை. நூற். 39) இதனையறிந்த மாறனகப்பொருளார் இந் நூற்பாவில் இதற்கு (74) இலக்கணவரையறை செய்துள்ளார் என்பதுகுறிப்பிடத்தக்கது. ஒரு நூற்பாவில்மறுத்துரைத்துள் ளார்; மற்றொரு நூற்பாவில் புதிய இலக்கண வரையறைசெய் கின்றார்;மற்றைய கூடுதல் நூற்பாக்கள் முன்னோர் கருத்துக் களின் விளக்கமாகவே அமைந்துள்ளன.

அட்டவணை - 2 கிளவித்தொகை விரி

இலக்கண நூற்கள்	களவியல் கிளவித் தொகை விரி	வரைவியல் கிளவித் தொகை விரி	கற்பியல் கிளவித் தொகை விரி	மொத்தவிரி
1 நம்பியகப் பொருள்	279	80	39	398
2 மாறனகப் பொருள்	295	98	62	455

கிளவித்தொகை வகை, விரி என்ற நிலையில் களவிற்குரிய கிளவித் தொகைகளாக நம்பியார் கூறுவன 17. இவர் மதியுடன்பாட்டினை ஒரே கிளவித் தொகையாகக் கூற மாறனகப்பொருளார் அதன் வகைகளைத் தனித்தனிக்கிளவித் தொகைகளாக்கி 19 என எண்ணிக் காட்டுகின்றார். இவ்வளவி லேயே இவ்வெண்ணிக்கை வேறுபாடுகளைப் பெறுகின்றது.

வகை என்ற நிலையில் இருநூல்களிலும் வேறுபாடு ஏது மில்லை.

விரி என்ற நிலையில் நம்பியார் 398விரி கூற, 57விரிகளைக் கூடுதலாக்கி மாறனகப் பொருளார் 455 விரிகளைக் கூறு கின்றார். எடுத்துக்காட்டாகப் பாங்கற் கூட்டத்தில் நம்பியார் 24 விரிகளைக்கூற, மாறனகப் பொருளார் 27 கூறுகின்றார் 'இறைவியைக் காண்டல்' என்பது ஒரு விரி 'கண்ணியை மதித்து அவன் வியத்தல்' என்பது அடுத்தவிரி. மாறனகப் பொருளார் இவற்றிற்கிடையே 'தலைவியை எளிதிற்காட்டிய கடவுளைக் கண்ணுற்றிறைஞ்சல்' என்பதனைக் கூறி விரியினைக் கூட்டுகின்றார். இவ்வாறே பல விரிகள் கூடுதலாகியுள்ளன.

கற்பியலைப் பொறுத்த வரை ஒரே ஒரு மாற்றம் தான் காணப் பெறுகின்றது. நம்பியார் பொருள் வயிற் பிரிவை இறுதியாகக் கூற, இவர் ஓதற்பிரிவை இறுதியாகக் கூறு கின்றார்.

இத்தகைய சிறு சிறு மாற்றங்களும் வேறுபாடுகளும் இலக்கிய வளர்ச்சியினால் தோன்றியனவாகும்.

மாறனகப் பொருளின் சிறப்புத் தன்மை

மாறனகப்பொருள் நம்பியகப் பொருளையே சொல், சொற்றொடர், கருத்து என்ற நிலையில் பெரும்பான்மையும் தழுவியிருந்தாலும் ஒரு சில சிறப்புத் தன்மைகளைக் கொண்டு உள்ளது என்பதனை நினைவுகூர்தல் வேண்டும்.

முன்னோர் செய்த இலக்கண விதிகளுக்கு மாறனகப் பொருள் ஆசிரியர் கருத்து விளக்கம் செய்வது சிறப்புடைய தாகும்.

கற்பு என்பதனை நம்பியார்,

> "பொற்பமை சிறப்பிற் கற்பெனப் படுவது
> **மகிழ்வு மூடலு மூட லுணர்த்தலும்**
> **பிரிவும்** பிறவு மருவிய தாகும்" என்று கூறுகிறார்.

கற்பின் இலக்கணவிதி இங்கு விளக்கிக் கூறப் பெறவில்லை. இதனை விளக்கக் கருதிய மாறனகப்பொருளார்,

"கற்பெனப் படுவது கற்பினை வழுவாது
தற் கொண்டானையுந் தன்னையும் பேணி
யில்லறத் தொழுகு மில்லறக் கிழத்தி
நல்லறத்தவர் மதிநன் மாண்ப தனொடு
மகிழ்ச்சியு மூடலு மூடலுணர்த்தலு
மிகழ்ச்சியில் பிரிவுகள் பிறவுமியன்ற
புகழ்ச்சியி னெய்தியிற் பொருந்து வதாகும்" (97)

என விரித்து விளக்குகின்றார். வரைவியலிலும் இதுபோன்ற விளக்கங்கள் உள.

நம்பியகப் பொருள் இலக்கண விதிகளை மாறனகப் பொருள் ஆசிரியர் முந்துநூல் பயிற்சியால் சில இடங்களில் தொகுத்தும், சில இடங்களில் விரித்தும் எடுத்துரைப்பது மற்றொரு சிறப்பாகும்.

முன்னுறவுணர்தலை விளக்கும் நம்பியார்,

"நாற்றமும் தோற்றமு மொழுக்கமு முண்டியுஞ்
செய்வினை மறைப்பும் செலவும் பயில்வுமென்
றிவ்வகை யேழினும்" (139)

என விரித்துக்காட்ட, மாறனகப்பொருளார்,

"நாற்ற முதலாய்ப் பயில் வீறாமென" (31)

தொகுடுத்துச் சுட்டுகின்றார்.

வரைவின் இலக்கணத்தை நம்பியார்,

"வரைவெனப் படுவ துரவோன் கிழத்தியைக்
குரவர் முதலோர் கொடுப்பவுங் கொடாமையுங்
கரணமொடு புணரக் கடியயர்ந்து கொளலே"

என எடுத்துரைக்கின்றார். இந்நூற்பாவில் 'குரவர்முதலோர்' என்பதனை மாறனகப்பொருளார் தந்தை, தாய், மாதுலன்,

முடிவுரை

தம்முள், தமர், ஆசான் முதலோர் என விளக்கிக் காட்டுகின்றார். இவை போன்ற இடங்களில் முந்துநூல் ஆசிரியர்களின் இலக்கண விதிகளுக்கு உரைவிளக்கம் செய்வதுபோல் உள்ளது.

1. மாறனகப்பொருளார் சொல், சொற்றொடர், கருத்து என்ற நிலையில் பெரும்பான்மையும் நம்பியகப்பொருளையே அடியொற்றியுள்ளார்.

2. மாறனகப்பொருளார் நம்பியாரினும் 13 நூற்பாக்கள் கூடுதலாக இயற்றியுள்ளார் எனினும், அவற்றுள் பெரும்பான்மையான நூற்பாக்கள் முன்னோர் விதிகளுக்கு விளக்கம் கூறுவனவேயாகும்.

3. குறிப்பறிதல் பற்றிய ஒரு கூடுதல் நூற்பாவில் (11) கைக்கிளையில் மெய்யுறு புணர்ச்சியில்லையென முன்னோர் கருத்தை மறுத்துரைக்கின்றார். பாங்கி அறத்தொடு நிற்றல் பற்றிய ஒரு கூடுதல் நூற்பாவில் (74) நொதுமலர் வரைவுழி தோழி அறத்தொடு நிற்றல் என்ற பண்டைய வழக்கிற்கு இலக்கண வரையறை செய்கின்றார்.

4. இலக்கிய வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களால் நம்பியகப் பொருளினும் மாறனகப் பொருளில் கிளவித்தொகை விரி கூடுதலாக உள்ளது.

5. முன்னோர் செய்த இலக்கண விதிகளுக்குக் கருத்து விளக்கம் செய்வதும், உரை விளக்கம் செய்வதும் மாறனகப் பொருளாரின் தனிச் சிறப்புக்களாகும்.

அடிக்குறிப்பு

1. மாறனலங்காரம், மாறனலங்கார வரலாறு, பக். 20.

2. இறைவன் உலாப்போகும் போது அக்கோலத்தைக் கண்டு வாகனக் கவிபாடும் வரகவிஞர்கள் ஆஸ்தானக் கவிஞர்களாவர்.

3. இளவரசு, சோம. — 'இலக்கண வரலாறு', பக். 177.

தொல்காப்பியம் - சொல்லதிகாரம்

டாக்டர் மோ. இசரயேல்

தொல்காப்பியத்தின் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களில் நடுவண் அமைந்து தமிழ் மொழியின் சொல், தொடர் ஆகியவற்றினைச் செவ்விதின் விளக்கி நிற்பது சொல்லதிகாரமே. இதற்கு இளம்பூரணர், சேனாவரையர் நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடனார், பெயர் தெரியாத ஒருவர் இன்னும் பிற்காலத்தவர் சிலர் உரை வகுத் திருப்பது இதன் அருமையினையும், சிறப்பினையும் தெளிவு படுத்தி நிற்கின்றது.

சொல்லதிகாரத்தில் 463 நூற்பாக்கள் உள்ளன. தொல் காப்பிய எழுத்து, பொருள் அதிகாரங்கள் ஒன்பது இயல்களா கப் பகுப்பட்டிருக்கின்ற ஒழுங்கமைப்பில் சொல்லதிகாரமும் ஒன்பது இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. அவை கிளவி யாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் ஆகியனவாம். இவற்றுள் வேற்றுமையியல், வேற்றுமை மயங் கியல், விளிமரபு ஆகியவற்றின் செய்திகள் வேற்றுமையியல் என்னும் ஒரே இயலில் அமைக்கப்பட்டிருக்கலாம்.

சொல்லினது அதிகாரம் என்னும் பொருளில் இப்பகுதி பெயர் பெற்றுத் தமிழ்மொழியின் சொல் உறுப்புக்கள், சொற் கள், தொகைகள், தொடர்கள், வாக்கியங்கள் ஆகியவற்றின் விளக்கம் தந்துநிற்கின்றது. சொல்லின் உறுப்புக்கள் சொல்லி லும் வாக்கியத்திலும் நின்று உணர்த்தும் தொடர்பும் இயைபும் இதன்கண் விளக்கப்படுகின்றன. எனவே தொல்காப்பியச் சொல்லதிகாரம் சொல்லையும் சொல் உறுப்புக்களையும் விளக் கும் பகுதியா அன்றேல் சொற்கள் தொகை, தொடர், வாக் கியம் ஆகியவைகளாக அமையுங்கால் ஏற்படும் இயைபையும்

தொடர்பையும் விளக்கும் பகுதியா என்று கேட்டால் அது இவை எல்லாவற்றையும் விளக்கக் கருதியது என்றே விடையிறுத்தல் இயலும். எனினும் சொல்லதிகார அணுகல் முறையில் சொல்லும் அதன் உறுப்புக்களும் விளக்கிக் காட்டுதல் அடிப்படையா அன்றேல் சொற்றொடரும், வாக்கியமும் விளக்கப்படுதல் அடிப்படையா என்ற வினாவுக்குச் சொல்லதிகாரம் சொற்றொடர்-வாக்கிய அடிப்படையில் சொல்லுக்கும் அதன் உறுப்புக்களுக்கும் விளக்கம் காட்ட முயற்சிக்கின்றது என்று விடையிறுத்தல் இயலும். சுருக்கமாக, பொருள் உணர்வுடன் தொடர் அடிப்படையில் தமிழ் மொழியின் சொல்லிலக்கணம் கூறும் பகுதியே சொல்லதிகாரம் எனலாம்.

எனினும் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகியவை தொடரியலுக்கும் (Syntax) பெயரியல், வினையியல், இடையியல் ஆகியவை சொல்லியலுக்கும் (Morphology) உரியியல் பொருளியலுக்கும் (Semantics) சிறப்பிடம் அளித்து நிற்க எச்சவியல் சொல் தொடர் ஆகியவற்றில் முன்னியல்களில் கூறாது எஞ்சி நின்ற செய்திகளுக்குச் சிறப்பிடம் தருகின்றமையைக் காணமுடிகின்றது என்பதில் தவறில்லை. தொல்காப்பியம் முதன்முதல் பெயரியலின் தொடக்கத்தில்தான் சொல்லடிப்படையில் இலக்கணம் கூறத் தொடங்குகின்றது என்பது தெளிவு.

தொடர்ந்து. சொல்லதிகார இயல் செய்திகளை நோக்குவோம்.

கிளவியாக்கத்தின் (61) தொடக்கத்தில், சொல், திணை - பால் வேறுபாட்டுடன் நடத்தலைக் கூறி, அதனை உணர்த்தும் -ன், -ள், -ர், -து, -அ போன்ற சொல் உறுப்புக்களைக் குறிப்பிட்டு, பெயரிலும் வினையிலும் இப் பாலறிகிளவிகள் மயங்காமல் இயைபுற அமைதல் வேண்டும் என்கின்றார் ஆசிரியர். பின்னர், செப்பும் வினாவும் இயைபுடன் அமைதல், தகுதியும் வழக்கும் பொருந்தி நடத்தல், இயற்கை ஆக்கப்பொருள்களைக் கூறும் நெறி, பால் மயக்குற்ற ஐயக்கிளவியினை வழுக்களைந்து

தொடரில் கூறுதல், பண்புகொள்பெயர், வண்ணச் சினைச் சொல், இயற்பெயர் – சுட்டுப்பெயர், சிறப்புப் பெயர்-இயற் பெயர், ஒரு பொருள் குறித்த பல்பெயர் ஆகிய தொடர்களில் சொற்களின் வரன்முறை, ஒருவரைக் கூறும் பன்மைக்கிளவி - ஒன்றினைக் கூறும் பன்மைக்கிளவி வினை இயைபுடன் வருதல், செலவு, வரவு, தரவு, கொடை ஆகியவற்றின் தொடர்வழக்கு, யாது எவன் என்பவை வினாவாக இயைபுடன் அமைதல், வாக்கியத்தில் 'உம்' வழங்கும் இயைபு, தன்மைச் சொல்லும் அஃறிணைப்பெயரும், வியங்கோளும் விரவுப்பெயரும் எண்ணி வருதல், வேறுவினைப் பொதுச்சொல் வினை இயைபுடன் வருதல், ஒருமை எண்ணின் பொதுப்பிரிபாற்சொல், இரட்டைக் கிளவி ஆகியவற்றின் அமைவு, ஒருபெயர்ப் பொதுச்சொல் பெயரினும் தொழிலினும் பிரிந்து வாக்கியத்தில் அமைதல், வினை வேறுபடும் பலபொருளொரு சொல், வினை வேறுபடாப் பலபொருளொருசொல் வினையுடன் இயைதல், குடிமை, ஆண்மை போன்ற உயர்திணை மருங்கின் நிலையின சொற் களும், காலம், உலகம் போன்ற உயர்திணைப் பால் பிரிந் திசையா உயர்திணைச் சொற்களும் அஃறிணை வினையுடன் இயைபுற்றுத் தொடர்களில் அமைதல் ஆகியவற்றைக் கிளவி யாக்கம் கூறுகின்றது. மேலும் வாக்கியத்தில் கண், தோள் முதலியன அமையும் நெறியும் இறுதியாகச் சுட்டப்பட்டுள்ளது.

வேற்றுமையியல் (22) முதற்கண் வேற்றுமைகளின் எண்ணிக்கை, அவற்றை உணர்த்தும் உருபுகள், எழுவாய் பயனிலை இயைபு, எழுவாய் பெயராக, பெயரினாகிய தொகையாக வருதலும் மறைந்து வருதலும் ஆகியவற்றைக் கூறி, உருபை ஈற்றில் ஏற்று நடக்கும் பெயரின் இலக்கணத் தையும் கூறுகின்றது. பின்னர் இரண்டு முதல் ஏழு வேற்றுமை கள் தோன்றுகின்ற நிலைக்களனும் பொருளும் வகுத்தும் அவை ஒவ்வொன்றும் தொடரமைப்புக்களில் வழங்குதலை வரையறுத் தும் கூறுகின்றது. தொடர்ந்து வேற்றுமை உருபுகள் தொக்கு நிற்கும் எனவும் அதனை விரிக்குங்கால் பொருள் பல்லாறாகப் பெருகும் என்று கூறப்படுகின்றது.

வேற்றுமை மயங்கியல்(34) பெயர்—வினை, பெயர்—பெயர் இயைந்து வரும் தொடர் அமைப்புக்களில் வேற்றுமை உருபு, பொருள் ஆகியவற்றில் ஏற்படும் மயக்கத்திற்குத் தீர்வு கூறுகின்றது. மேலும் ஓர் உருபு பிற உருபினை ஏற்றல், உருபின் வடிவம் திரிதல், எதிர்மறுத்து மொழியினும் உருபின் வடிவம் வேறுபடாமை ஆகியன விளக்கப்படுதலோடு நான்காம் வேற்றுமை உருபில் தோன்றும் சிறப்புப் பொருள் யாவும் கொடுக்கப்பட்டுள்ளன. பல்வேறு வேற்றுமைகளும் தோன்றுதற்கு நிலைக்களனாய் அமையும் தொழில் முதனிலை உணர்த்தும் எட்டனையும் கூறி, அவற்றுள் சில குன்றுதலும் உண்டு எனவும் கூறுகின்றது. மேலும் ஆகுபெயர்களில் அமையும் பொருள் மயக்கமும் வேற்றுமைத் தொடர் அடிப்படையில் தெளிவுபடுத்தற்கு இயலும் என்ற நிலையில் ஆகுபெயர் தோன்றும் அடிப்படையினை வேற்றுமை மயங்கியலில் சுட்டியிருப்பது தொடர் அடிப்படையில் ஆகுபெயரின் விளக்கம் காணவே தொல்காப்பியம் வழிவகுத்துள்ளது என்பதனைத் தெளிவு செய்கின்றது.

விளி மரபில் (37) விளி பெயரோடு அமைவது என்றும் விளியின் வடிவம் வெளிப்படத் தோன்றும் என்றும் கூறி, விளி ஏற்கும் உயர்திணைப் பெயர் ஈறுகள், அவை விளியேற்கும் முறை, அஃறிணைப் பெயர்கள் விளியேற்கும் நெறி ஆகியன விளக்கப்பட்டுள்ளன. விளி ஏலாப் பெயர்கள் ஆங்காங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

பெயரியலில் தான் (43) சொல்நிலை விளக்கம் தொடங்குகின்றது. பெயர்வகைகளைக் கூறுமுன் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன; சொற்குப் பொருள், வடிவம் ஆகியன உண்டு, பொருள் வெளிப்படை குறிப்பு என்ற நிலையில் உணர்த்தப்படும்; சொல்வகை பெயர்வினை இடை உரி என்றெல்லாம் சொல்லிச் சொல்லுதல் சொல்லதிகாரம் சொல்லிலக்கண விளக்கத்திற்குத் தொடரிலக்கணத்திற்குப் பின்நிலையே தருகின்றது என்பதைனத் தெளிவுறுத்துகின்றது. தொடர்ந்து பெயர்கள் உயர்திணைக்குரியன, அஃறிணைக்

குரியன, ஆயிருதிணைக்கும் உரியன என்று பகுக்கப்பட்டு அவை யாவை என வகுத்தும் தொகுத்தும் கூறிச் செல்லு கின்றது. இங்கெல்லாம் திணை—பால்—எண் உணர்த்தும் சொல்லுறுப்புச் சுட்டி உணர்த்தப்படுகின்றது. மேலும் அஃறிணை இயற்பெயரின் ஒருமை பன்மை வேறுபாடு, செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று உயர்திணை ஒருமை உணர்த்தல், விரவுப் பெயர் திணை-பால்-எண் வேறுபாடு உணர்த்தல், ஒருவர் என்னும் சொல், மகடூஉ மருங்கின் பால்திரி கிளவி ஆகியன பால்வேறுபாடு உணர்த்தல் ஆகியவை யாவும் வினை இயைபுடன் இணைந்து நிற்கும் என்பது விளக்கப்பட்டுத் தொடர் இலக்கணத்தின் இன்றியமை யாமை இங்கும் காட்டப்பட்டுள்ளது.

வினையியல் (51) வினையின் இலக்கணம் கூறிக் கால வேறுபாட்டினைச் சுட்டித் தொடங்குகின்றது. வினை, குறிப்பு வினை எனவும் உயர்திணைக்குரியன, அஃறிணைக்குரியன, ஆயிருதிணைக்கும் உரியன எனவும் பாகுபடுத்தி அவை ஏற்கும் ஈற்றின் அடிப்படையில் விளக்கப்படுகின்றது. 'செய்கு' என் கிளவி, மாரைக் கிளவி, யார், எவன் என்பனவும் விரவு வினை களும் அவை வழங்கும் தொடரமைப்புக்களின் அடிப்படையில் பெயர்-வினை இயைபு காட்டி விளக்கப்படுகின்றன. வினை யெச்சங்களும் பெயரெச்சங்களும்தொடரில்முடியும் சொற்களின் அடிப்படையில் விளக்கப்படுகின்றன. வினையெச்சம் அடுக்கி வருதல் பெயரெச்சம்-வினையெச்சம் எதிர்மறுத்துக் கூறினும் பொருள் நிலை திரியாமை, இருவகை எச்சங்களுக்கும் இடைப்பிறவரல்ஆகியனவும் கூறப்படுகின்றன. வாக்கியங்களில் ஏற்படும் பல வகையான கால மயக்கங்களுக்குத்தெளிவும் தீர்வும் தரப்படுகின்றன. இது செயல் வேண்டும், இருவயின் பொருட்டாதல், வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல், எதிர்மறுத்துணர்த்தல், செயப்படு பொருளைச்செய்தது போலத் தொழிற்படக் கிளத்தல் ஆகிய தொடர் அமைப்பு நிலைகளும் விளக்கப்படுகின்றன

இடையியல் (48) முதற்கண் இடைச்சொல்லின் இலக்கணம் அதன் எழுவகைகள், அவை வரும்இடம், அவை திரிந்து வருதல் அவை அடுக்கி வருதல் ஆகியவற்றைக் கூறுகின்றது. தொல் காப்பியம் 'அசைநிலைக் கிளவி ஆகி வருந' (24), 'இசை நிறைக் கிளவி ஆகி வருந' (2) 'தத்தம் குறிப்பிற் பொருள் செய்குந' (21) என்னும் மூவகையினவாகிய 47 இடைச்சொற் களை மட்டும் இடையியலில் கருதி அவற்றின் பொருளும் வழக்கும் சுட்டுகின்றது. இறுதியாக, முன்னர்ச் சொல்லப்பட்ட இடைச் சொற்களுக்கும் பொருள் தரப்பட்டதாயினும் பெயர்வினை இயைபில் திரிந்து வரினும் கொள்க என்றும் வேறு பிற இடைச்சொற்கள் மொழியில் வரினும் சொல்லப் பட்டவற்றியலான் கொள்க என்றும் கூறுகின்றார் ஆசிரியர்.

உரியியல் (100) முதற்கண் உரிச்சொல்லின் இலக்கணம், வரையறை ஆகியவற்றைக் கூறித் தொடர்ந்து 120 உரிச்சொற் களின் பொருள் கூறுகின்றது. இறுதியாக எட்டு நூற்பாக்களில் உரிச்சொற்களின் பொருள்கொள்ளுதலின் நெறி, மொழியில் பிற உரிச்சொற்கள் தோன்றுதல், அவற்றின் வரம்பின்மை ஆகியவற்றைக் கூறி முடிக்கின்றது உரியியல்.

எச்சவியல் (67) முன் இயல்களில் கூறாது எஞ்சி நின்ற சொல் தொடர் பற்றிய எல்லாச் செய்திகளையும் தொகுத்துக் கூறுகின்றது. இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வட சொல் என்னும் நால்வகைச் சொற்கள், செய்யுள் விகாரம், கிளைநுதற் பெயர், அசைநிலை, இசைநிறை, குறிப்புமொழி, வினைமுற்று, அவையல் கிளவி, செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல், முன்னிலை முன்னர் ஈயும் ஏயும் வருதல், கடி சொல், குறைச்சொல், இடைச்சொல், உரிச்சொல், வினை யெஞ்சு கிளவி, முன்னத்தினுணருங்கிளவி ஆகிய சொல் பற்றிய செய்திகளும் பொருள்கோள், ஒரு சொல்லடுக்கு, தொகை மொழி, எச்சங்கள், ஈதா, கொடு ஆகியவற்றின் வழக்கு, ஒரு பொருட் பன்மொழி, செய்யுள் வழக்கில் சில ஒருமை பன்மை மயக்கங்கள் ஆகிய தொடர் பற்றிய செய்திகளும் எச்சவியலில் இடம் பெறுகின்றன.

தொடர் இலக்கணம்

தொல்காப்பியச் சொல்லதிகாரம் தொடர் அடிப்படையில் தான் சொல்லிலக்கணம் கூறுகின்றது; வாக்கியத்தில் பெயர்—வினைகளின் இயையு (concord), தொகை, சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றில் சொற்களின் வரன்முறை (order) ஆகியன பற்றி விரிவாகக் கூறுகின்றது.

கிளவியாக்கம் வாக்கியத்திலும் (sentence) சொற்றொடரிலும் (phrases) நிகழக்கூடிய இயைபு (concord), சொற்களின் வரன்முறை (order) ஆகியவற்றைப் பெயர், வினை ஆகிய சொற்களின் அடிப்படையில் விளக்குகின்றது; பெயர் வினைகளில் அமையும் வழக்கு இயைபினையும் சுட்டுகின்றது; மேலும் பெயர்—வினை இயைபில் ஏற்படும் வழுக்களைக் களைந்து வழுவமைதியுடன் தொடர்களை அமைக்கும் வழிவகைகளையும் காட்டுகின்றது.

வேற்றுமையியல் பெயர்—வினை இயைபினையும், பெயர்கள் வெவ்வேறு வேற்றுமை உருபுகளை ஏற்றுத் தொடர்களில் அமையும் நெறியினையும் காட்டி வேற்றுமைத் தொடர்களுக்கு விளக்கம் தருகின்றது. இங்கு, பெயர் எழுவாய் என்றும் வினை—பெயர் பயனிலை என்றும் பயன்வகை (function) அடிப்படையில் விளக்கப்படுதல், இப்பகுதி தொடர்டிப்படை இலக்கணத்திற்குச் சிறப்பிடம் தருகின்றது என்பதை மேலும் வெளிப்படுத்துகின்றது. தொல்காப்பியம் வெவ்வேறு வேற்றுமை உருபுகள் வழங்கும் தொடர் அமைப்பு வாய்பாடுகளைத் தந்துள்ளது. அதற்கு அடிப்படையாகத்தான் ஒவ்வொரு வேற்றுமையின் பெயர், வடிவம் (உருபு), அவ்வேற்றுமை தோன்றும் அடிப்படை ஆகியவற்றை முதற்கண் வகுத்துச் சொல்கின்றது.

வேற்றுமை மயங்கியல் வெவ்வேறு வேற்றுமைத் தொடர்களில் வேற்றுமை உருபுகள், பொருள்கள் மயங்கி அமைகின்றமையைச் சுட்டி அவற்றிறகுத் தீர்வும் விளக்கமும் தருகின்றது. வேற்றுமை இயலிலும் வேற்றுமை மயங்கியலிலும் பெயர்,

வினைகள் மட்டுமின்றி வேற்றுமைப் பொருள்வயின் உருபாகு நவாம் இடைச்சொற்களும் வேற்றுமைத் தொடர்களில் பங்கு பெற்று அமைதல் நன்கு விளக்கப்படுகின்றது. கிளவியாக்கத் தில் விளக்கப்பட்ட தொடரமைப்புக்களில் பங்கு பெறுபவை பெயர், வினைகள் மட்டுமே என்பது இவண் மேலும் குறிப் பிடத்தக்கது.

விளிமரபில் பெயர்கள் விளி ஏற்குங்கால் தன்னியல் வாக் கியங்களாக அமையும்போது அவை அடையும் மாற்றங்கள் கூறப்படுகின்றன. விளி ஏற்கும் பெயர்கள் முழு நிலைத் தொடர்களாக (complete utteıance) அதாவது சில வாக்கியங் களாக (minor setence) நிகழுகின்றன என்பது அறியத்தக்கது

பெயரியல் பெயர்ச்சொல்லின் வகைகளை விளக்கும் போதும் அவற்றின் திணை—பால்—எண் வேறுபாடுகளைச் சுட்டி அவற்றுடன் இயைந்து செயலாற்றும் வினைச் சொற்களின் அமைப்பையும் குறிப்பிட்டுத் தொடரமைப்புக்கு விளக்கம் தந்து செல்லுகின்றது.

வினையியல் வினைச்சொல், இலக்கணம், அமைப்பு, வகைகள் ஆகியவற்றைக் கூறி, அவை பெயர்ச் சொற்களின் இயைபுடன் தொடரமைப்பில் அமையும் நிலையினையும் விளக்குகின்றது.

இடையியல் இடைச்சொற்களின் இலக்கணம், வகை, பொருள்கள் ஆகியவற்றைக் கூறுதல் மட்டுமின்றி, உம்,— ஏ,—என, என்று 'எனா போன்ற சில தொடர்க் குறியீடு களையும் தந்து நிற்கின்றது. மேலும் அது இடைச்சொற்கள் பெயரொடும் வினையொடும் நடைபெற்றியலும், பெயரொ டும் வினையொடும் நினையத் தோன்றும் என்றெல்லாம் கூறித் தொடரமைப்புக்கு அவற்றின் ஆக்கத்தினையும் தெளிவுபடுத்து கின்றது.

உரியியல் உரிச்சொற்கள் 'பெயரினும் வினையினும் மெய் தடுமாறி' வருதலையும், 'உரிச்சொல் எல்லாம் முன்னும் பின்னும் வருபவை நாடி' அம்மொழிகளில் தக்கவற்றால்

பொருள் கூறும் இயல்பினவாதலையும் குறிப்பிடுதல் அவை தொடரமைப்பில் பங்கு பெறுதலைச் சுட்டிக் கூறுகின்றது என்று கருத வாய்ப்புள்ளது.

எச்சவியல் பிற இயல்களில் கூறாதுவிடுத்த சொல், தொடர் அமைப்புக்களைக் கூறும் நோக்கத்தினது. அது செய்யுளில் இடம்பெறும் மொழியின் தொடரமைப்புக்களையும், தொகை நிலைத் தொடர்களையும், எச்சங்கள் இடம்பெறும் தொடர் அமைப்புக்களையும் சிறப்புற விளக்கி நிற்கின்றது.

தொல்காப்பியச் சொல்லதிகாரம் தொடர்நிலை அடிப் படையில் சொற்களையும் அவற்றின் உறுப்புக்களையும் சுட்டித் தொடர் அமைப்புக்களில் சொற்களின் இயைபு, வரன்முறை ஆகியவற்றைத் தெளிவுபடுத்தித் தமிழ்த் தொடரமைப்புக் கூறும் பகுதியெனினும் தொடர்நிலையில் அடிப்படை உறுப்புக் கள் சொற்களேயாதலின் அவற்றின் வகைகளையும் (word classes), வடிவங்களையும் (forms), பயன் வகையினையும் (function) விளக்கும் நிலையிலும் இலக்கணம் கூறுகின்றது என்பது உண்மை.

சொல்லியலும் சொல்வகைகளும்

சொல்லதிகாரம் தொடர் அமைப்புக்களை மட்டுமின்றித் தொடரின் அடிப்படை உறுப்பாகிய சொல்லையும் சொல்லின் உறுப்புக்களையும் விளக்கி இலக்கணம் கூறுகின்றது. பல இடங்களில் தொடரியல், சொல்லியல் செய்திகள் பிரித்தறிதற் கியலாத நிலையிலும் எது மிஞ்சி நிற்கின்றது என்று சொல்ல வியலாத நிலையிலும் பிணைந்து கிடக்கின்றன. எனவேதான் அறிஞர் சிலர் சொல்லதிகாரம் தொடரியல் பற்றியதே என்றும் வேறு சிலர் சொல்லியல் நோக்கியதே என்றும் கூறி நிற்கின் றனர். ஆனால் சொல்லதிகாரம் தொடரியல் அடிப்படையில் சொல்லியல் விளக்கமும் தருகின்ற இலக்கணநூல் என்பதில் தவறில்லை.

பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் ஆகியன சொல்வகை அடிப்படையில் பெயர் பெற்றிருப்பதும் கிளவி யாக்கத்தில் சொல்லின் உறுப்புக்களின் அடிப்படையில் தொடர்களின் இயைபு கூறப்பெறுதலும் வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல் ஆகியவற்றில் உருபுகளின் அடிப்படையில் வேற்றுமையும், வேற்றுமை மயக்கமும் கூறப்படுதலும், விளிமரபில் விளி ஏற்கும் பெயர்கள் அமையும் மாற்றங்கள் கூறப்படுதலும் எச்சவியலில் சில சொற்களின் பிரித்தறிதற்கியலாத நிலை, கால, இட வேறுபாடுகள், செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல், பிற முன்னிலை வினைகள் போன்றவை கூறப் படுதலும் சொல்லதிகாரம் சொல்லியல் (morphology) விளக்கமும் தருகின்றமைக்குத் தக்க சான்றுகளாகும்.

சொல்லதிகாரம் சொல்வகைகளைக் குறிப்பிட்டு அவற்றிற்கு விளக்கம், சான்றுகள், பகுப்புக்கள் யாவும் தருகின்றமை, அது சொல்லியலும் கூறும் பகுதி என்பதனைத் தெளிவு செய்கின்றது.

பெயர்: காலந்தோன்றாமை (70), வேற்றுமை ஏற்றல் (69) தொடர் நிலையில் எழுவாயாக வருதல் (65), பெயரெச்சத்தால் தழுவப்படுதல் (234, 433), பயனிலையாக வருதல் (66) ஆகிய இயல்புகள் பெயருக்குக் கூறப்பட்டுள்ளன. மேலும் பெயர் மாற்றுப்பெயர், எண்ணுப் பெயர், வினையாலணையும் பெயர், தொழிற்பெயர், பிற ஆக்கப்பெயர்கள் (பெயரில், விளிமரபு) எனப் பலவாறாகப் பகுத்து அறிதற்குரிய செய்திகள் சொல்லதிகாரத்தில் உள்ளன.

வினை: வேற்றுமை ஏலாமை, காலந்தோன்றுதல் (198) தொடர் நிலையில் பயனிலையாகவே வருதல் (66), வினையெச்சத்தால் தழுவப்படுதல் (230, 231, 434) ஆகிய இயல்புகள் சொல்லதிகாரத்தில் பேசப்படுகின்றன.

மேலும் முற்று - எச்சம், குறிப்பு - வினை, விரவுவினைகள் போன்ற பலவகை வினைகள் பற்றி வினையியலில் பேசப்படுகின்றன. பெயரும் வினையும் இருதிணையில் இசைக்கும் சொற்களாகும். (1, 160, 201).

இடை: பெயர் வினை வழி மருங்கிற்றோன்றுதல் (159), பெயரொடும் வினையொடும் நடைபெற்றியல்தல் (248), தமக்கியல் பிலவாயிருத்தல் (249), வேற்றுமைச் சொல்லாதல் (455) ஆகிய இடைச்சொல் இயல்புகளும் இடைச்சொல் வகைகளும் சொல்லதிகாரத்தில் பேசப்படுகின்றன. இடையியல், 'புணரியல் நிலையிடைப் பொருணிலைக்குதவந', வினைசெயல் மருங்கின் காலமொடு வருந', 'வேற்றுமைப் பொருள்வயின் உருபாகுந' என்னும் மூவகை ஒட்டுக்களையும் (affixes) எஞ்சிய 'அசைநிலைக் கிளவி ஆகி வருந' 'இசைநிறைக் கிளவி ஆகி வருந' தத்தம் குறிப்பில் பொருள் செய்குந' 'ஒப்பில் வழியால் பொருள் செய்குந' ஆகிய குறைநிலை யெய்திய - பெரும்பாலும் சொல்வேறுபாட்டு வடிவங்களை ஏற்காத வைகளையும் இசைச்சொல் (uniflected stems) வகைகளாகத் தருகின்றது. பின்னையவற்றை ஒருநிலைச்சொல் (Particles) எனலாம்.

உரி: பெயர் வினை வழி மருங்கிற் றோன்றுதல் (159), பெயரினும் வினையினும் மெய்தடுமாறி வருதல் (297) நெறிப்பட வாராக்குறைச் சொற்கிளவிகள் (தொ. எ, 482), வெளிப்படவராமை (298)வேற்றுமைச் சொல்லாதற்கும் உரியதாதல் (456) ஆகிய இயல்புகள் உரிச்சொற்களுக்குக் கூறப்படுகின்றன.

பெயர்வினையின் இயல்புகளைச் சொல்லதிகாரம் கூறுவதினின்று இடையும் உரியும் இருதிணையின் இசைக்காத இயல்புக்கு (1, 160, 201) உரியனவாக அமைகின்றன என்பது உய்த்துணர முடிகின்றது.

தொல்காப்பியர் பெயர், வினை, இடை ஆகிய பிற சொல் வகைகளில் சேர்த்தற் கியலாத-பொருள் வெளிப்படவராத-அருகிய வழக்கினவாகிய 120 சொற்களை உரியியலில் தொகுத்துப் பொருள் கூறுகின்றார்; இவற்றை வேர்ச்சொற்கள்

தாதுக்கள், அடைகள், தனிச்சொல்வகையின, செய்யுள் வழக்குச்சொற்கள்,வழக்கிறந்தசொற்கள்,சொற்களஞ்சியத்தின் பாற்படுவன எனப் பலவாறாகக்கூறி அறிஞர்கள் தெளிந்த தீர்வுகாண இயலாது தொடர்ந்து ஆய்வு செய்து வருகின்றனர்.

சொல்லதிகாரத்திற் கருதத் தக்க பிற சில எண்ணங்கள்

1, சொல்லதிகாரம் மொழியின் வழக்கும் செய்யுளும் கருதி இலக்கணம் கூறுகின்றது

2. மொழியின் வட்டார வழக்குகளையும் மொழி மாற்றத் தினையும் அது கருத்திற் கொண்டுள்ளது.

3. சொல். தொடர் அமைப்புக்களுக்கு விளக்கம் தருங்கால் அது பொருள் அடிப்படையினைப் (Semantic critstrion) பயன்படுத்துகின்றது.

4. தொல்காப்பியம் தொடர் அடிப்படையில் சொல் இலக்கணம் கூறி, உருபன் அடிப்படையில் சொல்லமைப் புக்களையும் தொடர் இயைபினையும் விளக்க, பிற்கால இலக்கண நூற்களான நன்னூல், வீரசோழியம், நேமிநாதம் ஆகியன சொல்வகை அமைப்பு ஆகியவற்றின் அடிப் படையில் இலக்கணம் கூறுகின்றன. தொன்னூலில் மீண்டும் இந்நிலை மாற்றி அமைக்கப்படுதலைக் காண முடிகின்றது.

5 சொல்லதிகாரம் வாக்கிய நிலையினின்று சொல்நிலை விளக்கம் தருதல் ஓரளவு அறிந்துணர்ந்தவற்றினின்று அறியாததையும் எளிதினின்று அரிதானதையும் விளக்கும் நெறியினைப் பின்பற்றுகின்றது என்று கூற இடந்தரு கின்றது.

6. சொல்லதிகாரம் முழுவதும் வடிவம் (form), பயன்வகை (function) என்ற இரண்டன் அடிப்படையில் உருபன் (morpheme), சொல் (word), தொகை (compound), தொடர் (phrase), வாக்கியம் (Sentence) ஆகியவற்றின் விளக்கம் தரப்படுகின்றது.

7. சொல்லதிகாரம் நால்வகைச் சொற்களைக் குறிப்பிட்டாலும் இடைக்கும் உரிக்கும் இரண்டாம் நிலையையே தந்துள்ளது. அவை எப்பொழுதுமே பெயர்வினை அடிப்படையில்தான் விளக்கப்படுகின்றன.

8. சொல்லதிகாரம் பால் பாகுபாட்டை விடத் திணைப்பாகுபாட்டிற்கே சிறப்பிடம் தருகின்றது. சொற்கள் (பெயர், வினை) இரு திணையின் இசைத்தல், அவை உயர்திணைக்குரியன, அஃறிணைக்குரியன, ஆயிருதிணைக்கும் உரியன எனச்சுட்டிக் கூறப்படுதலும், பெயரியலிலும் வினையியலிலும் சொற்கள் திணையடிப்படையில் பாகுபடுத்திக் கூறப்படுதலும் இதனைத் தெளிவுறுத்தும்.

9. சொல்லதிகாரம் முன்னையோர் மொழி பொருளையும் பொன்னேபோற் போற்றித் தன்கால மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளது. எனவே, அது பெரும் அளவில் விளக்க இலக்கணமாக (descriptive grammar) அமையினும் வரலாற்றுணர்வுடைய வரலாற்றிலக்கணமாகவும் ஓரளவு பயன்படுகின்றது.

10. சொல்லதிகாரம் சொல்லுறுப்புக்கள், சொற்கள் தொடர்கள் ஆகியனவற்றைச் 'சொல்' 'கிளவி' என்ற இரு சொல்லாலும் சுட்டுகின்றது. இந்நிலையில் அது இலக்கணக் கலைச்சொற்களை ஒரே இயல்பினவாகப் பயன்படுத்தவில்லை எனலாம்.

9. தொல்காப்பிய எழுத்ததிகார அமைப்புத் தருக்க முறை

டாக்டர் க. பாலசுப்பிரமணியன்

1. முன்னுரை

ஒரு மொழியின் இலக்கண அமைப்பைக் கூறும் இலக்கண நூல்கள், பழைய மரபிலக்கண நூல்களாயினும் சரி, இன்றைய மொழியியல் அடிப்படையில் எழுதப் பெற்றவையாயினும் சரி தம்முள் பல வகைகளில் வேறுபடுகின்றன. இவ் வேறுபாட்டின் அடிப்படைகள் பலவாகும். எழுத எடுத்துக்கொண்ட இலக்கண நூலின் கொள்கை அடிப்படையில் (Theoretical basis) வேறுபடுவன சில. எழுத்திற்கும் சொல்லிற்கும் மட்டும் இலக்கணம் கூறி அதனுள்ளும் சொல்லிலக்கணத்தில் சொல்லாக்கத்திற்கும் முதலிடம் கொடுத்துத் தொடரியல் அடிப்படையை அதற்கு உதவுவதாக வைத்துச் செய்யப்பட்ட மரபிலக்கண நூல் பாணினீயம். எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றிற்கும் இலக்கணம் வகுத்து அவற்றில் சொல்லிலக்கணத்திலும் எழுத்திலக்கணத்திலும்தொடரியல் செய்திகளுக்குச் சிறப்பிடம்கொடுத்துச் சொல்லாக்கம், சொல்லின் உள்ளமைப்பு இவற்றிற்கும் சிறப்பிடம் கொடுக்காத நூல் தொல்காப்பியம். வடமொழி மரபில் யாப்பும், அணியும் இலக்கணம் அல்லது வியாகரணத்தின் பகுதியாக அமையாதபோது அவற்றையும் இலக்கணத்தின் பகுதியாகக் கொண்டு இலக்கியத்தின் பொருளாகிய அகம் புறத்தையும் உட்கொண்டு பொருளதிகாரம் வளர்த்த மரபு தொல்காப்பிய மரபு. இன்றைய மொழியியலாருள்ளும் அமைப்புமுறை மொழியியலார், மாற்றிலக்கண முறை மொழியியலார் போன்ற அடிப்படைக் கொள்கையில் வேறுபாடுடையவர் எழுதும் இலக்கண நூல்கள் வேறுபட்டு அமையும்.

கொள்கை அடிப்படை வேறுபாட்டுடன் இலக்கண நூலின் அமைப்பு முறையிலும் வேறுபாடுகள் அமையும். இவ் வேறுபாடுகள் கொள்கை வேறுபாட்டின் காரணமாகவும் அமையலாம்; இலக்கணம் கூறும் முறை (Technic of description) யின் காரணமாகவும் அமையலாம். இவ்விரண்டின் இணைவாலும் அமையலாம். ஒரே இலக்கணக் கொள்கையைப் பின்பற்றுவோரும், அவர்கள் நூலின் அமைப்பை, விளக்கமுறை வசதிக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்ளலாம். அமைப்புமுறை மொழியியல் (Structural linguistics) அடிப்படையில் அமைந்த இலக்கண நூல்களில் பலவும் ஒலியனியலில் தொடங்கி உருபனியல், தொடரியல்களைத் தொடர்ந்து அமைக்க ஒரு சிலர் உருபனியலை முதலில் கூறி இறுதியில் ஒலியனியலைக் கூறுவதும் உண்டு. கொள்கையடிப்படையில் மொழி நிலைகள் (Linguistic levels) எவ்வாறு அமைந்துள்ளனவோ அவற்றை அடிப்படையாகக் கொண்டு நூல் அமைப்பு இருப்பதும், அவ்வாறன்றி நிலைகளைக் கலந்து கூறுவதும் உண்டு. தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் எனப் பிரித்து நூல் செய்திருக்க, பாணினீயம், அதன் எட்டு அத்தியாயங்களிலும், சொல்லிக்கணக் கூறுகளையும் எழுத்திலக்கணக் கூறுகளையும் கலந்தே நூல் செய்துள்ளது. (ஒ.நோ. பாலசுப்பிரமணியன், 1982).

எனவே ஒரு இலக்கண நூலின் அமைப்புத் தருக்க முறை (Organizational logic) அந் நூலின் கொள்கைப் பின்னணி, பொருள் விளக்க முறை ஆகியவற்றின் அடிப்படையில் அந் நூலின் தனித் தன்மையைக் காட்டுவதாக அமையும். இவ் வடிப்படையில் தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் அமைப்புத் தருக்க முறையைச் சுருக்கமாக ஆராய்வது இக் கட்டுரையின் நோக்கம்.

2. தொல்காப்பியத்தின் இலக்கணக் கொள்கை

எழுத்ததிகாரத்தின் அமைப்பினை ஆராயுமுன் தொல்காப்பியரின் இலக்கணக் கொள்கையைப் புரிந்து கொள்வது இன்றியமையாதது. தொல்காப்பியம், தொல்காப்பியம் தழுவிய தமிழ் இலக்கண மரபு தவிர மற்றைய உலக இலக்கண மரபு

களில் 'இலக்கணம்', 'வியாகரனம்', grammar போன்ற தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படுபவை எழுத்ததிகாரச் சொல்லதிகாரச் செய்திகளே. பொருளதிகாரச் செய்திகள் இலக்கணத்தின் பகுதியாகக் கருதப்படுவதில்லை. தொடர்கள் அல்லது வாக்கியங்கள் அல்லது சில கொள்கைகளில் தொடர் தொகைகள், (discourse) மொழியின் மேல் எல்லையாகவும் ஒலி அதன் கீழ் எல்லையாகவும் கருதப்படுகிறது. சில கொள்கைப் போக்குகளில் பொருண்மை (meaning)யையும் ஒலி அல்லது வடிவையும் (form) தொடர்புபடுத்துவதே இலக்கணம் என்ற கருத்து இருப்பினும் இங்கே பொருண்மை என்பீது மொழிப் பொருண்மை என்ற நோக்கில் கருதப்படுகிறதே தவிர மொழி குறிக்கும் உலகப் பொருண்மை என்ற நோக்கில் கொள்ளப் பட்டு உலகப்பொருண்மையின் அமைப்பு ஆராயப்படுவதில்லை. ஆனால், தொல்காப்பியரின் பார்வையில் பொருள் என்பது அகமும் புறமுமாய் அமைந்த உலகப் பொருண்மை முழுவதையும் அதன் அமைப்பையும் அவ்வமைப்பைப் படம் பிடிக்கும் செய்யுள் அல்லது இலக்கியங்களின் அமைப்பு, உத்திகள் ஆகியவற்றை உட்கொள்கிறது. எனவே, தொல்காப்பிய இலக்கணக் கொள்கையின் மேல் எல்லை, மொழியின் பொருளாய் அமைந்த உலகப் பொருண்மை. பொருளமைப்பின் சிற்றலகுகளாக திணை, துறை ஆகியவை அமைகின்றன. இவ்வமைப்பு பொருளதிகாரத்தில் விளக்கப்படுகிறது. உலகப் பொருண்மையை மொழிப் பொருண்மையாய் மாற்றுபவை தொடர்கள் அல்லது வாக்கியங்கள். அத்தொடர்களின் இலக்கணம் சொல்லதிகாரத்தில் பேசப்படுகிறது. சொல்லதிகாரம் தொடரியல் செய்திகளுக்குச் சிறப்பிடம் கொடுக்கிறது என்பது இன்றைய ஆய்வாளர்கள் பலராலும் நிறுவப்பட்டுள்ளது. (அகத்தியலிங்கம், 1969; சண்முகம், 1972; பாலசுப்பிரமணியன், 1978). பழைய உரையாசிரியர்களுள்ளும் தெய்வச்சிலையார் இதனை நன்குணர்ந்து விளக்கியுள்ளார் (தொல். சொல். முதல் நூற்பா உரை). தொடரிலக்கண ஆய்வு முறையிலும் வேற்றுமைகளை அடிப்படையாகக் கொண்ட வேற்றுமையிலக்கண முறை (case grammar approach) தொல்காப்பியரதாகும் என்று இக்கட்டுரையாசிரியரின் (1978) கட்டுரை நிறுவ முயன்றுள்ளது. உருபு

அடிப்படையில் வேற்றுமைகள் எட்டெனத் தொடங்கி விளக்கும் தொல்காப்பியர் பொருளடிப்படையிலும்,

> ‘‘ வினையே செய்வது செயப்படு பொருளே
> நிலனே காலம் கருவி என்றா
> இன்னதற்கு இதுபய னாக என்னும்
> அன்ன மரபின் இரண்டொடும் தொகைஇ
> ஆயெட் டென்ப தொழில்முத னிலையே ’’
>
> (தொல். சொல். 112)

என்ற நூற்பாவில் வினைப் பயனிலையுடைய வாக்கியம் ஒன்றில் பொருளடிப்படையில் அமையும் வேற்றுமைகளை விளக்குகிறார். இத்தொழில் முதனிலைகள் இன்றைய ஃபில்மோர் (Fillmore, 1968) போன்ற வேற்றுமை இலக்கண மொழியியலார் கூறும் அக வேற்றுமை (deep cases)களோடு ஒப்புமை உடையன என்பது இக்கட்டுரையில் காட்டப்பட்டது. இந்நூற்பாக் கருத்து, பின்னர் வினையியலில் வினையெச்ச (230) பெயரெச்ச (234) இலக்கணங்கள் கூறும்பொழுது எடுத்தாளப் படுவது இதன் சிறப்பிடத்தைக் காட்டும்.

நன்னூல் போன்ற பிற்கால இலக்கண நூல்கள் வேற்றுமையைப் பெயரிலக்கணத்தின் பகுதியாகக் கூறத் தொல்காப்பியர், கிளவியாக்கத்தை அடுத்து மூன்றியல்களில் வேற்றுமையைப் பேசுவது தொல்காப்பிய இலக்கண அமைப்பில் அதற்குள்ள சிறப்பிடத்தைக் காட்டுகிறது. மேலும், வேற்றுமையை அடிப்படையாகக் கொண்டது தொல்காப்பிய இலக்கணம் என்பது எழுத்ததிகாரத்தில் புணர்ச்சியை வேற்றுமை குறித்த புணர்மொழிநிலை, வேற்றுமையல்வழிப் புணர்மொழி நிலை என வகுத்த முறையும் உறுதிப்படுத்துகிறது.

எனவே, உலகப்பொருண்மை இலக்கியப் பொருண்மையை ஆராயும் பொருளதிகாரம் தவிர இலக்கணம் என்ற பெயரில் மற்ற மொழி மரபுகளில் வழங்கும் பகுதிக்கு இணையான எழுத்ததிகாரச் சொல்லதிகாரப் பகுதிகள் தொடர்யல்

அடிப்படையுடையவை என்பதும் தொடரியல்அடிப்படை யிலும் வேற்றுமை ஆய்வினை அடிப்படையாகக் கொண்டவை என்பதும் தெளிவாகும்.

சொல்லதிகாரத்தில் மேல்நிலை அலகுகளாக (higher units) தொடர்கள் அல்லது வாக்கியங்கள் அமைய, கீழ்நிலை அலகு களாகச் சொற்கள் அமைகின்றன. அச்சொற்கள் முழுச் சொற் களாகிய பெயர்ச் சொற்கள் அல்லது வினைச்சொற்களும் அவற்றிற்குப் புறத்துறுப்பாகவும் அகத்துறுப்பாகவும் வரும் இடை, உரிச்சொற்களும் ஆம் (ஒ. நோ. மீனாட்சிசுந்தரன், 19/4).

எழுத்ததிகாரத்தின் மேல்நிலை அலகுகள் வேற்றுமைப் பொருளிலும் அல்வழிப் பொருளிலும் வரும் தொடர்களே. பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் அவற்றின் இடை நிலை அலகுகள் (middle level unit). எழுத்துக்களே கீழ்நிலை (ultimate) அலகுகள். எழுத்துக்களால் ஆனவை மொழி அல்லது சொல் என்பதும் மொழிகளால் ஆனவை தொடர்கள் என்பதும் மொழிகள் இணைந்து தொடர்களாய் அமையும் பொழுது அவற்றின் எழுத்து வடிவம் மாற்றமின்றியோ மாற்றம் பெற்றோ வரும் என்பதும் எழுத்ததிகாரத்தில் விளக்கப்படுகிறது.

இதுவரை விளக்கப்பட்ட அடிப்படையில் தொல்காப்பிய இலக்கணத்தைப் பின்வரும் அமைப்புடையதாகக் கொள் ளலாம்.

உலகப்பொருண்மைஅமைப்பு — பொருளதிகாரம்
(திணை, துறை, கைகோள்)

↓

தொடரியல் அமைப்பு — சொல்லதிகரரம்
(சொற்கள் வேற்றுமைப்
பொருள் அல்வழிப்பொருளில்
தொடராய் அமைதல்)

↓

எழுத்தமைப்பு — எழுத்ததிகாரம்
(சொற்கள், தொடர்களின்
எழுத்தமைப்பு)

இவ்வமைப்புடைய இலக்கணத்தைக் கீழ்நிலை அலகுகளான எழுத்தில் தொடங்கி மேல் எல்லையாகிய உலகப் பொருளில் முடிக்கிறார் தொல்காப்பியர். இக்கொள்கைப் பின்னணி எழுத்ததிகார அமைப்பைப் புரிந்து கொள்ள உதவும்.

3. எழுத்ததிகார அமைப்பு பற்றிய உரையாசிரியர் கருத்து

எழுத்ததிகாரத்திற்கு உரையெழுதிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர் இருவரும் எழுத்ததிகாரச் செய்திகளையும் அமைப்பையும் பற்றிப் பேசியுள்ளனர். எழுத்திலக்கணத்தை எட்டு வகையானும் எட்டிறந்த பல வகையானும் உணர்த்தினார் என்று கூறுவதும், இவ்வதிகார இலக்கணம் கருவியும் செய்கையும் என இருவகைத்து என்று கூறுவதும் இங்குக் கருதத்தக்கன. எழுத்து இனைத்தென்றல், இன்ன பெயர என்றல் இன்னமுறைமைய என்றல், இன்ன அளவின என்றல், இன்ன பிறப்பின என்றல், இன்னபுணர்ச்சிய என்றல், இன்ன வடிவின என்றல், இன்ன தன்மைய என்றல் என்பன எழுத்ததிகாரத்தில் கூறப்பட்ட செய்திகளின் வகைப்பாடு. எட்டிறந்த பலவகை என்று கூறப்படும் உண்மைத்தன்மை போன்றனவும் கூறியுள்ள செய்திகளின் பாகுபாடே. ஆனால், கருவியும் செய்கையுமாய் இலக்கணம் செய்துள்ளார் என்பது அமைப்பு முறை பற்றிய விளக்கம். நூல் முழுவதையும் கருவி, செய்கை எனப் பிரித்து அவற்றையும் மேலும் பகுக்கின்றனர் உரையாசிரியர். அதனைப் பின்வரும் படம் விளக்கும்.

- எழுத்திலக்கணம்
  - கருவி
    - புறப்புறம் — நூன்மரபு, பிறப்பியல்
    - புறம் — மொழி மரபு
    - அகம் — "எகர ஒகரம் பெயர்க் கிறாகா" 2 3
    - அகப்புறம் — புணரியல்
  - செய்கை
    - புறப்புறம் — "எல்லா மொழிக்கும்" 140
    - புறம் — "லனவென வரூஉம்" 149
    - அகம் — ஈறுகளின் முடிபு
    - அகப்புறம் — உகர மொடு புணரும் 163

இவ்விளக்கம், ஒரு வகையில் பொருத்தமானதாகத் தோன்றினும் தொல்காப்பியர் கருத்தை, நோக்கத்தை விளக்குவதாகத் தோன்றவில்லை. எழுத்ததிகாரத்தை அதன் இயல்பான இயல் அமைப்பு அடிப்படையில் விளக்காமல் அவ்வமைப்பைப் பிளந்து விளக்குவதால் வேறொரு முறையைப் புகுத்தி விளக்குவது போல் தோன்றுகிறது. மேலும் செய்கை அல்லது புணர்ச்சிக்கே சிறப்பிடம் கொடுக்கிறது. தொல்காப்பிய எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் தொடரியல் அடிப்படையில் அமைந்தவை என்ற கொள்கைப் பின்னணியில் சொல்லும் சொல்லும் புணரும்புணர்ச்சி சிறப்பிடம் உடையதே. ஆறு இயல்கள் புணர்ச்சியைப் பற்றிப் பேசுவதும் அதனைக் காட்டுகிறது. எனினும் அப் புணர்ச்சியின் நிலைக்களமாய் அமைந்த எழுத்துக்களின் ஒலியனியல், ஒலியியல் செய்திகளும் சொல்லமைப்புச் செய்திகளும் இன்றியமையாதனவே. அச்செய்திகள் கூறும் நூன் மரபு, மொழி மரபு, பிறப்பியல் ஆகிய இயல்கள் எழுத்ததிகார அமைப்பு விளக்கத்தில் உரிய இடம் பெற வேண்டும். இவ்வகையில் உரையாசிரியர்கள் விளக்கம் குறைபாடுடையதாகத் தோன்றுகிறது.

இயல்களின் வரிசைமுறைக்கும் உரையாசிரியர்கள் இருவரும் சுப்பிரமணிய சாஸ்திரியாரும் (137), வேங்கடராசுலு ரெட்டியாரும் (1944) காரணங்கள் கூறுகின்றனர். அவற்றிலும் பொருத்தமும் பொருத்தமின்மையும் இருப்பதாகத் தோன்றுகிறது. அவையும் இங்குக் கருத்தில் கொள்ளப் பெறும்.

4. இன்றைய ஆய்வாளர் கருத்து

சண்முகம் (1980: 29–44) எழுத்திலக்கணத்தை அதன் 'கோட்பாடுகள் வெளிப்படுமுகமாக', பின்னுள்ள இலக்கணங்கள் காட்டும் வழியை ஓரளவு ஒட்டியும், மொழியியல் அறிவை ஒட்டியும் பின்வருமாறு மூன்று பெரும் பிரிவாக அமைந்துள்ளதாகக் கருதுகிறார்.

பிரிவு	அடங்கும் இயல்கள்
1. எழுத்தியல்	1. நூன் மரபு
	2. மொழி மரபு
2. பிறப்பியல்	3. பிறப்பியல்
3. புணரியல்	4. புணரியல்
	5. தொகை மரபு
	6. உருபியல்
	7. உயிர் மயங்கியல்
	8. புள்ளி மயங்கியல்
	9. குற்றியலுகரப் புணரியல்

இப் பிரிவு தொல்காப்பியரது இலக்கணக் கோட்பாட்டை விளக்குவதாக அமையும் என்று கருதுகிறார். ஆனால் பிறப்பியலின் வைப்பு முறை பொருத்தமற்றது; பிறப்பியலை 'எழுத்தியலுக்கும்', 'புணரியலுக்கும்' இடையில் வைத்ததற்கு மொழி அமைப்பு முறையை ஒட்டிய தனிச் சிறப்பு ஏதும் இல்லை; வீரமாமுனிவர் தொன்னூல் விளக்கத்தில் பிறப்பியலை முதலில் வைத்தது பிறமொழியாளர் என்ற அடிப்படையில்; பிற மொழிகளைக் கற்றுக் கொள்வதற்கு ஒலி பற்றிய அறிவு முக்கியமானது. ஆனால் தொல்காப்பியர் முதலான தமிழகப் புலவர் பெருமக்களான இலக்கணப் புலவர்கள் தங்கள் தாய்மொழிக்கு இலக்கணம் எழுதியவர்கள். எனவே அவர்கள் எழுத்தியலுக்கு முதலிடம் கொடுத்தது தாய்மொழியை ஆராய்வோர் கையாளும் ஆராய்ச்சி முறையை ஒத்ததே என்று கருதுகிறார். எனவே சண்முகம் அவர்கள் கருத்துப்படித் தொல்காப்பிய எழுத்ததிகாரம் 'எழுத்தியல்', 'பிறப்பியல்', 'புணரியல்' என்ற அமைப்புடையதாயிருப்பினும் பிறப்பியல் முதலில் அல்லது நூன்மரபை அடுத்து அமைந்திருப்பின் பொருத்தமுடையதாய் இருந்திருக்கும் என்றாகிறது.

5. எழுத்ததிகார அமைப்பு

இனி, மேல் கூறப்பட்ட தொல்காப்பியக் கொள்கைப் பின்னணிப் (2) பின்புலத்தில் தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் அமைப்புத் தருக்கமுறை, அவர் இயல் வகுத்துள்ள இயல்களில் கூறியுள்ள செய்திகளின் அடிப்படையில் இப்பகுதியில் ஆராயப் படும். அது அவர் அமைப்பு முறையை நியாயப்படுத்தும் முயற்சியாக அமையாது அவருடைய முறையை அவர் வழிச் சென்று புரிந்து கொள்ளச் செய்யப்படும் முயற்சியாக அமையும்.

இக் கட்டுரையின் கருத்துப்படி எழுத்ததிகாரம் நான்கு பகுதிகளாகப் பிரிபடும்.

பிரிவு	அடங்கும் இயல்கள்
1. நூலின் பொது எழுத்திலக்கணம்	1. நூன் மரபு
2. மொழி அல்லது சொல்லின் எழுத்தமைதி	2. மொழி மரபு
3. எழுத்தின் ஒலிப்பு முறை	3. பிறப்பியல்
4. புணர்ச்சி அல்லது தொடரின் எழுத்தமைதி	
1. பொதுவிலக்கணம்	4. புணரியல்
2. தொகையிலக்கணம்	5. தொகை மரபு
3. விரிவிலக்கணம்	
அ. அகப்புணர்ச்சி	6. உருபியல்
ஆ. புறப்புணர்ச்சி	7. உயிர் மயங்கியல்
	8. புள்ளி மயங்கியல்
	9. குற்றியலுகரப் புணரியல்

5.1. நூலின் பொது வெழுத்திலக்கணம் – நூன் மரபு

தொல்காப்பியரின் இலக்கணக் கொள்கைபற்றி ஆராய்ந்த பகுதியில் (2) அவருடைய இலக்கணக் கொள்கையின் கீழ்நிலை அலகு எழுத்து என்றும், மேல் எல்லை உலகப் பொருண்மை அமைப்பு என்றும் பார்த்தோம். எனவே தொல்காப்பியம் என்ற இலக்கண நூலின் கீழ்நிலை அல்லது அடிப்படை அலகு களாகிய எழுத்துக்கள் பற்றிய செய்திகள் நூல் முழுமைக்கும் பொதுவானவையாக ஆகி விடுகின்றன. எழுத்துக்களின் தொகை, வகை, அளபு, வரிவடிவு, அடுத்தநிலை அலகுகளாகிய சொற்கள், தொடர்களின் பகுதியாக வரும்பொழுது அவற்றின் வரன்முறை (Distribution) அல்லது மயக்கம் ஆகியவை நூன் முழுமைக்கும் உரியவை. இப் பொதுச்செய்திகள் நூன் மரபு என்ற எழுத்ததிகார முதல் இயலில் பேசப்படுகின்றன.

நூன் மரபு தொல்காப்பியம் என்ற நூல் முழுமைக்கும் 'மரபாம் துணைக்கு வேண்டுவனவற்றைத் தொகுத்து உணர்த் துவது' என்ற கருத்தினை உரையாசிரியர்களுள் நச்சினார்க் கினியர் கொண்டுள்ளார். (தொல். எழுத்து. 1 உரை). எழுத் திலக்கணத்தைத் தொகுத்து உணர்த்துவது என்ற கருத்து இளம்பூரணர் கருத்து. சிவஞான முனிவரும் (ஆறுமுக நாவலர் பதி. 1956; 26, 27), அவரைத்தழுவிச் சுப்பிரமணிய சாஸ்திரி யாரும் (1937:3) இவ்வியல் நூற்கு இன்றியமையாத மரபு பற்றிய பெயர் அல்லது குறியீடுகளை உணர்த்துவது என்று கூறு கின்றனர். இக் கட்டுரையாசிரியரின் "தொல்காப்பியத்தில் நூன் மரபின் இடமும் சிறப்பும்" என்ற கட்டுரை (19>4) இவ்வேறு பட்ட கருத்துக்களை ஆராய்ந்து நூன்மரபு நூல் முழுமைக்கும் பொதுவானது என்ற கருத்தை நிறுவியுள்ளது.

எழுத்ததிகாரக் கருத்தை மட்டும் உணர்த்தும் இயலை நூன்மரபு என்றல் பெயர்ப் பொருத்தமற்றது (சிவஞான முனிவர்) என்பதுடன் பிறப்பியல், புணரியல் செய்திகள் பேசப் படாமையால் எழுத்ததிகாரக் கருத்துக்களின் தொகுப்பு என்ற கருத்து பொருத்தமில்லை. மரபு பற்றிய பெயர்கள் அல்லது

குறிகளில் நூல் முழுவதற்கும் உரியவை இவ்வியலில் உணர்த்தப் படவில்லை. எழுத்ததிகாரத்திலேயே மற்ற இயல்களில் வழங்கப் படுபவை உணர்த்தப்படவில்லை. எனவே இக்கருத்தும் பொருத்தமற்றதாகும். நூல் முழுவதற்கும் உரியது இவ்வியல் என்ற கருத்து தொல்காப்பியரின் நூல் பற்றிய கொள்கையின் அடிப்படையில் (பொருள். 468-474) பொருத்தமுடையதாகும். அவர் கூறும் நூல் வகைகளுள் தொல்காப்பியம் சூத்திரம், ஓத்து, படலம் என்ற மூன்றுறுப்பு களை உடைய பிண்டவகை நூலாகும் (பொருள். 474). எனவே நூல் என்ற சொல் அவர் கருத்துப்படி தொல்காப்பியம் முழு வதையும் குறிப்பதாகக் கொள்வதே பொருந்தும். நூன் மர பில் கூறப்பட்ட செய்திகள் அடிப்படையிலும் இக் கருத்து பொருத்தமுடையதே. பெரும்பான்மையான செய்திகள் மூன் றதிகாரத்திற்கும் அடிப்படையானவை. வழக்கும் செய்யுளு மாய் அமைந்த மொழிக்குச் சொல், தொடர், அசை, சீர், அடி போன்ற மேல்நிலை அலகுகளை உருவாக்கும் அடிப்படை அலகுகள் எழுத்துக்கள்; ஆகையால் அவற்றின் தொகை, வகை, முதலிய செய்திகள் அடிப்படையானவை. சில செய்திகள் பிற அதிகாரங்களை எதிர்நோக்கி நூன் மரபில் சொல்லப் பட்டவை. அளபடை பற்றிய செய்தி (எழு. 6, 41) சொல்லதி காரத்தில் விளிமரபினையும் (சொல். 125, 135, 141, 149, 152) பொருளதிகாரத்தில் செய்யுளியலையும் (பொரு. 325, 394, 402, 514, 520) எதிர்நோக்கியே சொல்லப்பட்டது. எழுத்ததி காரத்தில் பயன்படாதது. வேறு சில செய்திகள் பிற அதி காரங்களில் மாட்டெறியப்பட்டோ மாட்டேறின்றியோ பயன் படுபவை.

எழுத்தும் மாத்திரையும் செய்யுள் உறுப்புகளாகக் கூறப் பட்டாலும் (பொருள். 310) அவை மீண்டும் விளக்கப்படாமல் "மேற்கிளந்தனவே" (பொருள். 311.) என மாட்டெறியப் படுகின்றன. அசை, அடி, தொடை முதலியவை நூன் மரபில் வரையறுக்கப்பட்ட குற்றெழுத்து, நெட்டெழுத்து, ஒற்று இவற்றைப் பயன்படுத்தியே செய்யுளியலில் விளக்கப்படு கின்றன. சொல்லதிகாரத்திலும் உயிர் (126) மெய் (128) குற்றியலுகரம் (123) போன்ற பல எழுத்துக்களும் நூன்மரபில்

கூறப்பட்டவை சொல்லிலக்கணம் கூறப் பயன்படுகின்றன. இவ்வடிப்படையில் நூன்மரபு மூன்றதிகாரங்களுக்கும் பொது வாய் அடிப்படையாய் அமைந்து எழுத்ததிகாரத்திற்கும் தோற்றுவாயாய் அமைந்து எழுத்ததிகார அமைப்பில் தனிச் சிறப்புடைய ஒரு பகுதியாய் அமைகிறது.

5.2. மொழி அல்லது சொல்லின் எழுத்தமைதி—மொழி மரபு

தொல்காப்பிய இலக்கணக் கொள்கைப் பின்னணியில் மொழி அல்லது சொல் ஓர் இடைநிலை இலக்கண அலகாக (Middle level Grammatical unit) இருப்பினும் வேறொரு வகை யில் சிறப்பிடம் உடைய அடிப்படை அலகாகும். சொற்களே தொடர்களை உருவாக்குபவை. எழுவாய், செயப்படுபொருள் போன்ற இலக்கண உறவுகள் கொள்பவை. இவ் வடிப்படை யில் இவைகளே முக்கிய செயற்பாடுடைய அலகுகள். இவ்வாறு பயன்படுபவை பெயரும் வினையுமாகிய முழுச் சொற்களே. (ஒ. நோ. மீனாட்சிசுந்தரனார். 1974). ஆனால், தொல்காப் பியர் சொல் என்ற பெயரைப் பெயர்ச்சொல், வினைச் சொற் களை மாத்திரமன்றி, விகுதிகள், உருபுகள், சாரியைகள் போன்ற பலவகை இடைச் சொற்களையும் உரிச்சொற்களை யும் குறிக்கப் பயன்படுத்துகிறார். எனவே, இம் மயக்கம் தவிர்க்க எழுத்ததிகாரத்தில் மொழி என்ற சொல்லை வாக் கியத்தின் பகுதியாய் வரும் முழுச் சொற்களை மாத்திரம் குறிக்கப் பயன்படுத்துகிறார். இதுவே அவர் கொள்கை என் பது, அ, இ, உ, கு போன்ற குறிலாய் அமைந்த இடைச்சொற் கள் இருக்கவும் குற்றெழுத்தைந்தும் மொழி நிறை பிலவே (எழுத்து. 44) என விதி கூறியதிலிருந்தும் (ஒ. நோ. சண்முகம், 1980:165) புணரியலில், நிறுத்த சொல்லும் குறித்து வருகிளவியுமாய் நின்று புணர்வன பெயரும், வினை யுமே (எழுத்து. 109) எனக் கூறுவதிலிருந்தும், மரூஉ மொழி யாய்ப் புணரியல் நிலையில் உணரத் தோன்றாதனவற்றுள் ''குறிப்பினும் பண்பினும் இசையினும் தோன்றி, வெளிப்பட வாராக் குறைச் சொற்கிளவி''யாகிய (எழுத்து. 482) உரிச் சொற்களையும் சேர்ப்பதினின்றும் (ஒ.நோ. சொல். 297) புல

னாகும். அம் முழுச்சொற்கள் அல்லது மொழிகளை, இங்கு எழுத்ததிகாரத்தில் எழுத்தியற் சொற்கள் அல்லது ஒலியன் நிலைச் சொற்களாகக் (Phological words) கொண்டு, அவற்றை எழுத்தடிப்படையில் வகைப்படுத்தி அவற்றின் எழுத்தமைதியை இரண்டாவது இயலாகிய மொழிமரபில் விளக்குகிறார் தொல் காப்பியர். மேலே, புணர்ச்சியைப் பற்றிப் பேசும் இயல்களில் மொழிகளின் எழுத்தமைப்பில் நிகழும் மாற்றங்களை விளக்கு முன் அவ்வமைப்பை உணர்ந்து கொள்வது இன்றியமையாத தாகையால் அதனை இங்கு விளக்குகிறார். இவ்வியலே எழுத் ததிகாரத்திற்கே உரிய செய்திகளைப் பேசும் முதல் இயலாக அமைகிறது. இவ்வியலில் கூறப்படும் ஓரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொருமொழி, தொடர்மொழி போன்ற சொல் வகை களும் மற்ற செய்திகளும் எழுத்ததிகாரத்தில் மாத்திரமே, பயன்படுகின்றன. நூன்மரபில் கூறிய எழுத்து வகைகள், சொல்லதிகாரத்திலும் பொருளதிகாரச் செய்யுளியலிலும் பயன்படுவது போல் இவை பயன்படுவதில்லை.

எனவே நூல் முழுமைக்கும் உரியதாகக் காட்டப்பட்ட நூன் மரபிலிருந்து வேறுபட்டு, எழுத்ததிகாரத்திற்கே உரிய தாய் அமைந்து, புணர்ச்சியில் பங்கேற்கும் எழுத்தியற் சொல் லின் எழுத்தமைதியைவிளக்கிப் புணர்ச்சிக்குரிய நிலைக்களத்தை உருவாக்கும் இவ்வியல் எழுத்துக்களின் ஒலிப்பு முறை பற்றிப் பேசும் பிறப்பியல், இருமொழிப் புணர்ச்சி பேசும் புணரியல் களிலிருந்து வேறுபட்டுத் தனிப் பகுதியாய் விளங்குகிறது.

குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற 'சார்ந்து வரல்மரபின்' மூன்றும் மொழி அல்லது சொல்லமைப்பின் அடிப்படையில் விளக்கப்பட வேண்டுவனவாதலின் இவ்வியலில் முதலில் விளக்கப்பட்டன (எழுத்து. 34—40) அளபெடையும் மொழி அல்லது சொல்லில் குன்றுவதான ஓசையின் அடிப் படையில் விளக்கப்படுவதால் (எழுத்து. 41,42) இங்கு பேசப் பட்டது.

5.3. எழுத்தின் ஒலிப்பு முறை

தொல்காப்பிய எழுத்ததிகாரப் பிறப்பியல் காட்டும்

ஒலியியல் கொள்கை இன்றைய மொழியியல் கண்ணோட்டத்தில் மிகச் சிறப்புடையது என முருகையன் (1972) நிறுவியுள்ளார். ஆனால், தொல்காப்பியரின் இலக்கணக் கொள்கைக் கண்ணோட்டத்தில் இலக்கண அமைப்பில் பிறப்பியலின் இடம் என்ன என்ற வினாவுக்கு விடையாகத் தொல்காப்பியர் பிறப்பியல் அல்லது எழுத்தின் ஒலிப்பு பற்றிய செய்திகளை மொழியமைப்பின் பகுதிகள் அல்லது நிலைகளுள் ஒன்றாகக் கருதவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. எழுத்து நிலை அல்லது ஒலியன் நிலையே அவருக்கு அடிப்படையானது. அவ்வெழுத்துக்களாகிய கீழ்நிலை அலகுகளின் ஒலிப்பு விளக்கம் (phonetic interpretation) கூறும் பகுதியே பிறப்பியல். பிறப்பியல், மொழி மரபினையடுத்து வைக்கப்பட்ட வைப்பு முறை பற்றிய உரையாசிரியர், இன்றைய ஆய்வாளரிடையே உள்ள கருத்து வேறுபாடுகளே இதனைக் காட்டும். இவ்வைப்பு முறை, மொழியமைப்புமுறைக் கண்ணோட்டத்தில் பொருத்தமற்றது எனச் சண்முகம் (1980:37–42) கூறியதை முன்பு (4) கண்டோம்.

இன்றைய மொழியியல் ஆய்வாளரில் அமைப்பு முறை மொழியியலார் (structural linguists) ஒலியன்களின் மாற்றொலிகளை (allophones) விளக்கும்பொழுது அவற்றின் ஒலிப்பை முற்றிலும் விளக்குவர். பிறப்பியல் அவ்வாறு அமையவில்லை. மாற்றொலிகள் என்று கருதத்தக்க ஒலி வேறுபாடுகளைத் தொல்காப்பியர் பேசவில்லை. உகரத்தின் மாற்றொலி என்று கருதத்தக்க குற்றியலுகரத்தைப் புணர்ச்சியில் அதற்குரிய சிறப்பிடத்தைக் கருத்தினில் கொண்டு, மற்ற எழுத்துக்களோடு ஒரு தன்மையுடைய ('எழுத்தோரன்ன' எழுத்து.2) தனி எழுத்தாகவே கருதுகிறார். (ஒ. நோ. பாலசுப்பிரமணியன், 1972:65; சண்முகம், 1980:75–78). ஐகாரம் (57) மகரம் (13, 51, 52, 331, 332) ஆகியவை குறுகுமிடங்களையும் அதாவது அவற்றின் மாற்றொலிகள் எனக் கருதத்தக்க ஒலி வேறுபாடுகளைப் பிறப்பியலில் பேசாமல், நூன்மரபு, மொழிமரபு, புள்ளி மயங்கியல் ஆகிய இடங்களில் பேசுகிறார். எனவே, பிறப்பியல் மாற்றொலிகளின் ஒலியியல்பு கூறும் பகுதி அல்ல என்பது தெளிவு.

மாற்றிலக்கண முறை மொழியியலார் (Transformational Generative grammarians) ஒலியியற் செய்திகளை எழுத்தியல் பகுதியின் இறுதியில் மொழியின் எழுத்தமைப்பு, புணர்ச்சி விதிகள் ஆகியவற்றை விளக்கிய பின் இறுதி நிலையாக (output)க் கூறுவர். தொல்காப்பிய எழுத்ததிகாரம் இம்முறையின் ஒலியனியல் பகுதியைப் பெரிதும் ஒத்திருப்பினும் (ஓ. நோ. பாலசுப்பிரமணியன், 1972) ஒலிப்பு முறை கூறுமிடத்தில் வேறுபட்டு விளங்குகிறது. எனவே, மொழியமைப்புக் கண்ணோட்டத்தில் பிறப்பியலின் இடத்தை விளக்க இயலாதென்பது உறுதியாகிறது.

இப்பகுதியின் தொடக்கத்தில் கூறியது போல, பிறப்பியல் எழுத்துக்களின் ஒலிப்பு முறையைக் கூறும் விளக்கப் பகுதியே என்று கொண்டால் அதன் இடத்தை மொழியமைப்பு முறைக் கண்ணோட்டத்தில் பார்க்காமல் இலக்கணம் கூறும் முறை அல்லது விளக்க முறைக் (descriptive technique) கண்ணோட்டத்தில் பார்ப்பது பொருத்தமாக இருக்கும். இவ்வடிப்படையில், நூல் முழுவதற்கும் உரிய எழுத்து பற்றிய செய்திகளை நூன் மரபில் கூறி மொழியின் எழுத்தமைதி மொழி மரபில் கூறியபின், மொழிகள் புணரும் போது நிகழும் எழுத்து மாற்றங்களைப் புணரியல்களில் விளக்கு முன் இவ்விரு பகுதிகளுக்கும் பயன்படும் வகையில் சிங்க நோக்காக இவற்றின் இடையில் எழுத்துக்களின் ஒலிப்பு முறையை விளக்கும் பிறப்பியலை வைத்தார் என்று கொள்வது பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. இங்கு வைப்பு முறையின் நோக்கம், விளக்க வசதியே. மொழி அமைப்பு முறை அல்ல.

5.4. புணர்ச்சி அல்லது தொடரின் எழுத்தமைதி

எழுத்ததிகார அமைப்புத் தருக்க முறை ஆய்வில் சிக்கல் இல்லாத பகுதியாகப் புணர்ச்சி பற்றிப் பேசும் ஆறு இயல்களும் அமைந்து விளங்குகின்றன. மொழிமரபில் எழுத்தமைதி விளக்கப் பெற்ற சொற்கள் தொடராகும்பொழுது அவற்றின் எழுத்தமைதி மாற்றமின்றி இயல்பாகவோ மூவகைத் திரிபுகளைக் கொண்டோ அமையும். (எழுத்து 109, 110) இதனை

ஆறு இயல்களில் விளக்குகிறார் தொல்காப்பியர். இவ் ஆறு இயல்களையும் அவை கூறும் செய்திகளின் அடிப்படையில் மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம் (1) புணர்ச்சியின் பொது விலக்கணம் கூறும் புணரியல். (2) மற்ற இயல்களில் கூறப் படும் புணர்ச்சியிலக்கணத்தைத் தொகுத்தும் அவற்றில் கூறப்படாத வருமொழித் திரிபு அவற்றில் கூறப்பட்ட விதி களுக்கு மாறுபட்டுப் புணர்வன ஆகியவற்றைத் தொகுத்தும் கூறும் தொகை மரபு. (3) இவ்வாறு தொகுத்துக் கூறப்பட்ட வற்றை விரித்து வேற்றுமை உருபுப் புணர்ச்சியில் நிகழும் மாற்றங்கள், ஈறுதோறும் நிகழும் நிலைமொழிப் புணர்ச்சி ஆகியவற்றைப் பேசும் உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகியவை.

இவற்றுள் மூன்றாம் பகுதியாகிய விரிவிலக்கணம் அகப் புணர்ச்சி பற்றிப் பேசும் உருபியலை, ஓர் உட்பகுதியாகவும் புறப்புணர்ச்சி பேசும் மற்ற மூன்று இயல்களை மற்றொரு உட்பகுதியாகவும் கொண்டுள்ளது.

முன், (2) கூறப்பட்டது போலத் தொடரியல் அடிப்படையில் தொல்காப்பிய எழுத்ததிகாரத்திற்கும் மேல்நிலை அலகு, தொடர் அல்லது வாக்கியமே. இவ்வடிப்படையில் புணர்ச்சியும் பெரும்பாலும் சொற்கள் புணரும் போது நிகழும் புறப்புணர்ச்சியையே குறிக்கிறது. வினைச் சொல்லில் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை புணரும்போது நிகழும் அகப்புணர்ச்சி தொல்காப்பியரால் பேசப்படவில்லை (நன்னூ லில் பதவியலில் ஆராயப்படுகிறது). ஆனால், உருபியலில் பெயரொடு வேற்றுமை உருபுகள் சேரும்பொழுது நிகழும் அகப் புணர்ச்சி மட்டும் ஆராயப்படுவதற்குக் காரணம் தொல் காப்பியர் முன் கூறியது போல இலக்கணம் முழுவதையும் வேற்றுமையின் அடிப்படையில் வேற்றுமை, அல்வழி என்று பகுப்பதேயாகும். அவருடைய இலக்கணக் கொள்கைப் பின்ன ணிக்கு இது பொருத்தமானதே.

புறப்புணர்ச்சி பேசும் பகுதியில் உயிரீற்றுச் சொற்கள் புணரும் புணர்ச்சி உயிர் மயங்கியலிலும், உயிராயினும், புணர்ச்சியில் அதன் சிறப்பியல்பு கருதியே தனி எழுத்தாக

வகுக்கப்பெற்ற குற்றியலுகர ஈற்றுச் சொற்களின் புணரும் முறையைக் குற்றியலுகரப் புணரியலிலும் விளக்குகிறார் தொல் காப்பியர்.

மேல் கூறப்பட்டவற்றிலிருந்து, தொல்காப்பிய எழுத்ததி கார அமைப்புத் தருக்க முறை, நூல் முழுமையின் கொள்கைப் பின்னணி, விளக்க வசதி இவற்றின் அடிப்படையில் அமைந்தது என்பது தெளிவாகும்.

மேற்கோள் நூல் கட்டுரைப் பட்டியல்

1. அகத்தியலிங்கம், ச. (1969), "Tolkappiyar's treatment of syntax", **ஆராய்ச்சி** 1, பக் 238—48.
2. ஆறுமுக நாவலர், (பதி.) (1956), **சிவஞான சுவாமிகள் அருளிச் செய்த தொல்காப்பியச் சூத்திர விருத்தி**, சென்னை.
3. சண்முகம், செ. வை. (1972) "வேற்றுமை பற்றித் தொல்காப்பியர்", **தொல்காப்பிய மொழியியல்**, பக். 267 — 308, அண்ணாமலைநகர்.
4. சண்முகம், செ. வை. (1980) **எழுத்திலக்கணக் கோட்பாடு** அண்ணாமலைநகர்.
5. சுப்பிரமணிய சாஸ்திரி, (1937) **தொல்காப்பியம் எழுத்ததி காரம், குறிப்புரை**, திருச்சிராப் பள்ளி.
6- தொல்காப்பியம், எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரை, (.955), கழகம், சென்னை.
7. தொல்காப்பியம், எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரை, (1961), கசிகம், சென்னை.
8. தொல்காப்பியம், சொல்லதிகாரம் சேனாவரையம், (1966), கழகம். சென்னை.
9. தொல்காப்பியம், சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரை, (1929), கரந்தை.

10. தொல்காப்பியம், பொருளதிகாரம் — இளம்பூரணம், (1969), கழகம், சென்னை.

11. பாலசுப்பிரமணியன், க. — (1972). "தொல்காப்பியரின் ஒலியனியல் கொள்கை", **தொல்காப்பியமொழியியல்**, பக். 51—62.

12. பாலசுப்பிரமணியன், க. — (197?), "Concept of sentence structure in Tolkappiyam", **Studies in Early Dravidiam Grammars**, P. 23—38, Anna malainagar.

13. பாலசுப்பிரமணியன், ச. — (1982) "A Comparative study of the Grammatical traditions repre sented in Tolkappiyam and Asta: dhya:yi:- Seminar on Indian Grammatical tradition, Tamil University, Thanjavur.

14. பாலசுப்பிரமணியன், க. — (1978), "தொல்காப்பியத்தில் நூன்மரபின் இடமும் சிறப்பும்" **"தமிழ்க்கலை"**, பக். 71—82, தஞ்சாவூர்.

15. மீனாட்சிசுந்தரம், தெ. பொ. — (197?), **"உரிச்சொல்"**, **இலக்கண ஆய்வுக் கட்டுரைகள்-1**, பக். 121—178, அண்ணாமலைநகர்.

16. முருகையன், க. — (1972), "தொல்காப்பியரின் ஒலியியல் கொள்கை", **தொல்காப்பிய மொழியியல்**, பக். 1—50, அண்ணாமலைநகர்.

17. வேங்கடராஜுலு, ரெட்டியார், வே. — (1944) **எழுத்ததிகார ஆராய்ச்சி**, சென்னை.

18. Fillmore, C. J. — (1968), "The case for case", Universals in Linguistic Theory PP. 1—88, (Ed.) Bach and Harms, New York.

10. தொல்காப்பியம் பொருளதிகாரம்

துரை. பட்டாபிராமன்

கே. சீனிவாசசர்மா

தமிழிலக்கண நூல்களுள் தலையாயது தொல்காப்பியம். இத் தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றுஅதிகாரங்களை உடையது. எழுத்தும் சொல்லும் தமிழ் மொழியின் அமைப்புச் சிறப்பினை விளக்குவன. பொருளதிகாரம் ஒன்றே தமிழர்தம் வாழ்வியல் படிநிலைகளை மரபியலோடு ஒட்டிப் பேசுவனவாய் அமைந்துள்ளன.

தொல்காப்பியப் பொருளதிகாரம் விரிவாக ஆராயத்தக்கவொன்றாம். பல்வேறு நிலைகளில் இதன் பகுதிகள் ஆய்வு நோக்கில் அமைந்துள்ளன. வடமொழிக் கொள்கையோடு தொல்காப்பியப் பொருட் பகுதிகளை இணைத்துக் காணும் சிறு முயற்சியே இக்கட்டுரைக்கண் மேற்கொள்ளப் பெறுகின்றது. அதனான் தொல்காப்பியப்பொருளதிகாரஇயல்களைப் பற்றிய பார்வை, அவ்வியல்கட்கு எழுதப்பட்ட உரைகட்கிடையே காணப்படும் வன்மை மென்மைகள் ஆகியவை இக்கட்டுரைக்கண் சிந்திக்கப்படவில்லை.

பின்வரும் தலைப்புக்களில் இவ்வாய்வு நிகழ்த்தப்பெறுகின்றது (வடமொழிக் கருத்துக்களின் அடிப்படையில்)

1. தலைவன் – தலைவியர் பற்றிய வரையறை.
2. மன்றல் எட்டாவன:
3. நால்வருணப் பாகுபாடு.
4. கொடைக்குறி மரபினோர்
5. ரஸங்கள் (மெய்ப்பாடுகள்)
6. உபமான உபமேயம்.
7. தொனிப் பொருள்.

தலைவன் தலைவியர் பற்றிய வரையறை

உலகத்துப் பொருள்களை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்றாகப் பகுத்தனர்.[1] அவற்றை அகம், புறம் என இரண்டாக்கினர். முதற்பொருள் எனப்படுவன நிலமும் காலமும் ஆகும். கருப்பொருளாவன உயிர்ப்பொருளும் உயிரல் பொருளும் ஆகும். உரிப்பொருளாவன, அறஞ்செய் தலும் பொருளீட்டலும் இன்பம் நுகர்தலுமாகிய ஒழுகலாறு கள் எனப்படும். முதற்பொருளின் ஒரு கூறாகச் சொல்லப் பெறும் நிலம் என்பது ஐவகையாகின்றது.[2] ஐவகை நிலத் திற்கும் உரியார் அவ்வவ் நிலமக்களாகி விடுகின்றனர். தலைமை பற்றிப் பெயர் பெறும் தலைமக்கள் திணைப்பெயரான் அன்றி இயற்பெயரான் சுட்டிக் கூறப் பெறார்.[3]

கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என அகத்திணை ஏழாகப் பிரிபடும்.[4] அகத்திணைக்குரியார் தலைமக்கள் எனச் சுட்டப் பெற்றனர். கிழவன் - கிழத்தி எனும் சொல்லாட்சி இதன்வழி எண்ணப் பெற்றது.[5] தலைமகன் - தலைமகள் எனும் வழக்குண்மையும் ஈண்டு எண்ணத்தக்கது.

தலைவன்

தலைவர்களைத் 1. தீர உதாத்தன் 2. தீர உத்ததன் 3. தீர லலிதன் 4. தீர சாந்தன் என நால்வகையாகப் பகுப்பர். அவர் கள் பெண்டிர்பால் கொள்ளும் உறவுகாரணமாக 1. அனு கூலர், 2. தக்ஷிணர், 3. திருஷ்டர், 4. சடர் என நால்வகையாக மேலும் கருதப்படுவர்.

விளக்கம்: காவிய இராமன்போன்று ஒரே தலைவியிடத்து மட்டுமே உறவு கொள்பவர் அனுகூலர் எனப்படுவர்.

தலைவியர் இருவரிடத்தும் ஏற்றத்தாழ்வின்றி ஒரே வித மான உறவு கொள்பவர் தக்ஷிணர் எனப்படுவர்.

திருஷ்டர் என்பார், பிறர் அறியா வண்ணம் வேறொருத் தியுடன் தொடர்பு கொள்பவர். தனக்குரிய தலைவி தன்னைப்

பற்றிய புறத்தொழுக்கினை அறிந்தும் கூட நாணம் கொள்ளாதவர்.

சடனாவான், தலைவிக்குச் சற்றும் அடிபணியாதவன்; தலைவியை ஏமாற்றும் எண்ணத்துடன் வேறொரு தலைவியோடு உறவு கொள்பவன்.

எனவே வடமொழியாளர் எண்ணப்படித் தலைவர்கள் நால்வகையாயினமையும், பின்னர் அவர்கள் அனுகூலர் முதலாகக் கருதப்பட்டமையும் கருதத்தக்கன. அடிப்படை நால்வகையோடு இந்நால்வகையினர் ($4 \times 4 = 16$) பதினாறு வகையாகின்றனர். அவரவர் வாழ்க்கைத் தரம் பற்றி மேலும் 1. உத்தமம் 2. மத்யமம் 3. அதமம் என மூவகையாகப் பகுக்கப்பட்டனர். முன்னைய பதினாறு வகையினரொடு இம்மூவகையினரை உறழ்ந்து பார்க்கின்றபோது தலைவனை நாற்பத்தெட்டாக ($16 \times 3 = 48$) எண்ணிய முறை தெரிகிறது

தலைவியர்

தலைவனொடு இணைந்து பழகும் தலைவியர் காதற் கிழத்தி, காமக்கிழத்தி, பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தி எனப் பெயர் பெற்றனர். தொல்லிலக்கணம் தலைவியரைத் தலைமகள் என்றே குறித்தது. வடமொழியாளர் தலைவியரை 1. ஸ்வீயா 2. பரகீயா 3. ஸாதாரணி எனக் குறித்தனர். இம்மூவகைப் பிரிவிற்கும் சில அடிப்படைக் கொள்கையிருந்தது.

தலைவனை மணந்து உடனுறையும் தலைவி ஸ்வீயா எனப்பட்டனள். தன்குடிப் பிறந்த பெண்ணையே தலைவியாகக் கொண்டனர்.

பிறர்மனைக்குரியவள் பரகீயா எனப்பட்டனள்.

பொதுமங்கையெனப்படும் வேசி ஸாதாரணீ எனப்பட்டனள்.

திவ்யா என்பவள் நான்காவது பிரிவாகக் கொள்ளப் பட்டனள். ஊர்வசி போன்றோரை ஒரு பிரிவினராகக் கொள் வாரும் உண்டு.

வயதின் அடிப்படையில் தலைவியர் முக்தா, மத்யா, ப்ரௌடா என மூவகையாகப் பிரிக்கப்பட்டனர்.

தலைவன்பாற் பெறும் உறவு கொண்டும் தலைவியர் எட்டுவகையாகப் பிரிக்கப்பட்டனர்.

1. வாஸகஸஜ்ஜா
2. விரஹோத் கண்டிதா
3. ஸ்வாதீன பதிகா
4. கலஹாந்தரிதா
5. கண்டிதா
6. விப்ரலப்தா
7. ப்ரோஷித பர்த்ருகா
8. அடிஸாரிகா

என்பன அவை. இவர்கள் பெரும்பாலும் உயர்ந்த, தாழ்ந்த, நடுத்தர வகுப்பைச் சார்ந்தவராய் இருந்தனர்.

இங்ஙனமாகத் தலைவன் தலைவியரைப் பற்றிய நலப் பாடுகளை நாடகங்களின் வாயிலாக இனங்கண்டு கொள்ள முடிகின்றது. காவியங்களின் வழி அவ்வாறு இனங்காண இயலாதென்பர்.

மன்றல் எட்டாவன

ஒருவன் ஒருத்தி என்னும் இருவரிடையே உண்டாகும் கூட்டுறவைக் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை எனப் பகுத்துரைத்தல் தமிழ்மரபு. பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என எண்வகையாகப் பகுத்தோதல் வடநூல் மரபாகும்.

மறையோர்க்குரிய நூலிற் சொல்லப்பட்ட இவ்வெட்டு மணங்களையும் முறையே அறநிலை, ஒப்பு, பொருள்கோள், தெய்வம், யாழோர் கூட்டம், அரும் பொருள் வினைநிலை, இராக்கதம், பேய் நிலை என மொழிபெயர்த்து வழங்குவர். இவையெட்டும் வடமொழியாளர்க்கே உரியன என்பார் மறையோர் தேஎத்து மன்றல் எட்டு என்றார் தொல்காப்பியர்.[6] எனவே இவ்வெண்வகை மணமுறைகளும் தமிழர்க்கு உரியனவல்லவென்பது போதரும்.

இவ்வெண்வகை மணங்களைப் பற்றிய கருத்துக்களைத் தொல்காப்பியர் களவியல் எனும் பகுதியில் உணர்த்துகின்றார். களவாவது பிறர்க்குரிய பொருளை வஞ்சனையாற் கவர்ந்து கொள்ளுதலாகிய உலகியற் களவல்ல. தலைவனும் தலைவியும் நல்லூழின் செயலால் தாமே எதிர்ப்பட்டு உலகத்தார் அறியாது மறைந்தொழுகுதல் ஆகும். பிறர் அறியாமல் உளங் கலந்து பழகும் பெருங்கேண்மையாதலால் இக்களவு அறத்தின் பாற்பட்டது. இக்களவினை மறைந்தவொழுக்கம், மறை, அருமறை என்ற சொற்களால் வழங்குவர் தொல்காப்பியர்.[7] தமிழர் கூறும் களவொழுக்கமோ அன்பின் மிகுதியால் தான் அவள் என்னும் வேற்றுமையின்றி இருவரும் ஒருவராய் ஒழுகும் உள்ளப்புணர்ச்சியேயாகும். உள்ளப்புணர்ச்சி நிகழ்ந்த பின்னர் ஒருவரையொருவர் மணந்து வாழும் கற்பென்னும் திண்மை தமிழர் ஒழுகலாறாகிய களவொழுக்கத்தின் முடிந்த பயன் என்பர். கந்தருவப்புணர்சசி மெய்யளவில் நிற்பது. என்றும் கற்பினின்று வழுவாமல் அன்பினாற் இணையும் உள்ளப் புணர்ச்சியே களவொழுக்கத்தின் சிறப்பியல்பாகும். இதுவே தமிழியல் வழக்கமாகிய களவுக்கும் வடநூல் மணமாகிய கந்தருவத்துக்கும் உள்ள அடிப்படை வேறுபாடாகும்.

வடநூலார், கன்னிப்பெண் மணப்பெண்ணாகின்ற தன் மையைச் சுட்டுகின்றனர். கண்-மனம் ஆகிய இரண்டற்கும் இனியவள்; மணந்தோ வேறுவகையிலோ முன்னர் வேற்று மனிதரை அணுகாதவள்; வயதால் இளையவள்; நோயற்றவள்; சகோதரன் உள்ளவள்-எனக் கன்னித்தன்மையைப் படம் பிடித்துக்காட்டுகின்றனர்.[8]

பிராமணரல்லாத க்ஷத்திரியப் பெண்ணாகில் மணமகன் பிடித்த அம்பைக் கையால் தொடவேண்டும். வைசியப் பெண்ணாகில் வரன் கையிலுள்ள அங்குசத்தையும், மற்ற கீழ் ஜாதிப் பெண்ணாகில் வரனின் துணித் தலைப்பையும் பற்றி யிருக்க வேண்டும் எனக் குறிக்கின்றனர்.

நால்வருணப் பாகுபாடு

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் எனும் நால் வருணப் பாகுபாடுகள் தமிழ் நிலத்துள் எவரால் புகுத்தப் பட்டது எனுங்கொள்கை இன்னும் அறிஞர் உலகின் கேள்விக் குறியாக உள்ளது. வேதமாந்தர், வேந்தர் என்போர் உயர்ந் தோர் எனக் குறிக்கப் பெறுவர். மேலோர், கீழோர் எனுஞ் சொற்களால் தொல்காப்பியர் இந்நால்வரையும் சுட்டுவர்.[9] ஓதல், காவல், தூது காரணமாகப் பிரியும் பிரிவினை இவர்கள் மேற்கொள்வர்.

ஒழுக்கம், தொழில் காரணமாக நால்வருணப்பாகுபாடு எழுந்தது எனக் கீதை மற்றும் சம்ஸ்கிருத நூல்கள் குறிப் பிடுகின்றன. அரசர், அந்தணர், வணிகரைப் பற்றி ரிக் வேதம் ஆழ்ந்து பேசும்.

கொடைக்குரி மரபினோர்

தலைவன் தன்னோடு அன்பு காட்டும் தலைவியைப் பெற் றோர் கொடுப்பப் பலர் அறிய மணந்து வாழும் மனை வாழ்க்கையே கற்பெனச் சிறப்பித்துரைக்கப் பெறும். இதனைக் 'கரணம்' என்ற சொல்லால் வழங்குவர்.[10] தலைமகளது மனத்தின்கள் அமைந்த கலங்கா நிலையாகிய திண்மையே கற்பெனப்படுகின்றது. தலைமகளது பெற்றோரது உடன் பாடின்றியும் உடன்போக்கின்கண் கரணம் நிகழ்தலுண்டு. இத்திருமணச் சடங்கு மிகப்பழைய காலத்தில் நாட்டில் எல்லா மக்களுக்கும் விதிக்கப்படவில்லை. மூவேந்தர் குடும்பத்திற்கே முதன்முதல் விதிக்கப் பட்டிருந்தது. கணவனும் மனைவியும் வாழ்தற்குரிய மணச்சடங்காகிய கரணத்தை வகுத்தமைத் தார்கள். களவு மணத்தில் பொய்யும் வழுவும் தோன்றாமை

பெறப்படும். அங்கி சான்றாக நிகழும் சடங்குமுறை தொல்காப்பியத்தில் கூறப்படவில்லை. எரிவலம் வருதல் என்பது ஓத்துடை யந்தணரால் அன்றி ஏனைய மக்களால் மேற்கொள்ளப்படாத சடங்காகும்.

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொடைக்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொளற்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"

எனுந் தொல்காப்பியச் செய்தி ஈண்டு நினைத்தல் தகும்.

கொடைக்குரி மரபினோர் இருமுதுகுரவர் முதலாயினார், தாயொடு பிறந்தாருந் தன்னையருந் தாயத்தாரும் ஆசானும் முதலியோர் என உரைவரைவர் நச்சினார்க்கினியர்.[11]

வடநூலாரின் கொள்கைப்படி தந்தை, பாட்டனார், சகோதரன், ஒரேகுடியிற் பிறந்த ஒருவர், தாய்வழிப் பாட்டனார், தாய் இவர்கள் கொடுத்தற்குரிய முறைமையினராவர். இவர்களுள் முன்னவர் இல்லையெனில் பின்னவர் கொடுக்கலாம் என்று எல்லா நீதிநூலாரும் கூறுவர். ஒருவனுக்கு மணமுடிப்பதாகப் பேசியபின் வேறொருவன் அப்பெண்ணைக் கவரலாகாது எனவும் ஒருமுறைதான் மணப்பெண் கொடுக்கப்படுதற்குரியவள் எனவும் கூறுவர். ஆனால் ஒருசாரார், முன் மணம்முடிக்கப் பேசியவனை விடக் குணம், அழகு, குடிப்பிறப்பு, கல்வி ஆகியவற்றில் மேம்பட்ட வரன் பின்னர்க் கிடைத்தால் மணம் முடிக்கலாமென்பர். இக்கொள்கை தவறானது என்பர் யாக்ஞவல்கியர். பிரமம் முதலிய ஐவகை மணங்களில்தான் மேற்படி கொள்கை பொருந்தும். அசுரம், இராக்கதம், பைசாசம் ஆகியவற்றிற்கு அக் கொள்கை பொருந்தாதென்பர் சிலர்.[12]

ரஸங்கள்

உலகத்தாரது உள்ள நிகழ்ச்சி அவரது உடம்பின்கண், தோன்றும் கண்ணீரரும்பல், மெய்ம்மயிர்சிலிர்த்தல், வியர்த்தல், நடுக்கம் முதலிய புறக்குறிகளால் காண்போர்க்குப் புலனாகுந் தன்மை மெய்ப்பாடெனப்படும். இதனைப் பொருளின் புலப்

பாடு எனப் பேராசிரியர் கருதுவர். இம் மெய்ப்பாடுகளைப் புலனெறி வழக்கமாகிய செய்யுளுக்குரிய உறுப்புக்களுள் ஒன்றாகக் கொள்வர் தொல்காப்பியர். நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை யெனச் சொல்லப்பட்ட எட்டும் மெய்ப்பாடெனப்படும்.

வடநூலார் மெய்ப்பாடுக்ளை ரஸங்கள் எனப் பெயரிட் டழைப்பர். அவை எட்டெனவும் ஒன்பதெனவும் கொள்ளப் பட்டன. 1. சிருங்காரம் 2. வீரம், 3. கருணை 4. அத்புதம் 5. ஹாஸ்யம் 6. பயானகம் 7. பீபத்ஸம் 8. ரௌத்ரம் எனவும், சாந்தம் என்ற ஒன்றனை இணைத்து ஒன்பதெனவும் உரைப்பர். இம்மெய்ப்பாடுகள் அனைத்தையும் நாடகங்களில் தான் காணமுடியும். காவியங்களில் ஒரு சில ரசங்களே கையாளப்பட்டுள்ளன எனவும் கருத இடமுளது. ரஸங்கள் ஒன்பதும் தோன்றுதற்குரிய காரணங்களை வடநூலார் குறிப்பிடுவர்.

1. விபாவம் 2. அனுபாவம் 3. வியபிசாரி பாவம் என்ற எண்ணக் கூறுகளின் மிளிர்ந்த அமைப்பே ரஸங்கள் தோன்று வதற்கு ஏதுவாயிற்று என்பர்.

விபாவம்

ஆலம்பனம், உத்தீபனம் என விபாவம் இருவகைப்படும். ஆலம்பனம் என்பது ஓர் ஆண் ஒருபெண் உறவுக்குரிய பற்றுக் கோடான அமைப்பு என்பர். உத்தீபனம் என்பது மாலை வேளை, தென்றல், நிலவு, தன்மை ஆகிய எண்ணங்களைத் தோற்றுவிக்கும் மற்ற உபகரணங்கள் என்பர்.

அனுபாவம்

ஆலம்பனம், உத்தீபனம் இவற்றின் அடிப்படையில் தோன்றிய மனவெழுச்சியை ஒருவர்க்கொருவர் புரிந்து கொள் ளும் வகையில் அமைக்கும் மெய்ப்பாடே அனுபாவம் எனப் படும். இம்மெய்ப்பாடு தொடர்ந்து அவ்வப்போது ஏற்படுவ துண்டு,

தொடர்ந்து ஏற்படும் மெய்ப்பாடுகள் அல்லாமல் வருவதும் போவதுமாக அமையும் மெய்ப்பாடுகளும் உண்டு. அவை முப்பத்திரண்டாகும். அவற்றை வியபிசாரிபாவம் என்பர்.

உறுதியாக உள்ள மனவெழுச்சி ஸ்தாயிபாவம் எனக் குறிக்கப் பெறும். காவிய, நாடக வளர்ச்சிக்கு இச்சுவை மிகுதியும் வேண்டப்படும்.

அனுபாவம் எளிதில் அமைவதாக இருக்க வேண்டும். வலிந்து அமைக்கப்படுவதன்று. ஒன்றற்கொன்று மாறான சுவையிடத்து விபாவம் அனுபாவம் அமையாதிருக்க வேண்டும். (எடுத்துக் காட்டாகச் சொல்ல வேண்டுமானால் சிருங்காரச் சுவைக்கு ரௌத்ரம், பீபத்ஸம் எனுஞ் சுவைகள் மாறானவை என்பர்).

சுவைகளில் தலையாய சுவைகளும், அங்கமாக அமைகின்ற சுவைகளும் உண்டு. சிருங்காரம் எனும்சுவை தலைமையாகின்ற போது ஹாஸ்யம், வீரமெனும் சுவைகள் அங்கமாக அமையலாம் என்பர். அங்கச் சுவையை மிகவாக வருணித்தல் கூடாது. சுவைக்கப்பட்டவற்றையும் மிகவாக வருணித்தல் தகாது.

தலையாய சுவையை அவ்வப் போது மிளிரச் செய்வதோடு அதைச் சற்றேனும் மறக்கவிடக் கூடாது என்பர். ஒன்றற்கொன்று எதிரான சுவைகளை ஒருங்கே வருணிக்க விரும்பினால் மாற்றுச் சுவையை இடையில் புகுத்தவேண்டும் அதாவது சிருங்காரமெனுஞ் சுவைக்கு எதிர்ச்சுவை ரௌத்ரம் என்றால் இடையில் அத்புதத்தையோ, ஹாஸ்யத்தையோ புகுத்தி எதிரிடையான சுவைகளை ஒருங்கே கையாள வேண்டும் என்பர்.

உபமான உயமேயம்

தொல்காப்பியர் அகத்திணையியலுள் உள்ளுறையுவமம், ஏனையுவமம் என உவமத்தினை இரண்டாக ஓதினர். உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் பெருக வழங்கும் ஏனையுவ

மத்தின் இயல்பினை உவமவியலிலும், செய்யுளுக்கேயுரிய உள்ளுறையுவமத்தின் இலக்கணத்தினைச் செய்யுளியலுடன் பொருந்துமாறு உவமவியலின் இறுதியிலும் வைத்தார்.

உவமை, உவமிக்கப்படும் பொருள் இரண்டும் முறையே உபமான உபமேயம் என்று வழங்கப்படும்.

பொருள் புலப்பாட்டினைச் செய்யும் கருவி என்ற முறை யிலேயே உவமையின் பகுதிகளைத் தொல்காப்பியர் உவமவி யலுள் விரித்துக் கூறுவர். பின் வந்த தண்டியாசிரியர் முதலி யோர் உவமையாகிய இதனைச் செய்யுட்கு அலங்காரமாகக் கொண்டு உவமையையும் ஓர் அலங்காரமாக்கித் தமது நூலில் சேர்த்தனர்.

காவியத்தின் அழகைக் கூட்டுவிப்பன குணங்கள் என்பார் வாமனர். அந்த அழகை மிகுவிப்பன அலங்காரங்கள் எனவும் அவர் குறிப்பிடுவர். எனவே குணங்களும் அலங்காரங்களும் காவியத்தில் இருக்க வேண்டிய அம்சங்களாகி விடுகின்றன. குணங்களைப் பத்தென்பர் பண்டைய வல்லுநர். ஆனந்த வர்த்தனர் போன்றோர் அவற்றுள் முக்கியமான 1. மாதுர்யம் 2. ஓஜம் 3. பிரஸாதம் என்ற மூன்றனைச் சுட்டிக்காட்டி அதுவே போதுமானதென்பர். மேற்படிக் குணங்கள் அமைந் துள்ளதை வெளிப்படுத்துவன எழுத்தொலிகள் என்பர்.

காவிய அழகை மிகுதிப்படுத்தும் இவ்வலங்காரங்கள் 1. சப்தாலங்காரம் எனவும் 2. அர்த்தாலங்காரம் எனவும் இருவகையாக அமையும்.

சப்தாலங்காரத்தில் சேகானுப்ராஸம், விருத்திஅனுப்ராஸம் என்பவை மிக முக்கியமானவை.

லாடானுப்ராஸம் என்ற ஒன்றை ஒருசாரார் கூறினும் அது முக்கியமானதாய் அமையவில்லை. மேலும் யமகம், ஒன்பது வித ச்லேஷம், கட்கபந்தம், முரஜபந்தம், பத்மபந்தம், ஸர்வதோபத்ரம் போன்ற சித்ராலங்காரங்களும் இதன்கண் அடங்கும்.

அர்த்தாலங்காரம்—உபமா

ஒரு பொருளை அழகான முறையில் மற்றொரு எடுத்துக் காட்டுப் பொருளோடு இணைத்துப் பேசுவதாகும். (முகம் சந்திரன் போன்றது என்பது •போலவாம்) இது . பூர்ணா, லுப்தா என இருவகைப்படும்.

பூர்ணாவென்பது 1. எடுத்துக்கொண்ட பொருள் 2. இணைத்துப் பேசும் எடுத்துக்காட்டுப் பொருள் 3. இரண்டினுக்கும் உள்ள ஒப்புமையைக் காட்டும் சாதாரணதர்மம் என்ற பொதுத்தன்மை 4. ஒப்புமைக்குறியான 'இவ' போன்ற சொல் ஆகியவை அமைந்தது. மேற்படி நான்கில் ஏதேனும் ஒன்று ஸமாசத்தினாலோ, தத்திதபிரத்யயத்தினாலோ, மறைவுபட்டுக் குறைந்தால் லுப்தோபமா எனப்படும். மம்மடர் என்ற பெரியோர் லுப்தோபமை 19 வகை என்று கணக்கிடுவர்.

தண்டியடிகள் காவ்ய தர்சத்தில் பின்வரும் முப்பத்திரண்டு உவமை வகைகளை வரைந்து காட்டுவர்.

1. தர்மோபமா
2. வஸ்தூபமா
3. விபர்யாஸோபமா
4. அன்யோன்யோபமா
5. நியமோபமா
6. அஞ்யமோபமா
7. ஸமுச்சமயாபமா
8. அதிசயோபமா
9. உத்ப்ரேக்ஷிதோபமா
10. அத்புதோபமா
11. மோஹோபமா
12. சம்சயோபமா
13. நிர்ணயோபமா
14. ச்லேஷோபமா
17. பிரசம்சோபமா
18. ஆசிக்யாஸோபமா
19. விரோதோபமா
20. பிரதிஷேதோபமா
21. சடுபமா
22. தத்வாக்யானோபமா
23. அசாதாரணோபமா
24. அபூதோபமா
25. அஸம்பாவிதோபமா
26. பஹூபமா
27. விக்ரியோபமா
28. மாலோபமா
29. வாக்யாந்தோபமா
30. ப்ரதிவஸ்தூபமா

15. ஸமாநோபமா
16. நிந்தோபமா
31. துல்யயோகி தோபமா
32. ஹேதூபமா

தொனிப்பொருள்

வடமொழியாளர் பொருள் உணர்ச்சிக்குத் துணை செய்யும் வண்ணம் தொனிப் பொருளினைக் கையாள்வர். இத்தொனிப்பொருளாய குறிப்புப் பொருளைக்கண்டு பிடித்தவர் எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த ஆனந்த வர்த்தனர். உள்ளுறை, இறைச்சி எனப்படும் வகைகளிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டது. காவியத்தில் இடம் பெறும் குணம், அலங்காரம் என்பன அதன் வெளிப்புற அம்சங்களாகி விடுகின்றன. ஆனால் அவற்றுள் இடம் பெறும் தொனிப் பொருள் என்பது அதன் சிறப்பம்சமாகவே அமைந்து கிடக்கின்றது.

தொனிப்பொருள் வியங்கியம் எனக் குறிக்கப் பெறும் வாச்சியம் என்ற சொல்லின் நேர் பொருளாக வியங்கியம் திகழ்வதில்லை. வாச்சியம் ஏவலாகு அமையும் போது வியங்கியம் எதிர்மறையாக அமையும். வாச்சியம் ஒரு பொருளைக் குறித்தெனில் வியங்கியம் வேறொரு பொருளைக் குறித்தமையும். ஆக வியங்கியம் எனும் தொனிப் பொருள் வாச்சியத்தினின்றும் வேறாதலை அறிய முடிகின்றது.

இலக்கணப் பொருளோ வெனின் அதுவுமில்லை என்று ஆனந்தவர்த்தனர் மறுத்து மூன்றாவதான வியங்கியப்பொருள் அமையும் என்பர். அது 1. அவிவக்ஷித வாச்சியம் 2 விவக்ஷிதான்யபரவாச்சியம் என இரு வகைப்படும். விவக்ஷிதான்ய பரவாச்யமென்ற் இரண்டாம் வகை 1. அஸம்லக்ஷ்யக்ரமத் தொனி 2. ஸம்லக்ஷிய கிரமத்தொனி என இருவகைப்படும். இவற்றுள் வாச்சியார்த்தம தவிர வேறுபொருள் தொனியாகக் கிடைக்கும் பொழுது ஏதோ ஒருவித முறை அமைவது தெரியும். அதாவது தாமரை இலைக்கட்டில் நூறாவது இலை வரை ஒரே நொடியில் ஊசியின் நுனி நுழைவது போன்று கிடைக்கப் பெறின் அஸம்லக்ஷயக்ரமத்தொனி என்றும் இவ்வாறன்றி அந்த வழிமுறை தெரிவதாயின் ஸம்க்ஷியக்ரமத்தொனி என்றும் கூறுவர்.



என்றிவ்வாறு அமையும்.

முடிபுகள்:

தலைவன் பெண்டிர்பால் கொள்ளும் உறவுகாரணமாகவும் அவரவர் வாழ்க்கைத் தரம் பற்றியும் வகைப்படுத்தப்பட்டுள்ள வடமொழிச் செய்திகள் இக்கட்டுரைக்கண் விளக்கப்பட்டுள்ளன. வயதின் அடிப்படையிலும் தலைவன் பாற்பெறும் உறவுகொண்டும் தலைவியர் பாகுபடுத்தப் படுகின்றமை சுட்டப்பட்டுள்ளது.

தமிழர் மணமுறையும் வடவர்மணமுறையும் அடிப்படையில் வேறுபடும் செய்தி சுட்டப்பட்டுள்ளது.

வதுமை என்றும், கரணம் என்றும் சுட்டப்படுகின்ற கற்பு மணம் பற்றிய விளக்கங்கள் இக்கட்டுரைக்கண் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. தலைவியைக் கொடுப்போர் யார் எனும் விளக்கமும் கன்னிப்பெண் எப்படிப்பட்ட நலங்களைப் பெற்றுத் திகழ வேண்டுமென்ற விளக்கமும் இவண் சுட்டப்பட்டுள்ளன.

மெய்ப்பாடுகள் அனைத்தையும் நாடகங்களில்தான் காண முடியும் என்றும், காவியங்களில் ஒருசில ரஸங்களே கையாளப் படுகின்றன என்றும், மனவெழுச்சியின் அடிப்படையிலேயே மெய்ப்பாடுகள் தோற்றம் பெறுகின்றனவென்றும் சொல்லப் படுகின்ற. வடவர் வழக்குகள் ஈண்டு எடுத்துக்காட்டப் பெற்றுள்ளன.

ஒருசுவை தலையாயதும், மற்றொன்று அங்கமாக அமைவதும் உண்டு. சுவைக்கு அப்பாற்பட்டவற்றை மிகவாக வருணித்தல் கூடாதென்பர். ஒன்றற்கொன்று மாறுபட்ட சுவைகளை வருணிக்க விரும்பினால் மாற்றுச் சுவையை இடையில் புகுத்த வேண்டும் என்பர்.

பொருள் புலப்பாட்டினைச் செய்யும் கருவி என்ற முறையிலேயே உவமையின் பகுதிகளை உவமவியலில் தொல் காப்பியர் விரித்துரைத்துள்ளார். உவமையாகிய இதனைச் செய்யுட்கு அலங்காரமாகக் கொண்டு இதனையும் ஓர் அலங்காரமாக்கினர் பின்வந்த அணியிலக்கண ஆசிரியர்கள்.

காவியத்தின் அழகினைக் கூட்டுவிக்கின்ற குணங்களும், அலங்காரங்களும் அவற்றின் வெளிப்புற அம்சங்களாகி விடுகின்றன. தொனிப்பொருள் எனப்படும் வியங்கியம், உட் பொருளாக அமையும் பெற்றியது. வியங்கியமும், வாச்சியமும் பொருள் வேறுபாட்டிற்குரியனவென்பது விளக்கப் பெற்றுள் ளது.

மேற்கோள் விளக்கம்

1. தொல்.பொருள்.நூ. 3
2. தொல்.பொருள்.நூ. 5
3. தொல்.பொருள்.நூ. 54
4. தொல்.பொருள்.நூ. 1
5. தொல்.பொருள்.நூ. 93
6. தொல்.பொருள்.நூ. 62
7. தொல்.பொருள்.நூ.135; நூ.125 (அரும்மறை)

8. வடநூற் கொள்கை.
9. தொல்.பொருள்.நூ.144
10. தொல்.பொருள்.நூ.142 (கரணம்)
11. தொல்.பொருள்.நூ.142 (உரை) ப. 164
12. தொல்.பொருள்.நூ.105.

பார்வை நூல்கள்

1. தொல்காப்பியம்—பொருளதிகாரம் (முற்பகுதி) நச்சினார்க்கினியர் உரை.
2. தொல்காப்பியம் (தமிழிலக்கியவரலாறு) க. வெள்ளைவாரணன்.
3. வடநூற் கருத்துக்கள் (வடமொழிப் பேராசிரியர் கருத்துப்படி)

நன்னூல் எழுத்ததிகாரம்-இருநூற்பாக்கள்

டாக்டர் தி. நடராசன்

தமிழகத்தில் இடைக்காலத்தில் எழுந்த இலக்கண நூல்களுள் ஒன்று நன்னூல். இந்நூல் தமிழ் கற்போரிடத்தில் இன்றுவரை சிறப்பிடம் பெற்று விளங்குகின்ற நூல். இந்நூல் முன்னூல்களின் செய்திகளையும் (குறிப்பாகத் தொல்காப்பியம், தொல்காப்பிய உரைகள்) காலப்போக்கில் தமிழ் மொழி வளர்ச்சியால் ஏற்பட்ட செய்திகளையும் இணைத்துச் சொல்லும் ஒரு நூல் நன்னூல் எழுத்ததிகாரத்தில் ஐந்து இயல்கள் உள்ளன. தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் ஒன்பது இயல்களில் கூறப்பட்ட எழுத்திலக்கணம் இந்நூலில் எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப்புணரியல், மெய்யீற்றுப்புணரியல், உருபு புணரியல் என்னும் ஐந்து இயல்களில் கூறப்பட்டுள்ளது. இந்நூல் எழுத்ததிகாரத்தில் இடம் பெற்றுள்ள பதவியல், தொல்காப்பிய எழுத்திலக்கணத்தில் க ணப்படாத நன்னூலாரால் ஆக்கப்பட்ட ஓர் இயல். இவ்வியலில் இடம் பெற்றுள்ள இரண்டு நூற்பாக்களின் கருத்துக்களை மட்டும் இக்கட்டுரை ஆய்கிறது.

ஆய்வுக்குத் தேர்ந்தெடுத்த இரண்டு நூற்பாக்களின் செய்திகளில் சில இடர்ப்பாடுகள் உள்ளன என்பதை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஆய்வுக்குத் தேர்ந்தெடுத்த நூற்பாக்களுள் ஒன்று பண்புப் பெயர் பற்றியது; மற்றொன்று காலம் உணர்த்தும் வினை வடிவங்கள் பற்றியது.

பண்புப் பகுதி

நன்னூலார் பதவியலில் மை ஈற்றுப்பண்புப்பெயர்கள் சிலவற்றைத் தொகுத்துக் கூறியதன் பின்னர்த் தொடர்ந்து அந்தப்பகுதிகள் எவ்வெவ் மாற்றங்களையும் அடையும் என ஒரு நூற்பா உரைக்கின்றார்.

"ஈறுபோத லிடையுகர மிய்யாதல்
ஆதி நீடலடி யகர மையாதல்
தன்னொற் றிரட்டன் முன்னின்ற மெய்திரிதல்
இனமிக லினையவும் பண்பிற் கியல்பே"
(நன். 136)

இந்நூற்பாவில் மை ஈற்றுப் பண்புப் பெயர்ப்பகுதிகள் ஏழு நிலைகளில் மாற்றம் அடையும் எனக் கூறப்பட்டுள்ளது. இக்கூற்றுப் பொருத்தமானதா? இல்லையா? என ஒவ்வொன்றாகக் கீழ்க் காணலாம்.

ஈறுபோதல்

ஈறுபோதல் – இறுதியிலுள்ள மை விகுதி கெடுதல் (உரை)
(எ. டு.) நல்லன், நன்மையின் மை விகுதி கெட்டது.

இங்கு நன்மை என்னும் மை ஈற்றுப் பண்புப் பெயரின் ஈற்று விகுதியாகிய மை கெட்டு எஞ்சி நிற்கின்ற 'நன் நல்' என்னும் அடியினின்றும் நல்லன் என்கின்ற வடிவம் உருவானதாகக் காட்டப்பட்டுள்ளது. இச்செய்தி ஏற்கும் படியானதாக இல்லை.

'நல்' என்னும் பண்பு அடியோடு 'மை' விகுதி இணைந்து பெயராக்கம் பெறும்பொழுது புணர்ச்சியினால் 'நல்' என்பதன் ஈற்று லகரம் அடுத்து வருகிற மகரத்தின் உந்துதலில் ஓரினக் கோட்பாட்டின் அடிப்படையில் னகரமாகத் திரிந்து நன்மை என்ற பெயர் வடிவம் கிடைக்கின்றது.

நன்மை என்னும் வடிவினை இன்னொரு நிலையிலும் விளக்கலாம். அதாவது* 'நல்ம் -' என்னும் அடியோடு பண்புப் பெயர் விகுதியாகிய '- ஐ' இணைவது.

நல்ம் - ஐ > நல்மை > நன்மை

எவ்வாறாயினும் பண்புப் பெயரின் 'ஈறுபோதல்' என்று நன்னூலார் கூறுவது பொருந்தவில்லை. பண்பு அடி பெயராக்கம் பெற வேண்டுமானால் '-ஐ' விகுதி பெறும்.

நன்மை செய்தால்

'-ஐ' விகுதி பெறாவிட்டால் பண்படி பெயராகச் செயல் படமுடியாது. அடிமட்டும் அடையாகச் செயல்படும்.

நல் - குணம்

நல் - பண்பு

மை விகுதி கெட்ட பின்னர் எஞ்சிய வடிவிலிருந்து சில வடிவங்கள் உருவாவதாக உரைகாரர்கள் காட்டுவதும் தமிழ் மரபுக்கு அறிவியல் ரீதியாக உகந்ததாக இல்லை.

இடை உகரம் 'இ' ஆதல்

நடு நின்ற உகரம் இகரமாதல்(உரை)

(எ. டு.) கரியன் - கருமையின் மை விகுதிகெட்டு நடுநின்ற உகரம் இகரமாயிற்று. உகரத்தினைத் தொடர்ந்து முடியக் கூடிய மை ஈறு கெட்ட பின்னர் எஞ்சி நிற்கக் கூடிய இங்கு கருமை என்னும் பண்புப் பெயரின் 'கரு-' என்பதில் உள்ள உகரம் இகரமாகத் திரிந்து கரியன் என்ற வடிவம் உருவானதாகக் காட்டப்பட்டுள்ளது. இச்செய்தியும் ஏற்கும் படியானதாக இல்லை.

---

* போலும் என்னும் வடிவம் செய்யுளில் 'போல்ம்' என்றாகிப் பின்னர் 'போன்ம்' என மாறுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

'கரும்-' என்னும் பண்பு அடியோடு '-ஐ' விகுதி இணைந்து பெயாரக்கம் பெறும்பொழுதே கருமை என்னும் வடிவம் கிடைக்கப்பெறும்.

கரும் என்பதிலும் கர்–உம் என்னும் இரண்டு உறுப்புக்கள் உள்ளன. 'கரும்-' என்னும் வடிவம் அடையாகச் செயல்படும் 'ஐ' இணைந்தால் பெயராக மாற்றம் பெறும்.

கரும் குதிரை

கரும் பாம்பு

மண் கருமை ஆயிற்று.

'கரும்–' என்பதை மொழியில் வரலாற்று நோக்கில் ஆராய்ந்தால் 'கார்' - என்னும் அடியினின்றும் உருவாகி வந்ததே 'கரும்-' என்பது புலனாகும். 'கார்' என்னும் வடிவில் உள்ள உயிர் குறுக்கம் பெற்று 'கர்' என்றாகி - உம் இணையும் போது கிடைக்கும் வடிவமே 'கரும்' ஆகும்.

கார் > கர் } ஒரே பொருளுடையன.

நடுநின்ற உகரம் இகரமாதல் என நன்னூலார் குறிப்பிடுவது சொல்லாக்க அமைப்புக்கே முரணாக உள்ளது.

கர் - இயன் > கரியன்

கார் என்னும் பண்படியில் உள்ள உயிர், குறுக்கம் பெற்றுக் கிடைக்கும் வடிவம் 'கர்-'. பின்னர் அந்த 'கர்–' என்னும் குறுக்கம் பெற்ற அடியோடு '-இயன்' (இ-அன்) என்னும் உடைமைப் பொருள் உருபன் இணையும் பொழுது கிடைக்கும் வடிவமே கரியன் ஆகும்.

உரைகாரர்கள் காட்டியது போலக் கருமை என்னும் பெயரின் மை விகுதி கெட்டுப் பின் ஈற்றில் உள்ள உகரம் இகரமாக மாறிக் கரியன் என்னும் வடிவம் வந்துள்ளது என்று கூறுவது பொருந்தாது என்பது தெளிவாகியுள்ளது.

ஆதி நீடல்

'முதனின்ற குறில் நெடிலாதல்' (உரை)

(எ.டு.) பாசி-பசுமையின் மை விகுதி கெட்டு ஆதி நீண்டது.

இங்குப் பசுமை என்னும் வடிவின் மை விகுதி கெட்டு எஞ்சி நிற்கின்ற பசு என்ற வடிவில் உள்ள அடிப்படை உயிர் நீட்சி பெற்றுப் பாசு (பாசி) என்ற வடிவம் வந்ததாகக் காட்டப் பட்டுள்ளது. இச்செய்தியும் ஏற்கும்படியானதாக இல்லை.

'பசும்-' என்னும் பண்பு அடியோடு '-ஐ' விகுதி இணைந்து பெயராக்கம் பெறும் பொழுதே பசுமை என்னும் வடிவம் கிடைக்கப் பெறும்.

'பசும்' - என்னும் வடிவம் அடையாகச் செயல்படும். அதனோடு '-ஐ' இணைந்தால் பெயராக மாற்றம் பெறும்.

பசும் பொன்

பசுந் தாள்

பசுமை கண்ணுக்கு உகந்ததாக உள்ளது.

'பசும்' - என்பதையும் மொழியில் வரலாற்று நோக்கில் ஆய்ந்தால் 'பாச்-' 'பாசு-' என்னும் அடியினின்றும் உருவாகி வந்ததே 'பசும்–' என்பது புலனாகும். 'பாச்' என்னும் வடிவில் உள்ள உயிர்குறுக்கம் பெற்று 'பச்-' என்றாகி '–உம்' இணையும் போது கிடைக்கும் வடிவமே 'பசும்-' ஆகும்.

பாச் > பச் } ஒரே பொருளுடையன.

ஆதி நீடல் என நன்னூலார் குறிப்பிடுவது மேற்கூறிய விளக்கங்களால், பொருத்தமாக இல்லை என்பது தெளிவாம்.

அடி அகரம் ஐ ஆதல்

'முதனின்ற அகரம் ஐகாரமாதல்' (உரை)

(எ. டு.) பைந்தார், பசுமையின் மை விகுதியும் நடுநின்ற உயிர் மெய்யுங்கெட்டு வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுந்து முதலிலிருந்த அகரம் ஐகாரமாயிற்று.

இங்கும் பசுமையின் மை விகுதி கெட்டது என்பது முற் கூறியது போன்று ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. அடுத்து உரைகாரர்கள் பசுமை என்பதில் '-மை' விகுதி கெட்ட பின்னர் எஞ்சிய 'பசு-' என்பதில் உள்ள 'ச்-உ' (சு) உயிர்மெய்யுங் கெட்டுப் பின்னர் 'ப-' மட்டும் நிற்க '-தார்' என்னும் சொல் வந்து புணரும் போது தகரத்தின் இனமாகிய நகரம் மிகுந்து ப - தார் > பந்தார் என்றாகி இறுதியில் பகரத்தின் அகரம் ஐகாரமாகியுள்ளது என்று கூறியுள்ளனர்.

பந்தார் > பைந்தார்

நன்னூலார் கூறும் 'அடியகரம் ஐயாதல்' என்பதில் மொழியின் வரலாற்றுப் போக்கில் ஆய்ந்தால் தவறாகக் கொள் வதற்கில்லை. தமிழ் மொழியில் அகரமும், ஐகாரமும் சில சொற்களில் உறழ்வாக வந்துள்ளன.

அரசன் — அரைசன்

பசல் — பைசல்

மயல் — மையல்

இவ்வாறு வருவதனை இலக்கணகாரர் போலி என்பார்; மொழி இயலார் உறழ்வு (Free Variation) என்பர்.

அகரம் ஐகாரமாக மாறுவதற்கும் கூட அகரத்தினைத் தொடர்ந்து வரும் நடுவண்ணமெய்யாகிய சகரமே காரண மாம். சகர நடுவண்ண மெய் தன்முன் வரும் கடையண்ண உயிராகிய அகரத்தினை ஓரினமாதல் கோட்பாட்டின் அடிப் படையில் மாற்றம் பெறச் செய்துள்ளதால் அகரம் ஐகாரமாகி யுள்ளது. இவ்விளக்கத்தின் அடிப்படையில் 'பசும்' என்பது 'பைசும்' என்று மாறும் எனக் கொள்ளமுடியும். ஆனால் பைந்தார் என்பதில் '-பைந்' எவ்வாறு வந்தது எனக் காண்போம்.

பசும்—பைசும் > பைச்ம் > பைம்

பைம்—தார் > பைந்தார்

நன்னூலார் கூறும் அகர ஐகார மாற்றம் பேச்சு மொழியிலோ செய்யுள் மொழியிலோ தோற்றம் பெற்றிருக்க வேண்டும். பேச்சு மொழியில் உறழ்ச்சி எளிமை என்னும் அடிப்படைகளினாலோ செய்யுள் மொழியில் எதுகை மோனை அமைப்புக்களினாலோ இம்மாற்றம் தோன்றியிருக்கலாம்.

எவ்வாறாயினும் நன்னூலார் அகரம் ஐகாரமாகும் என்றாரே ஒழிய உறழ்வில் அவ்வாறு வரும் என்று கூறவில்லை என்பது குறிக்கத்தக்கது.

தன்னொற்றிரட்டல்

'தன் மெய் நடுவே மிகுதல்' (உரை)

(எ டு.) வெற்றிலை - வெறுமையின் மை விகுதி கெட்டுத் தன்னொற்றிரட்டியது.

இங்கு 'வெறுமை' என்னும் வடிவின் '-மை' விகுதி கெட்டு எஞ்சி நிற்கின்ற 'வெறு-' என்ற வடிவில் உள்ள றகர ஒற்று இரட்டித்து (வெற்று) வந்துள்ளது எனக் காட்டப்பட்டுள்ளது றகர ஒற்று இரட்டித்தல் என்பதில் தவறில்லை. '-மை' விகுதி கெட்டது என்ற உரைக் கூற்று முன் கூறியது போன்று ஏற்புடைத்தில்லை.

'வெறும்-' என்னும் பண்பு அடியோடு '-ஐ' விகுதி இணைந்து பெயராக்கம் பெறும் பொழுதே வெறுமை என்னும் வடிவம் கிடைக்கப்பெறும்.

'வெறும்-' என்னும் வடிவம் அடையாகச் செயல்படும் அதனோடு '-ஐ' இணைந்தால் பெயராக மாறும்.

வெறும் பை

வெறும் பேச்சு

நிலம் வெறுமை ஆயிற்று.

'வெறும்-' என்பதன் அடியாக அமையும் வடிவம் 'வெற்று' என்பதாகும். புணர்ச்சியின் போது றகரம் இரட்டித்து வந்துள்ளது.

வெறு—இலை > வெற்று—இலை > வெற்றிலை

வெற்—இலை > வெற்றிலை

சில் > சிற்—ஊர் > சிற்றூர்

சிறு—ஊர் > சிற்று > ஊர் > சிற்றூர்

முன்னின்ற மெய்திரிதல்

'முன்னின்ற மெய் வேறொரு மெய்யாதல்' (உரை)

(எ. டு.) சேதாம்பல் - செம்மையின் மை விகுதி போய் ஆதி நீண்டு முன்னின்ற மகரமெய் தகரமெய்யாகத் திரிந்தது.

இங்கும் செம்மையின் '-மை' விகுதி கெட்டுப் பின் எஞ்சி நிற்கின்ற '–செம்' என்பதில் உள்ள உயிர் நீண்டு மகரம் தகரமாகியுள்ளது என்று கூறுவது பொருந்துமாறில்லை.

முற்கூறியது போன்று நீண்ட உயிரினை உடைய 'சே-' என்னும் வடிவத்திற்கே சிவப்பு என்ற பொருள் உண்டு. 'சேத்–' என்பது 'சே' என்பதன் இன்னொரு மாற்று வடிவமாகக் கொள்ளவேண்டும்.

சேத்—ஆம்பல் > சேதாம்பல்

'சேத்-' என்பதோடு தொடர்புடைய சேதலம், சேத்து என்று வடிவங்கள் தமிழிலும். Cetti, Jadu போன்ற வடிவங்கள் மலையாளம், தெலுங்கு கன்னட மொழிகளிலும் உள்ளன. 'செம்' என்பதினின்றும் 'சேத்' வந்தது (மகரம் > தகரமாகத் திரிந்தது) என்று கூறுவது மொழியமைப்புக்கு முரணானது என்பது குறிக்கத்தக்கது.

'செம்–' என்பதன் மாற்று வடிவங்கள் சில உள்ளன.

செம் —

செவ் —

செக் — / செக்கர்

முன்னின்ற மெய் வேறொரு மெய்யாதலுக்கு '-த்' மட்டுமல்லாமல் '-வ், -க்' என்பவைகளையும் கூறலாம்.

இனமிகல்

'வருமெழுத்திற்கு இனவெழுத்து மிகுதல்' (உரை)

(எ. டு) பைந்தார் - இனவெழுத்து மிகுந்தது.

இங்கு இனவெழுத்துத் திரிந்தது என்று கூறின் பொருத்தமாக இருக்கும். ஏனெனில் 'பசும்-' என்பதன் மாற்று வடிவாகிய 'பைம்-' என்பதன் முன்னர் '-தார்' வரும் பொழுது 'பைம்-' என்பதன் ஈற்று மகரம் ஓரினக் கோட்பாட்டு அடிப்படையில் வருமொழி முதலின் பல்லொலிக்கு ஏற்ப நகரப் பல்லொலியாகத் திரிந்துள்ளது. மிகவில்லை என்பது வெளிப்படை.

எவ்வாறாயினும் பண்புப்பெயர் மாற்றங்கள் நன்னூலார் மேற்கூறியவாறு கூறியதற்குக் காரணம் என்னவென ஆய்ந்தால் '-ஐ' விகுதி பெற்ற முழுமை வடிவத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்னர் அதில் படிப்படியாக நிகழும் மாற்றத்தினை எடுத்துக் கூறியமையாகும். மேலும் நன்னூலார் இக்காலத்தில் தனித்தியங்கும் தன்மை பெற்ற முழுமை வடிவங்களையே அடிப்படையாகக் கொள்ளவேண்டும் என்ற கோட்பாடு அவர் இலக்கணவழி புலப்படுகிறது.

நன்னூலார் இலக்கணம், தமிழ் மொழியில் ஆராய்ச்சி வளர்ச்சி பெறாத காலத்தில் ஏற்புடைத்தாக இருந்திருக்கும். ஆனால் தற்பொழுது தமிழ் அல்லது திராவிட மொழிகளில் நிகழ்ந்துள்ள ஆய்வுகளுக்குப் பிறகு நன்னூலார் குறிப்பிடும் பண்புப் பெயரின் மாற்றங்களை முழுமையாக ஏற்றுக் கொள்ளுமாறில்லை.

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பண்புப்பெயரைப் பொறுத்தவரை இன்றும் நன்னூலார் குறிப்பிட்ட இலக்கணமே பின்பற்றப்படுவதால் மாணவர்கள் வினா எழுப்புகின்றனர்.

கருங்குதிரை என்னும் வடிவினைக் கொடுத்துப் பிரித்து எழுதுக எனக் கேட்டால் பொதுவாக மாணவர்கள்,

கரும்+குதிரை என்றே எழுதுகின்றனர். ஆசிரியர் நன்னூல் படித்தவராகையால் அப்பிரிப்பு ‘கருமை+குதிரை’ என்று காட்டப்படவேண்டும் என எண்ணுகின்றார்.

மொழி ஆராய்ச்சி வளர்ந்து உண்மை உணர்ந்த பின்னர் ஏதோ ஒரு கோட்பாட்டின் அடிப்படையில் உரைக்கப்பட்ட மொழி விதிகள் பின்பற்றப்பட வேண்டுமா? காலத்திற்கேற்ற மாற்றம் செய்ய வேண்டாமா? என்பது இக்கட்டுரையாளரின் வினா.

காலம் காட்டும் விகுதிகள்

நன்னூலார் பதவியலில், கால இடை நிலைகளை எடுத்துக் கூறியதன் பின்னர்த் தொடர்ந்து விகுதிகளுடன் இணைந்து நின்று காலங்காட்டும் சில வடிவங்களையும் எடுத்துக் கூறி அவை எவ்வெக்காலம் உணர்த்தும் எனக் குறிப்பிடுகிறார்.

“றவ்வொ டுகர வும்மை நிகழ்பல்லவுங்
தவ்வொ டிறப்பு மெதிர்வும் டவ்வொடு
கழிவுங் கவ்வொடு டெதிர்வு மின்னேவல்
வியங்கோளிம்மா ரெதிர்வும் பாந்தஞ்
செலவொடு வரவுஞ் செய்யுநிகழ் பெதிர்வும்
எதிர்மறை மும்மையு மேற்கு மீங்கே” (நன்,145)

இந்நூற்பாவில் கூறப்பட்டுள்ள வடிவங்களும் அவை உணர்த்தும் பொருளும் பொருத்தமானவைகளா? என வரிசையாகக் காண்போம்.

று, றும்

நன்னூலார், வினையில் அமைந்து வரக்கூடிய '-று,-றும்' என்னும் வடிவங்கள் நிகழ்காலமல்லாத இறந்த காலத்தினையும், எதிர் காலத்தினையும் காட்டும் என்பார்.

உரைகாரர்கள் காட்டாக

சென்று - சென்றும்-இறந்தகாலம்

சேறு – சேறும் - எதிர்காலம்

எனக் காட்டியுள்ளனர்.

'-று' -றும்' என்னும் வடிவங்கள் தன்மை வினையில் மட்டும் தான் அமைந்து வரும் என்பது குறிக்கத்தக்கது. '-று' ஒருமையிலும், '-றும்' பன்மையிலும் அமைந்து வரும்.

இங்கு உரைகாரர்களால் இறந்த காலம் உணர்த்தும் வடிவங்களாகச் சென்று, சென்றும் எனக் காட்டப்பட்டவை மொழி வழக்கில் காணப்படவில்லை. மேலும் நன்னூலாரும் இவ்வடிவங்கள் இறந்த காலம் உணர்த்தும் எனக் குறிப்பிட்டதும் மொழி வரலாற்று வழி ஆய்ந்தால் ஏற்றுக் கொள்ளுமாறில்லை. '-று' -றும்' என்ற வடிவங்களில் '-று' சங்ககால இலக்கியங்களிலே காணப்படவில்லை. '–றும்' என்பது அருகி வழங்கியுள்ளது. காலப்போக்கில் அவை மொழியில் காணப்படவில்லை. தமிழ் இலக்கியத்தில் '-றும்' என்பது இறப்பு அல்லாத காலத்தையே (Non-past) (நிகழ்வு, எதிர்வு)உணர்த்துகின்றது. எவ்விடத்தும் அது இறந்த காலம் காட்டவில்லை. நன்னூலார் அவை நிகழ்வு அல்லா இறந்த காலத்தை அல்லது எதிர்காலத்தினைக் காட்டும் என்று கூறியது ஏற்றுக் கொள்ளுமாறில்லை. மேலும் அவர் இவ்வடிவங்கள் எப்படி இறந்த காலம் உணர்த்தும் என்றும் நிகழ்காலம் உணர்த்தாது என்றும் கூறினார் என்பது தெளிவுபட அறியுமாறில்லை. இருந்தாலும் நன்னூலார் தொல்காப்பிய உரைகாரர்களை அடியொற்றியே காலம் பற்றி இவ்வாறு கூறியுள்ளார் எனக் கருத முடிகிறது.

எவ்வாறாயினும் '-று'-றும்' என்னும் வடிவங்கள் இறப்பு அல்லாத நிகழ்காலத்தினையும் எதிர்காலத்தினையும் உணர்த்தும் என்பதை இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது.

-து, தும்

மேற்கூறிய '-று' -றும்', என்பவைகளுக்குக் கூறிய இலக்கணத்தையே, '-து, -தும்' என்பவைகளுக்கும் நன்னூலார் கூறுகிறார். எனவே முற்கூறிய விளக்கங்கள் '-து,-தும்' என்பவைகளுக்கும் பொருந்தும்.

தமிழ் இலக்கியத்தில் '-து' வின் ஆட்சி காணப்படவில்லை. '-தும்' பல இடங்களில் பயின்று வந்து இறப்பு அல்லாக் காலத்தையே உணர்த்துகிறது.

-டு, -டும்

நன்னூலார், '-டு, -டும்' என்பவைகள் இறந்த காலத்தைக் காட்டும் என்று கூறியுள்ளார்.

உண்டு - உண்டும் - இறந்தகாலம் (உரை)

தமிழ் இலக்கியத்தில் '-டு -டும்' விகுதிகள் இறப்பில் காலத்தையே உணர்த்துகின்றன. நன்னூலார் ஏவ்வாறு இவை இறந்தகாலம் என்று கூறினார் என அறியமுடியவில்லை.

-கு, கும்

'-கு, -கும்' என்பன எதிர்காலம் உணர்த்தும் என நன்னூலார் கூறியுள்ளார். இதில் இடர்ப்பாடு இல்லை.

தமிழ் இலக்கியத்தில் இவ்வடிவங்கள் இறப்பில் காலத்தினை உணர்த்துகின்றன.

மின்னேவல் வியங்கோளிம்மார் எதிர்வும்

இவ்வடிவங்களில் கூறப்படும் '-இ' என்னும் வடிவம் முன்னிலை வினைகளில் அமைந்து வருவது; இவ்வடிவம்

மட்டும் இங்கு ஆய்வுக்குரியதாகிறது. '-இ' என்பது முன்னிலை வடிவமே. நன்னூலார் இதுவும் எதிர்காலம் உணர்த்தும் என்று கூறியுள்ளார். இது பொருந்தாது. முன்னிலை வினை களிலும் இகரம் ஊர்ந்து வரும் '-த், -ட், -ற்' என்பவைகளே இறப்பல் காலம் உணர்த்தும். இகரம் காலம் உணர்த்தாது என்பது வெளிப்படை. நன்னூலார் இறுதியில் எஞ்சிய வடி வங்களுக்குக் கூறப்படும் காலப் பொருளில் இடர்ப்பாடு இல்லை.

காலத்தால் இடைவெளி அதிகமான வடிவங்களுக்குப் பொருள் உணர்த்த முற்பட்டமையால் நன்னூலாருக்கு இவ் விடர்ப்பாடு ஏற்பட்டது எனக் கொள்வதில் தவறில்லை. தொல்காப்பியர் மேற்கூறிய வடிவங்களைக் குறித்தாலும் அவ் வடிவங்கள் உணர்த்தும் பொருள் கூறவில்லை. நன்னூலார் தொல்காப்பியர் உரைகாரர் வழி நின்றும், தனித்தும் பொருள் கூறியுள்ளார்.

துணை நூல்கள்

1. தொல்காப்பியர், தொல்காப்பியம், எழுத்ததிகாரம்.
2. பவணந்தி, நன்னூல்.
3. பொற்கோ, இலக்கண உலகில் புதியபார்வை.

---

* இக்கட்டுரை யாக்கத்தின் பொழுது கருத்துகள் பரிமாறி உதவிய பேராசிரியர், குமாரசாமி ராஜா அவர்களுக்குக் கட்டுரையாளரின் நன்றி.

12. நன்னூல்-சொல்லதிகாரம்

டாக்டர் இராம. சுந்தரம்

நன்னூல் தோன்றுகிறது:

மொழி என்பது மனித சமூகக்கூட்டுமுயற்சியின் படைப்பாகும். சமூகத்தின் கருத்துப் பரிமாற்றத்துக்கு அது ஓர் ஆற்றல்மிகு கருவியாகப் பயன்படுகிறது. சமூக வளர்ச்சி மொழி வளர்ச்சிக்குக் காரணமாகிறது. எனவே, வழக்கிலுள்ள எந்த ஒரு மொழியும் சீரிளமை மொழியாக இருத்தல் இயலாது. மனித சமூகத்தின் நூற்றாண்டுகால மாற்றங்களை அதன் மொழி வெளிப்படுத்தத் தவறியதில்லை. சமூக அமைப்பு மாற்றங்களைச் சமூகவியலார் விளக்குதல் போல் மொழியமைப்பு மாற்றங்களை இலக்கணிகளும் தத்துவஞானிகளும் மொழியியலாரும் எடுத்துரைப்பர். ஒரு மொழிக்குப் பல இலக்கணங்களும், ஒரு இலக்கணக்கூறுக்குப் பல விளக்கங்களும் எழ இதுவே காரணம். தொல்காப்பியம், நன்னூல் முதலியவற்றின் தோற்றம் இங்குதான் வேர்பிடிக்கிறது.

தொல்காப்பியம் தோன்றி 1200 ஆண்டுகளுக்குப்பின் நன்னூல் எழுதப்படுகிறது. இந்த நீண்டகால இடைவெளியில் தமிழகத்தில் அனைத்துத் துறைகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. சங்ககால இறுதி தொடங்கி நன்னூல் தோன்றும்வரை தமிழகத்தைக் களப்பிரர், பல்லவர், பாண்டியர், சோழர் எனப் பல அரசபரம்பரைகள் ஆண்டன. சளுக்கியர், ஹொய்சளர், கங்கர், சிங்களர் தொடர்பு வேறு கிடைத்தது. வடமொழி, பாலி, பிராகிருதம் என்பவற்றின் ஊடுருவல் தமிழின் வேரையே அசைத்துவிட்டது. சமண, பௌத்த, சைவ, வைணவ மதங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின. நமது கப்பல்கள் ஈழம், சாவகம், சீனம்,

கடாரம் ஆகியவற்றின் கரைகளில் தங்கி மீண்டன. கலை, இலக்கியத் துறைகளிலும் புதிய புதிய சோதனைகள் நடைபெற்றன. ஐரோப்பியர் வருகைக்குப்பின் ஆங்கிலம் வழித் தமிழைக்காண முற்பட்டது போல, அன்று வடமொழிவழித் தமிழைக்காணும் முயற்சியே தலைதூக்கியிருந்தது. இவற்றின் ஒட்டுமொத்த விளைவாகத் தமிழரின் தனித்துவத்தைக் காணவும் பேணவுமான ஒரு தேவை ஏற்பட்டது. தமிழ் மொழியின் உள்ளமைப்பையும் செயற்பாங்கையும் கற்றுத் தெளிய வேண்டிய ஒரு கட்டாயத் தேவையும் உண்டாயிற்று.

இந்தத் தேவைகளின் காரணமாக, தொல்காப்பியத்தை மீட்கும் பணி தொடங்கியது. தொல்காப்பியம் பல்பொருள் தழுவிய பெருநூல். அதற்கு 12 நூற்றாண்டுக்குப் பின் பிறந்த தமிழனுக்கு அதை விளங்கிக் கொள்ளுதல் எளிதாக இல்லை. எனவே, தொல்காப்பிய உரைகள் தோன்றின. உரையாசிரியர்கள் தொல்காப்பிய விதிப்புகளை மீறாமலும் தம் மாணாக்கரது வினாக்களை ஒதுக்காமலும் தமது காலத்தமிழ் மொழியமைப்பின் கூறுகளை மறைத்து வைக்க முயலாமலும் இருக்க வேண்டிய ஓர் இக்கட்டான சூழ்நிலைக்கு ஆளாகி பல சூத்திரங்களுக்கு, பல உத்திகள் மூலம் சிறிதும் பெரிதுமான விளக்கங்களை எழுதலாயினர். தொல்காப்பிய மரபுகூட முற்றமுழுதாக அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை எனினும், அரிதின் முயன்று தொல்காப்பிய மீட்புப்பணியைச் செய்தனர். அதாவது, தமிழின் வேர் காண முயன்றனர். ஆயினும், உரையுடன் சேர்த்துத் தொல்காப்பியத்தை முழுதும் படிப்பதைக்காட்டிலும், சுருங்கிய அளவில், எளிதில் செய்திகளைத் தெரிந்து கொள்வது அவசியமாயிற்று. எழுத்து சொல், பொருள்,யாப்பு, அணி - என்ற ஐந்துக்கும் தனித்தனி இலக்கணங்கள் தோன்றுதற்கு இந்தத் தேவை ஒரு காரணமாயிற்று.

இந்தப் பின்னணியில்தான், பவணந்தியார் நன்னூலை இயற்றுகிறார். ''இருந்தமிழ்க் கடலுள், அரும்பொருள் ஐந்தையும் உணரத் தொகைவகை விரியில் தருகென...முன்னோர் நூலின் வழியே நன்னூல் பெயரின் வகுத்தனன்...பவணந்தி''

என்ற சிறப்புப் பாயிரமும், "சீயகங்கன் என்னும் அரசன் தமிழிலக்கியங்களின் ஆராய்ச்சிக்கு இன்றியமையாததும் பரந்து கிடப்பதுமான தொல்காப்பியத்தைக் கற்று விதி விலக்குகளை அறிந்துகொள்வது சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்ற றிவினராகிய மனிதர்க்கு அரிதென்பதை அறிந்து அந்நூலில் கூறப்படும் எழுத்து முதலிய ஐந்திலக்கணங்களையும் யாவரும் வருத்தமின்றி அறிந்து கொள்ளும்படி ஒவ்வொரு பகுதியையும் சுருக்கித் தொகைவகை விரியால் விளக்கி ஓர் இலக்கண நூலைச் செய்தருளுமாறு வேண்டிக் கொண்டமையாலும், இயல்பாகவேயுள்ள இரக்க மிகுதியாலும் இவர் இந்நூலை இயற்றி வெளிப்படுத்தினர்" என்ற விளக்கமும் இந்தப் (உ. வே. சா. xiii) பின்னணியைப் புரிந்துகொள்ள உதவு கின்றன.

தொல்காப்பிய மீட்பு, இலக்கணத்தை யாவரும் எளிதில் அறிதல், அதைச் சுருக்கித் தொகைவகை விரியால் தருதல், காலத்தின் தேவை கருதி இலக்கண நூலை எழுதவேண்டும் என்ற ஆர்வம் அல்லது இரக்க உணர்வு ஆகிய காரணங்களால் தோன்றிய நன்னூல், இன்றுவரை தனது பயனையும் செல் வாக்கையும் இழக்கவில்லை. தொல்காப்பியத்தை மீட்கும் இரண்டாவது பணி அண்மைக்காலத்தில் மொழியியலார் துணையுடன் தொடங்கும் வரை, நன்னூலே கல்வி உலகில் கோலோச்சியது எனலாம். தொல்காப்பியத்தின் இரண்டு மீட்புப் பணிகளுக்கும் வேறுபாடு உண்டு. முதலாவது மீட்புப் பணி, வடமொழியால் மறைப்புண்டிருந்த தமிழ்மொழியின் வேர்களைக் காணல் என்றால் இரண்டாவது மீட்புப்பணி, தொல்காப்பியத்தின் சிறப்புக் காணல் ஆகும். It is not only one of the finest monuments of human intelligence and intellect preserved in the Indian tradition; it is also the first literary expression of the indigenous, Pre-Aryan Indian civilization; it represents the essence and the summary of classical Tamil culture.

For the evaluation of Indian linguistic thought, it is probably as important and crucial as the grammar which goes

under the name of the Panini. To the field of general inguistics, it would add, if sufficiently known, some new important insights on a number of phmetic, etymological, morphological and syntactic problems. (K. Zvelebil, P-1-1).]

பவணந்தியார் திறன்

தொல்காப்பியத்தை முதனூலாகக் கொண்ட பவணந்தியார், தமக்கு முன் எழுந்துள்ள பிற இலக்கண, இலக்கிய மூல நூல்களையும், அவற்றின் உரைகளையும் ஒரு பருந்துப்பார்வை பார்த்தும், தம் கால வழக்கு மொழியைக் கணக்கில் எடுத்தும் தமது நூலை இயற்றுகிறார். செய்திகளைச் சொல்லும் முறையிலும், நூற்பா யாப்புத் திறனிலும் கவனம் செலுத்திக் கற்போர் மனத்தில் பதியும் வண்ணம் இலக்கண நூலை யாத்திருப்பது அவரது சிறப்பாகும். தொல்காப்பியர் இலக்கிய–இலக்கணி; பவணந்தியார் கணித ஆசிரியர். நன்னூலின் அமைப்பொழுங்கும் அணுகு முறையும் கீழ்க்கண்ட இயல்புகளைக் கொண்டிருக்கின்றன.

1) இறுக்கமான கட்டமைப்பு
2) சொற்செட்டு
3) தொகை, வகை, விரி முறையில் செய்திகளைச் சொல்லுதல்.
4) முன்னோர் மரபையும் முடிவையும் ஏற்றுத் தழுவுதல்.
5) புதிய வழக்குகளைப் பதிவு செய்தல்.
6) கலைச்சொற்களில் எளிமை

உதாரணம்

செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னும்
அம்மூவிடத்தும் உரிய வென்ப.

அவற்றுள்,

தருசொல் வருசொல் ஆயிருகிளவியும்
தன்மை முன்னிலை ஆயிடத்த

ஏனை இரண்டும் ஏனை இடத்த
(தொல். கிளவி. 28, 29, 30)

தரல் வரல் கொடை செலல் சாரும் படர்க்கை
எழுவாய் இரண்டும் எஞ்சிய ஏற்கும்.
(நன். 380)

நன்னூலின் கட்டமைப்பு, சொற்செட்டு, சொல்லுமுறைகளுக்கு இவை சான்றாகும்.

சொல்லதிகாரம் தமிழ்ச் சொற்களின் வகை, அமைப்பு, தொடர்களின் அமைப்பு ஒழுங்கு, தொடரியல் முடிவுகள், தொடர்களைப் பொருள்கொள்ளும் பங்கு ஆகிய செய்திகளைச் சொல்லும். நன்னூலின் சொல்லதிகாரச் செய்திகளைக் கீழ்க்கண்டவாறு பகுத்துக் காணலாம்.

அ) தொல்காப்பியருடன் உடன்படுதல்
ஆ) தொல்காப்பியருடன் வேறுபடுதல்
இ) புதியன புகுதல்
ஈ) விடுபட்ட செய்திகள்
உ) கலைச்சொற்கள்

அ. தொல்காப்பியருடன் உடன்படுதல்

ஐரோப்பியருக்கு அரிஸ்டாடில். நமக்குத் தொல்காப்பியர் தொல்காப்பியர் மொழிக் கொள்கை பற்றிய அண்மைக் காலத்திய அகன்ற, ஆழ்ந்த நுண்ணிய ஆய்வுகள் அவர்தம் சிறப்பை எடுத்தோதுகின்றன. பவணந்தியார் இச்சிறப்பினை உணர்ந்தவர். 'முன்னோர் மொழிபொருளைப் பொன்னே போல் போற்றி' மகிழும் இயல்பினர். எனவே, தொல்காப்பியர் கூறிய மொழிச் செய்திகளில், அவர் காலத்தும் வழக்கிலிருந்தவற்றை மாற்றமின்றிப் பல இடங்களில் எடுத்துரைக்கிறார்.

கருத்துக்களை மட்டுமின்றி, நூற்பாக்களையே எடுத்தாளு வதும் உண்டு.

(உதாரணம்)

இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்.

(தொல். கிளவி. 10; நன். 40)

சொற்பகுப்பு, சொல்லின் தொழிற்பாடு, சொற்பொருள் போன்ற அடிப்படைக் கருத்துக்களில் பொதுவான உடன்பாடு தொல்காப்பியருக்கும் பவணந்தியாருக்கும் உண்டு என்பது பரவலாகப் பேசப்பட்டிருப்பதால், ஈண்டுக் குறிக்கவில்லை.

ஆ. தொல்காப்பியருடன் வேறுபடுதல்

தொல்காப்பியக் கருத்துக்களில் காலப்போக்கில் சில வளர்ச்சிகள் ஏற்பட்டன. மொழி வழக்கு இந்த வளர்ச்சிக்கு அடிப்படை ஆயிற்று.

தரவு, வரவு, செலவு, கொடை ஆகிய பொருளுடைச் சொற்களின் பயிலிடம் பற்றிப் பேசும தொல்காப்பியர் (கிளவி. 28, 29, 30). தருசொல்லும் வருசொல்லும் தன்மை, முன்னிலை இடத்துக்குரியதென்றும் (எனக்குத் தந்தான், என்னிடம் வந்தான்: நினக்குத் தந்தான், நின்னிடம் வந்தான்) செலவும் கொடையும் படர்க்கைக்குரியதென்றும், (அவனுழைச் சென்றான், அவனுக்குக் கொடுத்தான்) உரைப்பார். படர்க்கைக்குரிய 'கொடு' என் கிளவி, தன்னைப் பிறனாகக் கருதிப் பேசு மிடத்து, தன்மையிலும் வரும் எனப் புறனடை யும் தருவார் (எச்சவியல். 52) மேலே தந்த வரையறை மலையாளத்தில் இன்றும் வழக்கிலிருப்பதாகத் தெரிகிறது. (எனிக்கித்தந்து, நினைக்குத்தந்து, அவள்க்குக் கொடுத்து, அவளுடெ அடுத்துப்போயி)

'பெருவிறலமரர்க்கு வென்றிதந்த',
'தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது!'

போன்ற வழக்குகள் தா, வா முதலியவற்றைப் படர்க்கையிலும் அமைத்தன. இதைக் கருத்திற்கொண்டே, பவணந்தியார், இந் நான்கு சொற்களின் பயிலிடப் பரப்பைக் குறிக்கிறார்.

இதே போன்று, வியங்கோள் வினையின் வருகை பற்றியும் வேறுபட்ட கருத்துக்களைக் காணலாம். வியங்கோள் வினைமுற்று முன்னிலையிலும் தன்மையிலும் (நீ வாழ்க. யான் வாழ்க என்றாற்போல) வருதல் இல்லை என்பது தொல்காப்பியர் காலத் தமிழ்த் தொடரியல் வழக்கு. நன்னூலார் காலத்தில், வியங்கோள் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களில் பயின்றுவரலாயிற்று. சங்கப் பாடல்களிலேயே இதற்குச் சான்றுகள் உண்டு.

'கள்' ஈற்றின் வளர்ச்சியும் இவ்வாறே அமையும்.

அஃறிணைக்குரியதெனத் தொல்காப்பியரால் வரையறுக்கப்பட்ட 'கள்' உயர்திணையிலும் வருதல் பவணந்தியாரால் கவனிக்கப்பட்டிருக்கிறது.

உதாரணம்

ஞானசம்பந்தன் தமிழ் ஆரமொழிவார்கள் மூவுலகும்
பெறுவார்களே. - சம்பந்தர் 1589.4.

மற்றையவர்கள் தவம் - குறள்.

வேதியர்கள் - சம்பந்தர் 1825.

யான், யாம், நாம் எனும் தன்மைச் சொற்கள் உயர்திணைக்கே உரியன எனத் தொல்காப்பியர் உரைப்பர். தன்மை இருதிணைக்குரியது என்பது பவணந்தியார் கருத்து. பேசும் ஆற்றல் மனிதனுக்கே இருப்பதால், யான் என்பது உயர்திணையில் அமைதல் பொருத்தமே. இது உயிரியல் ரீதியாகவும் சரியானதே. ஆனால் கதைகளிலும் பாடல்களிலும் 'கேட்குந போலவும் கிளக்குந போலவும்' செயல்படும் விலங்குகளும் பறவைகளும் பிறவும் பேசுவதைக் காண்கிறோம். 'பேய், பூதங்கள் இவற்றை உரைத்தலும் கேட்டலும் உள்ளவாதலானும் தன்மை முன்னிலை இருகூற்று ஒன்பது பெயரும்

பொதுப்பெயர் எனப்பட்டன' என்பர் சங்கர நமச்சிவாயர். (நன். 285). எனவே, இதை எல்லாம் மனத்தில் கொண்டுதான் பவணந்தியர் தன்மைச் சொல்லை இருதிணைக்கும் பொது என்றிருக்க வேண்டும். அல்லது, கர்மக்கோட்பாடு Karma-theory செல்வாக்குப் பெற்றபோது, 'நாய் தேவனாவதும், (நச்சினார்க்கினியர்) 'அகலிகை கல்லாவதும்' தவிர்க்க இயலாததாகிறது. எனவே, பொருள்களின் உயர்திணை-அஃறிணை மாற்றம் வினைக்கோட்பாட்டோடு சார்த்திக் காணப்படும் போது, தன்மை இருதிணைக்கும் பொதுவாதல் சரிதான். மொழியியல் அடிப்படையிலும்கூட, 'யான் வந்தேன்' என்று கண்ணனும், யான் வந்தேன் என்று குரங்கும் (பஞ்சதந்திரக் கதைகள்) சொல்லும்போது, திணை, பால் தெளிவாகத் தெரிவதில்லை.

'உயர்திணை மக்கள் சுட்டே' என்ற தொல்காப்பிய வரையறை, 'மக்கள் தேவர் நரகர் உயர்திணை' என வளர்ச்சி பெற்றதும், பாவம், புண்ணியம், நரகர், தேவர் பற்றிய வினைக்கோட்பாடு சார்ந்த கருத்தின் அடிப்படையில் அமைந்ததேயாகும். நம்முடைய இலக்கணக் கோட்பாடுகளை விளக்குவதற்கும், விளங்கிக் கொள்வதற்கும் சமயக் கருத்துக்கள் பயன்பட்டன என்பதற்குச் சான்றுகள் உள்ளன. தெய்வச்சிலையார் 'உயர்திணை' என்ற தொகை 'பண்புத் தொகை' என மொழியடைப்படையில் விளக்கியவர், 'உயர்ந்த மக்கள், உயரா நின்ற மக்கள், உயரும் மக்கள் என நல்வினையேதுவாக மூன்று காலமும் கொண்டாலாகுமேயெனின், அவ்வாறு கருதுவார்க்கு வினைத்தொகையுமாம்' என்பர். எனவே, தன்மைச் சொல் இருதிணையிலும் இடம் பெறுதற்கு மொழியடிப்படை மட்டுமன்றி, சமய அடிப்படையும் காரணமாயிற்று எனலாம்.

இ புதியனபுகுதல்.

தொல்காப்பியர் வெளிப்படையாகக் கூறத் தவறியவற்றை வெளிப்படுத்தலும், புதிதாகச் சிலவற்றைச் சேர்த்தலும் பவணந்தியார் பண்பாகும்.

எடுத்துக்காட்டாக, வியங்கோள் ஈறுகள் பற்றித் தொல்காப்பியம் உரைக்கவில்லை. தொல்காப்பிய உரையாசிரியர்கள் அ, அல், ஆல் எனச் சிலவற்றைக் குறிப்பர். நன்னூலார், 'க, ய, ர்' என மூன்று விகுதிகளைக் கூறுகிறார்.

இதுபோல 3-ஆம் வேற்றுமையில் 'ஆல்' உருபும், 6-ஆம் வேற்றுமை ஒருமையில் 'ஆது' உருபும், பன்மையில் 'அ' உருபும் சேர்க்கப்படுகின்றன.

அன்மொழித்தொகை பண்புத்தொகை, உம்மைத்தொகை, வேற்றுமைத் தொகைகளின் புறத்துப் பிறக்கும் என்பது தொல்காப்பியம். இம்மூன்றுடன் வினைத்தொகை. உவமைத் தொகை இரண்டையும் சேர்த்து 'ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி' என நயமுற, செறிவுபட உரைப்பர். இந்தச் சேர்க்கைக்கு இளம்பூரணர் உரை உதவுகிறது.

பொருள்கோள் வகையாக நிரனிறை, சுண்ணம், அடிமறி' மொழிமாற்று என நான்கு தொல்காப்பியத்தில் கூறப்படும். நன்னூலார் (நூ. 410) ஆற்றுநீர், மொழிமாற்று, நிரனிறை, விற்பூட்டு, தாப்பிசை, அளைமறிபாப்பு, கொண்டுகூட்டு, அடிமறி என எட்டுவகைப் பொருள்கோளை உரைக்கிறார். தொல்காப்பியர் சொல்லிய நான்கு வகைக்குள் இந்த எட்டையும் அடக்க உரையாசிரியர்கள் முயலுவதையும் காண்கிறோம்.

தொழிற்பெயருக்கும், வினையாலணையும் பெயருக்குமிடையேயுள்ள பயிலிடவரையறையும் பவணந்தியார் மூலமே நமக்குத் தெளிவாகிறது. தொழிற்பெயர் என்பது தொழிலை மட்டும் உணர்த்த, தொழில், காலம், கருத்தா ஆகியவற்றை உணர்த்தும் 'வினையாலணையும் பெயர் பெருவழக்கில் பிற்காலத்தே பயன்படுதலையும் நோக்கும்போது, 'வினையாலணையும் பெயரே யாண்டுமாகும்' என்பதன் பொருள் தெளிவாகிறது. வினையாலணையும் பெயர் என்ற சொல்லாட்சி தொல்காப்பியருக்குப் புதிது. தொல்காப்பியத் தொழிற்பெயர் தொழிற் பெயரையும், வினையாலணையும் பெயரையும் குறிக்கும். பவணந்தியார் இரண்டையும் வேறுபடுத்த இரு கலைச்சொற்களைப் பயன்படுத்துகிறார்.

பெயரெச்ச, வினையெச்சங்களுக்கான விளக்கங்களும் பவணந்தியார் கொடை எனலாம். பெயரெச்சத்தில் 'செய்கின்ற' வாய்பாட்டையும் சேர்த்தல் புதியன புகுத்தலாம். 'வினைப் பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டு' (திருவாசகம், கண்டபத்து, 2) என்ற வழக்கு நோக்குக.

சிறப்புப் பெயர் முன்னும் இயற்பெயர் பின்னும் வரும் என்கிற தமிழ்த் தொடர் அமைப்பைத் தொல்காப்பியரை ஒட்டிப் பவணந்தியும் விளக்குவார். அதற்கு மேலும் சென்று, திணை, நிலம், சாதி, குடி, உடைமை, குணம், தொழில், கல்வி காரணமாக ஒருவருக்குச் சிறப்புப் பெயர் அமையும் என அவர் விளக்குவதும் அறியத்தக்கது. தொல்காப்பியர் 'சிறப்பினாகிய பெயர்நிலைக் கிளவி' பற்றிக் குறிப்பினும், அதற்கான காரணங்களை விளக்குவதில்லை.

உயர்திணையும் அஃறிணையும் கலந்து வரும்போது எவ்வகை வினைமுற்றுத் தரவேண்டும் என்பது இன்னும் சிக்கலாக உள்ளது. தொல்காப்பியர், 'அஃறிணை முடிவின - செய்யுளுள்ளே' என்றார். வழக்கில் எவ்வகை முடிவு ஏற்கும் என்பது அவரவர் ஊகமே. நன்னூலார், உயர்வு, மிகுதி, இழிவு கருதி முடிக்க என்றார்.

திங்களும் சான்றோரும் ஒப்பர் என்றவிடத்து, 'சான்றோர்' என்ற உயர்வு கருதி உயர்திணையும்,

பார்ப்பார், தவர், பசு, பெண்டிர் என்றிவர் என்றவிடத்து மிகுதி கருதி உயர்திணையும்,

'மூர்க்கனும் முதலையும் கொண்டதுவிடா' என்றவிடத்து இழிவு கருதி அஃறிணையும் முடிக்க வந்தன.

மனிதர்களும் விலங்குகளும் வந்தார்கள் எனில் உயர்வு கருதியது; மனிதர்களும் விலங்குகளும் வந்தன எனில் இழிவு கருதியது. இது குறித்துத் தற்காலத் தமிழ்த் தொடர்களை ஆராய்தல் நல்லது,

நன். 371 ஆம் நூற்பா ஒரு புதிய செய்தியைச் சொல்லு கிறது. இரண்டு பெயர்கள் (இடத்தையும் பெயரையும் குறிப் பவை) தொடரும்போது, வல்லெழுத்து மிகின் அது இடத்தை யும், மெல்லெழுத்து மிகின் அது உறவையும் குறிக்கும் என் பதே அது.

''வல்லொற்றுவரினே இடத் தொகையாகும்
மெல்லொற்றுவரினே பெயர்த் தொகையாகும்''

என்பது நூற்பா.

(எ. கா.)

துளுவச்சாத்தன்-துளுவ நாட்டில் பிறந்த சாத்தன்.
துளுவஞ்சாத்தன்-துளுவனுக்கு மகனாகிய சாத்தன்.

தமிழ்ச்சந்தியின் இன்றியமையாமையும் இங்குப் புலப்படுகிறது.

ஈ. விடுபட்ட செய்திகள்

இடைக்காலத் தமிழில் பல புதிய வினையெச்ச விகுதிகள் வழக்கிலிருந்தன. காட்டாக, 'ஏல்' ('கூவீாயேல்' நா. திரு மொழி. 5. 10), 'அல்லால்' (சார்பு அல்லால், ஞானசம்பந்தர் 1941) 'அல்லாது' (கழல் அல்லாது; சம்பந்தர் 190) ஆகிய வற்றைக் குறிக்கலாம். இதேபோல, 'கில்' என்னும் வினைவடி வமும் வழக்கிலிருந்தது. (எ. கா.) பெயரகில்லேன் (நா. திருமொழி 136). இவற்றைப் பவணந்தியார் பதிவு செய்யத் தவறிவிட்டார். இதேபோல் தொல். சொல்லுகிற 'செய்ம்மன' என்ற வாய்பாடு நன்னூலில் இடம் பெறவில்லை; இந்த விடுபாடுகளுக்கு இரண்டு காரணங்கள் சொல்லலாம்.

(1) வழக்கருமை (2) பவணந்தியாருக்குக் கிடைத்த தரவுகள்.

உ, கலைச்சொற்கள்

தொல்காப்பியர் நீண்டதொடரில் சொல்லுவதை நன் னூலார் தொகைப் படுத்தி உரைப்பதைக் கலைச்சொல்லாக் கத்தில் காணலாம்.

'தன்னுள் உறுத்த பன்மை' என்ற தொல்காப்பியர் வாக்கு 'தன்மைப் பன்மை' என்று நன்னூலில் அமைகிறது. தொழிற் பெயரை இரண்டாகப் பகுத்து, வினைப்பெயர், வினையால ணையும் பெயர் என்று அமைத்துக் கொள்கிறார். 'வினை யெஞ்சு கிளவி,' 'பெயரெஞ்சு கிளவி,' பண்புத்தொகை வரும் கிளவி என்பன வினைஎச்சம், பெயரெச்சம், பண்புத் தொகை எனச் சுருங்க உரைக்கப்பட்டு, கலைச்சொல்லுக்குரிய இயல்பைப் பெறுகின்றன. "ஐயத்துக்கு வேறாய்த் துணி பொருள்' (தொல் கிளவி. 23, 25) என்ற இளம்பூரணர் சொல்லாட்சி, 'மெய் தெரிபொருள்' என ஆக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. அஃறிணையை இழிவுத் திணை (நன். 350) என்பார். இது அவரது சமயஞ்சார்ந்த சொல்லாட்சி எனலாம்.

தொல்காப்பியர், இளம்பூரணர் முதலியோரைச் சார்ந்தும், தேவை கண்ட இடத்து வேறுபட்டும், தம் கால வழக்கு களில் முதன்மையானதாகத் தாம் கருதியவற்றைப் பதிவு செய்தும், கலைச்சொல்லாக்கத்தில் எளிமையைக் கடைப்பிடித் தும் தமிழ்ச் சொல்லிலக்கணச் செய்திகளைத் திட்பமும் நுட் பமும் செறிய நன்னூல் சொல்லியிருப்பதே அதனது நீண்ட வாழ்வுக்குக் காரணமாகிறது. எனினும், பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உரியியல் என ஐந்து இயல்களில் தொல். சொல். 9 இயல் கருத்துக்களையும் ஏற்றபெற்றி அமைத்து நூல் யாத்த நன்னூலார் உரியியல் செய்திகளில் போதிய அழுத்தம் தரவில்லை. மொழிக்குத் தேவையான செய்தி களைச்சுருள்க உரைத்து, தொல்காப்பிய மரபியலில் பேசப்படும் உயிருடைய - உயிரில்லாப் பொருட் பாகுபாட்டுச் செய்தி களை விரித்துரைக்கிறார். இங்கும்கூடத் தொல்காப்பியரிட-மிருந்து இவர் பெரிதும் வேறுபடக் காண்கிறோம்.

'மக்கள் தாமே ஆறறிவுயிரே' (உரியியல், 33)

என்பதற்கு மாறாக,

'வானவர் மக்கள் நரகர் விலங்கு புள்'

'ஆதி செவியறிவோடு ஐயறிவுயிரே' (நன். 448) என்று 'மக்களை' ஐயறிவு படைத்தவர்களாகச் சொல்லுகிறார். சமண மதப்பிரிவுகளுள் காணலாகும் மனம் பற்றிய கருத்து வேறுபாட்டின் வெளிப்பாடாக இது தெரிகிறது. உரியியலில் இதை இவர் விரித்துரைக்க இது தெரிகிறது. உரியியலில் இதை இவர் விரித்துரைக்க நேர்ந்ததன் காரணம் தனித்து ஆராயத்தக்கது.

• துணை செய்த நூல்கள்

1. ஆறுமுக நாவலர் — நன்னூல் காண்டிகையுரை, சிதம்பரம், 1953.

2. கோபாலய்யர் & குரோ. (ப.ர்) —தேவாரம்—பண்முறை, தொகுதி. 1, ஞானசம்பந்தர், பாண்டிச்சேரி, 1984.

3. சண்முகம். செ. வை. —சொல்லிலக்கணக் கோட்பாடுகள், அண்ணாமலைநகர், 1984.

4. சாமிநாதய்யர் (ப.ர்) —நன்னூல் மூலமும் சங்கரநமசிவாயர் உரையும், சென்னை, 1953.

5. பாலசுந்தரம் பிள்ளை (ப.ர்) —தொல்காப்பிய மூலம், சென்னை, 1954

6. வெள்ளைவாரணம் —தொல்காப்பியம்-நன்னூல். சொல்லதிகாரம். அண்ணாமலை நகர், 1971.

7. Zvelebil, Kamil —The Smile of Muruga on Tamil literatue of south India, Leiden' 1978.

13. தமிழ்நெறி விளக்கம் பொருளியல்

டாக்டர் ஆறு. அழகப்பன்
தமிழ்த்துறைத் தலைவர்

தமிழ்நெறி விளக்கம் பொருளியல்—ஆய்வு

தமிழ்மொழியை ஒரு மரம் என்று கருதினால் அதன் விழுதுகள் இலக்கணங்களாகும். அதன் கிளைகள் இலக்கியங்கள்; அடையாறு ஆலமரம் போன்று வளர்ந்தோங்கிவரும் தமிழ் மொழியில் நூற்றுக்கும் மேற்பட்ட இலக்கண விழுதுகள் காணப் படுகின்றன. அவற்றுள் ஒன்றுதான் 'தமிழ்நெறி வீளக்கம் பொருளியல்' என்ற நூலாகும்.

நூல் கிடைத்த வரலாறு

1937 க்கு முன்பு பவானி போர்டு ஹைஸ்கூல் தமிழ்ப் புலவர் திரு. குமாரசுவாமி பிள்ளை என்பவரிடம் தமிழ்நெறி விளக்கத்தின் ஏட்டுப்பிரதியொன்று இருந்திருக்கின்றது அவரிடமிருந்து அதனை எட்டணா விலையில் வெளியிட்டுத் தமிழுக்கு உ. வே. சா, அவர்கள் பெருமை சேர்த்தார்.

நூற்பெயர்ப்பொருத்தம்

'விலாசம்' என்ற சொல்லைக் கொண்ட பல நூல்கள் நாடகத் தமிழில் உண்டு. அது போன்று 'விளக்கம்' என்ற சொல்லைக் கொண்ட பல நூல்கள் இலக்கிய இலக் கணங்களில் உண்டு. எடுத்துக் காட்டாக அகப்பொருள் விளக்கம், இலக்கண விளக்கம். தொன்னூல் விளக்கம், உண்மை விளக்கம், நீதிநெறி விளக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

"தமிழ் நெறிவிளக்கத்திற்குப் பொருள் கூறும் உ. வே சா தமிழனின் அகப்பொருள் எனவும், நெறி என்றது புலனெறி வழக்கினையும், விளக்கம் என்பது விளக்கிச் சொல்லுவது, என்றும் கொள்ளலாம். தமிழினிது ஒழுகலாற்ற விளக்கும் விளக்குப் போன்ற நூல்" என்பர்.

நூலின் காலம்

பதிமூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய களவியல் காரிகையில் தமிழ்நெறிவிளக்கத்தின் நூற்பாக்கள் எடுத்துக்காட்டப் படுகின்றன. பதினான்காம் நூற்றாண்டைச் சார்ந்த பரிமேலழகரின் உரையிலும் தமிழ்நெறிவிளக்க நூற்பாக்கள் காட்டப் படுகின்றன. எனவே தமிழ்நெறிவிளக்க நூலைப்பதினோராம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாகக் கொள்ளலாம்.

நூலமைப்பு

இந்நூல் 25 நூற்பாக்களுடனும், 172 எடுத்துக் காட்டுச் செய்யுள்களுடனும் அச்சாகியுள்ளது. இதுவே முழுமையான நூலின் வடிவம் என்று கொள்வதற்கில்லை. முதல்நூற்பாவின்" உரையில் "என்பது நிறுத்த முறையான பொருளிலக்கணம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று" என்று குறிப்பிடுவதால், இதற்குமுன் எழுத்து, சொல் பற்றியும் தமிழ்நெறி விளக்கம் கூறியிருத்தல் வேண்டும் என்று கருதலாம். நிறுத்தமுறை என்ற உரைத்தொடர் இக்கருத்திற்கு வலுவூட்டுகின்றது.

பொருளியல் என்னும் பெயரில் காணப்படும் இந்நூற் பாக்கள் இருபத்தைந்தும் அகப்பொருளுக்கு உரியன. பொருள் என்பது அகத்துக்கும் புறத்துக்கும் பொதுவானபெயர்ச்சொல். எனவே இந்நூலில் புறப்பொருள் இலக்கணமும் அமைத் திருக் கலாம் என்று கூறலாம்.

இந்நூலைப் பதிப்பித்தஉ. வே. சா. இந்நூலில் யாப்பியலும் அமைந்திருக்கலாம் என்று கருதுகின்றார். அதனால், இந்நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு ஆகிய நான்கு இலக்கணங் களையும் கொண்டு விளங்கியிருக்கலாம்.

பல்லவர் காலத்தில் பல யாப்பு நூல்கள் இருந்தன என்பதை யாப்பருங்கல விருத்தியால் அறியலாம். எனவே தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் கூறிய யாப்பு, காலப் போக்கில் தனியே வளர்ந்ததனை அறியவியலும்.

தமிழ்நெறிவிளக்கத்தின் நூற்பா,

"அகத்ததும் புறத்ததும் ஆயிரு பகுதியில்
மிகுத்ததும் ஆகி விரிந்தது பொருளே"

என்று கூறுகின்றது இதனால் இவர் கூறும் அகப்பொருள் அகம், அகப்புறம் என்னும் இருபிரிவினை உடையது என்று புலனாகின்றது. தொல்காப்பியர் அகம் கூறினாரேயன்றி அகப்புறம் கூறவில்லை. அகப்புறம் என்பது பிற்கால வளர்ச்சியாகும்.

இந்நூலின் முதல் கரு உரிப்பொருள்கள் முன்னர்க்கூறப் பட்டுள்ளன. (நூற்பா 2-13). 14 முதல் 20 முடிய உள்ள 7 நூற்பாக்களில் களவினைக் கூறுகின்றார். 21 முதல் 25 நூறுபாக்கள் முடிய, கற்பினைக் குறிப்பிடுகின்றார்.

களவு

கந்தர்வமுறை களவெனப்படும் என்று களவினை வடமொழிக் கந்தர்வத்தோடு ஒப்பிட்டுக் காட்டுகின்றார். இவ்வாறு ஒப்பிடும் முறை தொல்காப்பியத்திலேயே காணப் படுகின்றது. அதன்பின் இயற்கைப்புணர்ச்சி, பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம், பகற்குறி, தோழியிற் கூட்டம், இரவுக்குறி, வரைவு கடாவுதல், உடன்போக்குவலித்தல் என்று ஆறு பிரிவுகளை வகுத்துக் கொண்டுள்ளார்.

கற்பு

இதனை நான்கு வகையாகப் பிரித்து உணர்த்துகின்றார். அறத்தொடு நிலை, உடன்செலவு, சேயிடைப் பிரிவு, ஆயிடைப் பிரிவு என்பவை அந்நான்கு வகைகள்.

இவற்றுள் சேயிடைப்பிரிவு, ஆயிடைப்பிரிவு என்பன வற்றைப் பரிமேலழகர் காமத்துப்பாலில் கற்பியலின் தொடக்

கத்தில் காட்டுகின்றார். இதனால் இப்பிரிவுகள் பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்களால் ஏற்றுக்கொண்டு எடுத்தாளப் பட்டன என்று புலனாகின்றது. களவுக்கு முன் கைக்கிளையை எடுத்துக் கூறுதல் அகப்பொருள் மரபாகும்.' தமிழ்நெறி விளக்கத்தில் இம்முறை காணப்படவில்லை.

மேற்கோள் பாடல்கள்

இந்நூலில் எடுத்துக்காட்டாகக் கூறப்பட்ட செய்யுள்களில் **172**-க்கு இடம் விளங்கவில்லை என்று உ. வே. சா. குறிப் பிட்டுள்ளார். இவற்றுள் பல செய்யுள்கள் களவியல்காரிகை உரையாசிரியரால் எடுத்தாளப்பட்டுள்ளன. சில செய்யுட்கள் நச்சினார்க்கினியர் உரை, இறையனார் களவியலுரை, நம்பி யகப்பொருள் உரை ஆகியவற்றில் காணப்படுகின்றன. இடம் விளங்காத செய்யுட்களை இவ்வுரையாசிரியரே இயற்றியிருக்க வேண்டும் என்று உ. வே. சா. கருதுகிறார். அவர் கருத்துப்படி நூல், உரை, மேற்கோள் மூன்றையும் ஒருவரே செய்தார் என்பது பெறுப்படுகின்றது. மேற்கோள் செய்யுட்கள் நேரிசை ஆசிரியப்பாவாகவே உள்ளன இவை சிறந்த இலக்கியநயம் வாய்ந்தவையாகவும், சங்க இலக்கியச் சாயல் கொண்டவை யாகவும் உள்ளன.

'செல்வார் அவர்என யான் இகழ்ந்தனனே
ஒல்லாள் இவள்என ஒழிந்தனர்
நல்லெழில் உண்கண் நலியும் என் நெஞ்சே"

இப்பாடல் இந்நூலிலுள்ள ஓர் எடுத்துக்காட்டுச் செய்யுள். இதனை நோக்கும்போது ஒரு குறுந்தொகைப்பாடல் நினைவுக்கு வருகின்றது.

"செல்வார் அல்லர் என்று யான் இகழ்ந்தனனே
ஒல்வாள் அல்லளென்று அவர் இகழ்ந்தனரே
ஆயிடை, இரு பேராண்மை செய்த பூசல்
நல் அராக்கதுவி யாங்கு என்
அல்லல் நெஞ்சம் அலமலக் குறுமே"

இக்குறுந்தொகைப் பாடலையும் தமிழ்நெறி விளக்க மேற்கோள் பாடலையும் நோக்கினால் குறுந்தொகைப் பாடலின் இலக்கியநயத்தை அறியலாம்.

குறுந்தொகைப் பாடல் மேற்கோள் காட்டும் இயல்புடைய உரையாசிரியர் அப்பாடலைக் காட்டாது; அப்பாடலின் சாயலில் ஒரு பாடலைக் காட்டியிருப்பதன் காரணத்தை அறியவியலவில்லை.

மற்றொரு எடுத்துக்காட்டுச் செய்யுள் திருக்குறளைப் போன்று அமைந்துள்ளது.

"செல்லாமை உண்டேல் எனக்குஉரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை'

இக்குறள் பின்வருமாறு தமிழ்நெறிவிளக்கத்தின் யாப்பில் வேறுபடுகிறது.

"சேறலர் என்பது உளதெனின் உரைமதி
மாறினர் வல்வரவு உரைப்பின்
உளரின்றி இவ்வழி வாழ்வோர்க்கு உரையே"

இங்குத் திருக்குறளைக் குறிப்பிடாது இவ்வாசிரியர் புதிதாகப் பாடல் புனைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

உடன்செலவு என்னும் பகுப்பில் அமைந்துள்ள கூற்று ஒன்று, வேறு அகப்பொருள் நூல்களில் காணப்படாத புதுமையாகக் காணப்படுகின்றது. தலைவன் தலைவியை உடன் அழைத்துச்சென்று விடுகின்றான். தன் வீட்டில் தங்கியிருக்கின்றான். அவனுடைய தாய் அவனைப் பார்த்து, "மகனே! நீ செய்த செயல் அறமாகத் தெரியவில்லை; இவளைப் பெற்ற தாய் எவ்வளவு வருத்தப்படுவாள்; ஆதலால் இவளை அழைத்துக்கொண்டுபோய் அவளிடம் காட்டிவிட்டுவந்துவிடு" என்று கூறுகின்றாள், இந்நிகழ்ச்சி வாழ்க்கை நடைமுறையில் ஒன்றாக இருப்பினும், அகப்பொருள் ஆசிரியர்கள் இதனை எடுத்துக் கூறவில்லை. ஆனால் இந்த உள்ளப்பாங்கினை அறிந்த தமிழ்நெறிவிளக்கத்தார் இதுபோன்ற நிகழ்ச்சியைக் காட்டுகின்றார்.

தலைவனும் தலைவியும் உடன்செல்லும் போது இடைச் சுரத்தில் கண்டவர்கள் கூறுவது பற்றிச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. தமிழ்நெறிவிளக்க மேற்கோள் பாடல், இடைச் சுரக் கூற்றை நயம்படக் குறிப்பிடுகின்றது.

தலைவி அழகு முதலிய நயங்களால் சிறந்தவளாக இருப் பதாலும், தலைவன் சான்றோனின் மகனாக இருப்பதாலும் இருவருடைய தன்மையையும் பார்த்துத் திருமணம் செய்து கொடுக்கவேண்டியதன் நியாயத்தைப் பேசுகின்றது.

"இவளே, நலம் மேம்பட்ட அன்பினள், இவனே
குலம் மேம்பட்ட சான்றோர் மகனே
இருவர் தன்மையும் நோக்கிப்
பருவரல் எய்தாது கொடுத்தலோ பண்பே"

இது தலைவனுக்கும் தலைவிக்கும் அமைய வேண்டிய பண்பினைக் காட்டும் பாடல். அவனுக்குச் சான்றாண்மையும், அவளுக்கு அழகும் கூறப்படுகின்றன.

நூலின் தனிச்சிறப்புக்கள்

அகப்பொருள் இலக்கணத்தைப்பற்றிப் பல இலக்கண நூல்கள் வழங்குகின்றன. ஒவ்வொரு நூலும் ஒரே எண்ணிக்கை யையுடைய நூற்பாக்களைக் கொண்டு விளங்கவில்லை. எடுத்துக்காட்டாக, தொல்காப்பியம் பொருளதிகாரம் 237 நூற்பாக்களையும், வீரசோழியம் 21 நூற்பாக்களையும், இலக்கண விளக்கம் 247 நூற்பாக்களையும், தொன்னூல் விளக்கம் 57 நூற்பாக்களையும் கொண்டு காணப்படு கின்றன.

தமிழ்நெறிவிளக்கம் மட்டுமே 25 நூற்பாக்களைக்கொண்டு விளங்கும் சிறுநூலாகக் காணப்படுகின்றது. 'சிறுநூலாக' என்று குறிப்பிடுவது அளவு கருதியே தவிர கூறப்பட்ட பொருள் தொடர்பாகாது.

குறைந்த அளவில் நூற்பாக்கள் கிடைக்கின்ற காரணத்தால் சில பகுதிகள் கிடைக்காமல் போயிருக்கக் கூடும் என்று கருதுவாரும் உண்டு. இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் 'தமிழ்தான் நான்கு வகைப்படும், எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்பும் என' என்று கூறுமிடத்து பல பகுதிகள் கிடைக்கவில்லை என்று கொள்ள வேண்டியுள்ளது.

தமிழ்நெறி விளக்கம் பொருளியல் என்று இந்நூல் பெயர் பெற்றிருப்பதால் டாக்டர் ஐயர் அவர்கள் தம் முகவுரையில் பல பிரிவுகள இருந்திருக்க வேண்டுமென்று கருதுகின்றார். காணாமல் போனதாக அவர் கருதும் பகுதிகள்:

"இந்நூல் தமிழிலணக்கப் பகுதியனைத்தையும் உடையதாகத் தோன்றுகின்றது. இதன் முதற்சூத்திர உரையில்,

'நிறுத்த முறையானே பொருளிலக்கணம் ஆமாறு
உணர்த்துதல் நுதலிற்று'

என்று காணப்படும் தொடர் தமிழ்நெறி விளக்கம் பொருளியலென்ற அதிகாரப் பெயரும் இதற்கு முன் எழுத்தியலும் மொழியியலுமாகிய இரண்டு பிரிவுகள் உண்டென்பதைப் புலப்படுத்துகின்றன. பொருளியலிற்குப் பின்பு யாப்பியலொன்றும் இருந்ததென்று கருத இடமுண்டு.

இப்பொருளியலும் அகம், புறம், அகப்புற மென்னும் மூன்று பிரிவாக இருத்தல் வேண்டும்; இக்கருத்தை முதற் சூத்திரம் தோற்றச் செய்கின்றது, பொருளியலென்ற பொதுப் பெயரே இதன்கண் அகப்பொருள், புறப்பொருளென்னும் இரண்டு பகுதியேனும் இருக்க வேண்டுமென்று நினைக்க ஆதாரமாகின்றது.

முடிவுரை:

ஓர் இலக்கண ஆசிரியர் தம் நூற்பாவில் தொல்லாசிரியர் கருத்துக்களைப் புலப்படுத்தும்போது என்ப, மொழிப என்பன போன்ற சொற்களை அமைப்பர் இந்நூலாசிரியர் தம் 25

நூற்பாக்களில் 'என்மனார்' என்ற சொல்லை மூன்று இடங்களில் மேற்கொள்கின்றார்.

களவுக்குமுன் கைக்கிளையைக் கூறவில்லை பெருந்திணை பற்றிய குறிப்பும் இல்லை.

களவின் பகுதிகளான அறத்தொடு நிலை, உடன்போக்கு இரண்டும் இந்நூலில் கற்பினுள் அடக்கப் படுகின்றது.

தொல்காப்பியத்தில் கூறப்படாத 'நற்றாயின் கூற்று' இந்நூலில் காணப்படுகிறது.

அருகிக்காணப்படும் சில துறைகளுக்கு இச்சிறு நூலில் இலக்கணம் உள்ளது.

தெய்வக்கருப்பொருள் கூறும்போது பாலைக்கு இரவி குறிப்பிடப்படுகின்றது.

ஸ்ரீ ராமகிருஷ்ணா பவர் பிரஸ், சிதம்பரம்.